D 1
V211,31 N83
N83. 49.1

ஆவணக்காப்பக
136033
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

9—4—1983.


பக்கங்கள்.

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல்.

1. வினாக்கள்—விடைகள்:

உடுக்குறியிட்ட வினாக்கள் 1—32

2. தகவல் கோரல்.

3. உரிமைப் பிரச்சினை:
ஏ. ஜி. திரு. மோகன்தாஸ் மீது. 32—36

4. ஒத்திவைப்புத் தீர்மானம்:
தமிழகத்தில் அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றத்தினர் நடத்திய போராட்டம். 37—56

5. கவன ஈர்ப்புகள்:

(அ) இராயபுரம் மீன்பிடி துறைமுகத்தை, பழைய கப்பல்களை உடைத்து அப்புறப்படுத்தும் பணிக்குப் பயன்படுத்துவது. 57—59

(ஆ) மதுரை இராஜாஜி மருத்துவமனையில் தண்ணீர் தட்டுப்பாடு. 60—63

6. வரவு—செலவுத் திட்டம், 1983-84 வாக்கெடுப்பு: (தொடர்ச்சி) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். 63—146

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் 63—65

திரு. ஏ. டி. குலசேகர் 65—70

திரு. எம். அண்ணாதாசன் 70—77

கே. எம். தங்கமணி 77—83

திரு. ஏ. தங்கராசு 83—86

திரு. கு. ராமணி 86—9

திரு. எம். ஆறுமுகம் 98—105

திரு. கே. சௌந்திரராசன் 105—109

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் 109—111

திரு. எல். இளையபெருமாள் 111—113

திரு. என். வி. என். சோமு 113—126

7. அறிக்கை அளித்தல் :

இராமமூர்த்தி கமிஷன்—நீதிபதி மாற்றம்—அமைச்சர் அறிக்கை. 126—146

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் 146—147


---

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

**திரு. சுந்தர்லால் குரானா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்:**

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம் சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, அட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சிட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள் சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதி சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



2713

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, IndianAdministrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN(Minister for finance), —Finance, Legislature, Election, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries)— Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Torism Development Corporation, Cinematograp Act, Hindu Relgious and Charitable Endowments, Forest and Cinchona and grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agriculture Refinance, Agricultural Engineering wing and Agro Engeneering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies Debt Relief including Legislation on Morey Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Localt Administration), Municipal Administration Panchayats and Panchya Unions,Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Watter Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJEDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.**

பேரவைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ. பி. எல்.

துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்)
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி.ஏ.,பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல் (சார்புச்செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல். (எஜ்டேட் அலுவலர்.
திரு. பி. கோதண்டராமன், பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)

திரு. சி. பாலசுப்பிரமணியன் (தலைமை திருபர்.)

(விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

**27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்,

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்டல் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | அலூர் ஜெகதீசன், திரு. பு. கே. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23 | இராச குமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 27 | இராசாராம், திரு. க. | பனயரத்துப்பட்டி |
| 28 | இரா ராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ், | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன். திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. [illegible] | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 64 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65 | காளிமுத்து, டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப்பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | அமிர்தராஜ், திரு (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. சி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ.) |
| 96 | சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவப்பெருமாள், திரு மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | |
| | [illegible] | போடிநாயக்கனூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர்: திரு. கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவகவுண்டர் திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம் | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி–1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி, டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம்.கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கொ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம், | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு, சி. வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு, எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேணி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமசந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்கரெட்எலிசபெத்பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983 ஏப்ரல் 9.

பங்குனி 26 துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

" இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்."

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார். தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 697, 698 மற்றும் 699 மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### சீர்காழி தொகுதி புத்தூரிலுள்ள சீனிவாசா சுப்பராய தொழில் நுட்பக் கல்லூரி.

*வினா எண் 700—**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியைச் சேர்ந்த புத்தூரில் இருக்கும் சீனிவாச சுப்பராய தொழில் நுட்பக் கல்லூரியை அரசே எடுத்து நடத்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம.

(ஆ) சீர்காழி தொகுதியைச் சேர்ந்த புத்தூரில் இருக்கும் சீனிவாசா சுப்பராய தொழில் நுட்பக் கல்லூரியை அரசே ஏற்று நடத்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு 1968 முதல் அரசு

செலவில் இது நடத்தப்பட்டு வருகிறது. எனினும் இப்பயிற்சி நிலையம் மற்றும் அதன் அறக்கட்டளை சொத்துக்கள் முதலியவற்றை அரசு பெயருக்கு மாற்றித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எல். இளையபெருமாள்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சீனிவாசா சுப்பராய தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டது முதல் இன்றுவரையிலும், அந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்ட பிறகும் கூட பின் தங்கிய, மலைவாழ் மக்கள் மற்றும் ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்க வேண்டியது கொடுக்கப்படவில்லை என்பது ஒன்று. அடுத்து, அரசே அதை எடுத்துக்கொண்ட பிறகும்கூட மாணவர்களுக்கான விடுதியைக் கட்டுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இப்பொழுது என்னிடத்திலே இல்லை. இப்பொழுது நம்மிடத்திலே அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்பதற்கான பத்திரத்தைப் பதிவு செய்வதிலே கூட காலதாமதம் செய்து வருகிறார்கள். அதை எடுத்த பிறகு அதைப்பற்றிப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**திரு. எஸ். இராசாராமன்** : பேரவைத் தலைவரவர்களே, புத்தூரில் இயங்கி வருகின்ற சீனிவாசா சுப்பராய தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்கின்ற மாணவர்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது அது அரசினுடைய அதிகாரத்தில் இருந்து வருவதால் நன்கொடையை யாரும் வசூலிக்க மாட்டார்கள். அப்படி நன்கொடை வசூலிப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஏதாவது தெரிய வந்தால் அதுபற்றி புகார் செய்தால் விசாரித்து தக்க நடவடிக்கையெடுக்கலாம்.

### சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

*வினா எண். 701—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தமிழ் இலக்கியம் பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் வெளியிட உத்தேசம் செய்துள்ளதா ?

ஆ) ஆம் எனில் விவரம் யாது ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : (அ), மற்றும் (ஆ) : இந்நிறுவனம் தமிழ் இலக்கியம் பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறது. இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் :

(i) Literary Heritage of the Tamil.

(ii) Tirumurugan

(iii) Ep graphical Evidences for Tamil Studies

(iv) A study of Perunkatai

(v) Tamil Drama.Origin and development

(vi) Cultural Heritage of the Tamils

(vii) Heritage of the Tamils Language and Grammar

(ivii) A Course in Modern Standard Tamil

(ix) Tamil Research through Journals

(x) Dr. Mu. Va.

(xi) Dissertations on Tamilology

(xi) The Tamil Writers Directory

இனி அடுத்து வெளிவரவிருக்கும் நூல்கள் :

1. சங்க இலக்கியங்கள் (Sangam Literature)
2. தமிழ் இலக்கிய துணைவன் (A Companion to Tamil Literature)

**திரு. இரா. தாமரைக்கனி** : பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒழுங்கான முறையில் தமிழ் ஆராய்ச்சி நடைபெறுகிறதா ? அவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு ஏதேனும் தேவையிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் தங்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற பொறுப்புக்களைச் செவ்வனே செய்து வருகிறார்கள். வெளிநாடுகளிலிருந்துகூட தமிழறிஞர்கள் வரவழைக்கப்பட்டு, சொற்பொழிவு செய்ய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து அதை நூல்களாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தஞ்சையிலே செயல்பட்டு வருகின்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைத்து விடலாம் என்று அரசு தீவிரமாக ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

[1983 ஏப்ரல் 9

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, சென்னை, பாரீஸ், கோலாலம்பூர், யாழ்ப்பாணம் போன்ற இடங் களில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள், கருத் தரங்குகள் பற்றிய கட்டுரைகளை பொதுமக்களுக்கு மலிவு விலை யில் கிடைக்க தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடுவதற்கு ஏற் பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்த ஆராய்ச்சி கட்டுரைகள் பொதுமக்கள் படிக்கின்ற அளவிற்கு இல்லை. நம்மைப் போன்றவர்கள் படிப்பதற்கு, அந்தந்தத் துறைகளில் ஈடுபாடு கொண்ட தமிழ் அறிஞர்களால் வெளியிடப் படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவரவர்களே, இது போன்ற தமிழ் நூல்களை வெளியிடுவதற்கான தமிழ்ப் பண்பாட்டுக்கழகம், தமிழ் மொழி பெயர்ப்பு போன்ற துறைகள் தனித்தனியாக இயங்குவதைவிட, அனைத்தையும் பல்கலைக் கழகத்தில் ஒன்றாக இணைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்க் கட்டுரைக் களஞ்சி யம் வெளியிடப்படுகின்ற பணி, தமிழ் இலக்கியத்தை ஆங்கிலத் தில் வெளியிடப்படுகின்ற பணி, தமிழக வரலாறு, அகர முதலி போன்ற பணிகள் தனித்தனியாக நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளை யெல்லாம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினுடைய அதிகாரத்தில் விட்டுவிடலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நம்முடைய தமிழ் ஆராய்ச்சி நிலையம் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்ட, சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஏற்பட்ட அந்த வரலாறுகளை வெளியிடுவதுபோல், வீர வாஞ்சிநாதனு டைய வரலாற்றை பற்றிய நூல் இன்னும் புத்தகமாக வெளி வரவில்லை. இதுபோன்ற வரலாறுகளை அந்தத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் புதுப்பித்து வெளியிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இங்கே பேசப்படுகிற கருத்தானாலும், வெளியே பேசப்படுகிற கருத்தானாலும், அந்த ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்தவர்கள் எந்த அடிப்படையில் பணியாற்ற நினைத்தாலும் அவர்கள் பணி யாற்றலாம். நாம் அவர்களுக்கு சுதந்திரத்தை அந்த அளவிற்குத் தந்திருக்கிறோம். அரசு இன்னென்னதான் செய்ய வேண்டுமென்று சொல்லி அவர்கள் அதைச் செய்யவேண்டிய நிறுவனங்களாக ஆகிவிடக்கூடாது.



1983 ஏப்ரல் 9]

திரு. கோவைத்தம்பி: இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் தமிழ் மொழி காத்த தியாகிகள் பற்றி எதிர் காலத்திலே தெரிந்துகொள்வதற்கு, நம் கண் முன்னே உயிர் நீத்த அந்த தியாகிகளுடைய வரலாறுகள் எழுதிவைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அவர்கள் அதைப்பற்றி எழுத வேண்டுமென்று நினைத்தால் நாம் அதைத் தடை செய்வதில்லை.

### வேடசந்தூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான கூடுதல் கட்டடம்,

*வினா எண் 702.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான கூடுதல் கட்டடம் கட்டும் பணி காலதாமதம் ஏற் படக் காரணம் என்ன?

(ஆ) கட்டடப்பணி எப்போது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): இப்பணியை குறைந்த விலைப்பட்டியல் கொடுத்த ஒப்பந்தக் காரர் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய பலமுறை அழைத்தும் வராததால் காலதாமதத்தைத் தவிர்க்க வேறு ஒரு புது ஒப்பந்தக் காரரை அமர்த்தி வேலை விரைவாக நடந்து கொண்டு வரு கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காமராஜ் பல்கலைக் கழகத்தின் நுழைவு வாசலில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலை அமைக்கும் திட்டம்.

வினா எண் 703—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

காமராஜ் பல்கலைக் கழகத்தின் நுழைவு வாசலில் பெருந் தலைவர் காமராஜ் அவர்களின் உருவச்சிலை வைக்கும் உத் தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, தலைவர் காமராஜ் அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வருவதற்கு அரும்பாடு பட்டதோடு, ஏழைச்

தாயத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பகல் உணவு அளித்து' சீருடைகளை வழங்கி, இனாமாகப் புத்தகங்களைத் தந்து, 30 குழந்தைகளுக்கு ஒரு பள்ளி ஏற்படுத்திக் கொடுத்த அந்தத் தலைவருக்கு, அரசு ஒரு பெருந்தொகையாக நினைக்காமல், அவர் சிலையைக் கொண்டு வந்து, இன்னார் தான் கொண்டு வந்தார் என்று மக்களுக்குத் தெரியும்படியாக உருவாக்கித் தரமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவரவர்களே, ஒரு பெரியவருக்கு சிலை வைப்பதில் தவறு இல்லை. அப்படியெல்லாம் வைத்தால் தான் அவரை மதிக்கிறோம் என்ற எண்ணத்தில் மக்கள் இல்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : தலைவரவர்களே, காலப்போக்கில் இன்றைக்கு சுதந்திரத்தையே யார் வாங்கித் தந்தார் என்று மறந்துவிடக்கூடிய சூழ்நிலையில், காலப்போக்கில் அதை மறந்து விடக்கூடுமே என்பதனால், அந்த திரு உருவத்தை வைப்பதற்காக மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்களை எல்லாம் மறந்து விட்டார்கள் என்பது கவலைக்குரிய ஒன்றுதான். ஆகவே இந்தியாவிலே இருக்கின்ற மற்ற மாநிலங்களில் இருக்கின்றவர்கள் அப்படிப்பட்ட ஒரு பெருமையைச் செய்ய முன்வருவார்களானால் அது அவர்களுக்குத் தகுந்த மரியாதையாக இருக்கும். நாமும் அவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையிலே மதுரையிலே இருக்கின்ற பல்கலைக்கழகத்திற்கு அவருடைய பெயரை வைத்திருக்கிறோம். இன்னும் வேறு பல சிறப்புக்களை அவர்களுக்குச் செய்திருக்கிறோம். ஆகவே நாமே அதைச் செய்வதிலே அர்த்தம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே மறைந்த பாரதப் பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவுக்கு சிலை வைத்துத்தான் ஆக வேண்டும் என்பதில்லை என்ற கருத்து தொனிக்கின்ற மாதிரி சொன்னார்கள். இந்தக் கேள்வி, காமராஜ் பெயரால் பல்கலைக்கழகம் இருக்கின்ற காரணத்தாலே அவர்கள் கடந்த காலத்திலே இந்த நாட்டுக்கும் இந்தச் சமுதாயத்திற்கும் செய்த சேவையை கருத்தில் கொண்டு அங்கு அச்சிலையை வைப்பது பொருத்தமாக இருக்கும், அதையாவது



பரிசீலனை செய்வார்களா? அல்லது வேறு யாராவது பொது நல நோக்கோடு உள்ளவர்கள் அந்தச் சிலையைக் கொடுப்பார்களானால் அதை அரசாங்கம் நிறுவுவதற்கு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே, இது பல்கலைக்கழகத்தைப் பொறுத்த ஒரு கேள்வியாகும். ஆகவே வேறு யாராவது வந்து அவர்கள் அதைப்பற்றி எங்களிடம் கேட்பார்களானால் அதைப் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தனியார்கள் எல்லாம் சேர்ந்து முயற்சி எடுத்து இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

**திரு. பி. முகமது இஸ்மாயில்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை—காமராஜ் பல்கலைக்கழகம் என்று இருக்கின்ற பெயரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று மாற்றுவதற்கு அரசு முன்வருமா? மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்திருப்பது ஏதோ மதுரையிலே, மதுரையைச் சேர்ந்த ஒரு காமராஜ் பெயரால் அது வைக்கப்பட்டு இருப்பதைப் போன்ற ஒரு தவறான எண்ணம் ஏற்படுகிறது. காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை என்று—இப்போது பாரதியார் பல்கலைக்கழகம் என்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் என்றும் இருப்பதுபோல் காமராஜ் பல்கலைக்கழகம் என்ற பெயர் மாற்றி வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் யோசித்துத்தான் இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் ஆராய்ந்து தான் இந்த மதுரை—காமராஜ் பல்கலைக்கழகம் என்று நாம் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதை அடிக்கடி மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் என்று என்று சொல்லிக்கொண்டு வருவார்களானால் அந்தப் பெயர் பொருத்தமாக அது சரியாக இருக்கிறது என்பது தெரியவரும்.

கிளியானூர் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்.

*வினா எண். 704—**திரு. இரெ. இராசமாணிக்கம்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை கல்வி மாவட்டம், கிளியனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் பழுதாகி ஆபத்தான நிலையில் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1983 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (ஆ) இப் பள்ளியில், ஒரு ஓலைக் கூரைக் கட்டிடமும் ஒரு ஓட்டுக்கட்டிடமும் உள்ளன. இவை இரண்டும் பழுதடைந்துள்ளன. இவற்றைப் பழுது பார்க்க தஞ்சை முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. இரா. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியிலே ஒரு கூரைக் கட்டிடமும் ஒரு ஓட்டுக்கட்டிடமும் இருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அதுவே தவறு. இரண்டு ஓட்டுக் கட்டிடங்கள் அங்கே இருக்கின்றன. ஒரு கூரைக் கட்டிடம் இருக்கிறது. அது பழுதுபட்டு பல ஆண்டுகளாக பழுது பார்க்காத காரணத்தால் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம்கூட இந்த அவையிலே கொண்டு வந்தேன். அதற்குப் பிறகு அந்தக் கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்காக 21-12-80 அன்று பள்ளிக் கட்டிட நன்கொடையாக ஹாஜி. எம். ஏ. ஷேக்தாவுது அவர்கள் நினைவாக 12,500 ரூபாய், சி.இ.ஓ. அவர்களிடம் நன்கொடையாக வழங்கினார்கள். இப்படி வழங்கப்பட்டதற்குப் பின்னால்கூட அந்தக் கட்டிடங்கள் இதுவரையில் பழுதுபார்க்கப்படவில்லை. இதை நான் அரசாங்கத்திற்கு நினைவுபடுத்த, அந்தக் கட்டிடத்தை பழுது பார்க்க வேண்டும் என்ற வகையில் 25–11–1982-அன்று என்னுடைய தலைமையில் அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்து நோட்டீஸ் அடித்து விளம்பரம் செய்த பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வந்து, 70 ஆயிரம் ரூபாய்க்கு அதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று எனக்குக் கடிதம் மூலமாக எழுதினார்கள். ஆனால் இதுவரையில் பழுதுபார்க்கப்படவில்லை. தவிரவும், பள்ளி வளர்ச்சி நிதியிலிருந்து 1,500 ரூபாயும் நன்கொடையும் வசூல் செய்து ரூபாய் 6 ஆயிரம் செலவு செய்து கீற்றுக்கொட்டகை மட்டும் பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது. மற்ற கட்டிடங்கள் பழுதுபார்க்கப்படவில்லை. எனவே அவைகளை பழுதுபார்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தக்க அறிவுரைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்படும்.

**திரு. இரா. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய உயர்நிலைப் பள்ளியாகும். அங்கே 18 ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள். அங்கே இரண்டு கட்டிடங்கள் இருக்கின்றன. ஓட்டுக் கட்டிடம் பழுதான நிலையில் எந்த நேரத்தில் விழுந்து விடுமோ என்ற நிலையில் இருக்கிறது. அதற்கு மதிப்பீடு தயார் செய்து இருப்பதாக 17–11–1982-லேயே மாவட்ட கல்வி அலுவலர் எனக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். ரூ. 70,000 அளவிற்கு மதிப்பீடு தயார் செய்து அரசு அனுமதிக்குப் போய் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். உடனடியாக அந்த மதிப்பீடுகளை அங்கீகரிக்கவும், இன்னும் கொஞ்சம்



1983 ஏப்ரல் 9]

தொகையை அதிகப்படுத்தவும், அந்த இரண்டு கட்டிடங்களை விரைவாகக்கட்டி முடிக்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல முறை இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டு இருக்கின்றன. இதுபோன்ற நிலைமைகள் தமிழ்நாட்டில் பரவலாக இருக்கின்றன. பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கின்ற நேரத்தில் ஆர்வத்தோடு ஆரம்பித்து விடுகிறோம். அதற்குத் தேவையான கட்டிடங்கள் அவ்வப்போது கட்டாத காரணத்தால், இப்போது கணக்கு எடுத்துப் பார்க்கிற நேரத்தில் அதற்கு 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்ற நிலைமை ஏற்பட்டு, அதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கும் என்று யோசித்து வருகிறோம். ஒவ்வொரு உறுப்பினர்களின் தொகுதியிலும் இத்தகைய குறைபாடுகள் ஆங்காங்கு இருக்கும். அதை மறுக்க அரசு தயாராக இல்லை. நாங்களே சொல்கிறோம், இதுபோன்ற நிலைமைகளை சீராக்க 100 கோடி ரூபாய் தேவை என்று கணக்கிட்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் தன்னுடைய தொகுதியில் உள்ள பொதுமக்களிடம் அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி நன்கொடை மூலம் பல இடங்களில் கட்டிடங்கள் கட்டிக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த வகையில் கவனம் செலுத்தி முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. நன்னிலம் அ. கலையரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கும்பகோணம் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர்தான் இப்படிப்பட்ட பணிகளைக் கவனித்து வருகிறார்கள். (குறுக்கீடு) கிளியனூர் போன்ற இடங்களில் இத்தகைய நிலைமைகள் இருந்தாலும், அந்த பொதுப்பணித் துறை பொறியாளர்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு வசதியாக எந்த இடங்களில் பணிகளைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறார்களோ, அங்கேதான் வேலைகளைச் செய்து கொண்டு இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இத்தகைய நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால்தான் அத்தியாவசியமான நிலையில் உள்ள இப்படிப்பட்ட பள்ளிக்கட்டிடங்களைக் கட்டுவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்வது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? மேலும், ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவிற்கு பொதுப்பணித்துறை இந்த கல்வி இலாகாவிற்கு கட்டிடங்கள் கட்டிக்கொடுப்பதற்காக திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது என்பதை கல்வித்துறை கேட்டுப்பெறுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மூலமாகத்தான் நாம் கட்டிடங்களைக் கட்டவும், கட்டிடங்களைப் பராமரிக்கவும் போன்ற காரியங்களை செய்து வருகிறோம். கல்வி இலாகா அவர்களிடத்தில் சொல்லித்தான் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால்தான் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகின்றது என்பது உண்மை. கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பல முறை அந்த பொதுப்பணித்துறை அதிகாரிகளை அணுகி இப்படிப்பட்ட காரியங்கள் துரிதமாகச் செய்யவேண்டும் என்று எடுத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளின் அடிப்படையிலும், வெளிப்படுத்திய செய்திகளின் அடிப்படையிலும் அதிகாரிகள் காலதாமதத்தைத் தவிர்க்க முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இது அந்த அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படும். காலதாமதத்தைத் தவிர்க்கவும், வேகமாக நடவடிக்கை எடுக்கவும் நிச்சயமாக நாங்கள் இதனையெல்லாம் எடுத்துக் காட்டுவோம் என்பதைச்சொல்லிக்கொள்கிறேன்.

**திருச்சி ஆனைக்குளம் பகுதியில் பர்மா அகதிகளுக்கு கடைகள் கட்டும் திட்டம்.**

*வினா எண். 705—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகராட்சி, சிங்காரத்தோப்பில் உள்ள ஆனைக்குளம் என்னும் இடத்தில் பர்மா அகதிகளுக்கு அங்காடி கடைகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அங்காடி கடைகள் கட்டும் வேலை எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம். (ஆ) மைய அரசு அகதிகள் புனர்வாழ்வு துறையினரிடமிருந்து கடனுதவி கோரும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. மைய அரசிடமிருந்து கடனுதவி பெறப்பட்டபின் பொதுப்பணித்துறையினர் மூலம் இந்த வேலை துவக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கடைகள் கட்டுவதற்காக மைய அரசிடமிருந்து உதவித் தொகை கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உதவித் தொகை எத்தனை கடைகள் கட்டுவதற்காகக் கொடுக்கப்பட இருக்கிறது? இந்தக் கடைகள் கட்டுவதற்கு





எப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு ஏற்கெனவே பர்மா அகதிகள் நீண்ட காலமாக அங்கே வாடகை இடங்களில் கடைகளை வைத்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடங்களை யாவது வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, 70 இலட்சம் ரூபாய் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் 280 கடைகள் மூன்று மாடிக் கட்டிடமாக கட்ட திட்டமிட்டு மத்திய அரசினுடைய அனுமதி கோரப்பட்டுள்ளது. 26–7–1980 அன்றும் அதற்குப் பின்னாலே 19–12–1981 அன்றும் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு நகர் மற்றும் ஊரகக் குழுக் கூட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் கடன் வழங்க அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது.

**சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கக்கோரி அரசுக்கு வந்துள்ள விண்ணப்பம்.**

*வினா எண். 706—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்கரன்கோவில் வட்டம் சுப்புலாபுரம், சம்சிகாபுரம், வயலி, சங்கரலிங்கபுரம், வீராணபுரம், கரி வலம், வந்த நல்லூர் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்பணி எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ) சுப்பலாபுரம். வயலி, கரி வலம் வந்த நல்லூர் ஆகிய மூன்று கிராமங்களுக்கு மட்டும் மேல்நிலை குடிநீர்த்தொட்டி கோரி விண்ணப்பம் வந்துள்ளது. இது மாவட்ட ஆட்சியரின் ஆய்வில் உள்ளது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த தகவல் முழுமையாக இல்லை என்று கருதுகிறேன். அதை தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும். கரிவலம், வந்தநல்லூரில் மேல்நிலை நீர்தொட்டி கட்டியாகிவிட்டது. இந்த சுப்புலாபுரம், வயலி, சம்சிகாபுரம், சங்கரிபுரம், வீராணம் ஆகிய ஐந்து கிராமங்களில் உள்ள மக்களும் தனியார் கிணறுகளில் குடிநீர் எடுக்க வேண்டியிருக்கிறது. குடிநீர்-வடிகால் வாரியத் தலைவர் அந்த கிராமங்களைப் பார்வையிட்டார். அங்கே இருக்

[1983 ஏப்ரல் 9

கின்ற கஷ்டத்தை உணர்ந்து உடனடியாக மேல்நிலை நீர் தொட்டி கட்ட ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார். அது மட்டுமல்லாமல், மேல்நிலை நீர் தொட்டி கட்டப்படும் வரையில் டாங்கர் லாரி மூலமாக தண்ணீர் விநியோகிக்கப்படும் என்றும் வாக்குறுதி கொடுத்தார்கள். 1½ ஆண்டு காலம் ஆகிவிட்டது. அந்த மக்கள் இன்றைக்கும் தனியார் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டியிருக்கிறது. இப்போது வறட்சியின் காரணமாக அந்தக் கிணறுகளும் வறண்டுவிட்டன. அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கிராமங்களுக்குப் பக்கத்திலே ஒரு சிறிய ஆறு ஓடுகிறது. அங்கிருந்து தண்ணீர் சப்ளை செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். எனவே உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கேட்டவுடனேயே வேலை தொடங்கப்பட்டு முடிந்திருப்பதினால் திருப்தியடைவார்கள் என்று கருதுகிறேன். சம்சிகாபுரம், சங்கரிபுரம், விரானம் ஆகிய மூன்று கிராமங்களைப் பொறுத்த வரையில் கோரிக்கை எதுவும் வரவில்லை என்றுதான் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதையே கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு, எவ்வளவு விரைவில் மேல்நிலை நீர்தொட்டி கட்டி முடிக்கப் பட முடியுமோ அவ்வளவு விரைவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சம்சிகாபுரம், விரானம் என்ற இரண்டு கிராமங்களும் சங்கரன்கோவில் தொகுதியைச் சேர்ந்தவை. அந்த விரானம் கிராமத்திற்குப் பக்கத்திலே ஒரு ஆறு ஓடுகிறது. அங்கே ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டு, அதிலிருந்து மேல் நிலை நீர் தொட்டிக்கு தண்ணீர் கொண்டுவந்து, பக்கத்தில் இருக்கிற ஐந்து கிராமங்களுக்குந் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது. அதை விரைவிலே பரிசீலித்து, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் அதை நிறைவேற்ற விரைவிலே நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே' விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.



1983 ஏப்ரல் 9]

திருச்சி மாவட்டம் உத்தமர்கோவில் இரயில்வே லைனில் மேம்பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 707—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உத்தமர்கோவில் இரயில்வே லைனில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அல்லது இரயில்வே லைனுக்கு அடியில் போக்குவரத்திற்காக சுரங்க பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்பொழுது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மேற்படி இடத்தில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்டத்தின் தற்போதைய தோராய மதிப்பீடு ரூ. 150 இலட்சம்.

(இ) அரசு, 17–2–75-ல் மேம்பாலம் கட்டும் பணியை ஆய்வு செய்து விவரமான மதிப்பீடு தயார் செய்து இரயில்வே வாரியத்தின் சம்மதம் பெறுவதற்கு அனுமதியளித்தது. இப்பணி இதுவரை "இரயில்வே திட்டப்பணி பட்டியலில்" சேர்க்கப்படவில்லை. இரயில்வே துறையினருடன் தொடர்பு கொண்டு, "இரயில்வே திட்டப்பணிகள் பட்டியலில்" இப்பணியை சேர்த்து புதிய மதிப்பீட்டிற்கு அரசின் அங்கீகாரம் பெற்று பணியினைத் துவக்க ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் புறப்பட்டு விட்டதாகத் தகவல், இன்னும் வந்து சேரவில்லை. ஆகவே இத்துடன் கேள்வி நேரம்.......

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத்தொடரில் கேள்வி நேரம் என்பது மிக முக்கியமான நேரமாகும். உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் தங்கள் தங்கள் தொகுதியில் இருக்கிற காரியங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி அரசிடமிருந்து பதில் பெற வேண்டிய முக்கியமான நேரம் என்பதை நாடும் நன்கு அறியும், தாங்களும் அறிவீர்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ

[1983 ஏப்ரல் 9

சமீபகாலமாக இங்கே கேள்வி நேரத்தில் அமைச்சர்கள் வருவ தில்லை. இங்கே முதல் அமைச்சர் அவர்கள் உட்பட 18 அமைச் சர்கள் இருந்தாலும் கூட கடந்த வாரத்தில் நான்கு அமைச்சர் களுக்கு கேள்விகள் போடப்பட்டு இரண்டு அமைச்சர்கள்தான் வந்திருக்கிறார்கள். இன்றும் இரண்டு அமைச்சர்கள்தான் வந்திருக்கிறார்கள். எங்களுக்கும் வேறு வேலைகள் இருக்கின்றன. சட்டமன்றம் கூடும்போது அமைச்சர்களை நீங்கள் வரவழைத்து பல செய்திகளை நாங்கள் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இது மாதிரி ஒருமுறை அல்ல பலமுறை நடந்துள்ளது. நீங்களும் திரும்பத் திரும்பச் சொல்கிறீர்கள். என்ன மரியாதை இருக்கிறது ? இதைவிட முக்கியமான வேலை அவர்களுக்கு வேறு என்ன இருக்கிறது ? ஆகவே இதில் நீங்கள் கடுமையாக இருக்கவேண்டும். (கூச்சல்-குழப்பம்)

**திரு. கோவைத்தம்பி :** தலைவர் அவர்களே, இன்று ஒரு முக்கியமான பிரம்மாண்டமான ஊர்வலம் நடைபெறுகிற காரணத்தால் போக்குவரத்தில் தடங்கல் ஏற்படிருப்பதால் தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு அமைச்சர்களும் வந்துவிட்டார்கள். எனவே கேள்வி நேரத்தைத் தொடரலாம். திரு. கோவைத்தம்பி அவர்கள் சொன்னது போல் ஊர்வலத் தினால் தடை ஏற்பட்டிருக்கலாம். (கூச்சல்—குழப்பம்).

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, வினா— விடை நேரம் பத்து மணிக்குள் முடிவதில்லையென்பதால் ஒன்பது மணி முதல் பத்து மணி வரை என்று கேள்வி நேரம் ஒதுக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 15 கேள்விகள் என்று போடுவது என்றும், கேள்வி போட்டவர்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் என்றும், கேள்விகளைச் சுருக்கமாகக் கேட்கவேண்டுமென்றும் ஏற்கனவே தாங்கள் தீர்ப்பளித்து அதன் அடிப்படையில் கேள்விகள் வரும் போது நாங்களும் துணைக் கேள்விகள் கேட்பதற்குத் தயாராக அவசர அவசரமாக சாப்பிட்டும் சாப்பிடாமலும் வருகிறோம். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வந்துவிடவேண்டும் என்று தாங்கள் ஏற்கனவே சொல்லி யிருந்தும், இந்த 15 கேள்விகளுக்குக் கூட பதில் பெற முடியாமல் போனால் அது எப்படிச் சரியாகும் ? ஆகவே இனிமேலாவது இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க ஒரு ஏற்பாடு செய்து எங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர்கள் வந்து விட்டார்கள்.



1983 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்லி விடுகிறேன். எல்லோரும் உட்காருங்கள். சபையை ஆரம்பிப்பதற்கு முன்னால், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் குறிப்பாக வந்து விட வேண்டும், . . . . (குறுக்கீடுகள்).

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்து விட்டார் கள். அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சபைக்கு வருவதற்கு எட்டேமுக்கால் மணிக்கு முன்னதாகவே புறப்பட்டு விட்டேன். எனது இல்லம் அமைந்தகரையில் இருக்கிறது. வருகிறபோது ஊர்வலம் இருந்ததால், டிராபிக் ஜாம் ஏற்பட்டு, சில நிமிடங்கள் தாமதமாக வர நேரிட்டது. எனவே, வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஊர்வலத்தினால் தடை ஏற்பட்டு விட்டது. வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். அத்தோடு விட்டு விடுங்கள். நாளையி லிருந்து 9 மணிக்குள் வந்துவிடுவார்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை 9 மணியிலிருந்து 10 மணி வரையிலும் கேள்வி நேரம். கேள்விகளுக்குரிய அமைச்சர் கள் கேள்வி கேட்கும் நேரத்தில் இருக்கவேண்டுமென்பது முறை ; விதி. கேள்விகள் கேட்கும்போது, அமைச்சர்கள் இருக்கவேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்துவதை நான் மனதார ஏற்றுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்த வரையில், கேள்வி நேரத்திற்கு முன்கூட்டியே வந்துவிடுகிற வழக்கத்தை வைத்திருக்கிறேன். கேள்விகள் கேட்கின்ற நேரத்திலே, அதற்கு முன்கூட்டியே தவறாமல் எல்லா அமைச்சர்களும் அவையில் இருக்க வேண்டும். அந்த முறையை எல்லா அமைச்சர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், எதிர்பாராது சில சமயங்களில் இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதுண்டு. பாராளுமன்றத்திலும் நடைபெற்றிருக் கிறது ; பிறசட்டமன்றங்களிலும் நடைபெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்.)

எதிர்பாராததன் விளைவாக இப்படிப்பட்ட நிலை ஏற்படு கின்றபோது, தவிர்க்க முடியாத காரணங்களினால், நேரத்தில் வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. அந்த சூழ்நிலையை

எண்ணி, மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்தருள வேண்டும்.
ஆனாலும் கூட, சில சமயங்களிலே கேள்விகேட்ட மாண்புமிகு
உறுப்பினர்கள் வந்தாலும், வராவிட்டாலும், நாங்கள் பெருந்
தன்மையோடு பதில் சொல்லுகின்ற அளவுக்கு ஒரு நிலையை
ஏற்படுத்தியிருக்கிறோம். (குறுக்கீடுகள்).

நான் இவ்வாறு சொல்வதைக் குற்றமாக எடுத்துக்கொள்ள
வேண்டாம். கேள்வி கேட்டவர்கள் சபையில் இல்லாவிட்டா
லும், அவர் சார்பாக இன்னொருவர் கேட்கலாம் என்றிருக்
கிறது. அதேமாதிரிகூட, அமைச்சர்கள் பொறுத்தவரையில்
ஒரு அமைச்சர் சார்பாக இன்னொரு அமைச்சர் பதில் சொல்ல
லாம். கேள்விகள் கேட்கின்றவர்களுக்கு விளக்கமான, எளிமை
யான பதில் சொல்லவும், சில துணை வினாக்களுக்கு சம்பந்தப்
பட்ட துறை அமைச்சரே பதில் சொல்லவும் என்கின்ற முறை
இருந்தால் வசதியாக இருக்கும். ஆகவே, கேள்வி நேரத்திலே
கேள்விக்குரிய அமைச்சர்கள் உரிய நேரத்திற்கு வரவேண்டும்.
அந்தந்த அமைச்சர்கள் எந்த நேரத்திற்குள் வரவேண்டுமென்ற
கணக்கு இருக்கிறது. அதற்கு முன்னால் வந்துவிட வேண்டு
மென்ற அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்
எதிர்பாராத ஏற்படுகின்ற விளைவுகளினால் அவ்வாறு சில
நேரங்களில் செய்ய முடியவில்லை. அதை மாண்புமிகு உறுப்
பினர்கள் பொறுத்தருள வேண்டும். இனி எல்லாம் நன்கு நடை
பெறும். அப்படி நடைபெறுகின்ற சூழ்நிலைக்கு எல்லாத்
தரப்பினர்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

## திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களிலுள்ள மிதியடி தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை.

*வினா எண். 708—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு
கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரண்டு வட்டங்களிலும்
தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் மிதியடி
தைக்கும் தொழிலாளர்களுக்கு எத்தனை நபருக்கு கடன் வழங்கப்
பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தமிழ் நாடு
கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் மிதியடி தைக்கும்
தொழிலாளர்களுக்கு இதுவரை திருவண்ணாமலை வட்டத்தில்
15 நபர்களுக்கும் செங்கம் வட்டத்தில் 3 நபர்களுக்கும் கடன்
வழங்கப்பட்டுள்ளது.





திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரண்டு வட்டங்
களிலும் 18 நபர்களுக்குத்தான் கடன் வழங்கப்பட்டுள்ளது என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். 18
நபர்கள் மட்டும்தான் மனுக்கள் போட்டிருந்து, அதுபற்றி
பரிசீலித்து அவர்களுக்கு கடன் வழங்கப்பட்டதா ? அல்லது
பலபேர் மனுச் செய்தும் அவர்களில் தகுதியுள்ளவர்கள் 18 பேர்
களுக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் பெறப்பட்டு
பரிசீலனை செய்ததன் அடிப்படையில்தான் இந்தக் கடன்
வழங்கப்பட்டிருக்கின்றது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையின்
அடிப்படையில்தான் இந்தக் கடன் வழங்கப்படுகின்றது என்று
கூறுகிறார்கள். பரிசீலனை என்றால் என்ன ? ஒவ்வொரு
வருக்கும் எவ்வளவு தொகை கடன் வழங்கப்படுகின்றது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கடனைத் திருப்பிச்
செலுத்துவதற்குரிய தகுதியும், ஆற்றலும் உடையவர்கள்தானா
என்று அந்தந்த வட்டத்தைச் சேர்ந்தவர்கள் பரிசீலனை செய்த
பின் ரூபாய் 250 மானியமாகவும், ரூபாய் 250 நடைமுறைக்
கடனாகவும், 2,000 ரூபாய் மூலதனக் கடனாகவும் வழங்கப்
படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மிதியடித் தொழிலாளர்களுக்கு வழங்கப்படு
கின்ற கடன்களைப் பொறுத்த வரையில் அவரவர்கள்
விண்ணப்பம் செய்கின்றபோது அதுபற்றி பரிசீலனை செய்து
எத்தனை நபர்கள் தகுதியுள்ளவர்கள் என்று பார்த்து அவர்
களுக்குக் கொடுக்கப்படுகின்றதா ? அல்லது இந்த மிதியடித்
தொழிலாளர்களுக்கு கடன் வழங்குவதற்காகவே ஏதாவது
ஒரு தொகை ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என் இராசேந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைக் கணக்கில்
கொண்டும், மனுக்கள் வந்திருப்பதைக் கணக்கில் கொண்டும்
பரிசீலித்து அதன் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது.
மேலும் ... ஆண்டும் எவ்வளவு கொடுக்கப்பட

வேண்டும் என்று நிர்ணயித்து அதன் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் 1982-83-ஆம் ஆண்டில் 600 தொழிலாளர்களுக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம். 1983-84 ஆம் ஆண்டி லிருந்து ஆண்டு ஒன்றுக்கு 1,000 மிதியடித் தொழிலாளர்கள் வீதம் 1985-ஆம் ஆண்டு முடிய 2,000 பேர்களுக்கு நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ.ப. இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2,000 ரூபாய் அதிக பட்சமாகக் கடன் கொடுக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். 2,000 ரூபாய் கடனாகவும், 250 ரூபாய் மானி யமாகவும், 250 ரூபாய் நடைமுறைக் கடனாகவும் வழங்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு கடன் வழங்கப்படு கின்றதைப் பொறுத்தவரையில் அவரவர்களுடைய சொத்தின் அடிப்படையில் அந்த சூரிட்டியின் அடிப்படையில் வழங்குவதற் குப் பதிலாக அரசாங்கத்தில் பணிபுரிபவர்கள் அந்த மிதியடித் தொழிலாளர்களுக்கு சூரிட்டி வழங்கினால்தான் கடன் கொடுக்கப் படும் என்றும் சொல்லப்பட்டதன் காரணத்தால் செங்கம் பகுதி யில் உள்ள பல்வேறு தொழிலாளர்களுக்கு அந்தக் கடனைக் கொடுக்க முடியாமல் போனதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? மிதியடித் தொழிலாளர்களாக இருப் பவர்கள் ஏழை மக்களாக இருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு உள்ள சொத்தின் அடிப்படையில் இந்த 2,000 ரூபாய் கடனைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம் 2,000 ரூபாயாவது கிடைத்தால்தான் அதற்குரிய கருவிகளை வாங்க இயலும், எனவே, வருங்காலத்திலாவது அவர்கள் தங்களது சொத்தின் அடிப்படையில் அதாவது அந்த சூரிட்டியின் அடிப்படையிலேயே கடனைப் பெறுவதற்குரிய ஏற்பாடு செய்யப் படுமா ? அதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2,000 ரூபாய் மூலதனக் கடனாகக் கொடுக்கப்படுகின்றது. நடைமுறைக் கடனாக 250 ரூபாயும் மானியமாக 250 ரூபாயும் வழங்கப்படுகின்றது. இத னைத் திருப்பிச் செலுத்தக்கூடிய வாய்ப்புள்ளவர்களுக்குத்தான் இந்தக் கடன் கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினை அரசு பரிசீலனை செய்யும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மிதியடித் தொழிலாளர்களுக்கு சென்னையி லும் மற்றைய மாவட்ட தலைநகரங்களிலும் பங்குகள் வழங்கப்



படுகின்றன. இது கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்கப்படுமா ? அதற்கு எவ்வளவு கடன் வழங்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கேட்கப்பட்ட கேள்வி தனி நபர்களுக்கு, அதாவது மிதியடித் தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்படுகின்ற கடனைப் பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காப்புலர்ஸ் பங்க் பற்றிக் கேட்கிறார்கள். அதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. எனவே, தனியாகக் கேள்வி போட்டால் விவரமான பதிலளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனி நபர்களுக்கு, அதாவது மிதியடித் தொழிலாளர்களுக்கு கடன் கொடுக்கப்படுவ தாக அறிவித்தார்கள். அப்படிப்பட்ட தனி நபர்களுக்கு கிராமப் புறங்களில் அந்தக் கடனைத் தருவார்களா ? அப்படித் தந்தால் அதனைத் திருப்பி வசூலிக்கின்ற முறை எவ்வாறு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் கிராமம், நகரம் என்ற குறிப்புக்கள் சொல்லப்படவில்லை. அனைத்து மிதியடித் தைக்கும் தொழிலாளர்கள் போடும் மனுக்களை பரிசீலித்து இது வரை 1977 லிருந்து 1982-க்குள் 3,714 மிதியடி தயாரிக்கும் தொழிலாளர்களுக்கு 9,28,500 ரூபாய் மானியமாகவும், 77,56,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் பாகுபாடு எதுவும் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே இந்த மிதியடி தைப்பவர்களுக்கு கொடுக்கக்கூடிய மானியம் ஒரு புறம் இருந்தாலும், அதற்கு ஒதுக்கக்கூடிய நிதி மிகவும் குறைவானது. இந்த நிதியை அதிகப் படுத்தி குறைந்த பட்சம் நகரத்திற்கு ஒரு வருடத்திற்கு இவ்வளவு பேர், ஒரு ஒன்றியத்திற்கு இவ்வளவு பேர் என்ற முறையில் நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் என்னுடைய பதிலைக் கேட்டிருந்தால் தெரிந்து இருக்கும். சிறுகச் சிறுக அதிகபட்சம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த நல்ல காரியத்தை வாரியம் செய்து

வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 100 பேருக்கு, 200 பேருக்கு கொடுத்து வந்த இந்த கடன் உதவி இப்போது 1982-83-ல் 600 பேருக்கும், 1983-84-ல் ஆயிரம் பேருக்கும், 1984-85-ல் ஆயிரம் பேருக்கும் என்று திட்டத்தை வகுத்து நாங்கள் கொடுத்து வருகிறோம். அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நீதி மன்றங்களுக்கான கட்டடம்.

* வினா எண். 709— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நீதிமன்றங்கள் கட்டட வேலை நடை பெறவில்லை என்பது குறித்து அரசுக்கு தகவல் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ்வேலையை உடன் முடிக்க நட வடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு, 2½ ஆண்டு காலம் ஆகியும் இதுவரை வேலை நடை பெறவில்லை என்று அரசுக்கு இந்தத் துறையைச் சேர்ந்த வக்கல் சங்கத்தின் சார்பில் நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். இந்த வேலையை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா ? எவ்வளவு காலத்திற்குள் இந்த வேலை முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் துணை நீதி மன்றக் கட்டிடம் ரூ.14 இலட்சம் செலவிலும், 2 துணை நீதிபதி களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூபாய் 1.76 இலட்சம் செலவிலும், 2 முனிசீப்புகளுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூபாய் 1.18 இலட்சம் செலவிலும் ஆக ரூ. 16.94 இலட்சம் செலவில் கட்டுமானம் கட்டுவதற்குப் பொதுப்பணித் துறை பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கான இடம் இன்னும் முடிவு



செய்யப்படவில்லை, அந்தக் கட்டிடம் கட்டுமான வேலைகள்
இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் நீதிமன்றத்திற்கு
கட்டிடம் கட்டும் பணி மட்டும் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்
பட்டது. இது அடித்தளத்தின் இடப்பக்கம் பிரிவு, அடித்தளத்
தின் வலப்பக்கம் பிரிவு, மேல் கட்டிடம் என்று 3 பகுதியாக
பிரித்து கட்டுமானம் நடைபெற்று வருகிறது. இது பகுதிகளாக
பிரிக்கப்பட்டு இருப்பதால், தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக
பல முன்னேற்றங்கள் பாதிக்கப்பட்டு இருந்தாலும்கூட பணி
தொடர்ந்து நடைபெற்று வருவதாககுறிப்புகள் சொல்லுகின்றன.
இது விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு
உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தப் பணி விரைவில் கட்டி முடிக்கப்படும்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.
தண்ணீர் தட்டுப்பாடு 6 மாதமாகத்தான் இருக்கிறது. 2 ஆண்டு
களுக்கு முன் அந்த நீதிபதிகள் குடியிருப்பு இல்லங்களுக்கு இடம்
ஒதுக்கப்பட்டு இருந்தும் அந்த வேலைகள் நடைபெறவில்லை.
எனவே, இந்த காலதாமதம் ஆவதற்கு காரணமானவர்கள் மீது
தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முனைவதோடு ஒரு குறிப்பிட்ட
காலகட்டத்தோடு இந்த வேலைகளை முடிக்க அரசு ஆணை
யிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்பு இல்லங்களுக்கு
இடம் கிடைத்தவுடன் உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கப்படும்.
நீதிமன்றத்திற்கான கட்டிடம் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்
தில் ஆரம்பிக்கப்பட்டு கட்டிட வேலை நடைபெற்றுக் கொண்டு
வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும்.
இவ்வளவு கடினமான சூழ்நிலையில் சிமிண்டு கிடைக்கவில்லை.
தண்ணீர் தட்டுப்பாடு இருந்தாலும் கூட பொதுப் பணித்துறை
கடமையை உணர்ந்து வேகமாக முடிப்பதில் முனைந்து இருக்கிறது
என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இன்றைக்கு
பொதுப் பணித்துறையிலே கட்டப்படும் அரசுக் கட்டடங்கள்
எல்லாவற்றிற்கும் அடிக்கல் நாட்டுவிழா செய்து, 2,3 ஆண்டுகள்
ஆகியும் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக
திண்டுக்கல் துணை நீதிமன்றக் கட்டடத்திற்கு பல அமைச்சர்கள்
போய் கல்நாட்டுவிழா பண்ணி 2 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்
டதே, இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையே, அந்தக் காலதாமதத்
திற்குக் காரணம் என்ன ?

[1983 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. எஸ் என். இராசேந்திரன் : 1977-க்கு முன்பு கல்நாட்டப்பட்ட கட்டடங்கள் இன்னும் எழும்பாமலே கல்லாகவே இருந்து கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) அடிக்கல் நாட்டியும் கட்டடம் எழும்பாமல் இருப்பது தெரியுமா என்று கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன், இந்த ஆட்சியிலே அடிக்கல் நாட்டியவுடனே உடனடியாக கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அதற்கு முன்பு கல்நாட்டு செய்யப்பட்டவைகள் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொண்டிருப்பார் என்று கருதுகிறேன். திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் கல்நாட்டி இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இடம் ஒதுக்கப்பட்டவுடனே அந்தக் கட்டடம் எழுப்பப்படும் என்பதையும் அதேபோல் அடிக்கல் நாட்டிய அனைத்துக் கட்டடங்களும் கட்டப்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பார்வையற்ற பட்டதாரிகள்.**

* **வினா எண். 710—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வையற்ற பட்டதாரிகள் மாநிலம் முழுவதும் எத்தனை பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர் ?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் வருட வாரியாக எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) வேலையில்லாமல் இருப்போர் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) 1-1-1978 முதல் 30-6-1982 வரை 98 பார்வையற்ற பட்டதாரிகளும், 33 பார்வையற்ற முதுநிலைப் பட்டதாரிகளும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தனர்.

(ஆ) 1978 முதல் 1980 முடிய மூன்று ஆண்டுகளில் 9 பட்டதாரிகளுக்கும் 2 முது நிலைப் பட்டதாரிகளுக்கும் 1981-ல் 9 பட்டதாரிகளுக்கும் 2 முதுநிலைப் பட்டதாரிகளுக்கும் மற்றும் 1982 (ஜூன் திங்கள் முடிய) 3 பட்டதாரிகளுக்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 9]

(இ) 30-6-1982 நிலவரப்படி 69 பார்வையற்ற பட்டதாரிகளும் 29 பார்வையற்ற முதுநிலைப்பட்டதாரிகளும் செல்லுபடியாகும் பதிவேட்டில் ( Live Register ) வேலைக்காகக் காத்திருந்தனர்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த ஊனமுற்றவர்களிலேயே அதிகமாக பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் பார்வையற்றவர்கள்தான் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். பட்டம் பெற்றவர்கள், முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் ஆகியவர்களுக்கு வேண்டிய வேலைவாய்ப்பை இதுவரையில் கொடுக்காமல் இருந்தால் எப்படி அவர்கள் வாழ்க்கை நடத்த முடியும் என்பதை அரசு உணர்ந்து அவர்களுக்கு தனியார் தொழிற்சாலைகளிலாவது வேலைவாங்கித் தரவேண்டும் அல்லது அரசே அவர்களுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்குரிய வேலை கிடைக்கிறவரையில் அவர்களுக்கு உதவித் தொகையை அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, பதிவு செய்த பட்டதாரிகள் 98, முதுநிலை பட்டதாரிகள் 33 பேர்கள். 3 ஆண்டுகளில் 21 பட்டதாரிகளுக்கும் 4 முதுநிலை பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதிவு செய்து வேலையில்லாமல் 3 ஆண்டுகள் காத்திருந்தால் அந்த அடிப்படையிலே அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் அதற்காக திட்டங்கள் வகுத்து பார்வையற்ற பெண்களுக்காக தொழிற் கூட்டங்கள் அமைத்து அதன் மூலமாக 6 மாதம் பயிற்சி கொடுத்து 4 பார்வையற்ற பெண்களுக்கு சாக்கட்டி செய்தல் நெசவுத் தொழில் போன்றவைகளில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து பயிற்சிக் காலத்தில் 50 ரூபாய் உதவித் தொகை அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற வகையில் ஹாஸ்டல் பெசிலிட்டிஸ் என்ற முறையிலே இருப்பிடச் செலவும், உணவுச் செலவும் செய்வதன் மூலமாக வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு பார்வையற்றோருக்கு நெசவுத் தொழிலில் 6 மாதம் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ஆணை பிறப்பித்திருக்கிறோம். இந்த ஆண்டு பார்வையற்றோர் முதலில் 30 பேர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளிக்கப்படும். அவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நான்கு பகுதிகளாக 2 ஆண்டுகளில் 120 பார்வையற்றோர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அந்தப் பயிற்சிக் காலத்திலே 100 ரூபாய் உதவிப் பணமாக கொடுக்கப்படும். அந்த பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அதன் மூலமாக 120 பார்வையற்றோர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல திட்டங்கள் தீட்டி வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

[1983 ஏப்ரல் 9

(முற்பகல் 9-50)

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்தவர்கள் இன்றுவரையில் வேலை இல்லாமல் இருப்பவர்கள் பட்டதாரிகள் 69 பேர்கள் ; முதுநிலை பட்டம் பெற்றவர்கள் 23 பேர்கள் ; இவர்கள் எல் லாம் பார்வையற்றவர்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்வது, படித்தவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் ; இந்த உதவித் தொகை மூன்று ஆண்டு தான் கொடுக்கிறீர்கள் ; 1978-லேயிருந்து 1981 வரையில் தான் உதவித் தொகை கொடுக்கிறீர்கள். 1981-க்கு பிறகு உதவித் தொகை கிடைக்காது. ஆகவே அரசாங்கத்திற்கு சொந்தமான பல நிறுவனங்களில் இந்த 23 பேர்கள் முதுநிலை பட்டம் பெற்ற வர்களுக்கும், 69 பேர்கள் பட்டம் பெற்றவர்களுக்கும் ஏதாவது ஒரு வேலை வாங்கிக் கொடுக்க சமூக நலத்துறையின் மூலம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் ; கஷ்டப்படுகிறவர்களுக்கு வாழ்வளிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர் களே, பார்வையற்றோர் பள்ளிகளில் இடம் காலியாக இருந்தால் தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். இடம் காலியில்லை என்றால் எப்படி கொடுக்கமுடியும்? அந்த அடிப் படையில் எங்கெங்கு காலியிருக்கிறதோ அங்குஅவர்களுக்குவேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. உதவித் தொகை கொடுப்பதைப் பற்றி அரசு இன்றைக்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களை கூட அவர்களுக்காக அமைத்து நெசவுத் தொழிலிலே 30 பேர்கள் வீதம் என்று வைத்து 120 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. (குறுக்கீடு) பட்டதாரிகளும் நெசவுத் தொழிலைச் செய்கிறார்கள்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு என்று நம்முடைய இந்தியா முழுவதும், தமிழகம் முழுவதும் மிகவும் சிறப்பாக, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே கொண்டாடி இருக்கிறோம். அதனுடைய தொடர்ச்சியாக இன் றைக்கும் கொண்டாடுகிறோம். நாளைக்கு கூட ஒரு நிகழ்ச்சி இருப்பதாக அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட பங்கு கொள்ளவிருப்பதாக தெரிகிறது. அந்த அடிப்படையிலே உடல் ஊனமுற்றவர்களுக்கென்று நாம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் பார்வை அற்றவர்கள். ஆகவே அரசாங்க அலுவலகங்களில் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுக்க வேண்டுமென்ற விதியை தளர்த்தி இவர்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த முறை யிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 9]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இன்றைக்கு திட்டங்களைத் தீட்டி வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். பட்டதாரிகளுக்கு நெசவுத் தொழிலில் எப்படி பயிற்சி கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். செய் யும் தொழிலே தெய்வம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பட்ட தாரிகளாக இருந்தாலும் எந்தத் தொழிலை எடுத்துக்கொண் டாலும், செய்யும் தொழிலே தெய்வம் என்ற வகையில் எடுத்துக் கொண்டு அவர்கள் ஈடுபட்டால் அது சிறப்பாக இருக்கும் என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு குறிப்பிட விரும்பு கிறேன்.

திரு. இரே. இராமமாணிக்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையற்ற பட்டதாரிகளில் இன்னும் 92 பேர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி கொடுக்க அரசு உத்தேசித்து இருப்பதாகவும், பயிற்சி காலத்தில் 100 ரூபாய் உதவித்தொகை கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். 100 ரூபாய் உதவித் தொகை என்பது மிகவும் குறைவான தொகையென்ற காரணத்தினால் இதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அந்த உதவித் தொகை குறித்து நிதிநிலை அடிப்படையில் தான் நாம் பரிசீலனை செய்ய முடியும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங் களில் குறைந்தபட்சம் 2 சதவீதமாவது இந்த உடல் ஊன முற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்பது நியதி. ஆனால் ஒதுக்கப்படுகிற ஒதுக்கீடு முறையாக வழங்கப்படு கிறதா என்பதை பார்க்கிறபோது, எனக்கு தெரிந்த வரையில் அப்படியில்லை என்றுதான் நான் அறிகிறேன். அதை கண் காணிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ? உடல் ஊனமுற்றோர்களுக்கு மாநில அரசு கொடுக்கிற உதவித் தொகை பொறுத்தவரையில் வயது வரம்பு முதலான மற்ற கண்டிஷன்கள் இல்லாமல், நிபந்தனைகள் இல்லாமல் அனைவருக்கும் நிதியுதவி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற இரண்டு கேள்விகளுக்குப் பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, எதற்கும் வரையறை என்று ஒன்று வேண்டும். வரையறை இல்லாமல் செய்தால் எந்த அடிப்படையில் நாம் செய்யமுடியும் ? ஆகவே தான் வயது வரம்பு ; தகுதி அடிப்படை ; இத்தனை காலம் பதிவு செய்து காத்திருக்க வேண்டும் ; என்றெல்லாம்

வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் உதவித் தொகை
யும் வ்ழங்கிக் கொண்டு வருகிறோம். 3 சதவீதம் என்ற அடிப்
படைட்யில் தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு
வருகிறது. உறுப்பினர் அவர்களுக்கு கிடைத்த தகவல் தவறாக
இருக்குமென்று கருதுகிறேன். என்னிடம் கொடுக்கப்பட்டிருக்
கிற குறிப்பின்படி மூன்று சதவீதம் என்ற வகையில் தான் அவர்
களுக்கு முறையாக வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் குடியமர்ந்துள்ள இலங்கை அகதிகள்.

*வினா எண். 711—திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு சமூக
நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர், தேவலா, கரியசோலை,
நிலாக்கோட்டை, சேரம்பாடி, எருமாடு, நெல்லியாளம், முக்
கட்டி, பட்டவயல், தேவர்சோலை, மிகினகுடி, ஸ்ரீமதுரை, புத்
தூர்வயல் ஆகிய பகுதியிலுள்ள இலங்கை அகதிகளை தங்களின்
நிலங்களிலிருந்து அரசு வெளியேற்றியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அம்மக்களின் குறை போக்க மேற்
கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இலங்கையி
லிருந்து தாயகம் திரும்பியுள்ளவர்கள் அவர்களது நிலங்களி
லிருந்து வெளியேற்றப்படவில்லை. வனத்துறையின் நிலங்களி
லிருந்து 54 ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்
களில் நான்கு பேர் தாயகம் திரும்பியவர்கள்.

(ஆ) அந்த நான்கு தாயகம் திரும்பியோர் நீலகிரி மாவட்ட
ஆட்சித் தலைவரிடம் உதவி கோரி இதுவரை மனுசெய்து
கொள்ளவில்லை.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, வெளியேற்றப்பட்டிருக்கிற அந்த கிராமங்களிலே ஏறத்
தாழ 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர்
அவர்கள் அதனை முழுமையாகக் கணக்கெடுத்து, அகதிகளாக
இருப்பவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மீண்டும் அந்த
நிலத்தை ஒதுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேவலா மற்றும் கரிய சோலை பகுதியிலுள்ள 38.90 ஏக்கர் பரப்பிலுள்ள வனத்துறை நிலங்களில் சட்டத்திற்குப் புறம்பாக நிலம் ஆக்கிரமிப்பு செய்த 54 ஆக்கிரமிப்பாளர்கள் மட்டும் வனத் துறையினரால் வெளி யேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு வெளியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு மாற்று நிலம் வழங்கப்படவில்லை. அவ்வாறு வெளியேற்றம் செய்யப்பட்ட 54 ஆக்கிரமிப்பாளர் களில் 4 பேர்கள் மட்டும்தான் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி யவர்கள். அவர்களுடைய பெயர்களை வேண்டுமானால் குறிப் பிடுகிறேன். வீரன், ராசப்பன், பீரன், மம்மன் ஆகிய 4 பேர்கள் மட்டும்தான் தாயகம் திரும்பியவர்களாக இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகிக் கூட எங்களுக்கு நிலம் வேண்டுமென்று மனு கொடுக்க வில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மனு கொடுத்தால் கண்டிப்பாக தகுதி அடிப்படையில், அவர்களுக்கு, எங்கெங்கு நிலம் அமைத்துக் கொடுக்க முடியுமோ, அங்கெல்லாம் அமைத்துக் கொடுக்கிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கி றார்கள்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இவைகள் 'அன்ரிசர்வ்ட் பாரஸ்ட்' பட்டியலிலே இருக்கின் றன. ஆகவே, அவைகள் எதற்கும் உதவாத நிலமாக இருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கே அந்த நிலத்தைக் கொடுத்து, அவர்களைக் குடியமர்த்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இதுபற்றி வழக்கு ஒன்றுகூட நீதிமன்றத்தில் இருக்கிறது. வனம் மற்றும் மீனளத் துறையினர் கருத்து தெரிவித்திருக்கிறார் கள். அந்த அடிப்படையில் கூடலூர் சம்பந்தப்பட்ட வரையில் அத்துமீறி குடியேற்றம் செய்தவர்கள் வெளியேற்றம் செய்யப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் இந்தச் செயலைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். அவ்வாறு வெளியேற்றம் செய்யப் பட்டவர்கள் தாயகம் திரும்பியவர்களா? அல்லது எந்த மதம்? எந்த இனம் என்ற அடிப்படையில் கருத்துக்கள் எடுத்துக்கொள் ளப்படவில்லை. இந்திய உச்ச நீதிமன்றம் மேற்படி வெளியேற்றம் பற்றிய வழக்கு ஒன்றை விசாரித்து வருகிறது. எனவே, அது நீதி மன்ற விசாரணைக்கு உட்பட்டதாக இருப்பதால் அதைப்பற்றி நீதிமன்றம்தான் குறிப்பிடவேண்டும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களை, இலங்கைத் தமிழர்கள் பலர் இதுபோன்று அநாதர வாகப் பல்வேறு இடங்களில் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மனு செய்தால் நிலம் அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். அந்தமுறைகளே அவர்களுக்குத் தெரியவில்லை. எங்கே குடியேற்றப்படுகிறார்களோ, அங்கே பலவிதமான ஏமாற் றங்களுக்கு ஆளாகி, அங்கேயிருந்து வெளியேற்றப்படு கிறார்கள் அல்லது வெளியேறுகிறார்கள். ஆக, இலங்கைத் தமிழ் அகதிகள் எங்கெங்கு அரசினால் குடியேற்றப்படுகிறார்களோ, அங்கேயெல்லாம் அவர்களுடைய வாழ்க்கைச் செம்மையாக இ க்கிறதா? முறைாக அவர்களுக்கு அரசாங்கம் அளித்து வருகிற உதவிகள் நேரடியாகக் கிட்டியிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்களே, விசாரிக்க வேண்டும். அல்லது அதற்கு ஒரு விசார ணைக்கு ஏற்பாடு செய்து, அவர்களுக்கு நிலத்தை அளிக்க அமைச் சர் அவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன் வருவார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியவர்களுக்கு இலங்கை கண்டியிலுள்ள ஹை கமிஷனர் ஒரு கருத்தைத் தெரி வித்து, இவர்களுடைய ஃபாமிலி கார்டில் எழுதி அனுப்புவார்கள் விவசாயம் என்றால் வி. சாயம், அல்லது நிலம் என்றால் நிலம், அல்லது தொழில் என்றால் தொழில் என்ற அடிப்படையில் எழுதி அனுப்புகின் ார்கள். ஆனால், இங்கு வந்தவுடன், விவசாயம் என்று இருந்தாலும், தொழிலைத்தான் கேட்கிறார்கள். விவசாயம் செய்ய மறுக்கிறார்கள். ஆனால், மாற்று முறையை நாம் கையாள முடியாது. மத்திய அரசாங்கத்தை அணுகி, அவர்கள்தான் அந்த உத்தரவை மாற்றிக் கொடுக்க வேண்டும். ஆகவே, அவர்களிட மிருந்து ஆணை பெறப்பட்ட பின்பு தான் நாம் மாற்றிக்

(முற்பகல் 10.00)

கொடுக்க முடியும். அந்த அடிப்படையிலே உதவிகளைப் கொடுத்தாலுமகூட, அந்தக்குறிப்பிட்ட இடத்தில் உதவியைப் பெறாமல், மாணபுமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல வேறு இடத்திற்கு அனுப்பினாலும் கூட, சீதோஷ்ண நிலை ஒத்துக்கொள்ளவில்லை என்ற அடிப் படையிலே உடனே நீலகிரி மாவட்டத்திற்கு வந்து நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் அரசு எல்லோருடைய நலன்களையும் கவனிக்க வேண்டும் என்ற அடிப்படையில் நீலகிரி மாவட்டம் என்று குறிப்பிட்ட வரையில் வந்திருந்தால் அந்த நிலம் கொடுக்கப்படும். மற்ற இடங்களுக்குச் சென்றாலும் அந்த சீதோஷ்ண நிலையின் அடிப்படையில் தங்கியிருக்க வேண்டும். ஆனால் அங்கு இருக்காமல் இங்கே வந்து விடுகிறார்கள். இப்படிப் பட்ட பிரச்சினைகளால் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் ு னாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.



**திரு. கோனவத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, பெரும்பாலும் இந்த அகதிகளுக்குத் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக கூடலூர் தாலூக்கா வில் அதிக இடம் ஒதுக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றி, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல சமுதாய மாற்றங்களின் நிலை கருதி பரவலாகத் தமிழ் நாட்டில் இருக்கின்ற மலைப் பிரதேசங்களில் கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கண்டியிலிருக்கின்ற ஹைகமிஷனர் எங்கெங்கு போக வேண்டுமென்று எழுதி அனுப்புகிறார்களோ அங்குதான் போக முடியும்.

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவரவர்களே, இலங்கை அகதிகளுக்குக் கூடலூர் தாலுக்காவிலே பல இடங்களில் நிலம் கொடுத்து அதில் அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் பலரை வெளியேற்றியிருப்பது உண்மை. ஆகவேதான் அந்தக் கேஸ் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் நடந்துகொண்டிருக்கிறது. இப் பொழுது தேயிலைத் தோட்டத்திலேயும் வேலை கிடைக்காமல் இருக்கும்பொழுது, அவர்கள் நிலத்திலிருந்தும் வெளியேற்றப்பட் டிருக்கும் நிலைமையிலே, பந்தலூர் பகுதியிலே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த இடத்திலே நிலமில்லாமல் இருக்கின்றவர்களுக்கு, விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கு அரசு பரிசீலனை நடத்தி, கணக்கெடுத்து எற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வருவாய்த் துறையைச் சேர்ந்த பல்வேறு பகுதிகளில் இலங்கையிலிருந்து தாய கம் திரும்பியவர்களுக்கு விதியின் அடிப்படையில் நிலம் வழங்கப் படுகிறது. அதேசமயத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி யவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வேண்டும். ஆனால் அப்படி அணுகுவதற்குத் தவறித் கொண்டிருக்கிறார்கள். அவர் களை அணுகினால்தான், எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. என்பதை அவர்களுக்குக் தெரிவித்தால்தான், அவர்கள் எப்படிப் பட்ட சலுகைகளைக் கொடுக்க முடியும் என்பதை ஆராய வேண் டும். அணுகவில்லை என்ற குறிப்பு இருக்கிறது. கண்டிப்பாக மாவட்ட ஆட்சித் தலவைரை அணுகினால் அவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[1983 ஏப்ரல் 9

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே,
இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள் பல்லாயிரக்
கணக்கான பேர்கள் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக மாவட்ட
ஆட்சித் தலைவரிடத்திலும் சரி, ஹை மிஷனரிடத்திலும் சரி,
விவசாயம் செய்வதற்கு நிலம் வேண்டும், வீட்டுமனைப்
பட்டா வேண்டும் என்றெல்லாம் கேட்டும் கூட இதுவரை
யிலும் யாருக்குமே கொடுக்கவில்லை என்பதை அரசு அறி
யுமா? அங்கு கரியசோலை, தேவலா போன்ற இடங்களிலும்,
கூண்டி போன்ற பெரும்பாலானவர்கள் வசிக்கின்ற இடங்
களிலும், குன்னூர் போன்ற இடங்களில் கக்காச்சு போன்ற
இடங்களிலுள்ள எத்தனையோ இலங்கை அகதிகளுக்கு
இன்னும் வீட்டு மனை கொடுக்கப் படவில்லை. அவர்களுக்கு
வீட்டு மனைப் பட்டா கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி
யவர்களுக்குக் குடியிருக்க வீட்டு மனைகள் பட்டாவும் கொடுக்
கப்படுகிறது; வீடு கட்டுவதற்குக் கடன் கொடுக்கப் படுகிறது.
கூடலூர் வட்டத்தில், கூடலூர் கிராமத்தில் 182
வீட்டு மனைப்பட்டாக்களும், நெல்லியானா கிராமத்தில் 82
வீட்டு மனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன என்பதை
உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. ஏ. டி. கருப்பையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் , கிட்டத்
தட்ட இலட்சக் கணக்கான அகதிகள் தமிழ் நாடு முழுவதும்
சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இலங்கையிலே
இருக்கின்றபொழுது அங்கேயுள்ள தேயிலைத் தோட்டக்
காடுகள், காப்பி தோட்டக் காடுகள் ஆகியவைகளிலே வேலை
செய்த தொழிலாளர்கள் பெரும்பாலானவர்கள் தாயகம் திரும்பி
வந்து, இங்கே எந்தவிதமான வேலையுமில்லாமல், தொழிலும்
இல்லாமல், இருக்கக்கூட இடமில்லாமல் இங்கே காக்கை,
கோழிகளைப்போல் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.
இதை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். நான்
அகதிகளுக்கு விவசாயத்தைப்பற்றி தெரியாது, ஆக இந்த
தொழிலும் அவர்களுக்கு தெரியாது. வேறு எந்த
ஏற்ற வகையில், அந்த இலங்கை அகதிகளுக்கு சீதோஷ்ண நிலைக்கு
தோட்டங்களிலும், காப்பித் தோட்டங்களிலும் தேயிலைத்
கொடுக்கப்படுமா? அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு வேலை
மனைப் பட்டாக்களைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா வீட்டு
என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 9]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நான் முன்பு
பதில் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறேன். இலங்கையி
லிருந்து அவர்கள் வரும்போது விருப்பத்தோடுதான் இங்கு
வருகிறார்கள். உதாரணமாகச் சொல்கிறேன். வடாற்காடு
மாவட்டத்திலே கோழிப் பண்ணை அமைக்கும் விருப்பத்தோடு
அவர்கள் ஹைகமிஷனரிடம் அனுமதி வாங்கித்தான் இந்தியா
விற்கு வருகிறார்கள். ஆக அந்த அடிப்படையில் தான் அவர்
கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். 3 இலட்சம் பேர்
களுக்கு நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களில் வேலை
கொடுக்க வேண்டுமென்றால், மற்றவர்களையெல்லாம், எங்கு
கொண்டு போய்த் தள்ள முடியும்? இதையெல்லாம் உறுப்பினர
வர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு 'பேமிலி
கார்டில்' என்ன எழுதப் பட்டிருக்கிறதோ அந்த அடிப்படையில்
தான் அவர்கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்
பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, மாநில
அரசின் சார்பிலே மத்திய அரசினுடைய தொழில் சட்டத்திற்கு
ஒப்புதலைக் கொடுக்க வேண்டு
தொழிலாளர்கள், தொழிற் சங்கப் பேரணியில் கலந்து கொண்டு,
மென்று அண்ணா சிலையை நோக்கி ஊர்வலமாக வந்து கொண்டி
உழைப்பாளர்
ருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லியதற்கு மிக்க
நன்றி.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அது செய்தியல்ல. அவர்கள் கொடுக்கின்ற மகஜர்
களை வாங்கி நாங்கள் திங்கட் கிழமையன்று கொடுக்க அனுமதி
வழங்கப்படும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'பேரவை விதிகள்',
என்று இருக்கின்றன. அதில் 299-ஆவது விதியைப் படித்துப்
பார்த்து எப்படி எழுத்து மூலம் தர வேண்டுமோ அந்த விதத்தில்
கொடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவரவர்களே, அண்ணா சமாதிக்கு அருகிலே உள்ள கடற்கரை சாலை ஓரங்களிலே இருக்கின்ற சிறு வியாபாரிகள் கடைகளை வைத்து நடத்தி வருகிறார்கள். அவைகளை எல்லாம் அகற்றுவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் அங்கு சென்று அவைகளே எல்லாம் பிரிப்பதாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் கேள்வி நேரத்தில் அண்ணா சமாதி சுற்றியுள்ள இடங்கள் அசுத்தமாக இருக்கிறது. ஆகவே அங்குள்ள கடைகளையெல்லாம் நீக்க வேண்டு மென்று இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்ளப் பட்டது. அதனால் அண்ணா சமாதியையொட்டி இருக்கின்ற கடைகள் தான் அகற்றப்படுகின்றன.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் போலீஸ் மானியத்திலே பேசிய போது திரு. ரகுமான்கான் ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஜி. டி. பற்றி குறிப்பிட்டபோது, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு ஏற்புடையதா, இல்லையா என்ற விவாதத்திற்கு நான் செல்லவில்லை. ஜி.டி. யில் ஓர் உறுப்பினர் பெயர் குறிப்பிடப்பட்டபோது அவர் தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று மறுத்திருக்கிறார்கள். அதிலே தலையிடவில்லை. ஜி.டி.யில் அவ்வாறு எழுதுவது முறையா, அவ்வாறு எழுதப்பட்டிருப்பின், அந்தப் போலீஸ் ஸ்டேஷன் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று பரிசீலனை செய்து தவறு இருக்குமானால் அதன் மீது தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்னை
ஐ. ஜி. திரு. மோகன்தாஸ் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 246 விதியின்கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு முன் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையில் அவைஉரிமை மீறல் எவ்வாறு எழுகிறது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை 246 விதியின் கிழ் இந்த உரிமைப் பிரச்சனையை தங்கள் முன்னாலே எழுப்ப விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையினுடைய உறுப்பினர் என்ற முறையிலே அவர் சட்ட மன்றப் பணியையும், அரசியல் பணியையும் சுதந்திரமாக செய்திட உரிமை பெற்றவர்கள் ஆவார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது பணிகளை இடையூறின்றி, அச்சமின்றி சுதந்திரமாகச் செய்திட முடியாதபடி திரு. மோகன்தாஸ், ஐ.ஜி. யாக பணியாற்றக் கூடியவர் அரசாங்கக் குற்றப் பிரிவைச் சேர்ந்த சிலபோலீஸ் அதிகாரிகள், எதிர்க்கட்சித் தலைவருடைய தொலைபேசி பேச்சுக்களை டேப் செய்தும், டேப் செய்யப்பட்ட பேச்சை எதிர்க்கட்சியான, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட செயலாளர் தேர்தலில் அன்றைய தினம் போட்டியிட்ட, இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கக் கூடிய திரு. சித்தாபதி அவர்களுக்கு போட்டுக் காண்பித்தும், உள்கட்சி விவகாரங்களில் தலையிட்டும், குறிப்பிட்ட ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்ற கழகத்தின் உறுப்பினர்களைப்போல செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் செயல் பட்டும்வருகிறார்கள். பெங்களூரிலே இருக்கும் எதிர்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் தொலைபேசியிலே பேசியதை சில போலீஸ் அதிகாரிகள் டேப் செய்து என்னிடம் போட்டுக் காட்டினார்கள் என்று அன்று மாவட்டச் செயலாளர் தேர்தலிலே போட்டியிட்ட சித்தாபதி அவர்கள் பத்திரிகைகளிடம் குறிப்பிட்டு இருக்கிறார்கள் அந்த விவரங்கள் எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கின்றன குறிப்பாக இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே இந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருப்பதை நான் உங்களிடத்திலே ஏற்கனவே சமர்ப்பித்து இருக்கிறேன். திரு. மோகன்தாஸ் அவர்கள், ஐ. ஜி.யாக பணியாற்றக்கூடிய, குற்றப்பிரிவுத்துறையைச் சேர்ந்த சில போலீஸ் அதிகாரிகள் அவர்கள் துறை சம்பந்தமாக பணியாற்றுவது குறித்து எங்களுக்குஆட்சேபனை இல்லை. அது அவர்களுடைய கடமையாகக் கூடஇருக்கலாம். ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளராகமாறி அந்த அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொலை பேசியில் பேசிய பேச்சை டேப் செய்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்ட சித்தாபதிக்கு போட்டுக் காட்டி உள் கட்சி விவகாரங்களில் தலையிடுவது, அதிகார துஷ்பிரயோகம் செய்வதாகும். அது தமிழ் நாட்டிலே நடை பெற்ற ஒரு வாட்டர்கேட் ஊழலைப் போன்றதாகும். அது மாத்திரம் அல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுதந்திரமாக செயல் பட முடியாமல் தடுப்பது இந்த அவையினுடைய உறுப்பினர் என்ற முறையில், அவையினுடைய உரிமையிலே குறுக்கிடுவதாகும். அதுமட்டுமல்லாமல், சட்ட மன்ற உறுப்பினராக உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரிமைகளில் தலையிட்டு சுதந்திரமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செயல் படாமல் தடுக்கும் காரியத்தை மோகன்தாஸ் அவர்கள் ஐ.ஜி.யாக பணியாற்றக்கூடிய குற்றப்பிரிவுத் துறையைச் சேர்ந்த சில போ ஸ் அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். இது அவையின் உரிமையை,

(திரு. அ. ரகுமான்கான்) [1983 ஏப்ரல் 9

உறுப்பினரின் உரிமையை, எதிர்க்கட்சித் தலைவரின் உரிமையை
மீறிய செயலாகும். குற்றப் பிரிவுத் துறையில் ஐ.ஜி.யாக இருக்கும்
திரு. மோகன்தாஸ் அவர்களும், சில போலீஸ்காரர்களும்,
எதிர்க்கட்சித் தலைவர் பெங்களூரிலேயிருந்து பேசிய பேச்சை
டேப் செய்து என்னிடம் போட்டுக் காட்டினார்கள் என்று
சீத்தாபதி அவர்கள் பத்திரிகைகளுக்கு குறிப்பிட்டு அது பத்திரிகை
யிலே பிரசுரம் ஆனதை இதுவரைக்கும், ஐ.ஜி. மோகன்தாஸ்
அவர்கள் மறுக்கவில்லை. அரசாங்கமும் மறுக்கவில்லை.
இன்னும் சொல்லப்போனால் இதுவரைக்கும் எந்தவிதமான
மறுப்பும் மறுக்கப்படவேண்டியவர்கள் மூலமாக வரவில்லை
ஆகவே இந்தக் குற்றப்பிரிவுத் துறை ஐ.ஜி.யான மோகன்தாஸ்
அவர்களின் தூண்டுதலின் பெயராலே, அவர்களுடைய உத்தரவின்
பெயராலே அவருக்கும் தெரிந்தே இது நடைபெற்றிருக்கிறது.
இன்னும் சொல்லப்போனால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்
டேப் செய்வது என்பதும், அந்த டேப்பை அரசாங்கத்திற்குக்
கூட காட்டுகிறார்களோ, இல்லையோ, சம்பந்தம் இல்லாத
ஒரு மூன்றாவது நபர் இடத்திலே போட்டுக் காண்பிப்பதும், ஒரு
உள்கட்சியினுடைய, ஒரு எதிர்க்கட்சியினுடைய விவகாரத்தில்,
அவாகள் ஆளும்கட்சி உறுப்பினரைப் போல செயல்படுவது
என்பதும் அதிகாரியினுடைய கடமையாகாது. காரியமும்
ஆகாது. இது அதிகார துஷ்பிரயோகம் ஆகும். குறிப்பாக
இந்த அவையினுடைய எதிர்க்கட்சித் தலைவருடைய கடமை
களில் காரியங்களில் போலீஸ் அதிகாரிகள் குறுக்கிடுவது என்பது
இந்தச் சபையினுடைய உரிமையில் குறுக்கிடுவதாகும்.

போலீஸ் அதிகாரிகள்—குறிப்பாக திரு. மோகன்தாஸ் அவர்
களும், அவர் துறையில் உள்ள அதிகாரிகளும்—சபை உரிமை
மீறல் காரியத்தைச் செய்து இருக்கிறார்கள். அரசாங்கம்
ஓடுகிற ஆணைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று இருந்
தாலும், அரசாங்கம் தவறாக செயல்படவேண்டும் என்று
சொன்னால் அதற்கும் உடந்தையாக போலீஸ் அதிகாரிகள் காரியம்
ஆற்றக்கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கர்நாட
கத்தில் இருந்த போலீஸ் அதிகாரி கார்த்திகேயன் தவறாக
செயல்பட்டதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு, வீட்டுக்கு
அனுப்பபப்பட்டார் என்பதை நான் சுட்டிக்காட்டி, அதுபோன்ற
நிலமைகள் இங்கே வருவதற்கு வழிவகை செய்யக்கூடாது
என்று சொல்லி, ஆகவே, திரு. மோகன்தாஸ் அவர்களும், அவர்
துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் உரிமை மீறல் காரியத்தைச்
செய்து இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களை உரிமைக்
குழுவிற்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று கேட்டு, இதை
உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு விடவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்
கான் கொண்டு வந்து இருக்கிற உரிமைப் பிரச்னையை ஒட்டி
அரசுக்குக் கிடைத்து இருக்கின்ற சில தகவல்களின் அடிப்படை
யில் சில செய்திகளை நான் உங்கள் மூலமாக அவைக்குத் தெரிவிக்க
விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரகுமான்கான்
அவர்கள், சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் தனது
பணிகளை அச்சமின்றியும், இடையூறு இன்றியும் சுதந்திரமாக
செயல்பட முடியாதபடி ஐ.ஜி. திரு. மோகன்தாஸ் அவர்கள்
எதிர்க்கட்சித் தலைவரின் தொலைபேசி பேச்சுகளை டேப் செய்தும்,
டேப் செய்யப்பட்ட பேச்சை திராவிட முன்னேற்றக் கழக
மாவட்டச் செயலாளர் தேர்தலில் போட்டியிட்ட திரு. ஆர்.டி.
சீத்தாபதிக்குப் போட்டு காண்பித்தும் உள்கட்சி விவகாரங்களில்
தலையிட்டும், ஆளும்கட்சியின் உறுப்பினர் போல் செயல்பட்டிருக்
கிறார் என்றும், அது அவையின் உரிமையை மீறிய செயலாகும்
என்றும் தெரிவித்துள்ளார்.

தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக ஒன்றைக் குறிப்பிட்
டுள்ளார். அதாவது, பெங்களூரில் இருக்கும்போது எதிர்க்
கட்சித் தலைவர் தொலைபேசியில் பேசியதை திரு. மோகன்தாஸ்
அவர்கள் டேப் செய்து தன்னிடம் போட்டுக் காட்டினார்
என்று திரு. சீத்தாபதி பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டுள்ளார்
என்றும், அது பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதென்றும்
தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரித்ததில் எதிர்க்கட்சித்
தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெங்களூரிலிருந்து
திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட நிர்வாகத் தேர்தல்
குறித்து தொலைபேசியில் பேசியதாக சொல்லப்படும். பேச்சினை
காவல்துறையினர் பதிவு (டேப்) செய்யவில்லை என்று
ஐ.ஜி. திரு. மோகன்தாஸ் அவர்கள் மறுத்துள்ளார். அவ்வாறு
பதிவு செய்யாத நிலையில் அந்தப் பேச்சுகளைக் கொண்ட
தாகச் சொல்லப்படுகின்ற டேப்பினை திரு. சீத்தாபதிக்குக்
காவல் துறையினர் போட்டுக் காண்பித்து திராவிட முன்
னேற்றக் கழகத்தின் உள்கட்சி விவகாரங்களில் தலையிட்டனர்
என்பதற்கு இடமே இல்லையென்றும் தெரிவித்திருக்கிறார்.

18—12—1982 அன்று திரு. ஆர். டி. சீத்தாபதி, எம்.எல்.சி.,
அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி பத்திரி
கையாளர்களிடம் பேசும்பொழுது—''சில போலீஸ் அதிகாரி
களே பெங்களூரிலிருந்து தன்னைத் தோற்கடிக்க டெலிபோனில்
கலைஞர் பேசிய பேச்சுக்களைத் தன்னிடம் போட்டுக் காட்டி
னார்கள்'' என்று கூறியதாக 19—12—1982 அன்று பத்திரிகை
களில் செய்தி வெளிவந்தது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 9

அந்தப் பத்திரிகைச் செய்திக்கு 20—12—1982 அன்றே திரு. சித்தாபதி அவர்கள் மறுப்பு தெரிவித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில்—''நேற்று நான் வெளியிட்ட எனது அறிக்கையில் சில போலீஸ் அதிகாரிகளே என்னிடத்தில் டெலிபோன் டேப்புகளைப் போட்டுக் காட்டியிருப்பதாகச் செய்தி வந்திருப்பது கண்டு ஆச்சரியப்படுகிறேன். இந்த அறிக் கையை விடுகிற வரையில் நான் தி.மு.காவில் தான் இருந்தேன். எந்தக் காவல்துறை அதிகாரியும் என்னிடம் டேப்புகளைப் போட்டுக் காட்டவில்லை. நான் சொல்லவந்தது, இப்படி காவல் துறையினர் டேப்புகளை எனக்குப் போட்டுக் காட்டியதாக கலைஞர் அவர்கள் தவறாகக் கருதிக் கொண்டு, எனக்கும் டி.ஐ.ஜி. மோகனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார் என்று சொல்ல வந்தேன். இதுதான் உண்மை'' என்று தெரிவித்துள்ளார்.

இதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன் னதுபோல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சை டேப் செய்யவில்லை என்று ஐ.ஜி. திரு. மோகன்தாஸ் அவர்கள் மறுக் கிறார். திரு. சித்தாபதி அவர்கள் சொன்னதாக வந்த செய் தியை அவரே மறுநாள் மறுத்திருக்கிறார். திராவிட முன் னேற்றக்கழகம் அல்லது வேறு எந்த அரசியல் கட்சியினுடைய உள்கட்சி விவகாரங்களில் அரசு ஒருபோதும் தலையிட்ட தில்லை, தலையிடாது.

பத்திரிகையில் வந்த ஒரு செய்தியை அடிப்படையாக வைத்து, அதே செய்தியை சம்பந்தப்பட்டவர் மறுத்து அறிக்கை வெளியிட்டபின், மறுக்கப்பட்ட அந்தச் செய்தியை ஆதாரமாக வைத்து இந்த மன்றத்தில் உரிமைப் பிரச்சினையாக எழுப்பு வதற்கு அடிப்படை எதுவும் இல்லை.

தேர்தலில் திரு. ஆர். டி. சித்தாபதி போட்டியிடுவதை, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. கருணாநிதி விரும்பவில்லை என்று பத்திரிகைகள் அவ்வப்போது செய்தி வெளியிட்டு வந்தன. அது குறித்து திரு. சித்தாபதி அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது தெரிவித் திருக்கிறார்.

மேற்கூறிய விவரங்களில் இருந்து இதில் அவையின் உரிமை மீறல் எதுவும் இல்லை என்ற கருத்தை மட்டும் நான் தெரி விக்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் எனது தீர்ப்பு* பின்னர் அளிக்கப்படும்.

*1983 ஏப்ரல் 15-ம் தேதி தீர்ப்பு அளிக்கப்பெற்றது.



(முற்பகல் 10-20)

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### தமிழகத்தில் அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றத்தினர் நடத்திய போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், உ. சுப்பிரமணியன், இல. பலரா ராமன், எல் இளையபெருமாள், மு அம்பிகாபதி, மு. அப்பாதுரை, செ. சிவசாமி, எஸ். இராசாராமன், ப. தீர்த்தராமன், கே. எம். தங்கமணி, ஏ. சந்திரசேகரன் பி. தங்கவேலு, நா. சுந்தரராஜ், ஆர். சுந்தரமூர்த்தி, இரா. அருணகிரி, பாபு ஜனார்த்தனன், பா. நெடுமாறன், சோ. அழகர்சாமி, என். வரதராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி, என்கிற சொரணம், கு. ரமணி, ஆர் நவநீதகிருஷ்ணன் பாண்டியன், ப. பொன்னுரங்கம், அ. சாகுல் ஹமீது ஆகியோர் மீது ''தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அரிசி, குடி நீர் மின்சார பற்றாக் குறையைத் தவிர்க்கத் தவறிய தமிழக அரசைக் கண்டிக்கும் வகையில் நேற்று தமிழ்நாடு முழுவதும் சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்தைத் தடை செய்தும், தடியடிப் பிரயோகம் செய்தும், சிறையில் அடைத்திருப்பதாலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எட்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள் கிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன் தினம் அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்ற காங்கிரஸ் தோழர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒரு போராட்டத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள் தமிழ்நாட்டிலே தற்போது நிலவுகின்ற அரிசி, குடிதண்ணீர், மின்சாரப் பற்றாக்குறைக்கு தமிழக அரசினுடைய செயலற்ற தன்மையே காரணம் என்றும் அதை மறைப்பதற்காக மத்திய அரசு மீதும் குறிப்பாக இந்திய பிரதமர் அன்னை இந்திரா காந்தி மீதும் வீண்பழி சுமத் மக்கள் மத்தியிலே பிரச்னையை திசை திருப்பும் முயற்சியி இந்த அரசு ஈடுபட்டிருப்பதால் அதை மக்கள் மத்திய எடுத்துரைப்பதற்கு என்றும்; 6-வது ஐந்தாண்டு காலத் முதலாண்டு 711 கோடி ரூபாயும் இரண்டாம் ஆண்டு 745 கோ ரூபாயும் தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்கியிருக்கிறது என்றும் தமிழ்நாட்டிலே தற்போது நிலவுகின்ற உணவு பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு உடனடியாக மாதந் தோறும் 30,000 டன் அரிசியாகவும் கோதுமையாகவும் வழங்கு

கிறது என்றும், இது போதாது என்று 70,000 டன் பிற மாநிலங் களில் கொள்முதல் செய்ய அனுமதி அளித்திருக்கிறது என்றும் மக்களிடம் எடுத்துரைத்து உண்மையை விளக்க ஊர்வலத்திற்கும் போராட்டத்திற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் சிவாஜி ரசிகர் மன்றத்தினர் தாக்கப்பட்டனர் என்ற செய்தி குறித்தது நீங்கள் மத்திய அரசு, மாநில அரசு, அரிசி விவகாரம் என்று போய்விடாதீர்கள்

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் விவகாரத்தை ஏற் படுத்தவில்லை ஊர்வலம் நடத்த ஏன் ஏற்பாடுகள் செய்தார்கள் என்பதற்குச் சொல்கிறேன் ப் போலீஸ் தடியடி ஏன் நடத்தினார்கள் என்பதற்கான காரணத்தை விளக்கினால் தான் சரியாக இருக்கும் ஆக, மத்திய அரசு மீது இந்த அரசு வீண் பழி சுமத்துகிறது என்பதை மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்ல ஊர்வலத்திற்கும் அமைதியான போராட்டத் திற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள் ஒரு ஜனநாயக அமைப்பிலே எதிர் வரிசையில் இருப்பவர்கள் ஆட்சியில் மக்கள் படும் துன்பங் களை, துயரங்களை, தொல்லைகளை, குறைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல போராடுவது, ஊர்வலம் நடத்துவது என்பது ஜனநாயக முறையிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று அதை ஒட்டியே நேற்றைக்கு முன்தினம் சிவாஜி ரசிகர் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது. ஊர்வலம் சென்னையில் சட்டமன்றத்திற்கு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்யவில்லை தமிழ்நாடு முழுவதும் இருக்கிற கலெக்டர் ஆபீஸ்கள் முன்னால் மறியல் செய்வதாக அறிவித்திருந்தார்கள்.

இதிலே கட்சி வேறுபாடு காட்டப்படுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கூட சட்டசபை நடந்துகொண்டிருக்கும்போது காமராஜ் சாலையில் கோட்டைக்கு அருகிலே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார், அப்போது சட்டமன்றம் நடந்துகொண்டி ருக்கிறது முதலமைச்சருக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் சென்ற வாரம் மத்திய அரசை எதிர்த்து அண்ணா தி மு க ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்திற்கு காவல் துறை அனுமதி அளித்திருக்கிறது இவ்வளவு ஏன்? இன்றைக்கு சற்று முன்னா ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர் பேரணி ஊர்வலம் நடத்த அனுமதி கொடுத்திருக்கிறது காவல் துறை. இப்படி எல்லாம் இருக்கும்போது சிவாஜி ரசிகர் மன்றத்ினருக்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டது என்பது ஒரு நியாயமான கேள்வி:

அது மட்டுமல்ல காவல் துறையினர் ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால் இப்படி பல்வேறு சந்தர்ப்ப



களில் சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தினர் ஏற்பாடு செய் திருந்த நிகழ்ச்சிகளில் இந்த மாதிரி திட்டமிட்டே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது மதுரையில் திரிசூலம் படம் நடக்கும் போது காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் நடத்தினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னையில் நேற்றைக்கு முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லுங்கள். மதுரை, திருச்சி, கோவை என்று பேசக்கூடாது அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்துவிட்டால் பூராவும் பேசலாம் இப்போது இந்தக் குறிப்பிட்ட பிரச்னையைப்பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்

**திரு என் எஸ் வி சித்தன் :** இது இந்த ஒரு நிகழ்ச்சியில் மட்டுமல்ல ; தொடர்ந்து நடக்கிறது அது மட்டுமல்ல முதல் முறையாக இருந்தால் பரவாயில்லை கடந்த ஆண்டு சிவாஜி கணேசன் அவர்கள் ராஜ்ய சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட பிறகு, சென்னைக்கு வந்தபோது அவரை விமான நிலையத்தில் வரவேற்பதற்கு கூடியிருந்த கூட்டத்தில் தடியடிப்பிரயோகம் நடந்திருக்கிறது. இப்படி அடிக்கடி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தாலே தான் இந்த விவரங்களை நான் சொல்லவேண்டி யிருக்கிறதே தவிர, வீணாக சொல்வதற்கு நான் தயாராக இல்லை நேற்றைக்கு முன் தினம் 10 ஆயிரத்திற்கு அதிகமான பேர், சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள் அதிலே எனக்கு இருக்கிற ஒரு வருத்தம் எல்லாம் நம்முடைய காவல் துறை ஏன் அவர்களுக்கு ஊர்வலம் செல்ல அனுமதி வழங்க வில்லை என்பதுதான் அது மட்டுமல்ல, ஊர்வலம் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து—சென்னையிலே உள்ள தேனாம் பேட்டையிலே இருந்து 9 மணிக்கு புறப்படுகிறது என்று சொல்லி ஒரு வாரத்திற்கு முன்னாலேயே அனுமதி கேட்டிருக்கிறார்கள் அனுமதி கொடுத்து இருக்கலாம் கொடுக்கவில்லை

ஆனால் 9 மணிக்கு ஊர்வலம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றால், 8 1/2 மணிக்கு முன்னாடியே அங்கே வந்திருந்து, அந்த ஊர்வலம் ஆரம்பிக்கப்படாத நிலையிலேயே நம்முடைய மாண்புமிகு பேரவை உறுப்பினர் ராஜசேகரன் அவர்களைக்கைது செய்திருக்கிறார்கள் அப்போது அவர் சொல்கிறார். ஊர் வலம் 9 மணிக்குத்தான் ஆரம்பிக்கப்பட இருக்கிறது, நீங்கள் 8 1/2 மணிக்கே கைது செய்கிறீர்களே, நாங்கள் இங்கே கூட்டம் கூட கூடவில்லையே என்று சொல்கிற நேரத்திலே, நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்று காவல் துறை அதிகாரிகள் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்

(திரு. என். எஸ். வி. சித்தன்) [198ப்9

பத்திரிகையிலே வந்திருக்கிறது அது மட்டும் அல்ல, தேனாம்
பேட்டையிலே நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களைக் கொண்டு
வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் என்ன கொள்ளை
அடிக்கப் போனார்களா? கொலை செய்யப் போனார்களா,
திருடப் போனார்களா, தீவைக்கப் போனார்களா? ஏதோ அவற்
றை எல்லாம் தடுக்க வருவது போல் போலீஸ் படையினர்
மொத்தமாக நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் அங்கே கூட்
டப்பட்டது மட்டும் அல்ல, தேனாம்பேட்டையின் உள்ளே
காங்கிரஸ் மைதானத்திற்குள்ளே காங்கிரஸ் தொண்டர்கள்
நுழையக்கூட அனுமதி மறுத்திருக்கிறார்கள் ஆண்கள், பெண்கள்
யாரையுமே அங்கே நுழையக் கூட விடாமல் அடித்து விரட்டி
யிருக்கிறார்கள். நான் அதிலே கூட இன்னும் சொல்வேன்.
இந்த அரசாங்கமே மகளிர்க்காக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம்
என்று சொல்லப்படுகிற அரசாங்கத்திலே ஊர்வலத்திலே கலந்
துக் கொள்ள வந்த, ஊர்வலத்திலே புறப்பட இருந்த
மகளிரை கலைந்துச் செல்லக் கோரி அவர்கள் மீது தடியடிப்
பிரயோகம் கூட செய்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு செய்தியை வாசிப்பது இந்த நேரத்
திலே பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன் (மணி
யடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பத்திரிகை செய்தி
களை எல்லாம் வாசிக்க வேண்டாம் உங்களுக்குத் தெரிந்
ததை மட்டும் சொல்லுங்கள் போதும்.

**திரு. என்.எஸ்.வி சித்தன்** : ஊர்வலம் புறப்படத் தயா
ராக இருந்த மகளிர் 200-க்கும் அதிகமான பேர்களை கலைந்
துப் போகும்படிச் சொல்லி தடியடிப் பிரயோகம் செய்திருக்
கிறார்கள். அது மட்டும் அல்ல, இன்னும் வேதனையோடு
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேனாம்பேட்டையிலே
உள்ள காங்கிரஸ் மைதானம் பெரும் தலைவர் காமராசர்
அவர்களால் உருவாக்கப்பட்ட பெரிய ஸ்தாபனம். தனியார்
களுக்குச் சொந்தமான சொத்து. அந்த வளாகத்திற்குள்ளாக
காவல் துறையினர் செல்வதற்கு யார் அனுமதி கொடுத்தது?
ஊர்வலம் துவங்குவதற்கு முன்னாலேயே, காங்கிரஸ் தோ
ழர்கள் உள்ளே இருக்கின்ற நேரத்திலே, காவல் துறையினர்
அத்துமீறி உள்ளே நுழைந்ததோடு மட்டும் அல்லாமல்,
கண்ணீர் புகை குண்டுகளுடன் சுற்றி சூழ்ந்துக்
கொண்டு, யாரும் உள்ளே செல்லாமல், தடுத்து
நிறுத்தினார்கள். யாரையும் உள்ளே செல்ல அனுமதிக்க மாட்
டோம். ஊர்வலம் வெளியே செல்ல அனுமதிக்க மாட்டோம்.
என்று சொன்னது மட்டும் அல்லாமல், தடியடிப் பிரயோகமும
நடத்தியிருக்கிறார்கள். அதன் உள்ளே மட்டுமல்ல. வெளியே



1983 ஏப்ரல் 9]- (திரு. என். எஸ். வி. சித்தன்)

அந்தப் பகுதியிலே எங்கே காங்கிரஸ்காரர்கள் கண்ணில்
படுகிறார்களோ, அங்கேயெல்லாம் ஓட ஓட விரட்டியிருக்
கிறார்கள். சென்னையிலே நான் இன்னமும் கேள்விப்
படுகிறேன், தேனாம்பேட்டை மைதானத்திற்கு அருகிலே
உள்ள அரசு அலுவலகங்களுக்குச் செல்கிற அரசு அதிகாரிகள்
மீது கூட தடியடி பிரயோகம் செய்திருக்கிறார்கள். அவ்வளவு
தூரம், சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தின்மீது, காவல்
துறையினருக்கு என்ன காழ்ப்புணர்ச்சி என்று எனக்குத்
தெரியவில்லை.

ஒருவேளை எத்தனை பேர்கள் ஊர்வலத்திலே கலந்து
கொள்ள வந்திருந்தார்கள் என்ற விவரம் வெளியிலே யாருக்கும்
தெரியக்கூடாது என்று நினைக்கிறார்களோ, அந்தச் செய்தி
மக்களுக்குக் கிடைத்துவிடக்கூடாது என்று காவல் துறையினர்
நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. சுதந்திரப்
போராட்ட காலத்தில், கோட்டை வளாகத்திற்கு உள்ளே,
ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ச்சிகள் நடை
பெற்றிருக்கின்றன என்பது பற்றி நான் கேள்விப்பட்டிருக்
கிறேன். இப்போது என்ன அப்படிப்பட்ட அவசியம்
வந்து விட்டது? ஜனநாயக உரிமைகளுக்காக, நாட்டின்
நிலைமையை மக்களுக்கு எடுத்துச் சொல்கிற அந்த
ஊர்வலத்தினர் மீது தடியடிப் பிரயோகம் செய்யவேண்டிய
அவசியம் ஏன்? அது மட்டும் அல்ல. அங்கே பத்திரிகை
காரர்களும் வந்திருக்கிறார்கள். செய்திகளைச் சேகரிக்க
அவர்கள் வருகிறார்கள். மாலை முரசு பத்திரிகையின் நிருபர்
காதர் என்பவரை அடித்திருக்கிறார்கள். போட்டோ படக்
கருவிகளைப் பிடுங்கியிருக்கிறார்கள். இது இங்கே சென்னை
யிலே மட்டும் அல்ல, மதுரையிலே கூட, சிவாஜி ரசிகர்
மன்றத்தினர் கூட்டம் கூட்டப்படுகிற நேரத்திலே, அவர்களை
கூட விடாமல் அடித்திருக்கிறார்கள்.

தினமணி பத்திரிகையின் போட்டோகிராபர் ரங்கராஜன்
அவர்களுடைய புகைப்படக் கருவிகளை பிடுங்கி
வைத்துக்கொண்டதோடு மட்டும் அல்லாமல், புகைபடச் சுருளை
எல்லாம் எடுத்துக்கொண்டு, பின்னர் அந்தக் கருவியைக்
கொடுத்திருக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? படம்
எடுத்திருக்கிறார்கள். நடக்கக்கூடாதது நடந்திருக்கிறது.
தடியடிப் பிரயோகம் போலீசார் செய்திருக்கிறார்கள்.
அது மக்களுக்கு தெரியக் கூடாது என்ற காரணத்திலேதானே
புகைப்படக்காரருடைய கருவியைப் பிடிங்கிக் கொண்டிருக்
கிறார்கள். அது மட்டும் அல்ல, புகைப்படக்காரர்களை,
பத்திரிகையாளர்களை சுற்றி வளைத்துக் கொண்டார்களாம்.
நீங்கள் போகக் கூடாது என்று, என்ன அவ்வளவு பெரிய அடக்கு
முறை? வெள்ளைக்காரன் காலத்திலேகூட இப்படிப்பட்ட

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1983 ஏப்ரல் 9

முயற்சிகள் நடைபெறவில்லை. என்ன அவ்வளவு பெரிய நெருக்கடி? இதை எதிர்ப்பதற்கு அரசாங்கம் அத்தனை தீவிரமாக இருந்தது ஏன் என்று தெரியவில்லை.

(முற்பகல் 10–30)

அது மட்டும் அல்ல, நேற்றைக்கு முன் தினம் தேனாம் பேட்டையிலே இருந்த பெண்களை, மிகக் கேவல மாகப் பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாவட்டத் தலைவர் திரு. மணிவர்மா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இப்படி அநாகரீகமாக, கொச்சையாக பேசுவது நியாயமா என்று. அதற்கு ஒரு பெரிய போலீஸ் அதிகாரி வருத்தம்கூட தெரிவித்திருக்கிறார்கள். எனவே ஜன நாயக முறைப்படி ஒரு ஊர்வலத்திலே கலந்துகொள்ள வந்திருப்பவர்கள் மீது தடியடிப்பிரயோகம் செய்யப்பட்டது, அத்துமீறி காங்கிரஸ் மைதானத்திற்குள்ளே வந்தது, ஊர்வலத்திற்கு அனுமதி தர மறுத்தது இப்படி பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இதன்மீது ஒரு விரிவான விசாரணை வைக்கப்பட வேண்டும். இந்தத் தடியடிப் பிரயோகம், இங்கு மட்டும் அல்லாது தொடர்ந்து பல இடங்களிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிற காரணத்தாலே, இவைகளை விசாரிக்க ஒரு விசாரணைக்கு ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

நியாயமான முறையிலே, நாகரீகமான முறையிலே ஊர்வலம் சென்றவர்களை தடுத்து, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கின்ற முயற்சியை காவல் துறை செய் திருக்கிறது என்று சொல்லி, இது போன்ற பல்வேறு பிரச் னைகள் இருக்கின்றன. கைது செய்யப்பட்டவர்கள் சிறை யிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்களை நேற்று கூட சிறையிலே சென்று நாங்கள் பார்த்தோம். இப்படி நூற்றுக் கணக்கில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு சிறைகளிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன் னாலே போராட்டம் என்றால், முன்னாடியே அதைத் தடுக்கப் பார்ப்பார்கள். ஊர்வலத்திற்கு அனுமதி கொடுத்திருந்தால் ஊர்வலம் புறப்பட்டு வந்தபிறகு, எந்த இடத்தில் தடை இருக்கிறதோ, அந்த இடத்திலே கைது செய்வார்கள். ஆனால் இங்கே ஊர்வலம் ஆரம்பிப்பதற்கு முன்னால், புறப்படுவதற்கு முன்னால், மறியல் செய்வதற்கு முன்னா லேயே கைது செய்து சிறையிலே வைத்துவிடுகிறார்கள். ஆகையினால் தமிழகத்திலே இதுபோன்ற அநாகரீகமான முறையில் அடக்குமுறைகள் நடைபெறுகிற காரணத்தால் இவைகள் இனிமேல் நடக்கக்கூடாது என்பதற்காக அவையில் இது குறித்து இன்னும் விரிவாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப் பினர் சித்தன் அவர்களே, சொல்ல வேண்டியது அனைத்தையும் சொல்லிவிட்டதால், மீதி ஏதாவது இருந்தால், திரு. அழகர் சாமி அவர்கள் சொல்லலாம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்ல வேண்டியதை எல்லாம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே அது போக ஏதாவது இருந்தால் சொல்லலாம் என்று கூறுகிறீர்கள். ஒத்திவைப்புத் தீர் மானத்திலே மதுரையையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் கொடுத்திருக்கிறோம். சென்னை சம்பவத்தை மட்டும் பேசும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆகவேதான் அதைச் சொல்கிறேன்.

இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பது எதிர்காலத்தில் எதிர்க்கட்சியாக மாறலாம். இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருப்பது ஆளும்கட்சியாக ஆகலாம். இதெல்லாம் ஜனநாயக நாட்டிலே மாறி மாறி ஏற்படும் பிரச்னைகள். ஜனநாயக நாட்டிலே மக்களுக்கு ஏற்படுகின்ற குறைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றால், மனு கொடுக்கிறார்கள், நேரிடையாகப் போகிறார்கள். அதிகாரிகளைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்.

அதற்குப் பிறகும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், ஊர்வலம் செல்கிறார்கள், அதற்கும் முடியவில்லை என்றால் மறியல் செய்கிறார்கள். ஆகவே, ஜனநாயக நாட்டிலே அனுசரிக்கப்படுகிற ஜனநாயக உரிமை. அந்த ஜன நாயக உரிமையைப் பறிக்கக்கூடிய முறையிலே எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன, அதை அரசாங்கம் தயவுசெய்து சிந்தித்து பரிசீலனை செய்து தடுக்க வேண்டும். ஆகவே, தயவு செய்து தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்கும் போது, வழக்கம்போல, அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்படுகிறது என்று சொல்லாமல், இதை பரிசீலனை செய்து தீர்ப்பு சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஊர்வலத்திலே கலந்து கொள்பவர்களை, எங்கெங்கே ஊர்வலம் புறப்படுகிறார்களோ, அந்த இடத்திலேயே தடுத்து நிறுத்தக்கூடிய முறையிருக்கிறது. ஜனநாயக முறையிலே நடத்தப்படுகின்ற இப்படிப்பட்ட ஊர்வலங்களை போகக்கூடாது என்று சொல்வது முறையல்ல. தொடர்ந்து இந்த அரசாங்கம் கடைபிடித்துப் வருகிறது. இப்படிப்பட்ட நடைமுறைகளைக் நேற்றைக்கு முன்தினம் நடந்த சம்பவத்தில் இப்படித்தான் அவர்கள் ஊர்வலம் வரவேண்டும் என்று அனுமதி கேட்கிறார் கள். மறியல் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். மறியல் செய்யக்கூடியவர்களை கைது செய்யுங்கள். மறியல் செய்தால்,

அது குற்றமானால், உங்களுடைய சட்டத்தின்படி என்ன
தண்டனையோ என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ
அதைக் கொடுத்துக் கொள்ளுங்கள். ஊர்வலமே வரக்கூடாது
என்று சொல்லி போலீஸ்காரர்கள் தடியடி செய்து அவர்களை
கலைப்பது நியாயமா? மறியலே செய்யக்கூடாது, போராட்
டமே நடத்தக்கூடாது என்று சொல்வது நியாயமா? அப்படிச்
சொல்லி, போலீஸ்காரர்களைக் கொண்டு தடுத்து, அவர்கள்
மீது தடியடி பிரயோகம் செய்வது நியாயமா என்று அரசாங்கத்
தின் தரப்பிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதே போன்று பல சம்பவங்கள் நடைபெற்று இருக்கிறது.
நான் நேற்று பேசும்போது கூட சிலவற்றைக் குறிப்பிட்டேன்.
திரும்ப திரும்ப அவைகளைச் சொல்ல விரும்பவில்லை. இந்த
அவையிலே எடுத்துக்கொண்ட பிரச்சினையே தீருவதில்லை.
முறைகேடுகள் இருக்கின்றன. அவைகளை அரசு போக்க வேண்
டும். நியாயமான விலையிலே அரிசி கிடைக்க வில்லை என்று
சொன்னால், அத்தியாவசியமான பொருள்கள் மக்களுக்கு
கிடைக்கவில்லை என்று சொன்னால், அதை நியாயமான
முறையிலே எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால், அரசாங்
கத்தின் கவனத்தை கவர வேண்டும் என்றால், அவர்கள் மறியல்
நடத்துகிறார்கள். அது ஜனநாயக உரிமை. போலீஸ்காரர்
கள் அவர்களை தடை செய்வது நியாயம்தானா?.

இன்றைக்கு இந்தியாவிலே எத்தனையோ பிரச்சனைகள்
குடிதண்ணீர் விஷயத்திலேயிருந்து, அரிசி கிடைக்கவில்லை,
அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கவில்லை என்று
எத்தனையோ பிரச்சனைகள். இவைகளை அரசாங்கத்தின்
கவனத்திற்கு கொண்டு வருவதற்காக, பிரச்சனைகளில் தீர்வு காண
வேண்டும் என்பதற்காக மக்கள், அரசியல் கட்சித் தலைவர்
களின் தலைமையிலே மறியல் செய்தார்கள். மறியல் நடத்து
கிறார்கள் என்றால், நீங்கள் கொடுக்கிற எந்த தண்டனையையும்
ஏற்றுக் கொண்டு நாங்கள் சிறையிலே துன்பப்பட தயாராக
இருக்கிறோம். எந்தக் கஷ்டத்தையும் ஏற்றுக் கொள்ளத்
தயாராக வருகிறோம் என்ற முறையில் அவர்கள் மறியலுக்கு
வருகிறார்கள். அவர்களைக் கைது செய்யுங்கள். தடியடி
செய்வது என்ன நியாயம்? தடியடி செய்வதன் மூலமாக
அந்த பிரச்னை நியாயமாக முடிந்து விடாது. நேற்று கூட
இதைப்பற்றி விவரமாகச் சொன்னேன்.

ஊர்வலம் வர அனுமதி கேட்கிறார்கள் என்றால், ஊர்வலத்
திற்கு அனுமதித்திருக்கலாம். ஊர்வலத்திற்கு எத்தனை பேர்
கள் வருகிறார்களோ அதற்கு இரண்டு பங்கு போலீசாரைக்
கொண்டு வரலாம். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்,' என்
றால், கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டார்கள். அதனால்
தடியடிபிரயோகம் செய்யப்பட்டது என்று சொல்லி



(திரு. சோ. அழகர்சாமி)

விடுகிறீர்கள். இத்தனை பேர்கள் போலீசார் இருக்கும்போது
அவர்கள் ஏன் வன்முறையில் ஈடுபட வேண்டும்? எப்படி ஈடு
படமுடியும்?

இன்றைக்கு நான் மெத்தப் பணிவோடு மாண்புமிகு அமைச்
சர் அவர்களையும், அரசையும் கேட்டுக் கொள்வது என்ன
வென்றுச் சொன்னால், அந்த ஜனநாயக உரிமைகளை நீங்கள்
மறுக்காதீர்கள். அமைதியான முறையிலே ஊர்வலம் வரவேண்
டும் தங்கள் பிரச்சனைகளை எடுத்து தெரிவிக்க வேண்டும்
என்று நினைப்பவர்களை தடை செய்யாதீர்கள். ஊர்வலத்
திற்கு அனுமதி கொடுங்கள். தடை செய்யப்பட்ட பிரதேசங்
களில் தடையை மீறுகிறார்களா, மறியல் செய்கிறார்களா?
கைது செய்யுங்கள். சட்டப்படி என்ன தண்டனை தரவேண்
டுமோ அதைக் கொடுங்கள் ஆட்சேபனை கிடையாது. அந்த
நடவடிக்கைகளை தடை செய்வதோ, ஊர்வலத்தில் தடியடி
பிரயோகம் செய்வதோ சரியான முறை அல்ல. நியாயமான
முறையும் அல்ல. ஜனநாயக முறைப்படி போராட்டம் நடத்தக்
கூடிய காலத்திலே, அரசாங்கம் அதை தடுத்த நிறுத்த எத்தனிக்
கக் கூடாது, அவைகளை அனுமதிக்க வேண்டும்.

நடைபெற்றிருக்கிற சம்பவங்கள் போல பல சம்பவங்கள்
இருக்கின்றன. தொடர்ந்து நடைபெறுகிறது. ஆகவே, கைது
செய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும், இப்படி பல
பிரச்னைகளும் இதில் இருப்பதால், இது குறித்து விரிவாக விவா
திக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தேனாம்பேட்டையிலிருந்து சிவாஜி மன்றத்தினர்
அரிசிப் பற்றாக்குறை, அரிசியின் விலையேற்றம், குடிநீர் பற்றாக்
குறை, குடிநீர் கிடைக்காத நிலைமை, மின்சாரத்திலே இருக்கின்ற
கோளாறுகள் ஆகியவற்றைக் கண்டிப்பதற்காக ஊர்வலத்திற்கு
ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஊர்வலம் புறப
படுவதற்கு முன்பாகவே மிகப் பயங்கரமான முறையிலே பல
இடங்களிலே பஸ்களை நிறுத்தி அந்த ஊர்வலத்தில் கலந்து
கொள்ளச் சென்றவர்களை எல்லாம் கலந்துகொள்ள விடாமல்
கைது செய்தும், மற்றபடி பஸ்களில் இருந்து இறக்கியும் அனுப்பி
விட்டிருக்கிறார்கள். மேலும் ஊர்வலம் 9 மணிக்குப் போகின்
றது என்றால் அதற்கு முன்பாகவே அதாவது சுமார் 8½ மணிக்கே
காவல் துறையினர் தேனாம்பேட்டை மைதானத்திற்குள் அத்து
மீறி நுழைந்து அங்கே தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள்.
மகளிருடைய தலைமயிரைப் பிடித்து இழுத்து அவர்களைக்
கொச்சைப் படுத்தி மிகக் கேவலமாகப் பேசி இருக்கிறார்கள்.
அப்படிப் பேசப்பட்டதற்காக மேலதிகாரிகளும் கூட வருத்தம்
[illegible]கிருக்கிறார்கள். எனவே இன்றைய தினம் காவல்

துறையினைச் சேர்ந்தவர்கள் நாட்டிலே எந்தக் காரியத்தை
வேண்டுமானாலும் செய்யலாம் என்ற வகையிலே காரியங்
களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கலைஞர் அவர்களையே சென்னை விமான நிலையத்தில்
கையைப் பிடித்து முறுக்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே
முன்னாள் முதலமைச்சராக இருந்த ஒருவரை காவல் துறையினர்
கையைப் பிடித்து முறுக்குவது என்பது எப்படிப்பட்ட வன்முறை
என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அப்படி முறுக்கப்படும்
போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர்களாக இருப்
பவர்கள் உணர்ச்சி வசப்பட்டு அந்த காவல் துறையினரின்
கையைப் பிடித்து முறுக்கவும், கையை முறிக்கவும் முற்பட்டு
விட்டால் என்ன நடக்கும்? ஆகவே அப்படிப்பட்ட வன்முறை
யைத் தூண்டுகின்ற வகையில் காவல் துறையினர் மிகக் கேவல
மான நிலைமையில் நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஆகவே
அந்த ஊர்வலத்திற்கு எல்லாம் தாராளமாக அனுமதி கொடுத்
திருக்கலாம் மறியல் செய்வதற்கும் அனுமதி கொடுத்திருக்கலாம்.
ஆனால் மறியல் செய்கின்ற காரியங்களைக் கூட இந்த அரசு
தடுத்திருக்கின்றது. ஜனநாயக நாட்டில் அரிசிப் பற்றாக்குறை,
விலையேற்றம், குடிநீர் தட்டுப்பாடு, மின்சார சம்பந்தப்பட்ட
பிரச்சினைகள் ஆகியவற்றை கண்டிப்பதற்காக எதிர்க்கட்சியினர்
ஊர்வலம் போன்றவற்றை நடத்துகிறார்கள். ஜனநாயக உரிமை
யின் அடிப்படையில் அப்படிப்பட்ட காரியங்கள் நடக்கின்றன.
இன்றைக்கு 240-க்கும் மேற்பட்ட காங்கிரஸ்காரர்கள் சென்னை
யில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார்கள். தமிழ்
நாட்டிலே ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்
பட்டு சிறையில் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு
இராஜசேகரன் அவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்
கிறார்கள். அவரை விடுதலை செய்து இந்த சட்டமன்ற நட
வடிக்கைகளிலே கலந்துகொண்டு தன்னுடைய கருத்துக்களை
எடுத்து வைப்பதற்குரிய வாய்ப்புகளைத் தந்திருக்க வேண்
டும். இதுவரையில் செய்யவில்லை என்றாலும் இனியாவது
உடனடியாக அவரை விடுதலை செய்து இந்த சட்டசபை
நடவடிக்கைகளிலே பங்குகொள்ள ஏற்பாடு செய்யப்படவேண்
டும். நாட்டிலே இருக்கின்ற நிலைமைகளைத் தெரிவிப்பதற்
காக அவர்கள் ஊர்வலம் வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட..
........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்த மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இங்கே வந்து எல்லாவற்றையும் பேசி இருக்கலாம்.
அவரே அவசியம் என்றுதான் உள்ளே போய் இருக்கிறார்.

**திரு. பாபு ஜனார்த்தனன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தாங்கள் தங்களது கருத்தினைச் சொல்லி இருக்கி
றீர்கள். ஆனால் தாங்களே எதிர் வரிசையில் இருந்திருந்தால்





என்றால் இப்படிப்பட்ட ஜனநாயக நிலைமை தேவை என்று
கூறியிருப்பீர்கள். ஆனால் தாங்கள் அமர்ந்திருக்கின்ற இடத்
திற்குத் தகுந்தவாறு அவ்வாறு சொல்கிறீர்கள் என்று நினைக்
கிறேன். எனவே திரு. இராஜசேகரன் அவர்களை உடனடியாக
விடுதலை செய்து அவரது எண்ணங்களை இந்த அவையிலே
தெரிவிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும். மேலும்
இதிலே பல்வேறு நிலைமைகளை எடுத்துச் சொல்லவேண்டி
இருப்பதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்
களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பிலே தமிழகம் எங்கும்
இந்த அரசை எதிர்த்து மறியல் போராட்டம் நடத்துவதை
ஒட்டி சென்னை, மதுரை, போன்ற இடங்களில் அவர்கள் மீது
தடியடிப் பிரயோகம் செய்ததன் காரணத்தால் பலர் காயம்
அடைந்தும் ஏராளமான பேர் சிறை பிடிக்கப்பட்டும் இருக்கி
றார்கள். என்ன காரணத்தினாலே (without any provocation)
இந்த காரியம் நடைபெற்றது என்பதை நான் அறிய விரும்பு
கிறேன். ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு
உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல் தமிழ்நாடு பூராவும்
எல்லாக் கட்சியினரும் இது போன்ற போராட்டங்களை
நடத்துவது, மறியல் போராட்டம் நடத்துவது ஜனநாயக உரிமை
களாகக் கொண்டு நடத்தி வருகிறார்கள். ஆனால் இந்திரா
காங்கிரஸ் நடத்திய இந்த மறியல் போராட்டத்திற்கு முன்ன
தாக தமிழ்நாடு பூராவும் முக்கியமான நகரங்களில் திடீர்
என்று தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்
திரவு பிறப்பிப்பதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னாலும்,
இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்ட இரண்டொரு நாட்களுக்கு
பின்னாலும் கூட ஆளும் கட்சியினருக்கும், மற்றக் கட்சியைச்
சேர்ந்தவர்களுக்கும் ஊர்வலங்களுக்கும் அனுமதி அங்கே தாரா௭
மாக அளிக்கப்பட்ட நிலையில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு
மட்டும் ஏன் இது அளிக்கப்படவில்லை என்பதை நான் அறிய
விரும்புகிறேன். ஜனநாயக உரிமைகளை யாராக இருந்தாலும்
மதிக்கவேண்டும். அதிலும் குறிப்பாக மறியல் செய்வது என்பது
ஆங்கிலேயர் இந்த நாட்டில் ஆண்ட காலத்தில் நாம் போராடிப்
பெற்ற ஒரு மகத்தான உரிமை ஆகும். அந்த உரிமை
எல்லாக் கட்சியினருக்கும் உண்டு. எந்த தனி நபருக்கும் உண்டு.
அதை பறிக்கிற உரிமை அரசாங்கத்திற்கு கிடையாது. மறியல்
செய்பவர்களை வேண்டுமானால் நீங்கள் சிறை பிடிக்கலாம்.
உரிய தண்டனை அளிக்காலம். அதை ஏற்றுக்கொள்ளும் துணி
வோடு தான் எந்த கட்சியினராக இருந்தாலும் மறியல் போராட்
டத்தில் ஈடுபடுகிறார்கள். அப்படி ஈடுபடுகிறவர்களை சிறைப்

பட்டதுமான காரியம் பெண்களுக்கே ஏற்பட்டிருக்கிறது, அப்படி
பட்ட நிலை, அதற்கு மேல் பத்திரிகை நிருபர்கள், மாலைமுரசு
பத்திரிகையினுடைய நிருபர் காதர் என்பவர் உதைக்கப்பட்டார்.
இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையினுடைய நிருபருடைய கேமி
ராவை பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். அதிலே இருக்
கிற பிலிமை எடுத்துவிட்டு கேமிராவை திருப்பிக் கொடுத்து.
விட்டார்கள். அப்படியானால் அதிலேயும் டிஸ்கிரிமினேசன்.
காதரை உதைத்தார்கள், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிரு
பரின் கேமிராவைப் பிடுங்கிக் கொண்டு உதைக்காமல் விட்டார்
கள், உதைக்க வேண்டும் என்பதல்ல என்னுடைய பிரச்சினை.
ஏன் இந்த வித்தியாசம் கூட வந்தது. அதிலேயும் ஒரு பார்வை
யில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. இப்படிப்பட்ட
நிலைமை அங்கே நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு மதுரையிலே
அதே மாதிரி அவர்கள் தெரிவித்தே மாநிலம் முழுவதும் நடத்தி
இருக்கக்கூடிய மறியலில் அவர்களுடைய கோரிக்கை என்னவாக
இருக்கட்டும், அவர்களுடைய யோசனை என்னவாக இருக்கட்டும்
அந்த நோக்கத்தைப் பற்றி நாம் இங்கே விவாதிக்கவில்லை.
ஆனால் இந்த மாதிரி மதுரையிலே நடத்தியது போலீஸ் தலை
யிட்டு தடியடிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்து 100
பேர்களுக்குமேல் அங்கே கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இங்கே
சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற அந்த ரசிக மன்றத்தினுடைய
தலைவர்களில் முக்கியமாக இருக்கக்கூடிய ஒருவர் அவரும் கூட
கைது செய்யப்பட்டு அவரும் சிறையிலே இருக்கிறார். இதிலே
இன்னொரு புதுமை என்ன வென்றால் அவர்கள் அத்தனை பேர்
களும் ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள், அப்படியானால்
சார்ஜ்ஷிட் போட்டு கேஸ் நடத்தி தண்டனை கொடுத்து உள்ளே
அவர்களை வைக்கவேண்டுமென்ற நோக்கமா? என்பதும் இங்கே
விவாதிக்கப்பட வேண்டிய விஷயம். இதுவரைக்கும் அரிசிப்
பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை இவைகளுக்காக எண்ணற்ற
ஊர்வலங்கள் நடக்கின்றன. போராட்டங்கள் நடக்கின்றன,
மறியல்ககள் நடக்கின்றன. இஷ்டப்பட்டு சிறை செல்கிறார்
கள், இஷ்டப்பட்டு என்றால் அவர்கள் வேறு வழியில்லாமல்
ஜெயிலுக்குப் போகிறார்கள் அப்படி நடவடிக்கைகள் நடந்துக்
கொண்டிருக்கின்றன. இனிமேலும் நடக்கலாம். அப்படி நடப்ப
வர்களுக்கு இதுதான் பாடம் என்பதற்காக இது புகுத்தப்பட்டு
இருக்கிறதா என்பதும் இதற்குள் அடங்கியிருக்கிற பிரச்சினை.
அந்த முறையில் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டவர்கள்
எல்லாம் சாயங்காலம் ஆனவுடனே விடுதலை செய்யப்படுவார்
கள். பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுகிறவர்கள் விடுதலை
செய்ய வேண்டும் என்று கெஞ்சிக் கேட்பதல்ல உத்தேசம். அவர்
கள் மறியல் செய்தது சட்டத்தை மீறிவிட்டிருக்கிறார்கள் என்று
தெரிந்தே செய்தால் அவர்களுக்கு அதற்கு தண்டனை கொடுக்
கிறீர்களா கொடுங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.
அவர்கள் சட்டத்தை மீறி நடக்கக் கூடாது என்பது பிரச்சினை.
அந்த முறையிலே நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன.





(முற்பகல் 10-50).

அது மட்டுமல்ல, இன்றைக்குச் சென்னை நகரத்தில் கோட்டை
யைச் சுற்றிலும் அது நிரந்தரமான நடவடிக்கையாக வந்து
விட்டது. தடையுத்தரவு இல்லாத ஒரு நாளை நீங்கள் காட்டுங்
கள் பார்ப்போம். மாவட்டத்தில் தலை நகரங்கள் முழுவதிலும்
போலீஸ் ஆக்ட் 30-ன் கீழ் லைசென்ஸ் இல்லாத கூட்டங்கள்
இல்லை; ஊர்வலம் இல்லை. ஆகவே ஊர்வலம் என்பது, கூட்
டம் என்பது லைசென்ஸ் வாங்கக் கூடிய சரக்காக ஒரு கம்மாடிட்டி
யாக இன்றைக்கு மாறிவிட்டது. அப்படியென்றால் மனித சுதந்
திரம் என்பது காலடியிலே போட்டு மிதிக்கப்படுகிறது என்பது
தான் அதனுடைய அர்த்தம். இந்த காரியத்தை இன்றைக்கு
நீங்கள் செய்யலாமா? இன்றைக்கு ஆளுகின்ற அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் எத்தனை அடி வாங்கியிருக்கிறது ; எத்தனை
தடவை இநுபோன்ற துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறது
பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் ஒன்று சேர்ந்து சிறைச்
சாலைக்கு சென்றதில்லையா? அதைத்தான் மாண்புமிகு நெடு
மாறன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள், அப்படிப்பட்ட சூழ்
நிலையில் இதுபோன்ற நடவடிக்கைகள் இருப்பதற்கு என்ன
காரணம்? அது என்ன நியாயம்? போலீசின் அத்துமீறல் பொறுத்த
வரையில் எனக்கிருக்கிற சந்தேகம் என்னவென்றால் இந்த அர
சும் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைமைக்கு போய்க் கொண்
டிருக்கிறதா என்பது தான் பிரச்னை. இதற்கு உதாரணமாக,
அண்மையிலே ஒரு பிரச்சினை வந்து நான் ஒரு தீர்மானம் கூட
கொடுத்தேன். அதை நிராகரித்து விட்டார்கள். அது தலை
வருடைய உரிமை. நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் தாலுகா
வில் எருமாடு என்ற நகரப்பஞ்சாயத்திலே முஸ்லீம்களுக்கும்,
இந்துக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திலே போவதை குறித்து
தகராறு வந்து 144 தடையுத்தரவை போட்டார்கள். அங்கே
யிருந்த 5 மைல் தூரத்திலிருக்கிற சேரன்கோடு பஞ்சாயத்திலே
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தர்ணா மூன்று மணி
நேரம்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள்
சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்திலேயிருந்து கம்யூனிஸ்ட் கட்
சிக்கு போய்விட்டால் எப்படி? ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய
அவசியம் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அதிலே என்ன
பாயிண்ட் உள்ளடக்கம் என்பதற்காக சொல்கிறேன். தர்ணா
விற்கு மறுப்பு தெரிவித்து தாலுகா மாஜிஸ்ட்ரேட் 144 தடை
யுத்தரவை போட்டு, ஐந்து மைல் தூரத்திற்குள் தர்ணா கூடாது
என்று சொல்லிவிட்டார்கள். போலீஸ் அதிகாரம் எல்லை மீறி

பட்டதுமான காரியம் பெண்களுக்கே ஏற்பட்டிருக்கிறது, அப்படிபட்ட நிலை, அதற்கு மேல் பத்திரிகை நிருபர்கள், மாலைமுரசு பத்திரிகையினுடைய நிருபர் காதர் என்பவர் உதைக்கப்பட்டார். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையினுடைய நிருபருடைய கேமிராவை பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். அதிலே இருக்கிற பிலிமை எடுத்துவிட்டு கேமிராவை திருப்பிக் கொடுத்து. விட்டார்கள். அப்படியானால் அதிலேயும் டிஸ்கிரிமினேசன். காதரை உதைத்தார்கள், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபரின் கேமிராவைப் பிடுங்கிக் கொண்டு உதைக்காமல் விட்டார்கள், உதைக்க வேண்டும் என்பதல்ல என்னுடைய பிரச்சினை. ஏன் இந்த வித்தியாசம் கூட வந்தது. அதிலேயும் ஒரு பார்வையில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. இப்படிப்பட்ட நிலைமை அங்கே நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு மதுரையிலே அதே மாதிரி அவர்கள் தெரிவித்தே மாநிலம் முழுவதும் நடத்தி இருக்கக்கூடிய மறியலில் அவர்களுடைய கோரிக்கை என்னவாக இருக்கட்டும், அவர்களுடைய யோசனை என்னவாக இருக்கட்டும் அந்த நோக்கத்தைப் பற்றி நாம் இங்கே விவாதிக்கவில்லை. ஆனால் இந்த மாதிரி மதுரையிலே நடத்தியது போலீஸ் தலையிட்டு தடியடிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்து 100 பேர்களுக்குமேல் அங்கே கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற அந்த ரசிக மன்றத்தினுடைய தலைவர்களில் முக்கியமாக இருக்கக்கூடிய ஒருவர் அவரும் கூட கைது செய்யப்பட்டு அவரும் சிறையிலே இருக்கிறார். இதிலே இன்னொரு புதுமை என்ன வென்றால் அவர்கள் அத்தனை பேர்களும் ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள், அப்படியானால் சார்ஜ்ஷிட் போட்டு கேஸ் நடத்தி தண்டனை கொடுத்து உள்ளே அவர்களை வைக்கவேண்டுமென்ற நோக்கமா? என்பதும் இங்கே விவாதிக்கப்பட வேண்டிய விஷயம். இதுவரைக்கும் அரிசிப் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை இவைகளுக்காக எண்ணற்ற ஊர்வலங்கள் நடக்கின்றன. போராட்டங்கள் நடக்கின்றன, மறியல்ககள் நடக்கின்றன. இஷ்டப்பட்டு சிறை செல்கிறார்கள், இஷ்டப்பட்டு என்றால் அவர்கள் வேறு வழியில்லாமல் ஜெயிலுக்குப் போகிறார்கள் அப்படி நடவடிக்கைகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. இனிமேலும் நடக்கலாம். அப்படி நடப்பவர்களுக்கு இதுதான் பாடம் என்பதற்காக இது புகுத்தப்பட்டு இருக்கிறதா என்பதும் இதற்குள் அடங்கியிருக்கிற பிரச்சினை. அந்த முறையில் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் சாயங்காலம் ஆனவுடனே விடுதலை செய்யப்படுவார்கள். பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுகிறவர்கள் விடுதலை செய்ய வேண்டும் என்று கெஞ்சிக் கேட்பதல்ல உத்தேசம். அவர்கள் மறியல் செய்தது சட்டத்தை மீறிவிட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தே செய்தால் அவர்களுக்கு அதற்கு தண்டனை கொடுக்கிறீர்களா கொடுங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். அவர்கள் சட்டத்தை மீறி நடக்கக் கூடாது என்பது பிரச்சினை. அந்த முறையிலே நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன.



(முற்பகல் 10-50).

அது மட்டுமல்ல, இன்றைக்குச் சென்னை நகரத்தில் கோட்டையைச் சுற்றிலும் அது நிரந்தரமான நடவடிக்கையாக வந்து விட்டது. தடையுத்தரவு இல்லாத ஒரு நாளை நீங்கள் காட்டுங்கள் பார்ப்போம். மாவட்டத்தில் தலை நகரங்கள் முழுவதிலும் போலீஸ் ஆக்ட் 30-ன் கீழ் லைசென்ஸ் இல்லாத கூட்டங்கள் இல்லை; ஊர்வலம் இல்லை. ஆகவே ஊர்வலம் என்பது, கூட்டம் என்பது லைசென்ஸ் வாங்கக் கூடிய சரக்காக ஒரு கம்மாடிட்டியாக இன்றைக்கு மாறிவிட்டது. அப்படியென்றால் மனித சுதந்திரம் என்பது காலடியிலே போட்டு மிதிக்கப்படுகிறது என்பது தான் அதனுடைய அர்த்தம். இந்த காரியத்தை இன்றைக்கு நீங்கள் செய்யலாமா? இன்றைக்கு ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை அடி வாங்கியிருக்கிறது ; எத்தனை தடவை இதுபோன்ற துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறது பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் ஒன்று சேர்ந்து சிறைச்சாலைக்கு சென்றதில்லையா? அதைத்தான் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள், அப்படிப்பட்ட சூழ்நிலையில் இதுபோன்ற நடவடிக்கைகள் இருப்பதற்கு என்ன காரணம்? அது என்ன நியாயம்? போலீசின் அத்துமீறல் பொறுத்தவரையில் எனக்கிருக்கிற சந்தேகம் என்னவென்றால் இந்த அரசும் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைமைக்கு போய்க் கொண்டிருக்கிறதா என்பது தான் பிரச்னை. இதற்கு உதாரணமாக, அண்மையிலே ஒரு பிரச்சினை வந்து நான் ஒரு தீர்மானம் கூட கொடுத்தேன். அதை நிராகரித்து விட்டார்கள். அது தலைவருடைய உரிமை. நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் தாலுகாவில் எருமாடு என்ற நகரப்பஞ்சாயத்திலே முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திலே போவதை குறித்து தகராறு வந்து 144 தடையுத்தரவை போட்டார்கள். அங்கேயிருந்த 5 மைல் தூரத்திலிருக்கிற சேரன்கோடு பஞ்சாயத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தர்ணா மூன்று மணி நேரம்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்திலேயிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு போய்விட்டால் எப்படி? ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அதிலே என்ன பாயின்ட் உள்ளடக்கம் என்பதற்காக சொல்கிறேன். தர்ணாவிற்கு மறுப்பு தெரிவித்து தாலுகா மாஜிஸ்ட்ரேட் 144 தடையுத்தரவை போட்டு, ஐந்து மைல் தூரத்திற்குள் தர்ணா கூடாது என்று சொல்லிவிட்டார்கள். போலீஸ் அதிகாரம் எல்லை மீறி

போய் கொண்டிருக்கிறது. ஜனநாயக உரிமையை பயன்படுத்த
முடியாது. எந்த அரசியல் கட்சியானாலும் அந்த நடவடிக்கை
இருந்தே தீரும்; அடி இருக்கும்; எல்லாம் நடக்கும் ; இப்படிப்
பட்ட நிலை இருப்பதன் காரணமாக இந்த விஷயங்கள் தெளிவுப்
படுத்தப்பட வேண்டும். இதிலே நடந்து கொண்டது சரிதானா?
தவறா? என்பது தெரிய வேண்டும். உரிமை இல்லையா என்று
தெரிய வேண்டும். தேனாம்பேட்டை மைதானத்திற்குள் போலீ
சார் எப்படி நுழைந்தார்கள் என்று தெரிய வேண்டும். அது
பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தினர்
தமிழ் நாட்டிலே உள்ள குடிதண்ணீர் தட்டுப்பாடு, அரிசி தட்டுப்
பாடு, மின்சாரப் பற்றாக்குறை, போன்றவைகள் களையப்படு
வதற்காக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக 7–4–1983 அன்று
ஒரு ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏற்கெனவே
பல்வேறு பிரச்சினைகளை குறித்து பல்வேறு கட்சிகளுக்கு ஊர்
வலம் நடத்துவதற்கு இந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது.
அதே போல சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத்தினுடைய ஊர்
வலத்திற்கும் அனுமதி தந்து, அவர்கள் எங்கே மறியல் செய்ய
வேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்த இடத்தை மீறுவார்
கள் என்று சொன்னால் அவர்களை கைது செய்வதிலே நியாயம்
இருக்கும். ஆனால் இந்த ஊர்வலத்தை ஆரம்பிக்க விடாமல்,
காங்கிரஸ் கட்சிக்கு சொந்தமான, தேனாம்பேட்டை காங்கிரஸ்
மைதானத்தில் புகுந்து காங்கிரஸ் தொண்டர்களை, சிவாஜி
கணேசன் ரசிகர் மன்றத்தை சேர்ந்தவர்களை போலீஸ் அத்து
மீறி தாக்கியிருக்கிறார்கள். திரு. இ. ராஜசேகரன், எம்.எல்.ஏ.
கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உடல் ஊனமுற்ற வெங்க
டேசன், தனசேகரன் போன்றவர்கள் அங்கே காயம் அடைந்து,
மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சென்னை
யிலே மட்டுமல்ல காஞ்சிபுரம், மதுரை போன்ற பல்வேறு நகரங்
களிலே இந்தமாதிரி தடியடி பிரயோகம் நடந்திருக்கிறது. ஊர்
வலத்தை தடை செய்ய வேண்டுமென்ற நோக்கம் ஏன் வந்தது
என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. பொதுவாக ஜன
நாயக நாட்டிலே மக்களுடைய நன்மையைக் கருதி அரசாங்கத்தி
னுடைய கவனத்தை திருப்புவதற்காக இந்தமாதிரி ஊர்வலம்
நடத்துவது எப்போதுமே வழக்கம். இங்கே ஜனநாயகத்திற்கு
விரோதமாக ஒரு கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு
மாதிரியாக, மாட்சிமைக்குரிய ஆட்சியாக இல்லாமல், ஒரு கட்சிக்
குரிய ஆட்சியாக இன்றைய அரசு செயல்பட்டு வருகிறது என்பது
இந்த நிகழ்ச்சியின் மூலம் தெரிகிறது. எனவே இதுபோன்ற
ஜனநாயக விரோத செயல்களைப் பற்றியெல்லாம் விளக்கமாக
பேசுவதற்கு இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று காந்தி
காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்
கிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு
மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு
முன்னாள் அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றத்தினர் சில
பிரச்சினைகளை முன்வைத்து மறியல் போராட்டம் என்ற
பெயரில் எடுத்த நடவடிக்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை
ஒட்டி, மதுரையிலேயும், சென்னையிலேயும், காஞ்சிபுரத்தி
லேயும் நடைபெற்ற அசம்பாவித நிகழ்சிகளைப் பற்றி
மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் ஒத்திவைப்புத் தீர்மானம்
அனுமதிக்கப்பட வேண்டுமென்று காரணகாரிய விளக்கங்களைத்
கூறுகின்றபொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசினுடைய
கொள்கையையும், கோட்பாடுகளையும் திட்டங்களையும் எதிர்க்க
மறுக்க, கண்டனம் தெரிவிக்க, ஜனநாயக முறைப்படி
உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகளை இந்த அரசு
மறுக்கவில்லை. அது மட்டுமல்லாமல், அந்தக் கண்டனத்தைத்
தெரிவிப்பதற்கான வழிவகைகளைக் கூட நாங்கள்
தடுக்கவில்லை. ஊர்வலத்தை நீங்கள் தடுக்கிறீர்களா என்று
கேட்டார்கள். அமைதியாக நடக்கிற ஊர்வலங்களை, அமை
தியாக நடக்கிற பொதுக் கூட்டங்களைத் தடுக்கவில்லை
அரசு என்பதையும் பல்வேறு பேரணிகள் தொடர்ந்து
நடைபெற்றன என்பதையும், அந்தப் பேரணிகளை அரசு
தடுக்கவில்லையென்பதையும் தடியடிப் பிரயோகம் செய்ய
வில்லையென்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டு
கட்சியைச் சேர்ந்தவர்கள்—அவர்களே குறிப்பிடுகிற அளவுக்கு
மாபெரும் ஊர்வலத்தை—மாநிலம் எங்குமிருந்து திரட்டிக்
கொண்டு வந்து சென்னையிலே நடத்திய பொழுது அதற்கு
உரிமை வழங்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல், அவர்களுடைய கோரிக்கைகளை
முறைப்படி இங்கே கொண்டு வந்து வைத்தார்கள். அதுவும்
ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கான அறிவிப்பும் இந்த
அவையிலே செய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்
தின் சார்பாகவும் மாபெரும் பேரணி நடத்தப்பட்டது.
அதற்கும் தடை விதிக்கப்படவில்லை. ஆகவே, அன்றாடம்
ஊர்வலங்கள் நடத்தியும் உண்ணாவிரதங்கள் மூலமாகவும் தங்க
ளுடைய எதிர்ப்பை, கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற
நோக்கத்தோடு பல்வேறு தரப்பினர், பல்வேறு கட்சியினர்,
பல்வேறு தொழிலாளர்கள், பல்வேறு பிரச்சினைகளுக்காக
அன்றாடம் கடற்கரைப் பகுதியிலே உண்ணாவிரதம் இருந்து
கொண்டிருக்கிறார்கள். அதையும் நாம் தடுக்கவில்லை.

அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றத்தினர் தங்களுடைய
கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, மறியல் போராட்டம்
நாடெங்கும் நடத்துவோம் என்று அறிவித்து, ஊர்வலம்

நடத்துவதாக மட்டுமல்ல, பொதுக் கூட்டம் நடத்துவதாக
மட்டுமல்ல, உண்ணாவிரதம் இருக்கப்போவதாக மட்டுமல்ல,
மறியல் போராட்டமும் நடத்துவோம் என்று நடத்திய காலத்
திலேகூட சென்னை, மதுரை, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களில்
தான் இந்த அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றனவே தவிர,
அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றத்தினர் தமிழகத்திலே
இருக்கிற எல்லா பெரு நகரங்களிலும், எல்லா இடங்களிலும்
போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அங்கெல்லாம் இப்படித்
தடியடிப்பிரயோகம் செய்யவேண்டிய அவசியமோ, காயங்கள்
ஏற்படுத்த வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை. மறியல்
போராட்டம் நடத்துகிற இடத்திலேகூட, பல இடங்களிலே,
அவர்கள் மீது தக்க விதிமுறைகளைப் பிரயோகித்து கைது
செய்திருக்கிறார்கள். சேலத்திலோ, கோயம்புத்தூரிலோ, தஞ்சா
ஊரிலோ, வேறுபல இடங்களிலோ அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்
நடைபெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கின்ற
அளவுக்கு, சென்னையிலும், மதுரையிலும், காஞ்சிபுரத்திலும்
இந்த அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. அது நடை
பெறக் கூடாது என்பதுதான் நம்முடைய எண்ணம். ஆனாலும்
கூட, மறியல் போராட்டங்கள் வெகு சிறப்பாக, வெற்றிகர
மாக நடைபெற்றதாக பத்திரிகைகளில் எல்லாம் கூட
செய்தி வந்திருக்கிறது. ஆனால், சில பல இடங்களிலே
பாதுகாப்பு தரவும், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றவும்,
விதிமுறைகளைக் கடைபிடிக்கவும், காவல் துறையினர்
இருந்துவருகிறார்கள். அதே போன்று, போராட்டத்திலே,
ஊர்வலத்திலே, ஈடுபடுகின்றவர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற
பொறுப்பையும் அந்தக் காவல் துறையினர்தான் அவ்வப்போது
ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட
சம்பவங்கள் ஏற்பட்டுவிட்டதன் காரணமாக, வன்முறைகள்
என்று வருகின்றபொழுது, அது ஒன்றன் பின் ஒன்றாக மாறி,
அந்த அளவிற்குக் காவல் துறையினருக்கும், வன்முறைக்
கும்பலுக்கும் பல்வேறு மோதல்கள் வந்து விடுகின்றன
என்பதை நடைமுறையிலே அரசியலிலே ஈடுபட்டுக் கொண்
டிருப்பவர்கள் நீண்ட நெடுங்காலமாகப் பார்த்துக் கொண்
டிருக்கிறார்கள். எதை நடத்த ஆரம்பிக்கிறபோதும், அமைதி
யாக ஆரம்பிக்கவேண்டுமென்று கருதினாலும் ஒரு குறிப்பிட்ட
இடத்திலே குறிப்பிட்ட சிலரால் ஏற்படுகின்ற வன்முறை
சம்பவங்கள் பெரிய அளவுக்குக் கொண்டு போய் விட்டு
விரும்பத்தகாத அளவுக்குப் போகிறது. அண்ணல் காந்தி
அடிகளே, மிகத் திட்டமிட்டு, இன்ன, இன்னார்தான் இந்தப்
போராட்டத்திலே ஈடுபடவேண்டும் என்று நெறி வகுத்து,
முறையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர் சட்ட மறுப்பு
இயக்கம் நடத்தியபொழுது கூட, அவர் கையை மீறி,
செளரி சாரா என்ற இடத்திலே பெரிய வன்முறைச்
செயல்கள் நடைபெற்று ஒரு காவல்நிலையமே தாக்கப்பட்டு,
காவல் துறை அதிகாரிகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டார்கள்
என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடனே, அண்ணல்





காந்தியடிகளே சட்ட மறுப்பு இயக்கத்தையே நிறுத்த
வேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாகிவிட்டேன் என்று
சொல்லி, அவர்கள் ஒரு இடியத்தையே கூட கண்டுபிடித்தார்
கள் என்று சொல்வார்கள். ( Himalayan blunder )
செய்துவிட்டேன் இமாலய மலை அளவு ஒரு தவறைச்
செய்துவிட்டேன்; என்று டிக்ஷனரியிலே அந்த வார்த்தை
ஏறுகிற அளவுக்கு ஒரு சொல்லைக் கண்டு பிடித்தார் என்று
சொல்வார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால்,
சென்னையிலும், காஞ்சிபுரத்திலும், மதுரையிலும் இப்படிப்
பட்ட அசம்பாவிதங்கள் நடைபெறுகிற அளவுக்கு நிலைமை
ஏற்பட்டுவிட்டது. முற்றிப்போயிருக்க வேண்டியதில்லை.
ஆனால் முற்றிப் போகிற அளவுக்கு, இருந்திருக்கிறது
என்பதை, கிடைத்திருக்கிற தகவல்களின்படி நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

*(முற்பகல் 11–00)*

சென்னை நகரிலும், மாவட்டங்களுடைய பல்வேறு
பகுதிகளிலும், 7–4–1983 அன்று அகில இந்திய சிவாஜி
ரசிகர் மன்றத்தினர் மறியல் போரட்டம் நடத்தியுள்ளனர்.
முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை நகரில்
6—4—1983 அன்று இரவு சமூக விரோதிகள் 56 பேர் கைது
செய்யப்பட்டனர். அவர்கள் 7—4—1983 அன்று
மாலையில் விடுவிக்கப்பட்டனர். தடையுத்தரவு அமுல்
செய்யப்பட்டிருந்த இடங்களில், அவைகளை மீறி போராட்
டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். தடுப்பு
நடவடிக்கையாகவும் சிலர் கைது செய்யப்பட்டனர். போராட்
டம் சம்பந்தமாக மொத்தம் 1,253 பேர் கைது செய்யப்
பட்டனர். அவர்களில் 448 பேர் காவலில் வைக்கப்
பட்டுள்ளனர். 4 பேர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். மீதமுள்ள
அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை நகரில் தடையுத்தரவினை மீறி மறியலில் ஈடு
பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட
தற்கு எதிர்ப்புத்தெரிவித்து, மீதமிருந்தவர்கள் வன்முறையில்
ஈடுபட்டனர். காவல் துறையினர் மீதும் வாகனங்கள்
மீதும் கல்லெறிதலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் 7
பேர் காயமடைந்தனர். கலைந்து செல்லுமாறு அவர்கள்
எச்சரிக்கப்பட்டனர். கலைந்து செல்லாமல் வன்முறையில்
ஈடுபடவே காவல் துறையினர் குறைந்த அளவு தடியடிப்
பிரயோகம் செய்தனர். இதில் 4 பேர் காய
மடைந்தனர். காஞ்சிபுரத்தில் 2 ஊர்வலங்கள் நடத்தப்பட்டன
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக இரு ஊர்வலங்களும்
வந்து சேர்ந்தவுடன் அவர்கள் வாகனங்களைத் தடை
செய்வதிலும் கல்லெறிவதிலும் ஈடுபட்டனர். பட்டுக்கோட்டை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 9

அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று சேதப் படுத்தப்பட்டு, அதன் ஓட்டுநர் தாக்கப்பட்டுள்ளார். காவல் துறையினர் விரைந்து சென்று தகுந்த எச்சரிக்கை செய்தபிறகு குறைந்த அளவு பலப் பிரயோகம் செய்து, வன்முறைக் கும்பலை விரட்டினர். இதில் 44 பேருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அகில இந்தியசிவாஜி ரசிகர் மன்றத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. இராஜசேகரன் மற்றும் 91 பேர் சென்னை தேனாம்பேட்டை காமராஜர் பவனத்தின் அருகிலிருந்து சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு மறியல் நடத்த, அமுலில் இருக்கும் தடையுத்தரவை மீறி ஊர்வலமாக செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, காமராஜ் பவனத்திற்குள் கூடியிருந்த மற்ற உறுப்பினர்கள் காவல் துறையினர்மீது கற்களையும் செங்கற்களையும் வீசி எறிந்துள்ளதாகத் தெரிகிறது. இதனால் காவல் துறையின் இரண்டு ஆய்வாளர்கள், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் போட்டோகிராபருக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சட்ட விரோதக் கும்பல் மெயின் ரோடுக்கு விரைந்துவரவே, அவர்கள் துரத்தப்பட்டனர். கற்கள் எறிவதில் ஈடுபட்டவர்கள் சுமார் 104 பேர் கைது செய்யப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 4 பேர் காயமடைந்தனர். சம்பவங்கள் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையில் உள்ளன. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இப்பிரச்சினை குறித்து விவாதிக்க, பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மட்டும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஜாமீனில் சிலபேர் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்றவைகளை ஆராய்ந்து பார்த்து என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



5. கவன ஈர்ப்புகள்

(அ) இராயபுரம் மீன்பிடி துறைமுகத்தை, பழைய கப்பல்களை உடைத்து அப்புறப்படுத்தும் பணிக்கு பயன்படுத்துவது.

***திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** துணைத் தலைவர் அவர்களே, '' சென்னை இராயபுரம் காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் ஒரு கப்பல் உடைப்பதற்காகக் கொண்டு வந்து நிறுத்தப் பெற்றுள்ளதால் அப்பகுதிமக்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (TIDCO) கூட்டு நிறுவனமான (Joint Sector) ஷிப் ஸ்டீல் இந்தியா லிமிடெட் அயல்நாட்டு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை உடைத்து அதிலுள்ள எஃகு, இரும்புகளை நமது மாநிலத்தில் ரீ ரோலிங் செய்து உபயோகப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த நிறுவப் பட்டுள்ளது. இந்நிறுவனம் கப்பல்களைக் கொண்டு வந்து உடைப்பதற்கு வசதியாக ஒரு தனி இடம் இல்லாததால், சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் ஒரு சிறு பகுதியை தற்காலிகமாக குத்தகைக்கு கோரியது. இந்நிறுவனம் வேறு எங்கும் இப்பணியை துவங்க முடியாத நிலையில் தற்பொழுது கட்டப் பட்டு வரும் மீன் பிடித் துறைமுகத்தில் இதனை துவக்க விரும்பியது. இதன் கோரிக்கையை பரிசீலித்து இந்த நிறுவனம் ஆரம்பிப்பதற்கு ஏதுவாக தற்காலிகமாக மீன் பிடி துறைமுகத்தின் வட பகுதி ஓரத்தில் 225 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் உள்ள பகுதியை 100 ச. மீட்டருக்கு வருடத்திற்கு ரூ. 3,000 என்ற விகிதத்தில் வாடகைக்கு விட அரசு முடிவு எடுத்தது. எனினும் மீனவர்களின் நலனை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் 13-8-1981—இல் வாடகைக்கு விட அனுமதி வழங்கியது.

(1) நாவாய்களாலோ அல்லது படகுகளாலோ கடல் மீனவர்களுக்கு எவ்விதமான ஊறுகளும் விளைவிக்கக்கூடாது.

(2) முக்கியமாக இந்தக் கப்பல் உடைக்கும் பணி மீன்பிடி பருவகாலத்தில் அதாவது அக்டோபர் திங்கள் 15 முதல் ஜனவரி திங்கள் 15-ம் தேதி வரை நடத்தப்படக்கூடாது.

(3) குத்தகைக் காலம் ஒரு வருடமாகும்.

(4) உடைககப்படும் கப்பல்களை தடுப்புச் சுவரின் அருகே கட்டக்கூடாது. மேலும் தடுப்புச் சுவர்களை உபயோகப்படுத்தவும் கூடாது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 9

(5) கப்பல்களை முழுமையாக உடைத்து மீதி இல்லாமல் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(6) சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் நிலையான எந்த விதமான கட்டடமும் கட்டப்படக்கூடாது.

(7) தீ அல்லது விபத்தை தடுப்பதற்கான முன்னேற்பாடு களை இந்நிறுவனமே ஏற்பதோடு இது சம்பந்தமான சட்ட திட்டங்களுக்கும் உட்பட வேண்டும்.

(8) தண்ணீர், மின்சாரம், காவல் மற்றும் பாதுகாப்பு வசதிகளை செய்து கொள்வது இந்நிறுவனத்தின் பொறுப்பே யாகும்.

இந்த ஆணைகயைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நிபந்தனை களையும் விதித்து ஷிப் ஸ்டீல் இந்தியா நிறுவனத்திற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட 1,225 ச. மீட்டருக்குப் பதிலாக 1200 ச. மீட்டர் (60 மீட்டர் நீளம் 20 மீட்டர் அகலம்) மட்டுமே 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கொடுக்கப்பட்டது.

(1) நிறுத்தப்படும் கப்பல்களுக்கு அரசு நிர்ணயிக்கும் வாடகை கொடுக்கப்பட வேண்டும்.

(2) உடைக்கப்படும் பகுதிகள், நீர்வழியே மிதவைகளில் கொண்டு செல்லப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட நிபந்தனைகளின் பேரில் 1982 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த நிறுவனம் ரூ. 36.000 குத்தகை முன் பணமாக செலுத்தி பணியை துவங்கியது. எனினும், இந்நிறுவனத்தால் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களில்தான் ஒரே ஒரு கப்பலை மீன்பிடி துறைமுகத்திற்குள் கொண்டுவர முடிந்தது.

மீனவர்களின் ஆட்சேபணையை கருத்தில் கொண்டு சென்னை துறைமுக பொறுப்பு கழகத் தலைவர் மற்றும் பொறியாளர் களுடன் இது குறித்து ஆலோசித்து, தற்போது கொடுக்கப் பட்டிருக்கும் அனுமதியை இந்த ஆண்டுக்கு மேல் நீட்டிக்கப் படுவதில்லை என்றும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கும் கப்பலை 5 மாத காலங்களுக்குள் (அதாவது ஆகஸ்டு திங்கள் இறுதிக்குள்) முழுமையாக உடைத்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கும் படியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (TIDCO) தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறைமுகத்தில் உடைப்பதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்தக் கப்பலால் மீனவர்களுக்கு ஆபத்து நேரிடாதவண்ணம் போட்டிருக்கின்ற நிபந்தனைகளுக்காக நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த நிபந்தனைகள்மீறப்



(திரு. ஜே. சி. டி. பிரபாகரன்) [1983 ஏப்ரல்

படாதவாறு பார்த்துக் கொள்ள மீனளத் துறை அடிக்கடி மேற் பார்வை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே செடமடீ என்ற கப்பலை உடைத்துச் சென்றவர்கள் அதன் அடிப்பாகங்களை அப்படியே விட்டு விட்டுச் சென்ற காரணத்தினால் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இப்படிப்பட்ட கப்பல்களை உடைக்கும் பொழுது அதற்காகத் தனியிடம் ஏற்படுத்தி அங்கே உடைத்து எடுத்துக் கொண்டு போவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே பல்வேறு நிலைமைகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டு நிறுவனமான ஷிப் ஸ்டீல் இந்தியா லிமிடெட் அயல்நாட்டுக் கப்பல்களை விலைக்கு வாங்கி இவ்வாறு செய்வதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும் என்ற அளவிற்கு முயற்சிகளை மேற்கொண்டார்கள். கப்பல் களை உடைக்கும் பொழுது அதற்குத் தனித் தளங்கள் அமைக்கப் பட வேண்டும்; அப்படிப் பல்வேறு நாடுகளில் அமைத்திருக் கிறார்கள். இங்கேயும் அமைக்கப்பட வேண்டும்.

உடனடியாக மீன் பிடித் துறைமுகத்தினுடைய ஒரு குறிப் பிட்ட பகுதியை ஒதுக்கித் தந்து, பல்வேறு நிபந்தனைகளை எல்லாம் விதித்து, அந்த அடிப்படையிலே அந்தக் கப்பல் உடைக் கின்ற பணியை மேற்கொள்ளலாம் என்ற அளவுக்கு சொல்லப் பட்டு, ஒரு அனுமதியும் வழங்கப்பட்டது. 1,500 சதுர மீட்டர் அளவுக்கு இடம் ஒதுக்கப்பட்டு, 100 சதுர மீட்டருக்கு ரூ. 3,000 வாடகை தரவேண்டுமென்று ரூ. 36,000 முன் பணமாக பெறப் பட்டது. இப்போதுதான் அண்மையில் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ஒரே ஒரு கப்பலைக் கொண்டு வந்து அதை உடைப்பதற் கான முயற்சியை மேற்கொள்கிறபோது மீனவர்கள் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக அந்த எதிர்ப்பின் அடிப்படையை வைத்து, மேலும் அவர்களுக்கு நிபந்தனைகளை விதித்து, அந்த நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டுமென்று சொல்லி, மீனவர்களுக்கு, அந்த வகையில் தொல்லைகள் ஏற் படக்கூடாது என்று நாம் நிபந்தனைகளையெல்லாம் விதித் திருக்கிறோம். இப்போது அவர்களுக்கு ஓராண்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஓராண்டு அனுமதி காலம் முடிந்த பிறகு மேற்கொண்டு அனுமதி கொடுப்பதில்லை என்ற முடி விற்கு வந்திருக்கிறோம். இன்றைக்கு அதற்குத் தனி இடம் பார்க்கலாம் என்ற ஒரு யோசனை இருக்கின்றது. ஆனால் இப் போது கொடுக்கப்பட்டிருக்கின்ற அனுமதியை நிறைவேற்று கின்ற வகையில், அந்த நிபந்தனைகளை, அவர்கள் கடைப் பிடிக்க வேண்டுமென்ற அடிப்படையில், அந்த நிபந்தனைகள் அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா என்று கண்காணிக் கப்பட்டு வருகிறது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) மதுரை இராஜாஜி மருத்துவமனையில் தண்ணீர்
தட்டுப்பாடு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள்
என் வரதராஜன், கே ஆர் சுந்தரம், டி மணி, என் சங்
கரய்யா, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், இரா.தாம
ரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்
மானங்கள் கொடுத்துள்ளனர் அவர்களுள் ஒருவர் இதை மாண்பு
மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருவார்

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, '' மதுரையிலுள்ள இராஜாஜி மருத்துவமனை
யில் தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் பொதுச் சுகாதாரம் கெடுவ
துடன், அறுவை சிகிச்சைகள் சரிவர நடைபெற இயலாதது
குறித்த,'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைமுன்
கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரையில் பொதுவாக நிலவுகின்ற தண்ணீர்த் தட்டுப்பாடு
காரணமாக மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு வழங்கப்படு
கின்ற தண்ணீரின் அளவு மார்ச் மாதம் குறைந்துள்ளது. ஆனால்,
இதன் காரணமாக அறுவை சிகிச்சைகள் (Operations) நிறுத்தப்
படவில்லை. மார்ச் 19-ஆம் தேதி Maternity Ward
க்குத் தண்ணீர் வருவதில் சிரமம் இருந்ததால், அந்த அறுவை
அரங்கில் நடத்தப்படவேண்டிய குடும்பக்கட்டுப்பாடு (Lepro-
scopic Operations) அன்று மட்டும் நிறுத்திவைக்கப்பட்டன. அவை
களும் 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ஆம் நாள் முதல்
தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மார்ச்சு மாதம் முதல்
15 நாட்களில் 176 பெரிய அறுவை சிகிச்சைகளும் (Major
Operations) 167 சிறிய அறுவை சிகிச்சைகளும் (Minor Operations)
115 மற்ற வகை (Operations) களும் நடந்துள்ளன. எந்த
அவசர அறுவை சிகிச்சைகளும் நிறுத்திவைக்கப்படவில்லை; மற்ற
அவசரமில்லாத அறுவை சிகிச்சைகளும் தொடர்ந்து நடைபெற்று
வருகின்றன.

மதுரை, இராஜாஜி மருத்துவமனை முதல்வர் அவர்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாநகராட்சி மேயர், பால்
பண்ணை அதிகாரிகள் இவர்களுடன் நேரில் தொடர்பு கொண்டு



தண்ணீர் வழங்குவதை அதிகப்படுத்த நடவடிக்கைகள் எடுத்
துள்ளார். 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ஆம் நாள்
அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இம்மருத்துவமனையை
நேரில் சென்று பார்வையிட்டு தண்ணீர் வழங்குவதை அதிகப்
படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளார். இதனால் 1983-ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் முதல் பால் பண்ணையி
லிருந்து இம்மருத்துவமனைக்கு நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம்
லிட்டர் தண்ணீர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும்,
மதுரை மாநகராட்சியும் 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20-
ஆம் நாள் முதல் தினசரி 6 லாரிகள் வீதம் தண்ணீர் விநியோகம்
செய்கிறது. நீராய்வு அதிகாரி ( Geologist ) அவர்கள் தண்
ணீர் ( Water point ) எங்கு இருக்கிறது என்று கண்டறிந்த
வுடன் ஆழ் கிணறுகள் உடனடியாக வெட்டப்படப்போவதாக
வும் இம்மருத்துவமனையின் முதல்வர் தெரிவித்துள்ளார்.
மேலும் (Meternity Block) அருகில் பழுது அடைந்து இருந்த
ஆழ் கிணறுகள் (Bore well pump ) பொதுப்பணித்துறையினரால்
சரிபார்க்கப்பட்டு அதிலிருந்தும் தண்ணீர் கிடைப்பதாகவும் கூறு
கிறார். இந்த ஏற்பாடுகளின் காரணமாக 1983-ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 25-ஆம் நாளிலிருந்து மதுரை இராஜாஜி மருத்துவ
மனைக்கு மூன்று இலட்சம் லிட்டர் தண்ணீர் தினமும் கிடைக்
கிறது என்றும், இதனால் மருத்துவமனை சுகாதாரமாக இருப்ப
துடன், அறுவை சிகிச்சைகளும் எந்தவித தடையுமின்றி நடை
பெற்று வருவதாகவும் மருத்துவமனை முதல்வர் அவர்கள் தெரி
வித்துள்ளார். நகர அரசு மருத்துவமனைகளில் குடிநீர் பற்றாக்
குறை மின்சாரவெட்டு, ஆகியவை காரணமாக உடனடியாக
அறுவை சிகிச்சைத் தேவைப்படாத நோயாளிகளுக்கு அறுவை
சிகிச்சை செய்வதை சிறிதுகாலம் தள்ளிப்போடலாம் என்பதை
தவிர்த்து எல்லா விதமான அறுவை சிகிச்சைகளையும் நடத்தப்
படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, கடந்த மார்ச் மாதத்தில் தண்ணீர் பற்றாக்
குறை ஏற்பட்டதன் காரணமாக ஒரு சில அறுவை சிகிச்சைகள்
நிறுத்திவைக்கப்பட்டதாகவும், அதற்குப் பிறகு, மாவட்ட ஆட்சித்
தலைவர், மதுரை மாநகராட்சி மேயர், பால் பண்ணை அதிகாரி
ஆகியோருடன் தொடர்பு கொண்டு அந்த மருத்துவமனைக்கு
தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக
இந்த விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். என்றாலும்
கூட, அவசரமாக செய்ய வேண்டிய அவசியமில்லாத
ஒரு சில அறுவை சிகிச்சைகளை ஓரளவிற்கு ஒத்திவைக்க
லாம் என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அந்த
ஆஸ்பத்திரியில் இந்த அறுவை சிகிச்சை மட்டுமல்லாமல், கழிப்
பறைகளுக்கு, பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில், வந்துபோகின்ற
இடத்தில், தண்ணீர் இன்றைக்கு பற்றாக்குறையில் இருப்பதனால்
அந்தக் கழிப்பறைகள் மிக மோசமான நிலையில் இருப்பதாகத்
தகவல் இருக்கிறது. ஆகவே, அங்கே வருகிற மக்களுக்குக் குடி

தண்ணீர் கிடைப்பதற்கு அந்த மருத்துவ மனைகளில் இருக்கிற
கழிப்பறைகளை, சுகாதாரமான முறையில் பாதுகாப்பதற்காகவும்,
அவசியமான தேவையான அறுவை சிகிச்சை செய்வதற்கும்,
உண்டான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு
முன் அதாவது 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ஆம் நாள்
அன்றும், அதற்குப் பிறகு 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
20-ஆம் நாள் அன்றும் தான் கொஞ்சம் தண்ணீர் பற்றாக்குறை
யாக இருந்தது. அந்த இரண்டு நாட்களில் மட்டும் மிக முக்கியமாக
இருக்கக்கூடிய, அவசரமாகச் செய்ய வேண்டிய அறுவை சிகிச்சை
கள் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு தொடர்ந்து இப்போது
அறுவை சிகிச்சைகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டு வருகின்
றன. இந்த அறிக்கையிலே எந்த ஒரு அறுவை சிகிச்சையும்
தண்ணீர் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் நிறுத்தப்பட
வில்லை என்று மிகத் தெளிவாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்
கிறது. ஆகவே, அதையெல்லாம் நாம் இப்போது நடத்திக்
கொண்டுவருகிறோம் என்பதை முழுமையாக இந்த அறிக்கையில்
எடுத்துக்கூறி இருக்கிறோம் . அதுமட்டுமல்ல, தண்ணீரைப்,
பொறுத்த வரையில், இப்போது நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும்
குறைவாகத்தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இருந்தாலும்
கூட, இருக்கக்கூடிய தண்ணீரை ஓரளவிற்கு, நல்லவகையிலே,
மிக ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக, வீணாக்காமல், தண்ணீ
ரைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டிருக்
கிறோம். அதன் மூலமாக நாம் இப்போது வேலைகளைச்செய்து
கொண்டு வருகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மதுரை, இராஜாஜி மருத்துவமனையில் வழங்கப்படு
கிற தண்ணீரின் அளவு மார்ச் மாதம் முதற்கொண்டு குறைவாக
இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிக்கையிலே
குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த மருத்துவ
மனையின் முதல்வர், மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மா
நகராட்சி மேயர், திரு. பட்டுராஜன், பால் பண்ணை அதிகாரி
ஆகியோருடன் கலந்து 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20-ஆம்
நாள் முதல் தினசரி 6 லாரிகள் வந்து, தண்ணீர் முறையாகக்
கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். அங்கே அந்த 6
லாரிகளில் தண்ணீர் கொடுப்பது போதுமானதாக இல்லை.
ஆகவே, அந்த மருத்துவமனைக்குப் பக்கத்தில் சில தனியார்கள்
கிணறுகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கிணறுகளிலே போதிய
தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை எடுத்து லாரிகளின்
மூலம் கொண்டு வந்து கொடுக்கலாம். மேலும், அந்த மருத்துவ
மனைக்குப்பின்புறத்திலிருக்கின்ற வைகையாற்றில் நீர் ஓட்டங்





கள் நிறைய இருக்கின்றன. அந்த இடத்திலிருந்தும் லாரிகள்
மூலம் தண்ணீர் கொண்டு வந்து அந்த மருத்துவ மனைக்கு
கூடுதலாக தண்ணீர் வழங்குவதற்கு அமைச்சர் ஆவன செய்
வாாகளா என்பதை அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, இங்கே இப்போது இருந்து
கொண்டிருக்கின்ற ஒரு கிணறு சரியான வகையிலே செயல்படக்
கூடிய வகையிலே நாம் ஏற்பாடு செய்து அந்தக் கிணற்றின்
மூலமாக தண்ணீர் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இன்னொரு
கிணறும் தோண்டலாம் என்று ஜியாலஜிஸ்ட் இடத்திலே
சொல்லி அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள்.
ஆகவே ஓரளவிற்கு நாம் சமாளித்து வருகிறோம்.

6. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—
(தொடர்ச்சி).

கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்
சாலைகளும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத்தலை
வர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும்,
தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ். ரூ. 9,88,25,000-க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவர் அவர்
களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்
தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும்,
தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ. 9,88,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கே. எம். தங்கமணி :** துணைத் தலைவர் அவர்களே,
திண்டிவனத்திற்கு அருகில் உள்ள 'பான்ட்ஸ் இந்தியா லிமிடெட்'
நிறுவனத்தில் தொழிலாளர் நலச் சட்டங்கள் சரிவர அமுல்
படுத்தாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்
தீர்மானத்தை மொழிகிறேன்.

(திரு. கே. எம். தங்கமணி) (1983 ஏப்ரல் 9

'' மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,88,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, சென்ற தீபாவளிப் பண்டிகையின்போது பஞ்சாலைத் தொழிலாளர் களுக்கு போனஸ் கொடுக்க வேண்டியிருந்ததை, வழக்கப்படி கொடுத்து வந்ததை மில் முதலாளிகள் கொடுக்க மறுத்த போது நோட்டீஸ் கொடுத்து வேலை நிறுத்தம் செய்ய முற்பட்ட தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தடை செய்யப்பட்டது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 29 —தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,88,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. தி. கா. நல்லப்பன்:** துணைத் தலைவர் அவர்களே, சுமைதூக்கும் தொழிலாளர், கைவண்டித் தொழிலாளர் ஆகி யோருக்கு சட்டப்பாதுகாப்பு பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,88,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவா தத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் * தமிழில் உள்ள புத்தகத்தின் 34-வது பக்கத்தில் 2-வது பாராவில் தொழிற்சாலைகளுக்கும் என்ற வார்த்தைக்குப் பின்னால் மற்றும் சில நிறுவனங்களுக்கும் என மாற்றிப்படிக்கும் படியாக வேண்டுகிறேன். அதேபோல் ஆங்கிலத்தில் 7-ஆம் பக்கத்தில் by the Tamil Nadu Act of 1982 என்று இருப்பதற்கு அடுத்தாற்போல் உள்ள and என்பதை அடித்துவிட்டு refered என்பதை refer என்று எழுதி the issue to the Indutrials Tribunal, Madras with the following directions என்று படிக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

---

*149—231ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



1983 ஏப்ரல் 9] (திரு. எஸ். இராகவானந்தம்)

மேலும் ஒரு திருத்தம். 25-ம் பக்கத்தில் 5·13 பாராவில் 10 persons an to என்று இருப்பதில் and ம் to வும் அடித்துவிட்டு factories not using power and employing twenty or more persons etc, என்று படிக்கும்படியாக பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். இந்தக் கொள்கை குறிப்புகளை நான் படித்ததாக பதிவேட்டில் பதிவு செய்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியதற்குப் பின்னால் இறுதியாக அரசின் சார்பாக சொல்லவேண்டியதை நான் சொல்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலை களும் என்ற மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத் துக்களை எடுத்து வைக்கிறேன். தமிழகத்திலே இன்றையதினம் பெரிய, சிறிய ஆலைகள் அனைத்தும் மின் வெட்டின் காரணத் தாலேயும், தண்ணீர் பற்றாக் குறையின் காரணத்தாலேயும் லே-ஆஃப் விடப்பட்டு தொழிலாளர்கள் அனைவருமே மிகவும் வேதனைக்கு உள்ளாகி இருக்கின்ற இந்த நேரத்திலே பல தொழிற்சாலைகள் இன்றைய தினம் மூடப்பட்டுள்ளது. தொழிற் தகராறுகளின் காரணமாக பேச்சுவார்த்தைகளிலே முட்டுக்கட்டை ஏற்பட்டு, அதன் காரணமாக இன்றையதினம் கோவை மாவட்டத்திலே உள்ள எஸ்.ஆர்.சி. மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், காளாப்பட்டி பத்மா மில்ஸ் ஆகிய தொழிற் சாலைகளும், சென்னை திருவொற்றியூரிலே உள்ள ஐ.சி.எப். தொழிற்சாலையும், அடையாறிலே உள்ள டிரான்ஸ்பார்மர் அன்ட் ஸ்விட்ச் கியர் கம்பெனி போன்ற தொழிற்சாலைகளும் இன்றைய தினம் பல மாதங்களாக மூடப்பட்டுள்ளது. கோவை யிலே எஸ்.ஆர்.சி. மில்லில் கிட்டத்தட்ட 1,200 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அந்தத் தொழிற்சாலையின் நிர் வாகத் திறமையின்மை காரணமாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. அந்தத் தொழிற்சாலையை தமிழக அரசே ஏற்று நடத்தி அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல வாழ்வினைக் கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இந்தத் தொழிற்சாலைகள் அனைத்தும் நிற்பதற்குக் காரணம் இந்த அரசின் அணுகுமுறைதான் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

மேலும் பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்னையை கோரிக்கையை சமரச பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்க்கம் முடியவில்லை. முதலாளிகளையும், தொழிலாளிகளையுக நேராக வைத்துப் பேசி, அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்க், முடியாத காரணத்தால்தான் நடுவர் மன்றம் என்றும் நீதிக

மன்றம் என்றும் எடுத்துச் சென்றுகொண்டு இருக்கிறார்கள்.
இன்றைய தினம் இருக்கும் சட்டங்கள் எதுவும் தமிழக தொழி
லாளர்களுக்குச் சாதகமாக இல்லை என்று நான் வருத்தத்தோடு
தெரிவித்துக்கொள்கிறேன். இன்று நடைமுறையில் இருக்கும்
தொழிற்சட்டங்களையோ அல்லது எந்த ஒரு சட்டத்தின்
பிரிவையோ எந்த ஒரு தொழில் தகராறிலும், அந்த முதலாளி
மீறினால் அதை எதிர்த்து தொழிற்சங்கங்களோ அல்லது தொழி
லாளர்களோ நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று வழக்காட
முடியாத சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. அப்படி
வழக்காட வேண்டுமானால் அரசாங்கத்தின் ஒப்புதல் வேண்டும்,
ஆனால் அரசாங்கம் ஒரு முதலாளி ஸ்தானத்தில் இருக்கிறது.
ஆகவே, பேச்சுவார்த்தை மூலம் இத்தகைய பிரச்னைகளை
தீர்க்க முடியாமல் நடுவர் மன்றத்திற்கு எடுத்துச் செல்கிறது.
இது தொழிலாளர்களின் கோரிக்கையே அல்ல.

மின்வாரியத் தொழிலாளர்கள் அல்லது போக்குவரத்துத்
தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி போராடி
னால், அவர்கள் மீது அவசரச் சட்டத்தைப் பயன்படுத்தி,
அவர்கள் போராட்டத்தை தடை செய்வது மட்டுமல்ல, தொழிற்
சங்கத்தின் குரல்வளையையும் நெறிக்கின்ற நிலைமை வருகிறது.

வேலை நீக்கம் செய்யப்பட்ட பிரச்னையில்கூட தொழில்
தகராறு சட்டம் 1947, பிரிவு 2-ன் கீழ் வழக்கு தொடரப்பட்டு,
சமரச அதிகாரிகள் முன்னிலையில் சமரசம் செய்யமுடியாத நிலை
யில், சமரச அதிகாரி சமரச முடிவு அறிக்கை அனுப்பி வைத்தும்
இந்த அரசாங்கம் வேலை நீக்கம் செய்யப்பட்ட வழக்கை
அப்படியே விட்டுவிட்டு, தொழில் தாவா இதிலே எதுவும்
இல்லை என்று கூறி அந்தத் தொழிலாளியின் வேலை நீக்கத்தை
உறுதி செய்து, முதலாளிக்கு ஆதரவாக நடக்கிறது. சட்டப்படி
தொழில் தகராறுகள் சமரச அதிகாரியின் முன்னிலையில் பேசப்
பட்டு, சமரச அதிகாரி அவர்கள் பேச்சுவார்த்தைக்கு கடிதங்கள்
அனுப்பினால், நிர்வாகஸ்தர்கள் சரியாக சமரச அதிகாரிகள்
முன்னிலையில் ஆஜராவது இல்லை. அப்படி யாரேனும் நிர்வாக
அதிகாரியின் பிரதிநிதிகள் சமரச அதிகாரிகளின் முன்னால்
ஆஜராகி உடன்படிக்கை ஏற்பட்டாலும், அல்லது சமரசம்
ஏற்படாமலும் அந்த ஒப்பந்தத்தைக் கூட அரவர்களால் பயன்
படுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட நிலை இந்த அரசு வந்த
பிறகுதான் அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே, சமரச
அதிகாரி தொழில் தகராறு விசாரணைக்காக முதலாளியையோ
அல்லது தொழிலாளியையோ அழைத்து அவர்கள் வரவில்லை
யென்றால் அவர்களுக்குச் சம்மன் அனுப்பி அவர்களை அந்தப்
பேச்சுவார்த்தைக்கு அழைத்து, மேற்படி முடிவுகளை அமல்
செய்வதற்கு இந்த அரசு சமரச அதிகாரிக்கு அதிகாரங்கள்
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்த அரசு வாழ்க்கையின் குறைந்தபட்ச தேவைக்காகப்
போராடுகின்ற தொழிலாளர்களுக்கு கடந்த 5 ஆண்டு காலமாக
எந்தவிதமான நன்மையும் செய்கிற போக்கினைக் கையாள
வில்லை என்பது அவர்களுடைய நடவடிக்கையில் இருந்து தெரி
கிறது. அதற்கு பல உதாரணங்களை நான் சொல்லமுடியும்.

கோவை மாவட்டத்தில் பல பகுதிகளில் வேஸ்ட் காட்டன்
என்று ஒரு மில்லை வைத்துக்கொண்டு, வேஸ்ட் காட்டன் மூலம்
10 ஆம் நெம்பர், 5 ஆம் நெம்பர் நூலை வைத்துக்கொண்டு
ஜமக்காளம் தயாரிக்கிறோம் என்று சொல்லி, 40 ஆம் நெம்பர்
நூலைக்கூட தயாரித்து ஸ்பின்னிங் மில்லை நடத்திக் கொண்டு
இருக்கிறார்கள். அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு
குறைந்தபட்சம் சம்பளம் தினக்கூலியாக 4 ரூபாய், 5 ரூபாய்
தருகிறார்கள். ஆகவே, மேற்படி தொழிற்சாலைகளில் பணி
செய்யும் தொழிலாளர்களுக்கும், அந்த தொழிற்சாலைத்
துறை அதிகாரிகளைப் பயன்படுத்தி, ஆய்வு செய்யச் சொல்லி
அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளத்தை
கட்டாயமாக அந்த பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு பெற்றுத்
தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசாங்கத்தின் சட்டப்படி, 480 நாட்கள்
தொடர்ச்சியாக ஒரு தொழிலாளி பணியாற்றினால் அவர்
நிரந்தரமாக்கப்படவேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது.
அதன்படி பல தொழிலாளர்களுக்கு பல்லாயிரக்கணக்கான
தொழிலாளர்களுக்கு நிரந்தரமான முறையில் வேலை உறுதி
செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் இன்று நிலைமை
என்ன? அவர்கள் எல்லோரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டு
இருக்கிறார்கள். இந்த அரசு அந்த சட்டத்தின் மூலமாக
தமிழகத்திலே எத்தனை பேருக்கு நிரந்தரமான முறையில் வேலை
உத்தரவாதம் செய்யப்பட்டு இருக்கிறது என்ற பட்டியலைக்
கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்று கேட்க விரும்பு
கிறேன். அதற்கு உதாரணமாக திருவொற்றியூரில் உள்ள
கார்பரேன்டம் யூனிவர்சல் கம்பெனியில் இன்றைக்கு பல்லாயிரக்
கணக்கான தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுஉள்ளார்கள்
480 நாள் வேலை செய்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்பட
வேண்டுமென்ற தமிழக அரசின் சட்டத்தை எதிர்த்து, முதலாளி
கள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அந்த ஸ்டே எந்த நிலை
யில் உள்ளது என்று இந்த அரசு தொழிலாளர்களுக்கு விளக்கியாக
வேண்டும்.

(முற்பகல் 11-20)

1983–84ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, பக்கம்
48இல் ''கட்டிட கட்டுமானத் தொழிலாளர்களின் பணி நிபந்
தனைகளை முறைப்படுத்தி அவர்களின் நலனைப் பாதுகாத்து

மேம்படுத்தித் தனிச் சட்டம் இயற்றுவது அரசின் பரிசீலனையி
உள்ளது'' என்று கூறியுள்ளார்கள். இதிலே வேடிக்கை
என்னவென்றால் இது சம்பந்தமான ஒரு சட்டத்தை மத்திய
அரசு வெகுவிரைவிலே கொண்டுவர இருக்கிறது என்று கடந்த
2, 3 மாதங்களுக்கு முன்னால் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது.
அப்படி இருக்க மாநில அரசு இதற்கு ஒரு சட்டம் கொண்டுவர
வேண்டுமா ?

அதே பக்கத்தில், ''தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள்
நிறுவனங்கள் சட்டத்தினைச் செயல்படுத்தியதில் அடைந்த
அனுபவத்தின் அடிப்படையில் மேற்சொன்ன சட்டத்தை ரத்து
செய்து, தக்க மாறுதல்களுடன் மீண்டும் இயற்றுவதென்று
முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்று கூறியுள்ளார்கள். அந்த
அனுபவம் என்ன என்பதை முன்கூட்டியே அறிந்து தமிழ்நாட்டிலே
சட்டத்தை இயற்றியிருக்க வேண்டும்.

மேலும் அதே பக்கத்தில், ''நடப்பு நிதியாண்டில், கம்பளி
சால்வை நெசவுத் தொழில், திரைப்பட அரங்குகள், உணவகங்கள்
ஆகியவற்றில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த அளவு
ஊதியங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. திரைப்படங்கள்
தொழிலிலும் முந்திரித் தொழிலிலும் வேலை செய்வோருக்குக்
குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன''
என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் குறைந்தபட்ச ஊதியம்
எவ்வளவு என்று கூறவில்லை. தமிழ்நாட்டிலே தான் இந்தியா
விலேயே குறைந்தபட்ச கூலி வழங்கப்படுகிறது என்று மத்திய
அரசிலிருந்து புள்ளிவிவரங்களோடு செய்தி வந்திருக்கிறது.
அது எவ்வளவு என்றால், தமிழ்நாட்டிலே குறைந்தபட்ச கூலி
65 பைசா தான். இந்தமாதிரியான நிலைமை இந்தியாவிலே
வேறு எந்த மாநிலத்திலும் இல்லை, என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

ஓட்டல் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஏற்
கெனவே குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது.
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதற்காக ஒரு குழு
அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரை வருகின்ற சமயத்தில்
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத காரணத்தால்
அதை அமுல்படுத்த இயலவில்லை. ஆனால் அந்த பரிந்துரையை
மீறி குறைந்தபட்ச கூலி நிர்ணயித்திருக்கிறார்கள்.

மீண்டும் இந்தத் தொழிலாளர்கள் மாநாடுகள் நடத்தியும்,
ஊர்வலங்கள் நடத்தியும் அவர்கள் தங்களுடைய கோரிக்கை
களை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே கூட
ஓட்டல் தொழிலாளர்கள் ஒரு மாநாடு நடத்தி, நம்முடைய
தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும் போக்குவரத்துத்துறை
அமைச்சர் அவர்களையும் அழைத்து, அந்த மாநாட்டிலே கலந்து
கொள்ள ஏற்பாடு செய்து, பிரம்மாண்டமான முறையிலே





எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். அந்த
மாநாட்டிலே அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த தொழிற்சங்கத்
தலைவர்களோ அல்லது நமது தொழிலாளர் நல அமைச்சரோ
கலந்துகொள்ளவில்லை.

ஆனால் அதற்கு நேர் மாறாக ஓட்டல் முதலாளிகள் நடத்திய
அந்த மாநாட்டுக்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களும் முதலமைச்சர் அவர்களும் சென்று, அந்த மாநாட்டு
நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலே
முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஓட்டல்
முதலாளிகள் தங்கள் திறமையால் மோசடி செய்யாமல்
சம்பாதிக்கிறார்கள் என்று அங்கே அவர்களைப் பாராட்டி
இருக்கிறார்கள். ஒருபுறம் ஓட்டல் தொழிலாளர்கள்
நடத்திய மாநாட்டுக்கு யாரும் செல்லவில்லை. மறுபுறம்
ஓட்டல் முதலாளிகள் நடத்திய மாநாட்டுக்கு முதலமைச்சரும்
வருவாய்த்துறை அமைச்சரும் சென்றிருக்கிறார்கள். அந்த
ஓட்டல் முதலாளிகள் கொடுத்த 10 இலட்சம் ரூபாயை
சத்துணவுத் திட்டத்திற்கு பெற்றிருக்கிறார்கள். இந்த
அளவுக்கு முதலாளிகளுக்கு சாதகமாகச் செயல்படுவதைத்
தவிர்த்து, முதலாளிகளுக்கு லாலிபாடுவதைத் தவிர்த்து
தொழிலாளர்களுக்கு இந்த அரசு பாடுபட வேண்டுமென்று
நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முதலாளிகள் சொல்லுகின்றபடி தொழிலாளிகளுக்கு கூலி
நிர்ணயிக்கப்படுகிறது. அதற்காக முதலாளிகளிடம் சத்துணவுத்
திட்டத்திற்கு என்று பெறுகின்ற பணத்தை ஏழை தொழிலாளி
யிடத்திலே தினம் ஒரு ரூபாய் கொடுங்கள் என்று கேட்டால்
அவர்கள் கொடுத்துவிடுவார்கள். அரசாங்கத்தின் இந்த
நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

சென்னையிலே உள்ள ரிக்ஷா தொழிலாளர்கள் மற்றும்
கட்டிட கட்டுமானத் தொழிலாளர்கள் நாளுக்கு நாள் பெரு
வருகிறார்கள். ரிக்ஷா தொழிலாளர் எத்தனைபே
இருக்கிறார்கள் என்று இந்த அரசுக்குத் தெரியுமா ? அவ
களுடைய வாழ்க்கைத் தரத்தைப்பற்றி இந்த அரசு எண்ணிப்
பார்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக
இருப்பது தமிழ்நாட்டிலேதான். அதிலும் குறிப்பாக
சிவகாசிப் பகுதியில்தான் அதிகமாக இருக்கிறார்கள்.
அதற்காக குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அர்பான் சிங்
தலைமையில் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி ஒரு ஆய்வு
நடத்த குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தன்னுடைய
பரிந்துரையை 1977இல் கொடுத்துவிட்டது.

[திரு. ஏ. டி. குலசேகர்] [1983 ஏப்ரல் 9

அந்த அறிக்கையை இதுவரையில் நீங்கள் வெளியிடவில்லை. அந்த அறிக்கை அளிக்கப்பட்டு பல ஆண்டுகள் சென்றிருக்கின்றன ஆனால் அந்த அறிக்கை இன்னும், இதுவரையில் தமிழக அரசு— தமிழக அரசு தான் பொறுப்பு வாய்ந்த அரசு என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே 1970ஆம் ஆண்டு கொடுக்கப் பட்ட அர்பான்சிங் அறிக்கையினை இந்த அரசு, இது வரையில் சட்ட மன்றத்தில் வைக்கவில்லை. இனிமேலாவது சட்ட மன்றத்தில் வைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்திலே உள்ள தொழிலாளர் நல மருத்துவ மனைக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஓரிரு முறை திடீர் விஜயம் செய்து, அங்கே சிலபல நன்மைகளை செய்தார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். அது போன்ற விஜயங்களை மீண்டும் அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அங்கே நிறைய சீர்கேடுகள் இருக்கின்றன. அவைகள் களையப் பெறவேண்டும். ஒரு தொழிலாளி இருதய நோயால் அவதிப்பட்டு அந்த மருத்துவ மனைக்குச் சென்றால், அந்த மருத்துவ மனையிலே அவருக்கு வைத்தியம் செய்வதற்கு வேண்டிய வசதிகள் கிடையாது. அந்த வசதிகளை தொழி லாளர் நல அமைச்சர், தொழிலாளர்களுக்காக செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 13–3–1983 அன்று, இங்கே தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், தனியார் போக்குவரத்து துறையிலே, பணி புரிகின்ற நடத்துநர்கள், ஓட்டுநர்கள் அனைவருக்கும் அரசாங்கம் தருகின்ற அளவு சம்பளத்தைக் கொடுக்கிறார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால் கோவை மாவட்டத்திலே உள்ள தனியார் பஸ்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அப்படி சம்பளம் வழங்கப்படவில்லை. கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே கூட, பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிக் காலத்திலே இறந்தால், அவர்களுக்கு ஏதாவது ஒரு ஈட்டுத் தொகை, 5 ஆயிரம் 10 ஆயிரம் என்று கொடுத்து, அந்தக் குடும்பங்களை காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கை களை வைத்து, அது இன்று வரையில் ஏற்கப்படவில்லை. அதற்கு எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலை களும் என்ற மானியக் கோரிக்கையின் மீது, ஆளுகின்ற கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்தை இங்கே வைப்பதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும், முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



983 ஏப்ரல் 9] [திரு. எம். அண்ணாதாசன்]

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களின்பால்
இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறது, என்பதற்கு
எடுத்துக்காட்டாக 1980–81ஆவது ஆண்டும், 1981–82ஆவது
ஆண்டும், தொழில் தகராறுகளும், கதவடைப்புகளும், எந்த
அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும். இப்படி இந்த
குறைக்கின்ற நல்ல நடவடிக்கைகளுக்கு தமிழகத்திலே இருக்கிற
தொழிலாளர்களும் எந்த அளவுக்கு அரசோடு ஒத்துழைத்து அரசு
எடுக்கின்ற முறைகளிலே நன்மை இருக்கிறது என்பதை அவர்கள்
ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் இந்த குறைப்புகள் இங்கே
ஏற்பட்டிருக்கிறது என்று இந்த குறிப்பிலேயே கூறப்பட்டிருக்கி
றது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாகப் படித்தி
ருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையிலே தொழிற்
தகராறுகளும், கதவடைப்புகளும் குறைவடைந்ததற்கு நான்
நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்களின்பால் இந்த அரசு அக்கறை கொண்டு
ருக்கிறது என்பதற்கு மாறாக எதிர்கட்சி உறுப்பினர்கள்
இங்கே அதைக் குறிப்பிடுகிற நேரத்தில், தொழிலாளர்களுக்கு
இந்த அரசு 5 ஆண்டு காலத்தில் என்ன செய்திருக்கிறது, ஒன்
றுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுகளையும் சொன்னார்
கள். மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு
நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன் ; உதாரணத்திற்கு,
கோயம்புத்தூரிலே எடுத்துக் கொண்டீர்களேயானால்— ஜோதி
மில்ஸ் என்ற நிறுவனம், அங்கே தொடர்ந்து நட்டத்தை ஏற்
படுத்தி, கதவடைப்பு செய்கிற சூழ்நிலை வருகிறபோது, தமிழக
அரசு சார்பிலே, அதற்காக 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கி,
அந்த தொழிலை நிறுத்தக் கூடாது—தொழிலாளர்கள் பாதிக்
கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில்,
அதற்கென்று ஒரு அதிகாரியை நியமித்து அதை இயக்கச் செய்
தார்கள். இந்த 50 இலட்சம் ரூபாயைக் கொடுத்து அந்த ஜோதி
மில்லை இயக்குவதற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு அரசு
தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவில்லையா என்பதைக் கேட்
டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதுகுறித்து கொள்கை
விளக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

(முற்பகல் 11–30)

அடுத்தது, கோயம்புத்தூரிலே இருக்கின்ற ஜெயலட்சுமி
மில் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படுகின்றது என்ற சூழ்
நிலையினை அரசு அறிந்த உடனே அந்த மில் தொழிலாளர்
களுக்கும், ஏற்கனவே குறிப்பிட்ட ஜோதி மில் தொழிலாளர்
களுக்கும் முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலி
ருந்து 200 ரூபாய் முன்பணம் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு

அரசு, இந்த புரட்சி தலைவர் தலைமையில் இயங்குகின்ற
அரசு ஆணையிட்டது. அந்த வகையில் அந்தத் தொழி
லாளர்களுக்கு இந்த அரசு உதவியது என்பதை தயவுசெய்து
மனிதாபிமானத்தோடு இங்கே எண்ணிப்பார்க்க வேண்டும்
என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே தனியார் பஸ் கம்பெனிகளில் வேலை
செய்கின்ற தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்
செய்யப்போகிறார்கள் என்று அறிந்தவுடன் அந்தத் தொழிலா
ளர்களின் மீது அக்கறை இருக்கின்ற காரணத்தால்தான் புரட்சித்
தலைவரின் அரசு உடனடியாக அதிகாரிகளை அனுப்பியது,
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான யோசனையின்
பேரில் அந்தத் தொழிலாளர்களுக்கும் அங்கே இருக்கின்ற தனி
யார் பஸ் முதலாளிகளுக்கும் ஒரு நல்ல உடன்பாடு ஏற்படுத்தப்
பட்டது. இது புரட்சித் தலைவரின் அரசால் எடுத்துக்கொள்
ளப்பட்ட தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக்கூடிய காரிய
மில்லையா என்பதை இந்த மன்றத்தில் நான் கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன். W. S. Insula'ois of India Limited, Porur,
என்று சென்னையிலே இருக்கின்ற தொழிற்சாலையிலே தொழில்
தகராறு ஏற்பட்டபோது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களின் அரசுதான் தலையிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு பல
நன்மைகளைச் செய்ய முற்பட்டிருக்கின்றது என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டமாகிய திருச்சி
மாவட்டத்தில் பீடி தொழிலாளர்கள் 25 ஆயிரம் பேர்கள்
இருக்கிறார்கள். கடந்த ஆண்டு அங்கே ஏற்பட்ட
நிலைமையைத் தயவு செய்து இங்கே எண்ணிப் பார்க்க வேண்
டும். மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்
திரு.கே. சவுந்திரராஜன் அவர்களுடைய திருச்சி-2 தொகுதியிலும்
எனக்கு அருகாமையிலே இருக்கின்ற அருமை நண்பர் திரு.
முசிறிபுத்தன் அவர்களுடைய திருச்சி-1-வது தொகுதியிலும்
நிறைய பீடி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள்
போனஸ் வேண்டும் என்று நீண்ட நாள் கோரிக்கையாக தனி
முதலாளிகளிடத்திலே கோரிக்கையினை வைத்தார்கள், கேட்
டார்கள், ஆனால் அது கிட்டாத காரணத்தால் அவர்கள்
வேலை நிறுத்தத்தில் ஈடுபடயிருந்தனர்.
குறித்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால் இது
உடனடியாக அதிலே ஈடுபட்டு பேச்சுவார்த்தை நடத்தி அரசு
நிறுத்தத்தை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தது. வேலை
உடன்பாடுகள் ஏற்பட்டன. அதனால் அந்தத் தொழிலாளர்
கஞக்குக் கிடைக்க வேண்டிய ஊதியக்கொடை மற்றும் சம்பள
உயர்வு ஆகியவற்றைக் கிடைக்கச் செய்தது அரசு. அதற்குப்
பிறகு 18—3--1983 அன்று நடத்த இருந்த வேலை நிறுத்தத்தை
நிறுத்திக்கொண்டனர். அப்படி வேலை நிறுத்தத்தை நிறுத்தி,
தொழிலாளர்களின் கோரிக்கைகள் கிடைக்கச் செய்தது



தொழிலாளர்களுக்குச் செய்த நன்மை இல்லையா? ஆகவே தமிழ்நாடு அரசு தொழிலாளர்களின் நலனிலே அக்கறை காட்டவில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இதுபோன்ற ஏராளமான காரியங்களை, தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய காரியங்களைப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு செய்திருக்கின்றது. இவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டுள்ளது என்பதை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இருக்கின்ற இந்தக் காலகட்டத்திலேதான் என்பதைத் தைரியமாகவும் உறுதியாகவும் சொல்லிக் கொள்கிறேன். 1956 ஆம் ஆண்டிலே இருந்து 1971 ஆம் ஆண்டு வரை—அப்போதெல்லாம் நான் தொழிலாளியாக இருந்து பணியாற்றிக் கொண்டிருந்தேன்—எத்தனை தொழிலாளர்கள் அந்தக் காலகட்டத்திலே பாதிக்கப்பட்டார்கள்? எத்தனை தொழிற்சங்கங்களின் குரல் வளைகள் நெறிக்கப்பட்டன? எத்தனை தொழிற்சங்க தலைவர்களாக இருந்தவர்கள் எல்லாம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டார்கள்? என்ற வரலாற்றை எல்லாம் நாம் அறிவோம். அப்படிப்பட்டவர்களில் நானும் ஒருவன். அப்படித் தொழிற்சங்க வரிசையிலே இருந்து தூக்கி எறியப்பட்டு மண்ணிலே புதையுண்டுவிட்டான் என்று சொல்லப்பட்ட இந்த அண்ணாதாசன் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வந்ததற்குப் பிறகு தான் இந்த அவைக்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றான் என்பதை மிக்க பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. இராகவானந்தம் அவர்களை, அமைச்சராக ஆவதற்கு முன்பு அங்கே அழைத்துச் சென்று காட்டியிருக்கிறேன். அங்கே இருக்கின்ற சிறு சிறு தொழிற்கூடங்களை அவரிடத்திலே காட்டி இருக்கிறேன். அன்றைக்கு இருந்த சூழ்நிலை என்ன? எத்தனை தொழிலாளர்கள் கண்ணீர் வடித்தார்கள், கதறி கதறி அழுதார்கள் என்பதை நான் கண்கூடாகப் பார்த்தவன். இன்றைக்கு அந்த நிலைமை எல்லாம் போக்கப்பட்டிருக்கிறது. அந்த தொழிலாளர்கள் சொல்லுகின்ற கோரிக்கைகள் அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மாவட்டத்தில் இருக்கின்ற அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளிடத்திலும் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவுகளும் உள்ள பல ஆதாரங்கள் இருக்கின்றன. அதை வேண்டும் என்று விரும்பினால் இந்த அவையில் அதை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்கிறேன். அப்பேர்பட்ட வரிசையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்த காலக் கட்டங்களில் தொழிலாளர்கள் அரசு என்ற ஒரு நல்ல சூழ்நிலையை நிருபித்து காண்பித்து இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் தொழிலாளர்கள் நலம் பெற இந்த அரசு பாடுபடும், எங்களுடைய அரசு உழைக்கும் என்று

சொன்னார்கள். அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலை
வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு எத்தனை
போராட்டங்கள் ; அத்தனை போராட்டங்களிலும் அந்த
உரிமையை கேட்ட தொழிலாளர்களை அன்போடு அழைத்து
உங்களுடைய கோரிக்கைகள் என்ன என்று கேட்டு அதற்கு
நடுவர்களை நியமித்து அவர்கள் மத்தியில் வைத்து பேச்சு
வார்த்தை நடத்தி அவ்வப்போது தீர்வு கண்டு பத்திரிக்கையில்
பெரிய பெரிய கொட்டை எழுத்துக்களில் வரவில்லையா ?
அந்த தொழிலாளர்கள் எல்லாம் நன்றி கூறி அதற்கு
விடவில்லையா ? அது எந்த காலக்கட்டத்தில் அறிக்கை
ருக்கிறது? இந்தக் காலக்கட்டத்தில் தான் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் இந்த மாதிரி
அறிக்கைகளும், தொழிலாளர்களுடைய எண்ணங்களும் நிறை
வேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் மனமகிழ்ச்சியோடு
இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டும் அல்ல, என்னுடைய தொகுதியான திரு
வரும்பூரில் சிறுசிறு தொழிற்கூடங்கள்—பாயிலர் தொழிற்சாலை
யும், துப்பாக்கித் தொழிற்சாலையும், தோல் பதனிடும் தொழிற்
சாலையும், இதுபோன்ற பலவகையான சிறு தொழிற்
சாலைகள் உள்ள இடம் ஆகும். நான் சட்டமன்ற உறுப்பின
ராகி இந்த 3 ஆண்டு காலத்திற்குள் நீங்கள் எத்தனை போராட்
டங்களை அங்கே நடத்தியிருக்கிறீர்கள் என்று தயவுசெய்து உங்க
ளால் கொடுக்க முடியுமா ? கொடுக்க முடியாது. காரணம்
இந்த அவையில் உறுப்பினராக இருக்கிற நானே, அந்த தொழி
லாளர்களுக்கு என்ன நன்மை செய்யவேண்டுமோ அதை உட
னுக்குடன் சென்று கவனிக்கின்ற காரணத்தால்தான் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, மாண்புமிகு தொழி
லாளர் நலத்துறை அமைச்சரிடம் சொல்லி அதற்கு தீர்வு காணு
கின்ற காரணத்தால்தான் எந்த தொழிற்கூடத்திலும் போராட்
டங்களோ, கதவடைப்புகளோ அங்கே நடைபெறவில்லை
என்பதை நான் இங்கே தைரியத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். பாயிலர் தொழிற்சாலையில் இருக்கலாம்.
மத்திய அரசினுடைய அண்டர் டேக்கிங்கில் இருக்கக்கூடிய அந்த
பாயிலர் தொழிற்சாலையில் அகில இந்திய ரீதியில் இருக்கிற
உரிமைகளை கேட்பதற்காக சில போராட்டங்கள் நடை
பெறலாமே தவிர வேறு எந்த வழியிலும் அங்கே போராட்
டங்கள் நடைபெறவில்லை. இங்கே இருக்கிற மாண்புமிகு
கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அங்கு ஏற்றுக் கொள்
வார்கள். அந்த அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களுடைய அரசு தொழிலாளர்கள் மேல் பரிவு காட்டி,
அக்கறை காட்டி அவர்களை அரவணைத்துக் கொண்டிருக்கிறது
என்பதை நான் இங்கே மிக மகிழ்ச்சியோடும், பணிவோடும்
தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாளர்
களுக்கு பாதகமாக இல்லாமல், தொழிலாளர்களுக்கு ஆதரவாக



இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக தான் இன்றைக்கு
இந்த சர்க்காரால் நிறைவேற்றப்பட்டிருக்கிற ஒரு சில சட்டங்
களை இந்த அரசுக்கு என்ன சட்டங்களை இயற்றலாம் என்று
அதிகாரம் இருக்கிறதோ அந்த சட்டத்திற்கு உட்பட்டு
இயற்றுகிற சட்டங்களுக்கு கூட மத்திய அரசு இதுவரைக்கும்
அங்கீகாரம் அளிக்கவில்லை என்பதற்காக தான் அனைத்திந்திய
அண்ணா தி.மு.க. தொழிற்சங்கப் பேரவை இன்றைக்கு மிகப்
பெரிய பிரமாண்டமான ஒரு ஊர்வலத்தை கூட
மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டுகின்ற வகையில் நடத்தி இருக்
கிறது என்றால் இது தொழிலாளர்களுக்கு துரோகம் செய்கின்ற
அரசா ; இல்லை, நிச்சயமாக சொல்கிறேன் தொழிலாளர்களுக்கு
நல்ல ஒரு வாய்ப்பை அவர்களுக்கு ஒரு முன்னேற்றத்தை கொடுக்
கின்ற உரிமையை தட்டுங்கள் திறக்கப்படும் என்று முன்னோர்கள்
சொன்னார்கள், மதியாத தக்குரிய அறிஞர்கள் எல்லாம் பெரி
யோர்கள் எல்லாம் சொன்ன அந்த வார்த்தைக்கு இன்றைக்குத்
தான் தொழிலாளர்கள் தட்டுகின்ற கதவு திறக்கப்படும் என்றால்
அது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தான்
திறக்கப்படும் என்பதை மிகப் பணிவோடு இங்கே தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

என்னுடைய தொகுதியில் தொழிலாளர்களுடைய நன்மையை
கருதி கடந்த ஆண்டு ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை வேண்டும்
என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு
உடனடியாக அக்கறையோடு அந்த பகுதி தொழில் வளம் மிக்க
பகுதியாக இருப்பதால் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை வழங்கி
னார்கள். அதற்கு நான் நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளேன்.
ஆனால் இன்றைக்கு அது தனியார் இடத்தில்இயங்கி வருகிறது.
அதை உடனடியாக ஒரு பொதுவான இடத்தில் இந்த நிறுவி
அதற்கு கட்டிடங்களை அமைத்து தொழிலாளர்கள் வசதியோடு
அங்கே அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்ளக்
கூடிய அளவுக்கு உடனடியாக அதை செய்து தர வேண்டும்
என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் இருக்கிற பாயிலர் தொழிற்
சாலை அமைந்துள்ள இடம் அந்தப் பகுதியில் உள்ள சிறுசிறு
விவசாயிகளுடைய இடம் ஆகும். அந்த இடங்கள் அத்தனை
யையும் ஆர்.ஈ.சி., சுமால் இண்டஸ்டிரியஸ், பாயிலர் தொழிற்
சாலை இது போன்ற தொழில்களுக்கு எடுத்துக் கொண்டார்கள்.
இன்றைக்கு அவர்கள் குடும்பத்தில் படித்து இருக்கிற, அல்லது
ஓரளவுக்கு படித்து இருக்கிற அந்த இளைஞர்களுக்கு
வேலை வேண்டும் என்று 1980 ஆம் ஆண்டு நான் பாய்லர்
நிர்வாகத்துக்கு ரைட்டிங், எழுத்து மூலமாகக் கொடுத்து
இருக்கிறேன்.

[திரு. எம். அண்ணாதாசன்] [1983 ஏப்ரல் 9

(முற்பகல் 11·40)

அவர்களும் ஏற்றுக் கொள்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்
தார்கள். ஆனால் இன்றைக்கு வரைக்கும் கொடுத்திருக்கக்கூடிய
வாக்குறுதிதான் இருக்கிறதே தவிர சுமார் 200, 300 பேர்களுக்கு
வேலை கொடுக்க வேண்டுமென்ற உத்திரவாதம், அக்ரிமெண்ட்
தான் இருக்கிறதே தவிர இன்னமும் கொடுக்கவில்லை. அந்த
அவர்கள் இழுத்துக்கொண்டே வருகிறார்கள். பெல் நிர்வாக
போர்டு, நிர்வாகத்தை கேட்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.
அவர்கள் தங்கள் இஷ்டப்படி செய்துகொள்வதற்குத்தான் முன்
வருகிறார்களே தவிர நாம் கொடுக்கிற குரலுக்கு செவிசாய்த்து
வேலைவாய்ப்புக் கொடுப்பதிலே காலந்தாழ்த்துகிறார்கள். இந்த
அரசு உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்து நிலங்கள் கொடுத்த
விவசாயக் குடும்பங்களிலே இருக்கிற அந்த இளைஞர்களுக்கு
வேலைவாய்ப்புபெற்றுத்தர ஆவன செய்யவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதைத் தவிர, சிறு சிறு தொழிற் கூடங்களுக்கு அந்தப்
பகுதியிலே உள்ளவர்கள் நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள்,
அவர்களுக்கு எல்லாம் அந்த விவசாயிகளுக்கு எல்லாம் அந்த
இடத்தைத் தவிர வேறு இடமே கிடையாது. அவர்கள் குடும்பங்
களைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படாத
நிலை இருக்கிறது. அவர்கள் இது மாநில அரசைச் சேர்ந்தது
அல்ல, தனியார் இன்ஸ்டிட்டியூஷன் ஆகவே வேலை கொடுக்க
முடியாது என்று சொல்கிறார்கள். அந்த சிறு சிறு தொழில்
கூடங்கள் எல்லாம் பெல் நிறுவனத்திற்குத்தான் பயன்படுகின்றன.
சிறு சிறு உறுப்புக்களைச் செய்யக்கூடிய சுமால் இண்டஸ்டிரிஸ்
களாக அவைகள் அந்தப் பகுதியிலே செயல்பட்டு வருகின்றன.
ஆகவே அந்தப் பகுதியிலே நிலத்தைக்கொடுத்த விவசாயக் குடும்
பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அங்கே
வாங்கித் தருவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த
நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, கல் உடைக்கும் தொழிலாளர்கள் அங்கே
நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு
அளிப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவான அறிக்கை
யைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பணிகளிலே ஈடு
படுகின்ற நேரத்திலே ஆபத்துக்கள், உயிரிழப்புகள் ஏற்படுகிற
போது வருடா வருடம் அரசு ஒதுக்குகின்ற 15 ஆயிரம் ரூபாய்
நிதியில் இருந்து கொடுக்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆனால்
அந்த நிதியிலிருந்து எங்கள் பகுதியில் உள்ள தொழிலாளர்கள்
அந்தப்பணிகளிலே ஈடுபடுகிறபோது காயமுற்றால், கையிழந்தால்,
உயிர் இழந்தால் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்
கிறதா என்றால் உடனடியாக — எனக்குத் தெரிந்தவரையில்
— கிடைத்ததாகத் தெரியவில்லை. அதற்கான அந்த அமைப்பு
அந்த பாதுகாப்பு நிறுவனம் திருச்சியிலே இருக்கிறதா இல்லையா
என்று தெரியவில்லை. இல்லையென்றால் நான் பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் பாதுகாப்பு நிறுவனம்
அங்கே அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 9] [திரு. எம். அண்ணாதாசன்]

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொழிலாளர்
களின் மேலுள்ள அதிக அக்கறையின் காரணமாக 1981-82-இல்
எந்த அளவுக்கு அவர்கள் வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள்
இவைபோன்ற சூழ்நிலைகள் தவிர்க்கப்பட்டிருக்கிறது
என்பதற்கு சில புள்ளிவிவரங்களை இந்தக் குறிப்பிலே கொடுக்கப்
பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர்
முடிய 258 கதவடைப்புகள் என்றும், 1982 ஆம் ஆண்டு ஜனவரி
முதல் டிசம்பர் முடிய 187கதவடைப்புகள் என்றும் கோடிட்டுக்
காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற
புள்ளிவிவரத்திலே எவ்வளவு தீர்க்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே
தீர்க்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையெல்லாம் தெளிவாகச்
சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குறிப்புகளை எல்லாம் படித்துப்
பார்க்கிற நேரத்திலே, தமிழகத்தினுடைய புரட்சித் தலை
வருடைய அரசு கடந்தகாலத்திற்கும் இந்தக் காலகட்டத்திற்கும்
எவ்வளவு வேறுபாட்டோடு தொழிலாளர்களின் பிரச்சனைகளைத்
தீர்த்து வைத்திருக்கிறது, குறைந்திருக்கிறது. அவர்களுடைய
கஷ்டங்களைப் போக்குகிறது என்ற அந்த வகையில் இந்த அர
சிற்கும், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும், நன்றிச்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய
தொகுதியிலே பொன்மலை நகராட்சி பகுதி இருக்கிறது. அங்கே
தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கிட்டத்தட்ட 30 இருக்கின்
றன. அந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலே பணியாற்றக்
கூடியவர்கள் மிக மிக தாழ்ந்து கிடக்கிற சமுதாயம். ஆனால்,
அவர்கள் செய்கிற வேலை வேதனைக்குரிய கஷ்டமான வேலை.

கஷ்டப்பட்டு வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அந்தத்
தொழிற்கூடங்களில் நிரந்தரமான பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.
ஆனால் அந்த பாதுகாப்பு கிடைப்பதில்லை. எங்களுக்கே
உற்பத்தி பெருக்கமில்லை; நாங்கள் எப்படி அவர்களை நிரந்தர
மாக்க முடியும்? பாதுகாப்பு கொடுக்க முடியும் என்று கேட்
கிறார்கள். நான் மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.
அதுபோன்ற சிறு சிறு தொழிற் கூடங்களை, தோல் பதனிடும்
தொழிற்சாலைகளை மத்திய அரசு நிதியுதவியோடு, அந்த ஏழை
எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கஷ்டமான வேலையைச் செய்
கிற அந்த தொழிலாளர் வர்க்கத்தை ஊக்குவிக்கிற முறையிலே
அதற்கான முதலீடுகளை அரசே ஏற்பாடு செய்து அந்த மக்களைக்
காக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒரு
நல்ல நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டு,
வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்
கொள்கிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி** : துணைத் தலைவர் அவர்களே,
மானியக் கோரிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக
தொழிலாளர் நலன், தொழிற்சாலைகள் என்ற
தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தி நான்
சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கே. எம். தங்கமணி] [1983 ஏப்ரல் 9

இன்றையதினம் தமிழகத்திலே பஞ்சாலைகள், என்ஜினியரிங் தொழிற்சாலைகள், சிமெண்ட், உரம் மற்றும் இதர தொழிற் சாலைகள் எல்லாம் மின்சார வெட்டினாலே பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் அனைவரும் வேலையில்லாமல் பாதிப்பிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். பஞ்சாலைகளில் மட்டும் 83 ஆயிரம் பேர்களும், இந்தியா சிமெண்ட்சில் 2 ஆயிரம் பேர்களும், மேட்டூர் கெமிக்கல்சில் 3 ஆயிரம் பேர்களும், ஆக மற்ற வகைகள சேர்த்து கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ லட்சம் பேர்கள் இன்றையதினம் தமிழ் நாட்டிலே மின்வெட்டினால் வேலையில்லாமல் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக சென்னை உரத்தொழிற்சாலை மூடப்படுகிறது என்ற செய்தி வந்திருக்கிறது. 70 கோடி ரூபாய் நஷ்டம்; தினம் 2,600 டன் உர உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் என்று செய்தி வந்திருக்கிறது. இதனாலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எல்லாம் முழுமையான மாத சம்பளம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா தொழில்களிலும் 480 நாட்கள் வேலை செய்ததொழி லாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. நாங்களும் கூட அதை ஆதரித்தோம். வரவேற் றோம். இன்றயதினம் அதை எதிர்த்து சில முதலாளிகள் நீதிமன்றங்களுக்குச் சென்று இடைக்கால தடையுத்திரவு வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. இதை நீக்குவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் கூலி ஒப்பந்த முறையை ஒழிக்க வேண்டு மென்று சொல்கிறீர்கள். நானும் ஒப்புக் கொள்கிறேன். எங்கள் கட்சியும் இதை ஆதரிக்கிறது. ஆனால் இன்றைய தினம் பரவலாக அனைத்துத் தொழிற்சாலைகளிலும் வேலையை முடிக்க வேண்டு மென்றால் கான்ட்ராக்ட் தான் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னை இங்கிலிஷ் எலக்ட்ரிக்கல்ஸ் காஷுவல் லேபரர்களை நிரந்தரமாக்க நிர்வாகம் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இன்றையதினம் சர்க்கார் அந்த கம்பெனி மீது என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்க விரும்புகிறேன்.

சென்னையில் பால்வள கழகத்தில் 1,600 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மதுரையிலே இருந்த தொழிலாளர்களுக்கு ஆதரவாக போராடினார்கள் என்ற காரணத் தால் அன்றையதினம் போலீசாரைவிட்டு அவர்களை வெளி யேற்றிய கொடுமையான நிகழ்ச்சிதான் நடந்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 ஏப்ரல் 9] [திரு. கே. எம். தங்கமணி]

திருச்சியிலே இன்றையதினம் காவேரி என்ஜினியரிங் மில்சிலே 260 பேர்களில் 138 பேர்களை ஆட்குறைப்பு செய்திருக்கிறார்கள். சிம்கோ மீட்டர்சில் பணிபுரிகின்ற ஆயிரம் தொழிலாளர்களில் 340 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய வேண்டுமென்று நிர்வாகம் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதிலே உற்பத்தியாகிற பொருள்களை தமிழக சர்க்காரே வாங்குகின்ற அளவிற்கு நுகர்வோராக அரசே இருப்பதால் இந்த ஆட்குறைப்பை தயவு செய்து அனுமதிக்கக்கூடாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

இந்தியா பிரைட் ஸ்டீல்ஸ் நிறுவனம் கடந்தமார்ச் 5ஆம் தேதி முதல் சட்ட விரோதமாக மூடப்பட்டிருக்கிறது. முன்னறிவிப்பு கொடுக்காமலே கதவடைப்பு செய்திருக்கிறார்கள். அதனாலே 600 தொழிலாளர்கள் வாழ்க்கைக்கு வழியில்லாமலே நடுத் தெருவிலே நிற்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அரசு இதிலே உடனடியாகத் தலையிட்டு இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும்.

பெரியார் மாவட்டம் சூரியபாளையத்திலே உள்ள கந்தசாமி நூற்பாலையிலே 600 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள் என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உடனடியாகத் தமிழக சர்க்கார் அதிலே தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, நகரசுத்தி தொழிலாளர்களுடைய பிரச்னை. தமிழ்நாட்டிலே இன்றையதினம் நகராட்சிகளில், உள்ளாட்சி மன்றங்களில் உள்ள நகரசுத்தி தொழிலாளர்களுடைய பிரச்சினை பெரும் அளவிலே இருக்கிறது. அவர்களுக்கு வேலைப் பளுவை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை மையமாக வைத்து அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். என்றைக்கோ, சர்க்காரோடு செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் பிரகாரம், ஒரு தொழிலாளி 40 வீடுகளில் தான் வேலை செய்ய வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் 300 வீடு, 200 வீடு களில் வேலை செய்ய வேண்டும். ஒர்க் லோடு அதிகரித்துள்ளது. அதிக வேலையை நிர்வாகத்தினர் வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். தயவு செய்து தமிழக சர்க்கார், உடனடியாக அந்த நகரசுத்தி தொழிலாளர்கள் பிரச்சினையில் தலையிட்டு, எவ்வளவு வேலைப்பளு—ஒர்க்லோடு—என்பதை முடிவு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் திண்டிவனம் நகராட்சியிலே இருக்கிற நகராட்சி ஆணையரும், அங்கே இருக்கிற தனி அதிகாரிகளும், புதிதாக நகரசுத்தி தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கிறேன்

என்று சொல்லி 15, 16 ஆண்டுகளாக வேலை செய்து கொண்டு இருந்த சப்ஸ்டிடியூட்டுகளை எடுத்துக் கொள்ளாமல் , திடீ ரென்று எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து ஆட்களை எடுக் கிறோம் என்று ரூ. 2,000 ரூ. 3,000 என்று ரேட் பேசிக் கொண்டு, புதிதாக ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற தொழிலாளர்கள், அந்த நிர்வாக அதிகாரியை தனி அதிகாரியை, ஆணையரை எதிர்த்து ஒரு கெரோவே செய்திருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன். எனவே, உடனடியாக இதில் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு ஓர்க் லோடு நிர்ணயம் செய்ய வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் அருகிலே இருக்கிற பாண்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் 200 பேர்களை வேலை நீக்கம் செய்திருக் கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

தமிழகத்திலே போக்குவரத்துத் தொழிலாளர்கள் போனஸ் பிரச்சினையும் ஊதியப் பிரச்சினையையும் அத்தொழிற்சங்கங் களோடு பேசி, ஒரு தீர்வு காண வேண்டுமே தவிர, நீங்களாகப் பார்த்து தன்னிச்சையாக ஒரு அறிவிப்பைப் கொடுத்துவிட்டது உங்களுடைய சௌகரியத்திற்காக; அப்படி அறிவிப்பு செய்வீர் களானால் அது தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய துரோகம் இழைத்ததாக தான் பொருள்படும். எனவே, உடனடியாகத் தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் அழைத்து, ஒரு சரியான, முறையான தீர்வு காண வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள், Casual Labour, N.M.R., T ainees, Apprentice, Tempo ary போன்ற பல்வேறு பெயர்களிலே இன்றையதினம் பல வருஷங்களாக வேலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்தத் தொழிலாளர் கள் தகுதிக்கேற்ப, நியாயமான விதிகளுக்குட்பட்டு, நிரந்தரமான தொழிலாளர்கள் எண்ணிக்கையை நிர்ணயித்து, தொழிற் சங்கத் தலைவர்களோடு உடனடியாக விவாதித்து இப்பிரச்சினையில் ஒரு முடிவு காண வேண்டு மென்று கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

சர்க்கரை ஆலைகளில் புதிய ஸ்டாஃபிங் பாட்டர்ன் அமுல் செய்யப்படுவதால், ரெகுலர் தொழிலாளர்கள் சீசனல் தொழி லாளர்களாக மாறுகின்ற கடுமையான நிலைக்கு இன்றையதினம் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஸ்டாஃபிங் பாட்டர்னை மாற்றம் செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



இன்றையதினம், காஞ்சீபுரம் மத்திய கூட்டுறவு வங்கி என்ற ஒன்று இருக்கிறது. நம் அனைவருக்கும் தெரியும். அங்கே வேலை செய்கிற பணியாளர்கள் ஊதிய ஒப்பந்தத்தை மாற்றி யமைக்க வேண்டு மென்று கோரியுள்ளார்கள். அதற்காக, பணி யாளர் சங்கம் 15–2–1982–ல் கோரிக்கை மனு அனுப்பியுள்ளது. உடனடியாக அந்த வங்கியின் தனி அதிகாரி பதில் ஏதும் அனுப்பாத காரணத்தினாலே, டெபுட்டி லேபர் கமிஷனரிடம் வழக்கு போட்டார்கள். 9 முறை வாய்தா போடப்பட்டு இது வரையிலே அந்தத் தனி அதிகாரி, ஒருநாள்கூட அந்த தாவா வுக்கு வரவில்லையென்று நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தனியார் தொழில்களில், ஆலை களில், ஸ்டிரைக் நடந்தால், ஒரு போராட்டம் என்ற நிலைமைக்கு வருமானால், முதலாளிகளை சம்மன் கொடுத்து அழைக்கிற அளவுக் கூட இருக்கிறது. ஆனால், இன்றைய தினம் அரசு அதிகாரி எஸ். ஓ. வாக இருக்கிறார். 9 முறை, 10 முறை வாய்தா போட்டும், தொழிலாளர் நல டெப்புட்டி கமிஷனர் வாய்தா போட்டும், அந்த தாவாவுக்கு எஸ். ஓ. வரவில்லை யென்றால், யார் அந்தத் தைரியத்தைக் கொடுத்தார்கள் என்று தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஏற்கனவே கும்ப கோணத்திலே வேலை செய்து, பல ஊழலுக்கு ஆளான அவர், இன்றையதினம் காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவினுடைய சொந்த ஊர். திடீரென்று அண்ணா பெயரைக் கெடுக்கின்ற வகையில் அவரைப் போட்டதை மாற்றியமைத்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிலாளர் பிரச்னையில் தீர்வு காண வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒருநாள் திடீ ரென்று அமைச்சர் பொன்னையன் அவர்கள் அந்த மத்தியக் கூட்டுறவு வங்கியின் முன்னாலே கொடி ஏற்றினார். உடனடியாக அங்கேயிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சங்கத்தோடும் இன்னொரு தொழிற்சங்கத்தோடும்சேர்ந்து 18 (1) ஒப்பந்தம் ஒன்று போட்டிருக்கிறார்கள். தமிழக அரசு சிபாரிசு செய்து அனுப்பியுள்ள குறிப்புப்படி, அங்கே, கூட்டுறவுத் துறையிலே, 12 (3) ஒப்பந்தம்தான் போட வேண்டும், 18 (1) ஐப் போடக் கூடாது. அப்படி 18 (1) போட வேண்டிய அவசியம் என்ன? முன்னாள் பதிவாளர் அவர்கள் அவருக்கு ஒரு டி. ஓ. அனுப்பினார்கள், நீங்கள் கலந்து கொள்ளவேண்டு மென்று. ஆனால், அவருடைய வாக்குக்கு மதிப்பு கொடுக்கா மலே, இன்றையதினம் தன்னிச்சையாக அவர்கள் நடந்து கொண் டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். இன்றையதினம் தொழிலாளர் நல இலாகாவை கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மதிப்பதில்லை என்ற நிலவரம் இருக்கிறது என்று நான் கவனப்படுத்த விரும்புகிறேன். அரசு அதிகாரிகளே இதற்கு முக்கியத்துவம் கொடுத்து தொழி லாளர்கள் பிரச்னைகளைத் தீர்க்க முன் வரவில்லை என்றால், தனிப்பட்ட முதலாளிகள் எப்படி முன் வருவார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

(திரு. கே. எம். தங்கமணி) [1983 ஏப்ரல் 9

பட்டு நெசவாளர்கள் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாட்டிலே ஒரு குழுவை நீங்கள் போட்டீர்கள். அந்தக் குழுவானது அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து பல மாதங்கள் ஆகிவிட்டன. அதன் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையே, அதற்கு என்ன காரணம் ?

பிரிட்டானியா எம்ப்ளாயீஸ் சங்கம் என்ற ஒரு சங்கத்தை மூன்று ஆண்டுக்காலமாக அங்கீகாரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை ; அது ஏன் என்பது புரியவில்லை.

தொழிலாளர் சட்டங்களைப் போல, தஞ்சை விவசாயத் தொழிலாளர்களும் தங்களுக்கு இன்ஷ்யூரன்ஸ், போனஸ் ஆகியவை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்று சொல்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். பல்லாண்டுக் காலமாக இருக்கின்ற பல்வேறு தொழிற் சங்கங்களை அழித்துவிட்டு, புதிதாக ஆட்சிக்கு வந்து விட்டீர்கள் என்பதற்காகப் புதிதாக அண்ணா தொழிற் சங்கம் என்ற சங்கத்தை ஏற்படுத்தி அந்த ஒரு தொழிற்சங்கம்தான் என்பதை நீங்கள் சொல்லுகிறீர்களா என்று எங்களுக்குப் புரியவில்லை.

பல்லவனில் என்ன நிலைமை? இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்குத் தமிழக அரசின் சார்பிலே கொண்டு வருகின்ற சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று ஊர்வலம் வருவதாக எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கே வேலை செய்கின்ற நூற்றுக்கணக்கான நிர்வாகப் பணியாளர்கள் இன்றைய தினம் கட்டாயமாக லீவ் வாங்கிக்கொண்டு, அண்ணா தொழிற்சங்கத்தைச் சார்ந்த தலைவர்களின் மிரட்டலுக்குப் பயந்து, ஊர்வலத்திற்குப் போகாவிட்டாலும் வீட்டிலேயே இருந்து கொள்ளலாம், ஏனென்றால் வேறு எங்கேயாவது மாற்றி விடுவார்களோ என்று பயந்து கொண்டு கட்டாய லீவ் வாங்கிக் கொடுத்த நிலைமைகள் தான் இருக்கின்றன.

குடிநீர் கேட்டு ஊர்வலம் போனால், தண்ணீர்ப் பானையோடு அ.தி.மு.க. ஊர்வலம் போவதும் ; எதிர்க்கட்சியினர் உண்ணா விரதம் நடத்தினால், உண்ணும் விரதம் நடத்துவதும், தொழிலாளர்கள் ஊர்வலம் போனால் அவர்களை மிரட்ட குண்டர்கள் ஊர்வலம் நடத்துவது என்பதும்தான் அண்ணா தி.மு.க.வின் நடைமுறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். சாதனையை விளக்கு



1983 ஏப்ரல் 9] [திரு. கே. எம். தங்கமணி]

கிறோம் என்று தொழிலாளர் பேரணி என்று சொல்லுகிறீர்கள். என்ன சாதனை ? மின் வெட்டுக் காரணமாக இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து பரிதவிக்கிறார்களே இது சாதனையா ? விவசாயத் தொழிலாளர்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறார்களே, இது சாதனையா ? தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து மூன்று இலட்சம் பேர் வெளியேறியிருக்கிறார்களே, இது சாதனையா? இவ்வாண்டு 1,730 தொழிற்சங்கத் தகராறுகள் தீர்க்கப்படவில்லை என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே, இது சாதனையா ? 19 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் வீணாகியுள்ளன என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே, இது சாதனையா ? ஆண்டுக்காண்டு தொழிற்சங்க சாலை விபத்துக்கள் அதிகரிக்கிறது என்று ஒத்துக் கொண்டிருக்கிறீர்களே, இது சாதனையா ?

தொழிலாளர்கள் வேதனையில் வாடுகின்ற நேரத்தில், நீங்கள் சாதனை ஊர்வலம் என்று நடத்துகிறீர்கள் என்றால் அதற்கு என்ன காரணம் ? இன்று தமிழகத்திலே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் உங்களுடைய தொழிலாளர் நல விரோதக் கொள்கையின் காரணமாக அல்லற்பட்டு நடுத் தெருவிலே நிற்கும்படியான துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ரோமாபுரி தீப்பற்றி எரியும்பொழுது பிடில் வாசித்தானாம் நீரோ மன்னன். அதைப்போல இன்றைக்குத் தொழிலாளர் விரோதக் கொள்கையின் காரணமாக இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலையிலே மகுடி ஊதி மயக்கப் பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் ; ஆனால் தொழிலாளர் தோழர்கள் உங்களுடைய ஆட்சியின் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

* திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற எண். 29 —தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, உழைப்பவன் தான் இந்த நாட்டிலே உயர்ந்தவன் என்ற பொன்மொழிக்கேற்ப மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் தொழிலாளர்களுக்கு என்று தனியாக ஒரு சட்டத்தை இயற்றியும், பல்வேறு சட்டங்களை ஏற்படுத்தியும் தொழிலாளர் வாழ்க்கையில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்கள் வாழ்க்கையில் ஏற்றம் பெறுவதற்கும் வழிவகைகளைச் செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அந்த அடிப்படையில் 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு
வாழ்க்கைப் படி வழங்கல் சட்டத்தை கொண்டுவந்து, அது
1-1-1982 முதல் செயலுக்கு வந்தது. இந்த சட்டத்தின் அடிப்
படையில் எந்த தொழிலாளரும் ஒரு நிறுவனத்திலிருந்து
தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டால், அவர்
களுக்கு அந்த நிறுவனம் 3 மாதத்திற்குள் அந்த தொழி
லாளர்களுக்கு வேலை தரவில்லை என்றால், அவர்கள்
வாங்குகின்ற ஊதியத்தில் 50 சதவீதம் சம்பளமாகத் தர
வேண்டுமென்றும், அதற்கு மேலும் 6 மாதத்திற்கு மேல்
வேலை தரவில்லை என்றால், 75 சதவீதம் ஊதியமாகத்
தரவேண்டுமென்றும், அதற்கு மேலும், நீடித்தால், முழு
ஊதியம் தரவேண்டும் என்றும் இந்த அரசு தொழிலாளர்களுக்கு
சட்டத்தைக் கொண்டு வந்த அரசு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான். அதிலே தொழிலாளர்
நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் பொறுப்பு
ஏற்றுக்கொண்டபிறகு, கேட்பாரற்ற பல்லாயிரக்கணக்கான
தொழிலாளர்கள் இந்த அரசை வாழ்த்திக் கொண்டிருக்
கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொளள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதற்குப் பின்னால் மாண்புமிகு தமிழக அரசு முதல்வர்
அவர்கள் கொண்டுவந்த சட்டத்தின் அடிப்படையில்
தற்காலிக வேலை நீக்கம் செய்த தொழிலாளர்களிடமிருந்து
121 மனுக்கள் கோரிக்கைகளாக வந்ததாகவும், அதை
இந்த அரசு பரிவோடு பரிசீலனை செய்து, அந்தத் தொழி
லாளர்களுக்கு நியாயம் வழங்கி, 92 மனுக்கள் மீது பைசல்
செய்ததாகவும், மீதமுள்ள 29 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டு
பைசல் செய்யப்படாமல் இருக்கிறது என்பதையும் சொல்லி
யிருக்கிறார்கள். இதைப் பார்க்கின்றபோது இந்த அரசை
மனமார்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த
அரசு தொழிலாளர்கள்மீது எவ்வளவு அக்கறையும், ஆர்வத்
தையும் கொண்டிருக்கிறது என்பதையும், தொழிலாளர்
வாழ்க்கையை செம்மைப்படுத்தவேண்டுமென்ற அடிப்படையில்
இந்த அரசு செயல்படுகிறது என்பதை பார்க்கின்றபோது
என்னைப் போன்றவர்கள் பாராட்டியாக வேண்டும். அதற்
காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்த
அரசிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நிறுவனத்தில் ஒரு தொழிலாளி தொடர்ந்து 480 நாட்கள்
வேலை செய்தால் அவரை நிரந்தரம் செய்யவேண்டுமென்று
இந்த அரசு தான் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, பல்லா
யிரக்கணக்கான தொழிலாளர்கள், இன்றைக்கு 7, 8, 10
வருஷம் என்று ஒவ்வொரு நிறுவனத்திலும், வேலை செய்து



கொண்டிருக்கிறார்கள். ஆக பல்லாயிரக்கணக்கான தொழி
லாளர்கள் வாழவகை செய்தற்காக நான் இந்த அரசைப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில்
இன்று ஒருசில தொழிலாளர்கள், தொழில் நிறுவனங்கள்
இன்றைக்கு இந்தச் சட்டத்தை எதிர்த்து, உயர்நீதிமன்றத்
திற்கு சென்றிருக்கிறார்கள். தடை வாங்கியிருக்கிறார்கள்.
ஆனால், நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்
அவர்கள் இந்த தொழிலாளர் நலனில் அக்கறையும், ஆர்வ
மும் கொண்டு இருப்பதால், விரைவில் உயர் நீதிமன்றத்தில்
வாங்கி இருக்கின்ற தடையை தகர்த்தெறியவேண்டும் என்
பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே அடிப்படையில் என்னுடைய தொகுதியிலே நெய்
வேலி செராமிக்கல், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை
அமைச்சர், தொழிற்சங்கச் செயலர், தொழிற்துறை ஆணை
யாளர், அதிகாரிகள், போன்றவர்கள், பல்லாயிரக்கணக்கான
தொழிலாளர்கள் பல காலமாக வேலை நிரந்தரம் செய்யப்
படாமல் இருந்ததை மாற்றி அவர்களை நிரந்தரம் செய்ய
கூடிய சட்டத்தைக் கொண்டுவந்ததன் விளைவாகத் தான்
இன்றைக்கு அவர்கள் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள்
என்பதையும், அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படிருக்
கிறது என்பதையும், அவர்களுக்கு புதிய ஒப்பந்தத்தை
ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதையும் பெருமையோடு
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊதிய உயர்வு என்ற அடிப்படையில் விலைவாசி உயர்வை
கருத்தில் கொண்டு விலைவாசி புள்ளி உயர்வு ஒப்பந்தத்தின்
படி 30 பைசாவிலிருந்து 35 பைசாவாக உயர்த்தித் தந்தது
இந்த அரசு என்பதை மனமாரப் பாராட்ட கடமைப்பட்டிருக்
கிறேன்.

கெங்கப்பர் பேப்பர் மில்ஸ் தொழிலாளர்களை நிரந்தரம்
செய்து, ஊதிய உயர்வு ஏற்படுத்தித் தந்துள்ளது என்பதை
அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் சார்பாக இந்த அரசையும்
அதிகாரிகளையும், மாண்புமிகு அமைச்சரவர்களையும்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடலூரில் இருக்கின்ற மருத்துவமனை தனியார் கட்டிடத்
தில் செயல்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடி
யாக அதை தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தின் மூலமாக
அந்த மருத்துவமனைக்கு புதிய கட்டிடத்தை ஏற்படுத்தி,
வருகிற ஆண்டில் அந்த மருத்துவமனையை ஆரம்பித்துத் தர
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
காரணம் அந்தப் பகுதியிலே கெங்கப்பர் பேப்பர் தொழிற்
சாலையும், எம்.சி.ஆர்.எல். பீங்கான் தொழிற்சாலையும், இன்ஸு
லட்டர் சேஷாயி தொழிற்சாலையும் என்று இப்படி 3 பெரிய
நிறுவனங்கள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. ஆகவே அந்த

3 பெரிய நிறுவனங்களிலும் கிட்டத்தட்ட 3 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த வகையிலே அங்கு மருத்துவமனையை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்து, வடலூர் சேசஷாயி நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தம் 1—1—1982 முதல் செயலுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அங்கு இருக்கின்ற நிறுவனங்கள் காலதாமதம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். தொழிலாளர்களும் நிறுவனங்களும், தொழிலாளர் நல ஆணையாளர்களும், மற்றும் உள்ள பல அதிகாரிகளும், 30 தடவைக்கு மே்ல் கூடிப் பேசியிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் உடன்பாடு ஏற்படவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு அங்கேயிருக்கிற தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களை நிரந்தரம் செய்தும், அங்கே புதிய ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு பின்னால் என்னுடைய தொகுதியிலே நெய்வேலியில் உள்ள நிறுவனத்தில் இந்த அரசு அங்கே இருக்கின்ற தொழிலாளர்களும், அதிகாரிகளும் மத்திய அரசு உற்பத்தி ஆண்டு என்று அறிவித்ததற்கு இணங்க அந்த நெய்வேலி நிறுவனத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள் இந்த ஆண்டு உற்பத்தியை அதிகரித்து இருக்கிறார்கள். எனவே இந்த மன்றத்தின் மூலமாக அந்தத் தொழிலாளர்களையும், அந்த நிறுவனத்தில் உள்ள அதிகாரிகளையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அதே அடிப்படையில் அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தம் 1—1—1982 முதல் ஏற்பட்டு இருக்க வேண்டும் புதிய ஒப்பந்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையிட்டு நெய்வேலி நிறுவனத்தில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.. வணக்கம்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது முக்கியமான கருத்துக்களை நான் சொல்லவேண்டி இருக்கிறது. ஆனால் அதற்கான அவகாசமோ அல்லது வேறு வழியோ கிடையாது. அதனால், ஒரு நிர்பந்தமான நிலையிலே முடிந்ததைச் சொல்ல வேண்டும் என்ற அளவுக்குத்தான் நான் சொல்ல முடியும் என்பதை முதலிலே மிகவும் வருதத்த தோடு] சொல்லிக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு தந்துள்ள இந்தக் குறிப்பிலே, அதனுடைய பாரா 1.1–லே சொல்லப்பட்டு இருக்கும்படியான முக்கியமான விஷயம். அதை வைத்துத்தான் அவர்கள் கணக்குப் போடுகிறார்கள். அதனால், தொழிலாளர்





களும், முதலாளிகளும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே மாதிரி அரசாங்கமும் , தொழிலாளர்களுக்கு உடனடியாக உதவிக்கு ஓடி வந்து எல்லாக் காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அதனாலே வேலை நிறுத்தங்கள் குறைந்து போய் இருக்கின்றன. அதனுடைய எண்ணிக்கை குறைந்து போய் விட்டது என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தின் எண்ணிக்கை கொஞ்சம் குறைந்தால் நிச்சயமாக தொழிலாளர்கள் வர்க்கம் சந்தோஷப்படும். காரணம் அவர்களுக்குரிய பிரச்னைகள் தீர்ந்தால்தானே அப்படிப்பட்ட நிலை ஏற்படும். ஆனால் உண்மையான நிலை இன்றைக்கு அதுவா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது உண்மையல்ல என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்கள் இன்றைக்கு கட்டாய துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மின்வெட்டின் காரணமாக பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, அதனால் வருமானத்தை இழந்திருக்கிறார்கள். வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் பெருகிக்கொண்டு வருகிறது. அதேமாதிரியாக டெம்பரரி தொழிலாளர்கள் இன்றைக்கு ஒரு பைசாகூட சம்பாதிக்க முடியாமல் இந்த லே-ஆஃப் வந்தால் அவர்களுக்கு எந்தவித வசதியும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு நிலை. அதேமாதிரி லே-ஆஃப் வந்தால் பாதிச் சம்பளம் தான் கிடைக்கிறது நிரந்தரத்தொழிலாளர்களுக்கு, இப்படிப்பட்ட லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இடத்திலே ஏன் அவர்கள் தொழிற்தகராறு என்றால் வருவதில்லையா அவர்களுக்கு அந்த மாதிரி செய்வதற்கு விருப்பம் இல்லையா அமைச்சர் அவர்கள் சிந்தித்தாலே இதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். உழைப்பாளி வர்க்கம் தன்னுடைய உரிமைகளை வற்புறுத்திப் போராட்டங்கள் நடத்தி அவர்களுடைய சக்தியைத் திரட்டி, வெற்றி பெறவும் அதை அரசுக்கு பக்கபலமாகபயன்படுத்துவதுதான் கொள்கையாக இருக்க வேண்டுமே தவிர, முதலாளிகள் நன்றாக நடந்தார்கள், தொழிலாளர்கள் நடந்தார்கள், நாங்களும் ஒத்துழைத்தோம், அதனால் பிரச்னை முடிந்தது என்று சொல்வதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் தொழிலாளர்கள் கொள்கையிலே அனுபவம் உள்ளவர்கள். அதுபற்றி எல்லாம் தெரிந்தவர்கள் அவர்கள் தானா இப்படிப்பட்ட ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-10)

தொழில் தகராறுகளின் விவரங்களைக் கொடுத்து இருக்கிறீர்கள். அவை இந்த கொள்கைக் குறிப்பில் 2-3 ஆம் பக்கங்களில் உள்ளன. அதிலே சில விளக்கங்களை நான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அதை விளக்கினால் பரவாயில்லை. மொத்த புலன் விசாரணை செய்யப்பட்ட

[திரு. கு. ரமணி] [1983 ஏப்ரல் 9

புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை 7,159 என்று கொடுக்கப்பட்டுள்ளது. இதிலே பல விதத்தில் தீர்வு காணப்பட்டதும் 7,159 தான், அப்படியானால் வரவுக்கும், செலவுக்கும் சரியாகப் போய்விட்டதா ? அப்படியானால் கோர்ட்டுக்கு அனுப்பப்படதா கேஸ்கள், பெயில்யூர் ஆன கேஸ்கள் என்ன ஆச்சு ? அது எங்கே போச்சு ? அதற்கு ஏதாவது கணக்கு இருக்கிறதா அல்லது நான் இதைப் பற்றி புரிந்து கொண்டது தப்பா, தயவு செய்து எனக்கு விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ கேஸ்கள் கோர்ட்டுகளுக்கு அனுப்பாமல் வைத்துக் கொண்டு இருக்கிறீர்களே — அது உங்களுக்கும் தெரியும் — அது என்ன ஆச்சு? ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான அம்சங்களைத் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைநிறுத்தம், கதவடைப்பு ஆகிய இரண்டையும் இணைத்து தொழில் தகராறு என்று போடுகிறீர்கள். அந்த இரண்டையும் தனித்தனியாகப் போட வேண்டும். காரணம் நாட்டிலே உள்ள நெருக்கடி காரணமாக முதலாளிமார்கள் மேலும் மேலும் கதவடைப்பு செய்து கொண்டே இருக்கிறார்கள். அது நாட்டிலே 40 சதவீதம் என்று உயர்ந்து இருக்கிறது. ஆகவே, அதைத் தனியே பிரித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான தொழில் தகராறுகளைப் பற்றிய ஒரு சரியான கண்ணோட்டத்தோடு சில விவரங்களை இந்த அவையில் கொடுப்பதில் என்ன தவறு ? அதிலே ஒரு சமயம் அரசைப் பற்றிய ஒரு விமர்சனம் வரும் சந்தர்ப்பம் இருந்தாலும் உண்மையின் பக்கத்திலே போய் இருக்கவேண்டும் என்ற வகையிலே அதைச் செய்து இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உதாரணமாக, சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர்கள் 10 மாதம் போராடினார்கள். கதவடைப்பு நடந்தது. 800 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். அரசு படகு தொழில் ஸ்தாபனங்கள் — இந்த மன்றத்திலேயே வாக்குறுதிதரப்பட்டது. 4 இடங்களில் அந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் வெளியில் போகும் நிலைமை ஏற்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் ரப்பர் தோட்டத்தில் 2,500 தொழிலாளர்கள் 5 மாதம் போராடினார்கள். அப்படிப்பட்ட போராட்டம் வேண்டாம் என்று அரசாங்கம் நினைத்து இருக்கலாம். ஆனால் முரண்பாடுகள் வருகின்ற நேரத்தில் பிரச்னைகள் தீர்க்கப்படுவதற்கு தொழிலாளர்கள் போராடுவதைத் தடுக்க முடியாது. தொழிலாளர்களின் அப்படிப்பட்ட முடிவை அரசாங்கம் பொறுமையோடு எடுத்துக்கொள்ள வேண்டும். அதை வேறு விதத்தில் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை. விஸ்கோஸ் தொழிலாளர்கள் — 2,500 தொழிலாளர்கள் 4 மாதம் போராடினார்கள். அவர்களுடைய கோரிக்கை



1983 ஏப்ரல் 9] (திரு. கு. ரமணி)

களின் உள்ளே சென்று நான் விவாதிக்க இப்போது வரவில்லை. ஆனால் அவர்களுடைய போராட்டம் எப்படி முடிக்கப்பட்டது. அதிலே பல தொழிற்சங்கங்கள் அந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொள்ளவில்லை என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லியாக வேண்டும். ஏனென்றால், அந்த முதலாளிகளின் பிடிவாதப் போக்குதான் இதற்குக் காரணம்.

அசோக் லேலெண்டிலே, சென்னை நகரத்திலே, இன்றைக்கு என்ன நிலைமை? 7,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 3 நாட்கள் தான் வேலை. மற்ற நாட்கள் எல்லாம் லே-ஆப். கரெண்ட் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அசோக் லேலெண்ட் உற்பத்தியையே 60 சதவீதம் குறைத்து விட்டார்களே, அப்படியானால் அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

இந்த மின்சார வெட்டால் 1982-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பர்மனென்ட் தொழிலாளர்கள் சம்பளம் இழந்தார்கள். பதிலி தொழிலாளர்கள் பரிபூரணமான பட்டினிக்கு ஆளானார்கள். அப்ரென்டீஸ் தொழிலாளர்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. இதை எல்லாம் அரசு பார்க்கவில்லையா ?

சிறு தொழில்களில் நூற்றுக்கணக்கான தொழில்கள் அந்த முதலாளித்துவ நெருக்கடி காரணமாக நசுங்கி, செயல்படமுடியாமல் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் பார்க்கவில்லை. இன்றைக்கு மின்சார வெட்டால் மட்டும் பாதிப்பு இல்லை. வேறு பல காரணங்களும் இருக்கின்றன. பொருளாதார ›› சதி இல்லை. லிக்குவிட் காபிடல் இல்லை, அன்றாட வர்த்தக முதல் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகளாலும் பாதிப்பு உள்ளது.

குடியாத்தத்தில் திருமகள் மில் பிரச்சினை. அமைச்சர் அதிலே தலையிட்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் நிவாரண நிதி கொடுத்தார்களா இல்லையா என்பது தெரியவில்லை. நிர்வாகத்தில் சண்டை, அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது அமைச்சருக்குத் தெரியும். இந்த நிலைமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு மாநிலத்தில் இருக்கும் அரசு இந்தியா முழுவதும் ஏற்பட்டு இருக்கும் ஆழமான பொருளாதார நெருக்கடி காரணமாகக் கிளம்பி இருக்கக்கூடிய பிரச்சினையைத் தனித்து நின்று சமாளித்துவிட்டோம் என்று நினைத்தால், உள்ளபடியே உங்களுடைய மனச்சாட்சி அதை ஒப்புக்கொள்ளுமா என்பதுதான் பிரச்சினை. எண்ணிக்கையைக் காட்டி மக்கள் பிரச்சினையைப் பேசிப் பிரயோசனம் இல்லை.

**1981-ஆம்** ஆண்டு பிப்ரவரி மாதத்தில் உங்களுடைய தொழிலாளர் விரோத கொள்கையை நாங்கள் கண்டனம் செய்து தீர்மானம் இந்த அவையில் கொண்டு வந்து பேசியதற்குக் கார ணமே அது தான். இந்த அரசின் மீது எந்தவிதமான தனிப்பட்ட விரோதமோ, குரோதமோ எங்களுக்கு இல்லை. உழைக்கும் மக்களின் நல்வாழ்வு சீரழியும்படியான நிலையில் அவர்களைப் பாதுகாக்க, அவர்களுக்குப் பாதுகாப்பாக அரசு இருக்கவேண் டுமே தவிர தராசு மாதிரி இரண்டு பக்கமும் சமமாக இருக்கி றோம் என்றால் அப்போது தொழிலாளி வர்க்கத்திற்கு நீதி கிடைக்காது. அரசாங்கம் நலிந்து கிடைக்கும் தொழிலாளி பக்கம் நிற்க வேண்டும் என்பதுதான் எங்கள் நிலை.

அதற்கு ஒரு உதாரணம் என்னவென்றால், 1982 ஆம் ஆண்டு போனஸ் போராட்டம் என்ன நடந்தது? அரசு அதில் எடுத்த நிலை என்ன? சரி என்று சொல்லத் தயாரா? அதற்கு விளக்கம் தரவேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அடுத்தபடியாக, பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினை இருக்கிறது. அவர்கள் அதிக போனஸ் வேண்டுமென்று கேட்க வில்லை. போனதடவை கொடுத்ததைக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதை மறுக்கிறார்கள் முதலாளிகள். முதலாளி கள் கோர்ட்டுக்குப் போய் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையில்தான் அரசாங்கத்தின் நடவடிக்கையும் வந்தது. அதனால்தான் தொழில் தகராறு சட்டம் 10(பி) இந்த அவையில் வந்தபோது எதிர்த்தோம். வேலை நிறுத்தம் நடக்கும்போது கதவடைப்புச் செய்தால் அந்த தொழிலாளிகள் பட்டினி கிடக்க வேண்டிவரும் ; எந்தத் தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும் : அதற்கு இந்தச் சட்டம் என்று சொன்னார்கள் ஆனால் நாங்கள் அதில் மாறுபடுகிறோம் என்று சொன்னோம்.

உண்மை என்னவென்றால், கோவை பஞ்சாலைத் தொழி லாளர்கள், தமிழ்நாடு பஞ்சாலைத் தொழிலாளர்கள் நவம்பர் 11-ந் தேதி வேலை நிறுத்தம் என்று நோட்டீஸ் கொடுத்தார்கள். ஆனால் 9-ந் தேதி போராட்டம் தொடங்குவதற்கு முன்னாலேயே தடுத்து விட்டார்கள். அப்படியானால் "ரிலீஃபாக" வந்திருப்பது அல்ல சட்டம் என்பது வெளிவந்தது. 10(பி) சட்டம் தொழில் தகராறு ஏற்பட்டு போராட்டம் நடைபெறுமானால் அந்தப் போராட்டத்தைத் தடை செய்வதற்கான சட்டம் என்பது அம்பலப்பட்டுவிட்டது. அந்தத் தொழிற்சங்கமும் அதைக் கேட்கவில்லை. ஆனால் அமைச்சரவர்கள் பிரச்சினையை கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். [illegible]ரைச் சட்ட விரோத மாக்கப்பட்டது.

அடுத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் லாபம் வந்த 3 கழகங்களுக்குப் போனஸ் கொடுக்கும் பிரச்சினை வந்தது. மற்றவைகளிலும் அதிகம் போனஸ் வேண்டும். இந்த அமைச்சர் [illegible]றக்கு நேரடியாக பொறுப்பு [illegible]ண்வைக்க முடியாது என்பது தெரியும். இருந்தாலும், தொழிலாளர் இலாகாவாக



இருந்தாலும், தொழிலாளர் என்ற முறையில் சொல்கிறேன். 3 கழகங்களுக்கும் 20 சதவீதம் போனஸ் கொடுத்திருக்க முடியும். ஆனால் குறைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக இனாமாக ஒரு தொகையும் ஒருமாதச் சம்பளம் போனஸ் என்றும் கொடுத்தார்கள். அதை எதிர்த்ததால் வேலைநிறுத்தச் தடைச் சட்டம் "எஸ்மா" அமுலாக்கப்பட்டது. உரிமையைப் பறிக்கும் அந்தச் சட்டத்தை அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டும். 10(பி) சட்டம்தொழிலாளர்களுக்கு விரோதமான ஒருசட்டம் என்பதால் அதை தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை ; எனவே, அரசாங்கம்அதையும் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு பல ஆண்டுகளாக ஒரே ஒரு மாதச் சம்பளம்தான் போனசாகக் கொடுக்கப்படுகிறது. காரணம் நஷ்டம் என்று சொல்கிறார்கள். மின்வாரியத்தில் எப்போதும் நஷ்டம்தான். 20 வருஷம், 30 வருஷமாக நஷ்டம் தான். அதற்காக தொழிலாளர்கள் என்ன செய்வார்கள் ? மின்சார வாரியத்தின்சொத்து பூராவையும் தொழிலாளர்களுக்கு எழுதி வைத்து விடுவார்களா ? அப்படி ஒருநாளும் செய்ய மாட்டார்கள். அவர்கள் எல்லாம் இரண்டு மாதச் சம்பளத்தை போனசாகக் கேட்டார்கள். ஒரு சங்கத்தைத் தவிர, மற்ற எல்லாச் சங்கங்களும் கேட்டன. இருந்தபோதிலும், 8.33 சதவீதம் கொடுக்கும் நிலைதான் இருக்கிறது என்று கூறிவிட்டார்கள்.

அதைப்போன்று சிமின்ட் தொழிற்சாலைகள். அந்தத் தொழிலாளர்களுக்கு சங்ககிரி சிமின்ட் தொழிற்சாலையிலும், செட்டிநாடு சிமின்ட் தொழிற்சாலையிலும் 20 சதவீதம் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு அரசாங்க சிமின்ட் தொழிற்சாலைகளிலும் அந்த அளவுக்கு போனஸ் கொடுக்க வில்லை. அரசுத் தொழிற்சாலையில் சரியான முறையில், மற்றவர்கள் கொடுக்கின்ற அளவுக்குக்கூட கொடுக்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தத் தொழிலாளர்களுடைய மனநிலை எப்படி இருக்கும் ? இது என்ன நியாயம் ?

அதைப்போன்று சின்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் ஏற் பட்டிருக்கக்கூடிய மோசமான பிரச்சினை இருக்கிறது. 25(என்) சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் ஆணை பெற்று வந்தார்கள். ஆனால் இந்த மாநிலத்தில் ஹைகோர்ட்டில் அந்தச் சட்டம் செல்லாது என்று ரத்து செய்தார்கள். முன்பு அது தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படும் என்று கருதியிருந்தால் ஹைகோர்ட் ரத்து செய்த சட்டத்தை கொண்டுவர என்ன செய்வது என்று எண்ணிப் பார்த்திருக்க வேண்டாமா ? இப்போது சுப்ரீம் கோர்ட்டில் நாம் கேஸ் போட்ட பிறகு, கடைசியாக அரசாங்க வக்கீல் தொழிலாளர் நிலையை ஆதரிக்கிறார்கள்; ஆனால் 25 (என்) செல்லாது என்று சொல்கிறார்கள். அது

தொழிலாளர் நலனைப் பாதிக்கிறது. அதிலே சட்ட சிக்கல் இருக்கிறது. ஆகவே அதுபற்றி நம்முடைய தொழிலாளர் ஆலோசனைக் கமிட்டியில் அந்த சட்டம் பற்றி விவாதிக்க வேண்டும். இல்லை என்றால் அதை எப்படி சீர்படுத்தலாம் என்பதுபற்றி அரசாங்கம் யோசிக்கவேண்டும்.

தொழில் தகராறில் வேலை நீக்கம் வந்தால், தொழிலாளர்கள் நேரடியாக கோர்ட்டுக்குப் போக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கோர்ட்டுக்குப் போங்கள் என்று அமைச்சரவர்கள் வலியுறுத்திப்பேசினார்கள். தொழில் தகராறு காரணமாக யாராவது ஒரு தொழிலாளி டிஸ்மிஸ் செய்யப்பட்டால் எந்த சிபாரிசும் இல்லாமல் நேரடியாக கோர்ட்டுக்குப் போய் கேஸ் போடலாம் என்ற உரிமையை வழங்கும் ஒரு சட்டத்தை ஏன் கொண்டுவரக் கூடாது என்று நாங்கள் கேட்டோம். அந்த மாதிரியான ஒரு சட்டத்தைமத்தியஅரசு கொண்டுவரஇருக்கிறது. அதைப்பார்த்து பின்னால் யோசிக்கலாம் என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார் இன்றுவரையில் கொண்டுவரவில்லை. மத்திய சர்க்கார் என்றைக்குக் கொண்டுவரும் என்று தெரியவில்லை. அதுவரையில் நாம் காத்திருக்க வேண்டுமா? நாமே ஒரு சட்டத்தை இயற்றி 'கன்கரன்ட் லிஸ்டில்' மத்திய அரசுக்கு அனுப்ப முயற்சி எடுத்திருக்க வேண்டும்.

(பிற்பகல் 12-20)

அதை கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படி வந்த பிறகு மத்திய சர்க்கார் அனுமதிக்கவில்லை என்றால் நீங்கள் கூறுவதை நாங்கள் ஒப்புக் கொள்ள தயார். இப்படி எத்தனையோ உதாரணங்களை எடுத்துச் சொல்ல முடியும். இவைகளுக்கு அரசு பாதுகாப்பு தர வேண்டாமா? அதுபோல தொழிலாளர்களை பழிவாங்கக்கூடிய நடவடிக்கைகள் எத்தனையோ நடக்கிறது. உதாரணமாக, தமிழகத்தில் ராஜபாளையத்திலே உள்ள ஸ்ரீராம் மில்ஸ் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே தொழிலாளர்களுக்கு ரெஃபெரென்ஸ் கொடுக்கக்கூட மறுக்கிறீர்கள். அதேபோல ஜானகிராம் மில்ஸ் அங்கே 15 பேர்களுக்கு மேல் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அங்கேயும் கோர்ட்டுக்கு ரெஃபெரன்ஸ் கிடையாது. அரியலூர் சிமின்ட் தொழிற்சாலையில் காண்டிராக்ட் தொழிலாளர்கள் அங்கே 87 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக டெம்பரரியாக தொழிலாளர்களை எடுத்து வேலையை செய்கிறார்கள். அவர்களுக்கும் இதுவரையில் ரெஃபெரென்ஸ் கொடுக்கவில்லை. காரமடையில் கோவை மேட்டுப் பாளையம் பக்கத்திலே உள்ள ராமகிருஷ்ணா ஸ்டீல் தொழிற்சாலையில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ரெஃபெரென்ஸ்கூட கொடுக்கப்படவில்லை. இப்படி ஏராளமாகச் சொல்ல முடியும். பட்டியலேக் கூட கொடுக்க முடியும். பட்டியலைக் கொடுத்து என்ன? இது சம்பந்தமாக நடவடிக்கை இல்லை. இப்படி பட்டியல் கொடுத்





தாலே இதற்குப் பின்னாலே அந்தத் தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத் தானே தவிர வேறு அல்ல.

இதில் வேடிக்கை என்னவென்றால், வேண்டாத இடங்களில் கேட்காத இடங்களில் ரெஃபெரென்ஸ் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டிலே பஞ்சாலையிலே—இதுபோல நாங்கள் கேட்காமலே ரெஃபெரென்ஸ் கொடுத்தார்கள். அதேபோல சென்னையிலே இருக்கும்படியான திருநின்றவூரிலே இண்டியன் ஸ்டீல் ரோலிங் மில்லிலே அமைச்சர் அவர்களுக்கு கூட தெரியும், 2 நாளைக்கு முன்னாலே கூட இந்த அவையிலே அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள். 220 தொழிலாளர்கள் அவர்களுக்கு லே-ஆப் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் வேலை கிடைக்கவில்லை. காண்டிராக்ட் தொழிலாளர்களை வைத்து, அவர்களுடைய சங்கத்தை உடைக்கின்ற முயற்சிகளையெல்லாம் முதலாளி செய்திருக்கிறார் இவைகளை எல்லாம் அரசு பாதுகாத்துக் கொடுக்கவில்லை என்று சொன்னால், எப்படி இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்பதை ஏற்றுக் கொள்வது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பத்தில் சில சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆரம்பக் காலத்திலே நாங்கள் அதற்காக சந்தோஷப்பட்டோம். அந்த சந்தோஷம் இப்போது இல்லை. போய்விட்டது. காரணம் என்னவென்றால், நிறைவேற்றப்படுகிற சட்டங்கள் எல்லாம அமுலுக்கு வர முடியாத நிலையில் இருக்கின்றன. இதிலே கைத்தறித் தொழிலாளர்கள் சட்டம், 4, 5 மூலச் சட்டங்களில் இருந்த நல்ல அம்சங்களைக் கொண்டு உருவாக்கி இங்கே கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். ஆனால் அதிலே ஓட்டை இருக்கிறது. அதனால் அந்தச் சட்டம் இன்று அமுலாகவில்லை. அந்தச் சந்து பொந்துகளை முதலாளிகள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கக்கூடிய கைத்தறி தொழிலாளர்களுக்கு என்றும், மற்ற கைத்தறி தொழிலாளர்களுக்கு என்றும் இதிலே இருவேறு விதிகள் இருப்பதால், அந்த ஓட்டையிலே புகுந்துக் கொண்டு, முதலாளிகள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள்.

அதேபோலதொழிலாளர்கள்நிரந்தரமாக்கப்படுதற்காககொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தை ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு பேசினார்கள். அது நல்ல அருமையான சட்டம் தான். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அது இன்றைக்கும் அமலுக்கு வரமுடியாத நிலையில் இருக்கிறதே. சட்டம் பிறப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 2 வருஷமா? தொழிலாளர்கள் வேலைக்கு சென்ற காலத்திலிருந்து 2 வருஷமா என்று அதிலே தெளிவாக இல்லாததால்,

இன்றைக்கு அந்தச் சட்டம் அமலாகாத நிலையில் இருக்கிறது. இப்படி அமலாகாத நிலையில் சட்டம் வந்தாலும் என்ன வராவிட்டாலும் தான் என்ன ?

அதேமாதிரி பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்திலே ஒரு திருத்தச் சட்டம் வந்தது. அதிலே (fall back wage) கொடுக்கப்படவேண்டும் என்பது விதி. அதாவது 500 பீடிக்கான கூலியை வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும், வேலையே இல்லையென்றாலும் கூட அந்த (fall back wages) முறைப்படி கொடுக்க வேண்டும். ஆனால் அந்தச் சட்டம் அமலாக்கப் படவில்லை. காரணம் என்ன வென்று சொன்னால் அதற்குப் பிறகு ஒரு உத்தரவை நிர்வாகிகள் அரசுக்குத் தெரிந்து, அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்து பிறப்பிக்கப்பட்ட அந்த உத்தரவில் பல நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள். 500 பீடிக்குக் குறைவாக வேலை செய்தால்—சரியாக மூலப் பொருள் சப்ளை இல்லை என்று சொன்னாலும் கூட—குறைவாக வேலை செய்தால் அந்தக் கூலி கிடையாது. உத்திரவாத மற்றக் குறைந்தபட்ச சம்பளத்தைக் கொடுப்பதற்கு எப்படியெல்லாம் நிபந்தனைகள் பாருங்கள். வேலைசெய்யாமல் இருக்கத் தொழிலாளர்கள் என்ன சோம்பேறிகளா? காற்று, மழை, நெருப்பு போன்றவைகளினால் பாதிப்பு ஏற்பட்டு வேலைகள் தடை பட்டாலும், மின் வெட்டு வந்தால், தொத்துநோய் வந்தால், என்னென்ன காரணங்கள்—கிடைக்காது. இவைகள் எல்லாம் நியாயமா என்று பாருங்கள்? இப்படி ஒரு நிபந்தனைகளைப் போட்டால் இது தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்க போராடும் அரசுக்கு பெருமைதானா? இந்த நிபந்தனைகளால் தான், அந்த நல்ல சட்டம் அமலுக்கு வர முடியாத நிலை. அதுதான் எனக்கு வருத்தம். சட்டங்கள் எத்தனையோ போடுகிறோம். ஆனால் எதையும் மக்களுக்காக பயன்படுத்த முடியவில்லை. இதிலே ஒரு உறுதியான, திட்டவட்டமான, கடுமையான மாற்றம் கொண்டு வர வேண்டும். change for this கொண்டு வரப்படவேண்டும். Drastic

அந்தக் ஃபால் பேக் வேஜ் என்பது பீஸ் ரேட் தொழிலாளிக்குக் கிடைக்கின்ற ஒரு பெரிய உத்தரவாதம். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தோடு செய்தாலும் கூட அது அமல் நடத்தப்படவில்லை. ஆகவே அப்படி அமல் நடத்தவில்லை என்கிறபோது கொள்கையைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை. எந்தத் தொழிலாளியும் அதை வாங்க முடியவில்லை. இரண்டு வருஷம் அல்லது 50 புள்ளிக்கு மேல் விலைவாசி உயர்வு ஏற் பட்டால் குறைந்தபட்ச சம்பளத்தைத் திருத்தியமைக்க வேண்டும். அன்றைக்குக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு கேள்விக்கு ஒரு பதில் கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்குப் பல தொழில்களில் அது செய்யப்படவில்லை. பீடித் தொழிலுக்கே அது இன்னும் செய்யப்படவில்லை. குறைந்தபட்சச் சட்டத்தை அமலாக்குவதிலே பல தொழில்களுக்கு நிர்ணயிப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் பலவற்றை திருத்தி அமைக்கவேண்டும்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எது எதற்கு திருத்த இருக்கிறோம் என்பதற்கு கொள்கைக் குறிப்பிலே இருக்கின்றது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கொள்கைக் குறிப் பிலே இருப்பதற்கும் மேலே இன்னும் சிலவற்றைப் பட்டியலில் சேர்த்து சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டிய தொழில்கள் பல இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, வேண்டும் என்றால் மீண்டும் அவற்றை நான் பதில் சொல்கின்றபோது வாசிக்கிறேன்.

திரு. கு. ரமணி : இவையெல்லாம் சட்டங்களினுடைய நிலைமை. இதிலே இருந்து தொழிலாளி வர்க்கத்திற்கு ஏற் பட்டிருக்கிற சிச்சுவேஷன் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். போன தடவை இந்த மன்றத்திலே பேசும் போது நான் சொன்னேன். தொழிலாளர் நல இலாக்காவிலேயே இன்றைக்கு ஒரு விதமான மனப்பான்மை இருக்கின்றது என்று அன்றைக்கே எடுத்துச் சொன்னேன். அதனால் அவர்கள் வேலை செய்யவில்லை. தொழிலாளர்களுக்கு நீதி செய்யவேண்டிய கடமைகளை அவர்கள் செய்யவில்லை. என்று கூறவில்லை எத்தனையோ அதிகாரிகள் இருக்கிறார்கள். எத்தனையோ கமிஷனர்கள் இருக்கிறார்கள். எத்தனையோ அலுவலகங்கள் இருக்கின்றன. இன்றைக்கு எத்தனை கேஸ்கள் இருக்கின்றன? அவற்றை எல்லாம் விசாரித்து நிறைவேற்ற அவர்களுக்கு என்ன வசதி? அவர்களுக்கு உத்தியோக உயர்வு இருக்கின்றதா? வசதி இருக்கின்றதா ? இதை எல்லாம் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். அதுவும் இந்த விஷயத்தில் ஒரு பகுதியாக வருகின்றது. ஆகவே இன்றைக்கு இந்த என்ஃபோர்ஸ்மெண்ட் மெஷினரி நல்ல முறையில் நடக்கவில்லை என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன.

சேலம் ஜில்லாவிலே குமாரபாளையம் என்ற இடத்திலே உள்ள சுந்தரம் மில்லிலே 800 தொழிலாளர்கள் வேலை செய் கிறார்கள். அவர்களில் பெருவாரியான தொழிலாளர்கள் தினக் கூலிகள், டெம்பரரி. கேஷுவல் லேபரர்ஸ். மிகப்பெரும்பான் மையான தொழிலாளர்கள் அப்படி இருக்கிறார்கள். ஒரு சிறு பகுதி தொழிலாளர்கள் தான் பெர்மனன்ட் தொழிலாளர்கள். எத்தனை வருஷங்களாக அந்த மில் நடக்கின்றது? அதை செக் பண்ணவே இல்லையா? மஸ்டர் ரோலைப் பார்க்கவே இல்லையா? அதுமட்டுமல்ல. அப்ரன்டீஸ் என்ற முறை துர்பிரயோகப்படுத்தப் படுகின்றது. அப்ரன்டீஸ் தொழிலாளர்களிடம் முழு உற்பத்தி யினையும் வாங்கிவிடுகிறார்கள். அப்ரன்டீஸ் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு இருப்பதன் காரணத்தால் அந்த முதலாளிகள் அதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். வேகன்சிகளைப் ஃபில்

அப் பண்ணுவதே இல்லை. வேகன்சியை ஃபில் அப் பண்ணாமல் அப்ரன்டீஸ்களை வைத்தே வேலை வாங்குகிறார்கள். இதை எல்லாம் செக் பண்ணுவதில்லையா? இதற்குத்தான் அப்ரன்டீஸ் சட்டம் பயன்படுத்தப்படுகின்றதா? ஆகவே மஸ்டர் ரோல் செக்கிங் அப் என்பது படு மோசமாக இருக்கின்றது.

திருச்சி மாவட்டத்தில் நடப்பதைச் சொல்கிறேன். பல இடங்களில் இப்படி இருந்தாலும் ஒருசில விவரங்களை மட்டும் சொல்கிறேன். ராம்ஜி மில்லிலே 150 பேர்களை வெளியேற்றுவதற்கு 25-எஃப்-லே பேச்சுவார்த்தை நடக்கின்றது. காவேரி என்ஜினியரிங் ஃபேக்டரியிலே தொழிலாளர்களை வெளியேற்ற 25 எஃப்-ன் கீழ் பேச்சுவார்த்தை நடக்கிறது. விராலிமலை டி.வி. எஸ். பாடி பில்டிங் தொழிற்சாலையிலே 500 பேர்களை வெளியேற்ற வேண்டும் என்று பேச்சுவார்த்தை நடக்கின்றது. புகளூர் சர்க்கரை ஆலையிலே 250 பேர் அதிகமாக உள்ளனர் என்று அவர்களை வெளியேற்ற பேச்சுவார்த்தை நடக்கின்றது. சிம்கோ 500 பேர்களை வெளியேற்றவேண்டும் என்று சொல்லி 340 பேர்களை வெளியே அனுப்புவதற்குத் திட்டமிட்டு அங்கே அவர்கள் வெளியே நிற்கிறார்கள். இப்படிப் பட்ட முறையிலே நடக்கின்றது. நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையிலே 500 பேர் வெளியே போகவேண்டும் என்று அங்கே ஒரு பிரச்சினை உருவாக்கப்பட்டு அந்த மேனேஜ் மெண்ட் பிடிவாதமான நிலைமையை எடுத்துக்கொண்டு அவர் கள் நிற்கிறார்கள். அடையாறு ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ் அண்ட் ஸ்விட்ச் கீர் ஃபேக்டரி 20 மாதமாக நிற்கின்றது. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதாவது தரவேண்டும் என்று கேட்டோம். அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்பது தெரியாது. கொடுக்கப்பட்டிருந்தால் ரொம்ப சந்தோஷம். அப்படி 300 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது நல்ல கம்பெனி. அரசாங்கத்திலே இருந்து கூட அதை ஏற்று நடத்தலாம்.

அடுத்து தொழிற்பயிற்சிப் பள்ளிகள். கோயம்புத்தூருக்கு ஒரு எக்ஸ்ட்ரா ஐ. டி. ஐ. தேவை என்று ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்களின் மாவட்டத் திற்கு இப்படித் தேவை என்று சொன்னதின் அடிப்படையில் அது கவனிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அது வரவில்லை. வரவேண்டிய அவசியம் இருக்கின்றது. ஏனென்றால் அது ஒரு மிகப்பெரிய தொழில் கேந்திரம்.

அடுத்து மகளிர் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் தமிழகத்திலேயே 3 தான் இருக்கின்றன. ஒன்று சென்னையில் இருக்கின்றது. அதற்கு முதல்வர் ஸ்தாபனத்தில் ஒருவரை நியமிக்கவேண்டும். என்று பட்ஜெட்டிலே ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதை வர வேற்கிறேன் அது ஒரு நல்ல அம்சம். அதற்கு உடனே ஆள்



(பிற்பகல் 12-30)

போடவேண்டும், அந்த போஸ்டு செக்ஷன் மட்டும் போதாது, அதே மாதிரி தனியார் துறையில்தொழில் பயிற்சி பள்ளிக் கூடங்கள் கொடுக்கக்கூடாது என்பது எங்களுடைய கேள்வி. அரசு தான் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும். அதிலும் மகளிர் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த கட்டாயமாக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். (மணியடிக்கப்பெற்றது). மத்திய அரசின்தேசிய பயிற்சி கூடத்தில் பொறிகு போரில் ஊழியர்கள் அங்கே வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு சரியான சம்பளம் ஒழுங்காக வரவில்லை என்று பிரச்சனை இருக்கிறது. அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மதுரையில் நகராட்சியில் 172 மின் தொழிலாளர்கள் வேலையை விட்டு அந்த பெரிய உலகத் தமிழ் மாநாடு நடந்த காலத்தில் வேலை செய்தவர்கள்—நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வேலைக்கு மறுபடியும் எடுக்கவில்லை. அதே சமயத்தில் மின்சார வாரியத் தில் கார்டு பில்டிங் சிஸ்டம் வந்து அது இன்று தோல்வி அடைந்து விட்டது அதற்காக நாங்கள் கோர்ட்டுக்கு போனதன் விளைவு என்னவென்று கேட்டால் கோர்ட்டுக்கு போன சங்கத்தோடு பேசுவது இல்லை என்று நம்முடைய மின்சார அமைச்சர்அவர்கள் சொல்கிறார்கள். நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இப்படி இருக்கக்கூடாது என்பதை அவர்களுக்குச் சக அமைச்சர் என்ற நிலையில் சொல்லி அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிரியாடிகல் டிரான்ஸ்பர் என்று இப்போது வந்து இருக்கக்கூடிய சேர்மென் ஒவ்வொருவரையும் டிரான்ஸ்பர் செய்து கொண்டு இருக்கிறார்கள். இது மிகப்பெரிய தவறு ஆகும். இது பெரிய தகராறில் வரும் என்று சொல்லவிரும்பு கிறேன்.

பரலி மின் நிலையத்தில் ஆறுமுகம் என்ற ஒரு தோழர் ஆதி வாசிகளுக்கு உதவி செய்தார் என்று அவரை ஊர்மாற்றி இருக்கிறார்கள். அது சரியல்ல. தொழில் தகராறில் போலிஸ் தலையீடு கூடாது. ஈரோடு மகாராஜா ஸ்பின்னிங் மில்லில் அது மாதிரி நடந்து இருக்கிறது. கந்தசாமி ஸ்பின்னிங் மில்லில் அந்த மாதிரி நடந்து இருக்கிறது. சென்னையில் பல்லாவரம் நாகல்கேணியிலுள்ள தோல் தொழிற்சாலையில் சங்கம் வைத்து இருப்பவர்களை போலீஸ் மிரட்டிக்கொண்டுஇருக்கிறது. தொழிற்சங்கம் அங்கீகாரம் பேலட் முறையில் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஐ.என்.டி.யூ.சி. சொல்லக் கூடிய கொள்கையை நமது அமைச்சர் அவர்களும் சொல்லிக் கொண்டு அதில் வெரிபிகேஷன் என்ற எண்ணத்திற்கு கொண்டு போகக் கூடாது. அதே சமயத்தில் ஸ்டிரை பண்ணவேண்டும் என்றால் 60 சதம் பேர் ஓட்டு போட்டால்தான்

ஸ்டிரைக் பண்ணவேண்டும் என்று சட்டம் போட்டு ரெஜிமெண் டேஷன் தொழிலாளர் பேரில் கொண்டுவர வேண்டாம். தொழி லாளர்கள்பரவலாக ஆதரவாக இருக்கிறார்களா இல்லையா என்று பார்த்துதான் அவர்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள். அவர்கள் எதுவும் இஷ்டப்படி ஏதோ விளையாட்டாக ஸ்டிரைக் பண்ணுவது இல்லை. தகுந்த சக்தி இல்லைஎன்றால் தொழிலாளி எப்படி ஸ்டிரைக்குக்குப் போவான். அப்படிப்பட்ட கொள் கையை இந்த அரசு கைவிட வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) எஸ்மா சட்டம் வாபஸ் பெறுக, ஐ.டீ. ஆக்ட் 10 பீ வாபஸ் பெறுக., போலீஸ் தலையீடு இல்லாமல் நிறுத்துக. டீ.யூ. களின் பிரச்சினைகளையும் கவனிக்கவேண்டும் என்று அரசு ஊழியர் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். இத்தோடு நான் முடிக் கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தொழிலாளர் நல நிலைமைப் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு சம்பந்தமாக நான் சார்ந்து இருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகவும், எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்து இருக்கக்கூடிய வெட்டு தீர்மானங்களை ஆதரிக்கக்கூடிய முறையிலும் ஒரு சில கருத் துக்களை சொல்லலாம் என்று கருதுகிறேன். தமிழக அரசினுடைய தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழிலாளர் கொள்கைகளும் என்பதை இன்றையதினம் ஆளுகின்ற ஆட்சியில் இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் தொழிலாளர்களுக்கான நலச் சட்டங்களை அமல் நடத்தக் கோரியும் அதே நேரத்தில் மத்திய அரசை வற்புறுத்தக் கோரியும் பேரணி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். நாங்களும் இது போல் பல்வேறு கட்டங்களில் தொழிலாளர்களுக்கான நலன்களைப் பாதுகாக்க வேண்டும். தமிழக அரசு போட்டு இருக்கக்கூடிய அவசரச் சட்டங்களை, தொழிலாளர்களுக்கு விரோதமாக போட்டு இருக்கக்கூடிய அவசரச் சட்டங்களை எல்லாம் வாபஸ் பேறவேண்டும். என்று கடந்த வாரம் இங்கே நடத்திய பேரணியில்............

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எந்த அவசரச் சட்டத்தை அனைத்திந்தியஅண்ணா தி.மு.க. ஆட்சி இப்போது போட்டிருக் கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கிப் பேசினால் நான் குறிப்புகள் எடுத்துக்கொள்வதற்கு நன்றாக இருக்கும்.

திரு. எம், ஆறுமுகம்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தமே செய்யக்கூடாது என்று கடந்த ஆண்டு வந்த சட்டத்தை அவர்கள் ஆய்வுக் குழுவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதே





போல் இந்த ஆண்டும் கொண்டுவந்த சட்டத்தை இதே சட்ட மன்றத்தில் எதிர்த்ததின் விளைவாக அதுவும் இப்போது இருந்து கொண்டு இருக்கிறது. நான் இதைச் சொல்வதற்கு காரணம்....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தெளிவாக சொல் வார்களானால் தான் பின்னால் என்னால் தெளிவாகப் பதில் சொல்லமுடியும். எந்த சட்டம் இப்போது அமலில் இருந்து கொண்டிருக்கிறது. எந்த வேலை நிறுத்தத்தை நாங்கள் தடை செய்து இருக்கிறோம். பொதுவாக எந்த வேலை நிறுத்தத்தைத் தடை செய்யும் சட்டம் இப்போது இருக்கிறது. குறிப்பாக எதைத் தடை செய்து இருக்கிறோம், இதை மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெளிவாகப் பேசினால் பின்னர் எனக்கு ஒவ் வொன்றுக்கும் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும். நல்ல இளைஞர் இதை எல்லாம் ஞாபகம் வைத்துச் சொல்வார் என்று கருதுகின்றேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, அத்தியாவசிய சர்வீஸ்களில் பணிபுரியக் கூடிய தொழிலாளர்கள் வேலை நிறுத்தமே செய்யக்கூடாது என்று கொண்டுவந்த சட்டத்தை இதே சட்டமன்றத்தில் கடுமையாக எதிர்த்து இப் போது ஆய்வுக் குழுவிலே இருப்பதனைத்தான் நான் சொல் கிறேன். ஆனால் இந்தச் சட்டங்களை இந்த நாட்டிலே கொண்டுவருவதற்கான அடிப்படைக் காரணம் தமிழக அரசினு டைய தொழிலாளர் கொள்கை இந்த நாட்டிலே உள்ள முதலாளிகளுக்குச் சாதகமாக இருந்து கொண்டிருக்கிறது என் பதுதான். ஆனால் இன்று நடக்கக்கூடிய பேரணியிலே சொல் லப்பட்டுள்ள கோஷங்களை நான் சொல்லவில்லை, அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப் பூர்வமான பத்திரிகையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தொழி லாளர் நலச் சட்டங்கள் பல இயற்றி கம்யூனிஸ்ட் அரசுகளை மிஞ்சும் புரட்சித் தலைவர் அரசு வாழ்க என்று 48 கோஷங்களை அவர்கள் போட்டிருக்கிறார்கள். நான் சொல்ல வேண்டு மென்று சொல்லவில்லை, ஆனால் மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நடத்தக்கூடிய பேரணி—அதே நேரத்திலே இந்த சட்ட மன்றத்திலே கொண்டு வந்திருக்ககூடிய பல்வேறு சட்டங் களை ஆதரித்து நடத்தக்கூடிய பேரணியில்———இன்று தொழி லாளர்கள் லாரிகளிலே பல்வேறு வாகனங்களிலே வந்திருக்கி றார்கள். கடந்த வாரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் இருக்கக்கூடிய பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் நடத்திய பேரணியில் லாரிகளிலே வரக்கூடாது என்று சொல்லி இதே சட்டமன்றத்திலே சட்டத் திற்கு உட்பட்டு நாங்கள் அனுமதி கொடுப்போம் என்று சொன்னார்கள், ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய அரசாங்கம் அவர்கள் நடத்தக்கூடிய பேரணியில் லாரிகளிலே வருவதற்கு அவர்கள் போட்ட சட்டத்தையேன்மீறி வருவதற்கு எப்படி அனுமதி அளித்தது என்பதுதா என்னுடைய கேள்வி.

(திரு. எம். ஆறுமுகம்) [1983 ஏப்ரல்

எனவே இவர்களைப் பொறுத்தவரையில் இந்த சர்க்கார்
தொழிலாளர்களுக்கு விரோதமான சர்க்கார் என்று
சொல்வதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே
இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே சில கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறார்கள். பீடி ஓர்க்கர்ஸ், டிரான்ஸ்போர்ட்
ஓர்க்கர்ஸ், வீவர்ஸ் போன்றவர்களுக்கு குறைந்தபட்ச
கூலிச் சட்டங்களை அமல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்
டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் இதே சட்ட
மன்றத்திலே கடந்த வாரத்துலே ஒரு கேள்வியைக் கேட்கிற
நேரத்திலே போக்குவரத்துத் தொழிலிலே அடங்கிய தொழி
லாளர்களுக்கு குறைந்த பட்சக்கூலி சட்டத்தை கோவை மாவட்
டத்திலே இருக்கக்கூடிய 202 கம்பெனிகளில் அமல் நடத்து
வதாக எனக்கு பதில் சொன்னார்கள். நான் மீண்டும் கேட்கிற
நேரத்திலே உறுப்பினர் அவர்கள் எக்ஸ்ட்ரிமிஸ்ட்டாக மாறி
விட்டார்களோ என்ற சந்தேகம் எழுகிறது என்று கூட சொன்
னார்கள். நான் இப்போதும் சொல்கிறேன். குறைந்த பட்சக்
கூலிச் சட்டம் எங்கே அமல் நடத்தப்படுகிறது. பீடித் தொழி
லாளர்கள் யாரும் குறைந்த பட்ச கூலி வாங்கவில்லை, அவர்கள்
கொடுப்பதும்இல்லை, போக்குவரத்திலே பணிபுரியக்கூடிய தொழி
லாளர்கள் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் நான் கம்பெனி
யின் பெயரைச் சொல்லவில்லை, எங்கள் மாவட்டத்திலே
இருக்கக்கூடிய திருப்பூரிலே மிகப் பெரிய தனியார் கம்பெனியை
நடத்தக்கூடிய ஒரு நபர் குறைந்த பட்சச் சம்பளத்தைகொடு
என்று கேட்பதற்காக வீட்டிலே ஒருவரைக் கொண்டுபோய்
கட்டிவைத்து சக்கையாக நொறுக்கித் தள்ளியிருக்கிறார்கள்.
அமைச்சர் அவர்களிடம் தனியாக சொல்லலாம் என்று நினைக்
கிறேன். அந்த அளவுக்குக் குறைந்த பட்சக் கூலிச் சட்டம்
எங்கே அமல் நடத்தப்படுகிறது. எங்கேயும் நடக்கவில்லை,
உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா என்று, அமல்
நடத்துங்கள் என்று கேட்டதற்காக அவருக்கு வேலையே போய்
விட்டது. குறைந்த பட்சக் கூலி சட்டம் பீடிக்கு இல்லை,
டிரான்ஸ்போர்ட்டிற்கு இல்லை, வீவர்களுக்கு கிடையாது,
ஹோட்டல்களிலே உள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக்
கூலிச் சட்டம் என்றால் என்னவென்றே தெரியாது. ஷாப்ஸ்
அன்ட் எஸ்டாபிளிஸ்மெண்ட்ஸ் ஆக்ட் என்று இருக்கிறது.
எத்தனை பேர்கள் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள்
அவர்களுக்கு அந்த ஆக்டின்படி அரசாங்கம் போட்டிருக்கிற
குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அமல் நடத்தப்படவில்லை
சட்டம் என்பது ஏட்டளவிலே இருக்கிறதே தவிர நடைமுறையில்
அமல் நடத்துவதற்கு என்போர்ஸ் பண்ண என்ன போர்ஸ் இரு
கிறது? கருவி எங்கே இருக்கிறது? அமல் நடத்தப்படவில்லை
எனவே குறைந்தபட்ச கூலிச் சட்டங்களை போட்டால் மட்டு
போதாது, அதை முறையாக அமல் நடத்துவதற்கு கருவிகளை
முறையாகப்பயன்படுத்த வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்
அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய நேரத்திலே அதை
பண்ணினோம், இதைப் பண்ணினோம் என்று சொல்கிறார்க



136033

1983 ஏப்ரல் 9] (திரு. எம். ஆறுமுகம்)

ஆனால் பாலேக்கர் அவார்ட் ஜெர்னலிஸ்ட்ஸ் ஆக இருக்கக்
கூடிய பத்திரிகையாளர்களுக்கு ஸ்டாச்சுட்டரி அவார்ட் அதை
கொடுக்கச் சொல்லி உத்திரவு வந்து எவ்வளவு நாளாகி விட்டது.
அதையே அமைச்சரால் அமல் நடத்தமுடியவில்லை, பத்திரி
யாளர்களுக்கு வந்திருக்கக்கூடிய ஸ்டாச்சுட்டரி அவார்டையே
அமல் நடத்த முடியவில்லை. 33, சி.2 லேபர் கோர்ட்டுக்கு
போய் வழக்குகளுக்கு அவர்களுக்கு வரக்கூடிய டியூஸ்களை
வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னால் அதை எப்படி அமல்
நடத்தப் போகிறோம். மத்திய அரசாங்கம் போட்டிருக்கிற
ஒருஅவார்ட்மாநில அரசால் இம்பிளிமெண்ட் பண்ணப்படவில்லை,
ஆனால் அதை இம்பிளிமெண்ட் பண்ணுவதற்கு அதிகாரம்
மாநில அரசுக்கு உண்டு. அதையே சர்க்காரால் அமல் நடத்த
முடியவில்லை. எனவே அதை அமல் நடத்த வேண்டும்.
குறிப்பாக தமிழ்நாட்டிலே பல பத்திரிகைகள், அண்ணா
பத்திரிகை, முரசொலி பத்திரிகை தினமலர் பத்திரிகை இவை
களிலே பாண்டட் லேபர் மாதிரி இருப்பதாகச் சொல்லப்
படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை,
இவைகளை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சுமூகமாக
நடந்துகொண்டிருக்கிறது; தமிழ் நாட்டிலே எந்த பிரச்னை
யும் இல்லை; தொழில் நிலைமை அமைதியாக இருப்பதாக
கொள்கைக் குறிப்பிலே சொல்லப்படுகிறது. இது வெறும்
ஸ்டாட்டிஸ்டிக்ஸ் புக்காகத்தான் இருக்கிறதே தவிர ஒரு கன்ஸ்ட்
ரக்ட்டிவ் அப்ரோச் இருப்பதாகத் தெரியவில்லை.

(பிற்பகல் 12-40.)

தமிழ்நாடு முழுவதிலும் இன்றைக்கு மின்சார நெருக்கடி.
கோவை மாவட்டத்திலே 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட என்ஜினி
யரிங் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தேயி
யிலைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பனியன்
தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. டோட்டலாக எல்லா
தொழில்களும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே
அங்கே இருக்கிற பெர்மெனென்ட் தொழிலாளர்கள் மட்டுமல்ல,
அப்ரெண்ட்டீஸ், கேஷுவல் லேபரர்ஸ் அத்தனை பேர்களும் இன்
றைக்குக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே சட்ட
மன்றத்திலே ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இரண்டு
ஆண்டு காலத்திலே 480 நாட்கள் பணிபுரிந்தால் அவர்களை
பெர்மனென்ட் செய்யவேண்டுமென்று ஒரு சட்டம் வந்தது.
எந்த பாக்டரியிலே அமல்படுத்துகிறார்கள்? அதை இம்ப்ளி
மெண்ட் பண்ணமுடியவில்லை. 480 நாட்கள் வருவதற்கு
முன்னாலேயே வேலையிலிருந்து நிறுத்திவிடுகிறார்கள். 480
நாட்கள் வேலையில் இருக்க முடிவதில்லை. எந்த பாக்டரியி
லும் அந்த சட்டம் நடப்பதில்லை.

பெரியார் மாவட்டத்தில் இருக்கிற கந்தசாமி ஸ்பின்னிங்
மில்ஸ்; 1963-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது அந்த ஆலை;
20 வருடங்கள் ஆகிறது அது ஆரம்பித்து; இன்றைக்கும்
அத்தக் கூலியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; 736
தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களிலே 266
பேர்கள் தான் பெர்மனன்ட். 30 ஆயிரம் ஸ்பின்ட்ல்ஸ் இருக்
கின்றன. அதற்கு கிட்டத்தட்ட 800 தொழிலாளர்களை பெர்
மெனென்டாக வைத்திருக்கவேண்டும். ஆனால் 266 பேர்கள்
தான் பெர்மெனென்ட். பாக்கியிருப்பவர்கள் எல்லாம்
டெம்பரரி, அப்ரெண்டிஸ், இன்னும் என்னென்ன பெயர்கள்
இருக்கிறதோ அந்தப் பெயர்களில் எல்லாம் இருந்து கொண்டிருக்
கிறார்கள். ஏன் இன்னும் அந்தச் சட்டத்தை இம்ப்ளிமெண்ட்
பண்ணவில்லை. அதை இம்ப்ளிமெண்ட் பண்ணுவதற்கு சர்க்
கார் நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தவறிவிட்டது? கந்தசாமி
ஸ்பின்னிங் மில்ஸ், சுந்தரம் நூற்பாலை இதுபோன்ற ஆலை
களில் எல்லாம் அரசாங்கம் போட்டிருக்கிற சட்டத்தை அமல்
நடத்த முடியாத ஒரு பரிதாபமான சூழ்நிலை இருந்துகொண்
டிருக்கிறது. இந்த சர்க்காரைக் கேட்டால், முனிசிபல் தொழி
லாளர்கள் போராட்டம் நடத்துகிறார்களா, நாங்களே
போய் மலத்தை அள்ளுவதற்கு தயாராக இருக்கிறோம் என்று
முதலமைச்சர் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒத்திவைப்புத்
தீர்மானத்திலே பதில் சொல்கிறார்கள். எங்களுக்கு உண்மை
யிலேயே வேதனையாக இருக்கிறது. என்.ஜி.ஓ. போராட்டம்
நடத்தினால் மக்கள் பார்த்துக்கொள்வார்கள்; ஆசிரி
யர்கள் போராட்டம் நடத்தினால் மக்கள் பார்த்துக்கொள்
வார்கள்; முனிசிபல் தொழிலாளிகள், ஸ்காவென்ஞ்சர்ஸ்
போராட்டம் நடத்தினாலும் நாங்களே போய் அதையெல்லாம்
செய்யப்போகிறோம் என்று சொன்னால் இந்த நாட்டிலே
நடக்கிற காரியமா? நடக்குமா? ஆகவே தான் சொல்கிறேன்,
முனிசிபல் தொழிலாளர்களிலிருந்து இதுபோன்ற நிலைமை
இருக்கிறது. தீயணைப்புத் துறையிலே இருக்கிறவர்கள் தான்
தமிழ்நாட்டிலே சர்க்காரை எதிர்த்து போராட்டம் நடத்
தாதவர்கள் என்று நினைக்கிறேன். பாக்கி எல்லோருமே
போராட்டம் நடத்தியாகி விட்டது. சாதாரண தொழிலாளி
கள் நடத்தக்கூடிய போராட்டங்களின்போது, அழைத்து பேசித்
தீர்ப்பதற்கு பதிலாக அரசாங்கமே அந்த போராட்டத்தை
மறுத்துவிடுகிற வகையிலே, வார்த்தை கொச்சையாக இருக்கிறது
என்று தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. அரசாங்கமே
கருங்காலியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, என்பது
தான் என்னுடைய குற்றச்சாட்டு. பாக்டரியிலே முதலாளிகள்
தான் வேலை நிறுத்தம் நடக்கிறபோது கருங்
காலிகளை வைத்து வேலை நடத்திக் கொண்டிருப்பார்கள்.
ஆனால் சர்க்காரே, நாங்களே அந்த வேலையைச் செய்வோம்
என்று சொல்வது என்பது சர்க்காருடைய அணுகுமுறையில்
சரியில்லை என்பதைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.
இப்படிப்பட்ட கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.



கட்டிடத் தொழிலாளர்களுக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட்
சட்டம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். லட்சக்கணக்
கான கட்டிடத் தொழிலாளர்கள் நாட்டிலே இருக்கிறார்கள்.
அவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை. அதேபோலே
பால் பண்ணை ஊழியர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே
பழிவாங்கப்பட்டு இதுவரையிலும் வேலைக்கு எடுக்கப்பட
வில்லை. அந்த தொழிலாளர்கள் செத்தார்களா, இருக்கிறார்
களா என்பதற்கான விவரமே இல்லை. அந்தத்தொழிலாளர்
களுடைய நிலைமை என்ன? அரசாங்கம் அவர்களை அழைத்
துப்பேசி அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு என்ன
உத்தரவாதம் செய்திருக்கிறது? அதைப்போல கோயம்புத்
தூரிலே பல்வேறு பஞ்சாலைகள் இன்றைக்கு மூடிக்கிடக்கின்
றன. ஜோதி மில்ஸ் திறந்தாகிவிட்டது. சந்தோஷப்படுகிறோம்.
ஜெயலட்சுமி மில்ஸ் திறந்தாகிவிட்டது; அரசாங்கத்தை
பாராட்டுகிறோம். அதேமாதிரி எஸ்.ஆர்.சி. மில்லிலே 1,600
தொழிலாளர்கள் வேலையிழந்து வெளியே நிற்கிறார்கள்.
அதைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை வேண்டும்.
என்னுடைய தொகுதியிலே இருக்கிற தமிழ்நாடு ஸ்பின்னிங்
மில்ஸ், இரண்டு வருடங்களாக மூடிக்கிடக்கிறது. நானும் ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொடுத்தாகிவிட்டது. பலநேரங்களில்
சொல்லிவிட்டேன். அமைச்சர் அவர்கள் அதை கவனிப்ப
தாகவே தெரியவில்லை. ஆகவே இந்த ஆலையை எடுத்து
நடத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
கோயம்புத்தூரில் இருக்கிற காளப்பட்டி பத்மா மில்ஸ் மூடிக்கிடக்
கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டும், தொழிலாளர்கள்
சம்பள உயர்வு வேண்டுமென்று கோரி அடையாள உண்ணாவிர
தம் இருந்தார்கள். அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள்.
அந்த பிரச்னை இன்னும் முடியாமல் இருக்கிறது. அது சம்
பந்தமாக மீண்டும் புது வேலை நிறுத்தம் வரவிடாமல் தடுத்து,
அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, அதே போல் 10 பேர்கள்
இருந்தால் போனஸ் ஆக்ட். அதைப் போல் 50 பேர்கள் வேலை
செய்தால் அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளும்—
கார்டு எல்லாம்—கொடுப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே
சொல்லப்பட்டிருக்கிறது. எந்தத் தொழிற்சாலையிலும்
கார்டு கொடுப்பதில்லை. பாக்டரி இன்ஸ்பெக்டர்ஸ் இன்ஸ்பெக்
ஷன் செய்து விட்டுப் போவார்கள் என்றி தெரிந்தாலே, முத
லாளி, பாக்டரியை மூடிவிட்டுப் போய்விடுகிறார். உள்ளே
யாரையுமே வைத்துக் கொள்வதில்லை. 16 வயதுக்குட்பட்ட
குழந்தைகள் இருந்தால் அனுப்பி விடுகிறார்கள். தீப் பெட்டித்
தொழிற்சாலைகளில் எத்தனை சம்பவங்கள் நடந்திருக்கின்றன?
பல பேர்கள் சின்னச் சின்னக் குழந்தைகள், வெடித்தே

செத்திருக்கிறார்கள். ஆகவே, கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளதை அமல் செய்ய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எந்த நடவடிக்கையும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அது மட்டுமல்ல, ஸ்கிரீனிங் கமிட்டியை ஒழித்து விட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்கிரினிங் கமிட்டி எங்கே ஒழிக்கப்பட்டிருக்கிறது? எங்கேயும் இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கக்கூடிய கணபதி மில்சிலே 16 கேசஸ் ரெப்பரன்ஸ் இல்லையென்று மறுத்திருக்கிறார்கள். அமைச்சர் சொல்லியிருக்கிறார், ஸ்கிரீனிங் கமிட்டியை ஒழித்து விட்டதாக. தொழிலாளி ஒழிந்து போனான் என்பது உண்மை— கோர்ட்டுக்குப் போகாமல். ஆனால், 16 கேசுக்கு ரெப்பரன்ஸ் கிடையாது. கோயம்புத்தூரிலே பல்வேறு கேஸ்கள், பிரைவேட் டிரான்ஸ்போர்ட் முதலாளிகள் இங்கே வந்து என்ன செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், எந்த கேசுக்கும் நோ ரெப்பரன்ஸ், நோ ரெப்பரன்ஸ் என்று வந்து கொண்டிருக்கிறது. ஸ்கிரினிங் கமிட்டி ஒழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே தவிர, நடைமுறையில் அப்படி இல்லை. எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை, இதிலே என்ன சொல்கிறார்களோ, அந்த அடிப்படையிலே, எல்லா கேஸ்களையுமே தொழில் கோர்ட்டுகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

டெம்பரரி ஒர்க்கர்ஸ். அதே மாதிரி, பதிலி ஒர்க்கர்ஸ். மின்சார வெட்டினாலே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தயவு செய்து சிந்திக்கவேண்டும். பதிலி ஒர்க்கர்ஸ், டெம்பரரி ஒர்க்கர்ஸ்; எப்படி மின்சார வெட்டுக் காலத்திலே, நிரந்தர ஒர்க்கர்ஸுக்கு லே-ஆப் சம்பளம் பாதி கொடுக்கப்படுகிறதோ, அதே மாதிரி, பதிலி, டெம்பரரி ஒர்க்கர்ஸுக்கும், மின்சார வெட்டுக் காலங்களிலே மட்டுமல்ல, பிரேக் டவுன் ஆகக்கூடிய காலங்களிலே, அந்தத் தொழிலாளிகளுக்கும் லே—ஆப் சம்பளம் கொடுக்கக் கூடிய முறையிலே கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே அவர்கள் ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பீடி ஒர்க்கர்ஸ். கோயம்புத்தூரிலே பல்வேறு பீடித் தொழில்கள் இருக்கின்றன. பீடியைக் கேரளாவிலே சுற்றுகிறார்கள். இங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. லேபிள் வேறு ஒரு இடத்திலே இருக்கிறது. சுற்றுவது ஒரு இடம்; பாக்டரி ஒரு இடம். இந்த மாதிரி இருப்பதால், தயவு செய்து, தொழிற்சாலை சட்டப்படி



நடவடிக்கை எடுத்து, பீடித் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, இறுதியாக, இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்பது, தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கை, தொழிலாளர்கள் நடத்தக்கூடிய போராட்டங்களில் போலீசை ஏவிவிடுவது, மண்டையை உடைப்பது, தொழிலாளர்கள் போராட்டம் நடத்தக்கூடிய நேரத்தில் அரசாங்கமே கருங்காலியாக இருந்து, போராட்டத்தை உடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கிற காரணத்தால்.................(மணியடிக்கப் பெற்றது)

திரு. கே. செளந்திரராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது நான் சில விவரங்களைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பொதுவாக, இங்கே பேசுகிறபொழுது, கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களானாலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், முதலிலே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறார்கள். இன்றைய தினம் ஆழமாக வேரூன்றி இருக்கிற பொருளாதாரப் பிரச்னையையும் அதைப்போல் நாட்டிலே இருக்கிற மின்சார பற்றாக்குறையையும் அதைத் தொடர்ந்து தொழில்களுக்கு ஏற்பட்டிருக்கிற பல்வேறு சூழ்நிலைகள் எந்த அளவுக்குத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையை முடமாக்கிவிடுகிறது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப் போலவே, காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பேசுகிறபொழுது கூட இன்றையதினம் மின்சாரம் இல்லை, அதைப் போலவே மின் உற்பத்தி சரியான முறையிலே நடைபெறவில்லை என்பதை எடுத்துச் சொல்கிறபொழுது, அவர்களும் இந்தச் சர்க்காரைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, இது என்ன சாதனையா என்று கேட்டார்கள். அதைப் போலவே, தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, இது என்ன சாதனையா என்று கேட்டார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபொழுது நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற நிலைமைக்கு ஒட்டுமொத்தமாக யாராவது ஒருவரைக் குறிப்பிட்டுப் பதில் சொல்ல வேண்டுமென்ற நிலைமை உருவாகுமானால், இந்தியாவிலே இருக்கிற மத்திய சர்க்கார்தான் இவை அத்தனைக்கும் பொறுப்பேற்க வேண்டுமென்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. கே. சௌந்திரராசன்)
(பிற்பகல் 12-50)

இன்றையதினம் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றால், இயற்கை நமக்குச் சதி செய்து விட்டது என்பது ஒரு புறத்திலே இருந்தாலும், மறுபுறத்திலே மைய அரசு எந்த அளவிற்கு வஞ்சனையோடு செய்து கொண்டிருக்கிறது, தமிழகத்திலே செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது மின்சாரப் பற்றாக் குறைக்குக் காரணம் யார் என்பதை காங்கிரஸ் இயக்கத்திலே இருக்கின்ற தோழர்கள் மறந்துவிடக்கூடாது.

இங்கே நம்முடைய கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், இவைகளுக்கெல்லாம் பரிகாரம் கிடைக்க வேண்டுமென்றால், எவ்வளவோ ஆழமான பொருளாதாரப் பிரச்னைகள் என்று ஒருபுறத்தில் குறிப்பிட்டாலும், மறுபுறத்திலே தமிழக அரசைச் சுட்டிக்காட்டுகின்ற சூழ்நிலையைப் பார்க்கின்ற பொழுது அவர்கள் எந்தப் பக்கத்திலே கேள்வியைத் திருப்பவேண்டுமோ அந்தப் பக்கத்திலே வைக்காமல், வேறு திசை திருப்பி மாற்றுவதன் மூலமாக மத்திய அரசாங்கத்தைத் தப்புவிக்க உடந்தையாக இருக்கிறார்களா என்பதைத்தான் என்னுடைய கேள்வியாக வைக்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள், தொழிலாளர் பிரச்னை என்பது வெடிமருந்துக் கிடங்குக்குள்ளே தீப்பந்தத்தை ஏற்றிச் செல்வதைப் போன்றது என்று சொன்னார்கள். அந்த வகையில் மிகவும் கவனத்தோடு இன்றையதினம் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்களுடைய திறமையையும், அறிவையும், ஆற்றலையும், அனுபவத்தையும் வைத்துக்கொண்டு இந்தத் துறையில் நல்ல பல காரியங்களைச் செய்து, தொழிலாளர்களுக்காகப் பல்வேறு சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ஒரு சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, மூன்று மாத காலம் ஒரு தொழிற்சாலையிலே வேலை கிடைக்காமல் இருந்தால் அவர்களுக்கு 50 சதவீதம் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும், 180 நாட்கள் வேலை கிடைக்காமல் இருந்தால் 75 சதவீதம் சம்பளம் கொடுக்க வேண்டும், அதற்கு மேல் வேலை கிடைக்காமல் இருந்தால் முழுச் சம்பளத்தையும் தர வேண்டும் என்று சட்டமாக இயற்றப் பட்டதைப் பற்றிப் பாராட்டிச் சொல்லும்பொழுது அவைகள் செயல்படுகின்றனவா என்று கேட்டார்கள். இப்படிப் பல் வேறு சட்டங்கள் தமிழகத்திலே செயல்படாமல் இருப்பதற் கான காரணம், பிரதான காரணம் என்று பார்க்கும் பொழுது மத்திய அரசாங்கம் தான் அந்தப் பொறுப்பேற்க வேண்டிய நிலைமைகள் இருக்கும் என்பதை இங்கே அமர்ந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏதோ அவர்களுக்குத்



(திரு. கே. சௌந்திரராசன்)



சேர்ந்து கொண்டு இணைந்து பேசுவது என்பதை எந்த வகையிலே நியாயம் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே பல்வேறு தொழிற்சாலைகள் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களின் திறமையின் காரணமாக, அவர்கள் எடுத்துக்கொண்ட அந்த முயற்சிகளின் காரணமாகத் திறக்கப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன. தொழிலாளர்களின் பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருப்பதாகக் கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டொன்று விட்டுப் போனதாகச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிட விரும்புகிறேன், ஜோதி மில்ஸ், கோவை, ஜெயலட்சுமி மில்ஸ், ஆகியவைகளின் பிரச்னை தீர்க்கப்படவில்லையா? தஞ்சையில் தனியார் பேருந்துகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பிரச்னை தீர்க்கப்பட்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்கவில்லையா? சென்னையில் உள்ள டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் இந்தியா லிமிடெட் பிரச்னை தீர்க்கப்பட்டு உடனடியாக வேலை நடக்கவில்லையா? திருச்சியிலே பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களின் பிரச்னை ஏற்பட்டபொழுது பத்தே நாட்களில் அந்தப் போராட்டம் நின்று, புதிய வரலாற்றைச் சமைக்கின்ற அளவிற்கு இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் அந்தப் பிரச்னையைத் தீர்க்கவில்லையா? சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட பிரச்னை தவிடு பொடியாக்கப்படவில்லையா? நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன், கோவையிலே ஏற்பட்ட பிரச்னையில் மூடப்பட்ட ஆலையைத் திறக்கவில்லையா? இன்னும் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன், பெட்டல் பாக்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், தரங்கதாரா கெமிக்கல்ஸ் ஆகியவைகளில் ஏற்பட்ட தகராறுகள் சம்பந்தமாக இந்த அரசு விரைந்து முனைந்து நின்று அப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறது என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலாளிகளுக்கு ஏற்பட்டிருந்த மனோபாவத்தையே மாற்றி, தொழிலாளர்களும் கூட தொழிற்சாலையின் ஒரு அங்கம் என்று ஏற்றுக்கொள்ளத் தக்க அளவிற்கு ஒரு எண்ணத்தை உருவாக்கி இன்று பல்வேறு தொழிற்சாலைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே அழுத்தம் திருத்தமாகக் கூறிக்கொள்ள முடியும்.

இவைகளெல்லாம் ஒருபக்கம் இருக்க, காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை நான் கேட்க விரும்புகிறேன். இந்தியாவின் மான்செஸ்டர் என்று சொல்லப்படுவது பம்பாய்; அந்த பம்பாயிலே எத்தனை இலட்சம் தொழிலாளர்கள் வேலை

யில்லாத நிலைமையை அடைந்திருக்கிறார்கள். ஆனால் மத்திய
அரசாங்கம் இன்றையதினம் அவைகளைப் புறக்கணித்து வைத்து
விட்டு, அந்தப் பிரச்னைகளை **மறந்துவிட்ட சூழ்நிலையில்**
இறுமாந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு
கிறேன்.

என்னுடைய தொகுதியில் பீடி சுற்றுகின்ற தொழிலாளர்கள்
25,000-க்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு
சூழ்நிலைகளின் காரணமாக அவர்களுடைய வாழ்க்கையில்
சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு
அமைச்சரவர்கள் அவ்வப்பொழுது தலையிட்டாலும் கூட நிரந்
தரமான தீர்வு காணுகின்ற முறையிலே இந்தப் பிரச்னைகளுக்கு
முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இங்கே வேலூருக்குப் பக்கத்திலே தத்துவாச்சேரியில் 150
வீடுகள் கட்டுவதற்கான திட்டம் இடப்பட்டிருக்கிறது என்பது
இந்தக் குறிப்பிலே இருக்கிறது. பீடி சுற்றும் தொழிலாளர்கள்
திருச்சி மையப் பகுதியிலே அதிகமாக இருக்கிறார்கள்.
குடிசை மாற்று வாரியம் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ
அந்த பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான ஒரு
பரிகாரத்தைத் தேடித் தர வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

சுதந்திரம் அடைந்து 35 ஆண்டு காலமாகியும், அவர்கள்
சாக்கடைகளிலே வாழ்கின்ற நிலைமை இன்னும் தொடர்ந்
திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல செயற்கை வைரத் தொழிலாளர்கள் இருக்
கிறார்கள். அவர்களை முதலாளி பிடியிலிருந்து விடுவித்து,
அவர்களுக்கு வாழ்வு கிடைக்கும் வகையில், அவர்களைக் காப்
பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்
கொள்கிறேன்.

நெசவாளர் தொழிலாளர்கள் ஏராளமான பேர்கள் இருக்
கிறார்கள். அவர்களுடைய நல் வாழ்விற்காக ஒரு நல்ல திட்
டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.
திருச்சி நகரத்தில் 50 சத விகிதத்திற்கு மேல் எந்தத் தொழி
லுமே இல்லாமல் அன்றாடங்காய்ச்சிகளாக வெளியே போய்
சம்பாதித்தால்தான் வாழ்க்கையை நடத்தக் கூடிய நிலைமை
இருக்கிறது. உலகம் தோன்றிய காலத்திலிருந்து அவர்கள்
சந்தைகளுக்குப் போய் நித்தம் நித்தம் சென்று வியாபாரம்
செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிறு
வியாபாரம் மூலமாக, தலைச்சுமை மூலமாக தங்களுடைய
வாழ்க்கையை நடத்திக்கொண்டுவரும் நிலையில் திருச்சியிலே
[illegible]



வாழ்வு கிடைக்கும் வகையில் ஏதாவது ஒரு புதிய திட்டத்தை,
புதிய முறையில் அவர்கள் தொழில் செய்வதற்கு அல்லது
தொழில் செய்து பிழைக்கின்ற ஒரு திட்டத்தை உருவாக்கித்
தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு இந்திய மார்க்சிஸ்டு
கம்யூனிஸ்டு கட்சித்தலைவர் திரு. என். சங்கரய்யா
ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இங்கே இருக்கின்ற
லையன்ஸ் கிளப் மற்றும் வர்த்தக வணிகச்
சங்கங்கள் மூலமாக பெரிய பணக்காரர்கள், முதலை திமிங்கில
மாகவும், அந்தச் சங்கங்களைப் பயன்படுத்தி அவர்களுடைய
வாழ்க்கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குடிசை
யில் வாழ்கின்றவர்கள், தாழ்த்தப்பட்ட அல்லது சிறு வியா
பாரிகள், சுமை தூக்கும் தொழில் செய்கிறவர்கள், அன்றாடம்
தொழில் செய்து பிழைக்கின்றவர்கள் இவர்களைப் பாதுகாக்
கின்ற வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்
வணக்கம்.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும்,
தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையின் மீது காந்தி
காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சி சார்பில் ஒரு சில கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏதோ சில தொழிற்சாலைகளைத் திறந்து விட்டால், தொழி
லாளர் நலன் நிறைவேற்றப்பட்டு விட்டதாகச் சொல்ல முடியாது.
இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை காரணமாக "லே ஆப்"
விடப்பட்டு, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு
வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்றால் ஒரு தொழி
லாளரை நம்பி 4 பேர் இருந்தால் கூட 5 இலட்சம் பேர்கள்
அடுத்த வேளைக்கு சாப்பிட என்ன செய்வது என்று ஆலாய்ப்
பறந்து கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஜெனரேட்டர்
களை உற்பத்தி செய்து, இப்படி நெருக்கடி நேரத்திலே தொழிற்
சாலைகளை ஜெனரேட்டர்கள் மூலம் நடத்தி, லே-ஆப் செய்யா
மல் நிரந்தரமாக வேலை கொடுப்பதற்கான திட்டங்கள் ஏதும்
இங்கே குறிப்பிலே சொல்லப்படவில்லை. அதே போல்
விபத்திலே தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய நஷ்ட
ஈடுகள் உடனே கொடுக்கப்படவில்லை என்று பரவலாகச் சொல்
லப்படுகிறது.

பீடித் தொழிலாளர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்
பாக ஆலங்குளம் தொகுதியில் அதிகமாக வாழ்கிறார்கள். பீடி
சுற்றும் தொழிலாளர்களுக்கு காச நோய் வரும் என்பது ஏற்கனவே
எல்லோருக்கும் தெரியும். பீடி சுற்றும் தொழிலாளர்கள் இருக்
கும் பகுதிகளில் எல்லாம் காச நோய் மருத்துவமனையை ஆரம்
பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சரவர்களைக்
கேட்டுக் [illegible] விரும்

1983 ஏப்ரல் 9) (திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்

மேலும் பீடி சுற்றும் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும்
பீடிகளை சரியாகச் விநியோகம் செய்வதில், பீடி சுற்றுகின்ற
தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சுகின்ற வகையில் சில
ஏஜெண்ட் இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தொழிலாளர்
களுக்கு சம்பளத்தை நேரடியாகக் கொடுப்பதற்கு வழிவகை
செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

இன்றைக்கு நாட்டிலே தண்ணீர் பற்றாக்குறை மிக அதிகமாக
இருக்கிறது. கூடுமான வரையில் செங்கல் தயாரிக்கும் தொழிற்
சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் தோல்
பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் போன்றவைகள்
தண்ணீர் இல்லாத காரணத்தால் மூடப்பட்டிருக்கின்றன. சில
நிறுவனங்களில் அங்கே தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டுக்
கழகத்தின் மூலம் பணம் பெற்று அந்தத் தொழிலை நடத்தி
வருகின்றன. இப்போது அவர்களுக்கு வேலையும் இல்லாமல்
விற்பனையும் இல்லாமல் இருப்பதாலே அவர்களுடைய கடன்
களை கொஞ்சம் ஒத்திவைக்க முடியுமா என்பதை சிந்திக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான்கு சுவர்
களுக்கு உள்ளே இருக்கின்ற தொழிலாளர்கள் — ஒரு அமைப்பு
என்று வைத்திருக்கின்ற தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டு
மென்ற வருமானத்தைப் பெறுவதற்கு போராடுவதற்கும் மற்றும்
பல வேலை நிறுத்தங்களும் செய்வதற்கும் வாய்ப்பு இருக்
கிறது. ஆனால் அவர்களுக்கு மட்டும் அப்படி இல்லை.
பாரதிதாசன் ஒரு இடத்தில் சொல்வார். சிற்றூரும்,
வரப்பெடுத்தி, வயலும், ஆறும் தேக்கிய நல்
வாய்க்காலும் வகைப்படுத்தி நெற் சேர உழுது
உழுது பயன்விளைக்கும் நிறை உழைப்புத் தோள்கள்
எல்லாம் எவரின் தோள்கள் என்பார். கற்பிளந்து மலை பிளந்து,
கனிகள் வெட்டி, கருவிகள் செய்து வந்தவைகள் யார் மக்கள்
என்று சொல்வார். போற்றுக்களை, கடல்முத்தை மணிக்குடத்தை
போய் எடுத்து அடக்கிய மூச்சு எவனின் மூச்சு என்பார். ஆனால்
இன்றைக்கு திருச்செந்தூரிலே இரண்டு முத்து எடுக்கின்ற தொழி
லாளர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குடும்
பத்தின் வாழ்வுக்கு என்ன வழி என்பதை நம்மால் சொல்ல
முடியவில்லை. தூத்துக்குடியில் 10 இலட்சம் டன்னுக்கு
மேலாக உப்பு உற்பத்தி செய்யப்பட்டு அது ஏற்றுமதி செய்யப்
படாமல் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுடைய நிலை என்ன
என்பதைப் பற்றி சிந்திக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதே
போல் வான் பொய்த்ததால், பூமி வறண்டு இன்றைக்கு ஏராள
மான விவசாயத் தொழிலாளர்கள் இங்கே வாழ வழியில்லாமல்
உள்ள கூலித் தொழிலாளர்கள், குடும்பம் குடும்பமாக வெளி
மாநிலங்களுக்குச் செல்லுகின்றவர்களுக்கு எல்லாம் நிவாரணம்
கொடுக்கக் கூடிய வழிகள் பற்றி எல்லாம் இந்த விவர அறிக்கை
யிலே ஒன்றுமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றைய



(திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்) (1993 ஏப்ரல் 9

தொழிலாளர்கள் என்று வருகின்றபோது, அமைப்பு இல்லாத
தொழிலாளர்களுடைய நலனைப் பேணிக் காக்க வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கி
றேன்.

திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர்கள் நலன்
என்ற மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன். இந்திய நாடு சுதந்திரம் பெற்ற உடனே முன் கூட்டியே
1946 ஆம் ஆண்டு டொமினியன் அந்தஸ்தைப் பெற்ற உடனே,
தொழிலாளர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டுமென்று
இந்திய அரசு முனைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.
ஆனால் 2, 3 மாத காலமாக, ஏதோ மத்திய அரசிடம் மாநில
அரசு சிறு குழந்தைகள் போல் சண்டை போட்டுக்கொள்வது
போல், வெளியிலே உள்ளவர்கள் சொல்வார்களே, அந்த மாதிரி
நிலைமையில் இங்கே சில உறுப்பினர்கள் சொல்வதைக் கண்டு
நான் வருந்துகிறேன். குறிப்பாக இப்போது பேசும்போது கூட
பம்பாயிலே உள்ள டெக்ஸ்டைல் ஆலைகளில் வேலை செய்பவர்கள்
கவிட்டப்படவில்லையா, பம்பாய் மாநிலத்திலே வேலை நிறுத்தம்
இல்லையா என்றார்கள். பம்பாயிலே வேலை நிறுத்தம்
என்றால், அதற்கான நடவடிக்கையை எடுப்பது மகாராஷ்டிரா
அரசின் கடமையே தவிர, இங்கே உட்கார்ந்திருக்கிற இந்திரா
காங்கிரஸ் செய்ய வேண்டுமென்று கேட்பது எந்த வகையிலே
நியாயம் என்பது தெரியவில்லை. நாம் இங்கு பேசுவது நம்
முடைய தொழிலாளர்களைப் பற்றி, அவர்களுடைய நிலைமை
யைப் பற்றி, தமிழகத்தின் நிலைபற்றி பேசி, அதற்கு என்ன
வேண்டும் என்பதைப் பற்றித்தான் நாம் பேச வேண்டுமே தவிர,
மகாராஷ்டிராவிலே நடப்பதைப்பற்றி பேசி, ஏதோ விளையாட்டுத்
தனமாக சொல்லிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதை
நான் அந்த உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு
இருக்கிறேன். (குறுக்கீடு). தேசிய நீரோட்டமாக இருந்தாலும்
சரி, திராவிட நீரோட்டமாக இருந்தாலும் சரி, அல்லது தமிழர்
கள் நீரோட்டமாக இருந்தாலும் சரி எந்தவித நீரோட்டம்
என்று சுண்டிப்பதற்கு ஆட்கள் இல்லை என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

1948 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் வந்தது.
இந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்திலே, குறிப்பாக பல நண்
பர்கள் மற்ற மில்களிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களைப்
பற்றி மிக அதிகமாக இங்கே சொன்னார்கள். நான் ஒன்று சொல்ல
விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு
நான் விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமையைப் பற்றி சில
கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1952 ஆம்
ஆண்டு நம்முடைய மறைந்த பெரியவர் ராஜாஜி அவர்கள்
பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், விவசாயி தொழிலாளர்கள்
பாதுகாப்புச் சட்டம், மற்றும் வாரச் சட்டங்கள் எல்லாம்

கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்தும் கூட அதை
அமுல்நடத்துவது என்பதை ரெவின்யூ அதிகாரிகளிடம்
ஒப்படைத்து விட்டார்கள். ஆனால் 1952 ஆம் ஆண்டு
முதல் 1983 ஆம் ஆண்டுவரையிலும் இன்னும் ரெவின்யூ
அதிகாரிகளிடமும் தாசில்தார்களிடமும், ரெவின்யூ
இன்ஸ்பெக்டர்களிடமும் கொடுத்ததால் தான், அது
ஒங்கமூாக அமுல் நடத்தப்படவில்லை. இதிலே இந்தச்
சட்டங்களில் அன்-ஆர்கனைஸ்டு லேபராக இருக்கின்ற
மற்ற தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால், தொழிலாளர்
கள் ஒன்றுபட்டு அவர்கள் செய்வதற்கு வாய்ப்பு வசதிகள், சரி
யாக இருக்கின்றது—ஆனால் அன்—ஆர்கனைஸ்டாக இருக்கின்ற
விவசாயத் தொழிலாளர்களின் நிலைமையை எடுத்துக்கொண்
டால் மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் மழையை
நம்ப வேண்டும். ஒரு பக்கம் ஆற்றுப் பாசனம், மற்றொரு பக்கம்
லிப்ட் இர்ரிகேஷன், ஆறுகளிலே இருந்து ஏற்றம் மூலமாக
அவர்கள் எல்லாம் அன் ஆர்கனைஸ்டாக ஒரு நிரந்தரமான
நிலைமையில் இல்லாமல் இருப்பதினால் தான் நான் அமைச்சர்
அவர்களிடம்கூட சொன்னேன், ஒரு தாலுகாவிற்கு ஒரு போர்டு
அமைத்து அந்த போர்டுக்கு ஒரு தனி தாசில்தார் கொடுத்து
இந்தக் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை நாம் அமுல்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை உடனடியாகக்
கவனித்து நாம் நிவாரணத்தைச் செய்யத் தவறினால் நிச்சயமாக
உற்பத்தியும் பாதிக்கும், வருங்காலத்திலே தேசவிரோத சக்தி
களுக்கு இடம் கொடுக்கக் கூடிய நிலைமை வரும்.

14 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளை,
வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது என்று 1954-இல் சட்டம்
கொண்டு வரப்பட்டது. ஆனால் நாம் எத்தனையோ தொழில்
அதிபர்கள் இந்த மாதிரி குழந்தைகளை வேலைக்கு வைத்துக்
கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் பீடித் தொழி
ழில் இருந்தாலும் சரி, அல்லது இராமநாதபுரம் மாவட்டத்தில்
தீக்குச்சி தொழிற்சாலையில் இருந்தாலும் சரி, அதற்காக கண்
டிப்பான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தக்
குழந்தைகளுக்கு காசநோய் வருகிறது. அந்த 14 வயது
குழந்தைகளை ஆற்றில் அடித்துச் சென்றது நமக்குத் தெரியும்.
தீ விபத்தில் நடந்தது நமக்குத் தெரியும். வெடி விபத்தில் இறந்தது
நமக்குத் தெரியும். அப்படித் தெரிந்து இருந்தும்கூட அந்தச்
சட்டத்தை நிலைநாட்ட நாம் கடுமையான நடவடிக்கைகளை
எடுக்கத் தவறியிருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் எத்தனை
சட்டங்களைக் கொண்டு வந்தாலும், அதை முனைப்பாக
நடைமுறைப்படுத்தினால்தான் அது எதிர்பார்த்த பயனைத்
தரும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய குறிப்பிலே 53 ஆம் பக்கத்திலே ஆதிதிராவிடர்
பழங்குடியினருக்கான வேலைவாய்ப்பு உதவி என்று விவரங்கள்
சொல்லப்பட்டு இருக்கின்றன. இப்படி அவர்களுக்குத் தருகின்ற
போது அவர்களுக்குத் தரவேண்டிய சதவிகிதப்படி கொடுக்கப்
படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.



செய்தவர்கள் 2,23,033 பேர் இருந்தும் 293 பேர்களுக்குத்தான்
இதுவரையில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.
ஆகவே, இதில் தனிக்கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அரசாங்கம் நடத்துகின்ற நிறுவனங்களில், பப்ளிக் செக்டார்
அன்டர்டேக்கிங்குகளில் அரசாங்கம் நிர்ணயித்த சட்டப்படியான
குறைந்த பட்சக் கூலியைக் கொடுக்கவில்லை. குறிப்பாக முனிசிபல்
இலாகாவில் இருப்பவர்கள்—நகரசுத்தித் தொழிலாளர்கள்—
கூட்டுறவுத் துறையில் இருப்பவர்கள் ஆகியோருக்குக் குறைந்த
பட்சம் கூலி பல இடங்களில் கொடுக்கப்படவில்லை. நம்முடைய
அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாகக் கவனம் செலுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட
நிலைமைகளை அமைச்சர் நேரடியாகக் கவனிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

எத்தனை தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றினாலும்,
அவற்றின் மூலம் நல்ல தீர்வு காணவேண்டும். சட்டங்கள்
கொண்டு வந்தால் மட்டும் போதாது. 480 நாட்கள் வேலை
செய்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும், பாதிக்கப்
பட்ட தொழிலாளர்கள் நேரடியாகக் கோர்ட்டிற்குச் செல்ல
வழிவகைகள் இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர்
அவர்களே, வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள்
நேரடியாகக் கோர்ட்டுக்குப் போவதற்கு வழிவகை செய்து இங்கே
சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் தனக்கு
இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசின் ஒப்புதல்
பெற்றுத் தரலாம். மாண்புமிகு இளையபெருமாள் அவர்களுக்கு
இந்த விஷயம் தெரிந்து விட்டபின்னால், இதற்கு மேல் இதிலே
பேசமாட்டார் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். இளையபெருமாள்: இங்கே சட்டம் நிறைவேற்றி
விட்டோம். அது மத்திய சர்க்காரிடம் இருக்கிறது என்று
விளையாட்டுத்தனமாகப் பேசுகின்ற நிலைமை இல்லாமல், நிச்சய
மாக இந்த அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க
வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சர் என்ற
முறையில் அதற்கு நடவடிக்கை எடுக்கட்டும். நானும் என்னால்
முடிந்த அளவிற்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறேன்.
480 நாட்கள் தொடர்ந்து வேலையில் இருந்தால் அவர்களை
நிரந்தரமாக ஆக்கவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்த
மைக்கு நன்றி சொல்லி, முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, இங்கே காலையிலே இந்த விவர அறிக்கையை
அறிமுகப்படுத்திப் பேசிய அமைச்சரவர்கள் பல திருத்தங்களை
முன்மொழிந்தார்கள், பல திருத்தங்களை முன்மொழிந்தபோது
ஒரே ஒரு திருத்தத்தைத் திரும்பப் பெறுவார் என்று எதிர்பார்த்

தேன். அதாவது இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய அந்த எசன்ஷியல் சர்வீசஸ் மெயின்டனென்ஸ் ஆக்ட் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வார் என்று எதிர்பார்த்தேன்.

(முற்பகல் 1-10)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, எந்தச் சட்டத்தைச் சொல்கிறார்கள் என்று கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

**திரு. என். வி. என். சோமு :** அமைச்சருக்கு இது வாடிக்கை. அவர்களுக்குப் புரியும் நான் என்ன சொல்கிறேன் என்பது. ' எசன்ஷியல் சர்வீசஸ் மெயின்டனென்ஸ் ஆக்ட் ' என்று பொறுக்குக் குழுவிலே இருக்கிறதே அந்தச் சட்டத்தை—அண்டை மாநிலமான கேரளத்திலே வாபஸ் பெற்றார்களே, அந்தச் சட்டத்தை — வாரண்டு இல்லாமல் தொழிலாளர்களை, தொழிலாளர் தலைவர்களை பிடிக்கலாம் என்று சொல்கிறீர்களே, அந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்றுதான் நான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. நான் சொல்வதைப் புரிந்தும் புரியாததுபோல, தெரிந்தும் தெரியாததுபோல நடிக்க வேண்டாம் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் தலைவரவர்களே, இந்த 'E.S.M.A.' என்ற சட்டம் இடி அமீன் ஆட்சியிலே கூட வந்திருக்குமா என்று சொல்லக்கூடிய அளவுக்கு தொழிலாளர்களை, தொழிலாளர் தலைவர்களை வாரண்டு இல்லாமல் பிடிக்க வேண்டுமென்று சொன்னால்—முன்னாள் தொழிலாளர் தலைவராக இருந்தவர் இப்போது தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிறார்; " தொழிலாளி " என்ற படத்தில் நடித்த புரட்சித் தலைவருடைய ஆட்சி இங்கே நடக்கிறது—தொழிலாளர்களை வாரண்டு இல்லாமல் பிடிக்கலாம் என்று சட்டம் வருகிறது என்றால் இந்த வேதனையை, இந்த வெட்கக்கேட்டை உங்கள் மூலமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். 8,889 தொழில் தகராறுகள், அவற்றிலே தீர்க்கப்பட்டவை (செட்டில்டு) 1,328 தொழில் தகராறுகள்தான். ஆனால் பாக்கி இருக்கக்கூடிய 6,637 தொழில் தகராறுகள் என்னவாயிற்று ? சிலவற்றை டிஸ்போஸ் செய்தார்களாம் ; 1,739 பென்டிங்காக இருக்கிறதாம். அமைச்சரவர்கள் தன்னுடைய விவர அறிக்கையிலே சொல்கிறார்கள், அமைதி இருக்கிறது என்று. ஏறத்தாழ 6,500-க்கு மேற்பட்ட தகராறுகள் தீர்க்கப்படாமல் இருக்கும் போது அமைதி எப்படி நிலவமுடியும்?



இன்னொரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள் அமைச்சரவர்கள். அதாவது 480 நாட்கள் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இங்கே இருக்கிற சென்னையிலே சிம்சன் கம்பெனி என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த முதலாளி மிக சாமர்த்தியமாக 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் அன்று நீங்கள் வேலையிலே இல்லை; சட்டம் வந்த அன்று வேலையில் இல்லை; அமுலுக்கு வந்த நாளில் வேலையில் இல்லை; ஆகவே நீங்கள் நிரந்தரம் இல்லை என்று சொல்லிவிட்டு நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது ' ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் ' அதாவது பின்னோக்கிச் செல்லக்கூடிய விளைவை கொடுத்திருந்தால் இப்படி வந்திருக்காது அல்லவா ? 480 நாள் வேலை செய்தால் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதனால் எத்தனை பேர் பலன் பெற்றிருக்கிறார்கள் ? கணக்கு காட்ட முடியுமா உங்களால் ? எங்கேயும் கணக்கு கிடையாது. எல்லாருமே சட்டத்தினுடைய சந்து பொந்துகளிலே நுழைந்து கொள்ளக்கூடிய அளவுக்குத்தான் சட்டம் இருக்கிறது. இவர்கள் சட்டம் கொண்டு வருவதே அதிகம். அப்படி வந்தாலும் தொழிலாளர்களை மிரட்ட, பணிய வைக்க ஏதாவது சட்டம் கொண்டுவருவார்கள். தொழிலாளர் நன்மைக்கு ஏதாவது சட்டம் கொண்டு வந்தாலும் அதிலே ஆயிரத்தெட்டு ஓட்டைகளை வைத்திருப்பார்கள்.

இப்போது கூட சொல்கிறேன். தொழில் துறையில் (லேபர் வெல்பேர் டிபார்ட்மென்ட்) ஒரு அதிகாரியை வைத்து, எங்காவது இப்படிப்பட்ட குறைபாடு நடைபெறுகிறது என்றால் தொழிற்சங்கம் லேபர் ஆபீசரிடமோ அல்லது தொழில் துறை அதிகாரியிடமோ சொல்லக்கூடிய அளவுக்கு தனியாக இதற்கு ஒரு அதிகாரியை நியமித்தால்தான் இந்தப் பிரச்சினையை சரிவர தீர்க்க முடியும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக சீஸனல் இன்டஸ்ட்ரீஸ்—ஷுகர், காப்பி போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். பல தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், அவினாசி 1½ ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. பத்மா மில்ஸ், காளப்பட்டி—ஓராண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. எஸ். ஆர். சி. மில்ஸ், திருப்பூர்—10 மாதங்களாக மூடிக்கிடக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரணம் தரப்படவில்லை. அந்த ஆலைகளை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல. அங்கே வாடிக்கிடக்கின்ற ' ஆலையின் சங்கே நீ ஊதாயோ ' என்று பல ஆண்டுகாலமாக வாடிக்கொண்டிருக்கிற தொழிலாளர்களை அழைத்து ஒரு ஆறுதல் வார்த்தை சொல்ல அமைச்சருக்கு நேரமில்லை. இன்னும் சொல்ல

வேண்டுமானால் அரசாங்கத்தின் தொழில் கொள்கை இன்றைக்கு முதலாளிகளுக்கு சாதகமாகத்தான் இருக்கிறது ; முதலாளிகளை ஊக்குவிப்பதாகத்தான் இருக்கிறது, என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

விஸ்கோஸ் ரயான், உங்களுக்குத் தெரியும். கோவை மாவட்டத்தில் இருக்கிறது. 1982 ஆம் ஆண்டு 38.67 சதவீதம் போனஸ் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டது. 700 ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் தரப்பட்டன 1982-ல். ஆனால் சென்ற ஆண்டு அதைவிட ஒரு கோடி ரூபாய் அதிகமாக லாபம் வந்திருக்கிறது. எனவே தொழிலாளர்கள் கூடுதல் போனஸ் வேண்டுமென்று கேட்டார்கள். அந்த நிறுவனம் 40 சதவீதம் வரை போனஸ் தர தயாராக இருந்தது. ஆனால் அது இங்கே வந்தது. என்ன செய்தார்கள்? சென்ற ஆண்டு தொழிலாளர்களும் முதலாளியும் பேசி 38.67 சதவீதம் போனஸ் வழங்கினார்கள். ஆனால் இந்த ஆண்டு 5 மாதம் வேலை நிறுத்தம், பெரிய ஆர்ப்பாட்டம், பெரிய கிளர்ச்சி, பெரிய ரகளை, பேச்சு வார்த்தைகள். அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் தலையிட்டு 34 சதவீதம் போனஸ் என்று அறிவிக்கிறார்கள். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 1 கோடி ரூபாய் அதிகமாக லாபம் வந்திருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 5 சதவீதம் குறைவாக போனஸ் தருகிறார்கள். 1 சதவீதம் போனஸ் என்றால் 2½ லட்சம் ரூபாய், அப்படி ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய் அங்கே முதலாளிகளுக்கு காப்பாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 15 லட்சத்தில் எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு நன்கொடை எங்கெங்கே போனதோ 'யாமறியோம் பராபரமே' என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதிலே ஒன்று, தமிழகத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகச் சங்கமும் கையெழுத்துப் போட்டிருப்பதாக விவரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த தொழிற்சங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்ததே அல்ல என்று தொழிலாளர் நல அமைச்சரின் பார்வைக்கும் சரி, சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கும் சரி சொல்லியிருக்கிறோம். சேலம் அலுவலகத்திலே இருந்த அந்தச் சங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அதிகார பூர்வமான சங்கம் அல்ல என்று தெரியப்படுத்தப்பட் டிருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 40 பெர்செண்ட் வரை போனஸ் கொடுக்கத் தயாராக இருந்தது அந்த நிர்வாகம். கொடுக்கப்பட வைத்தது 34 பெர்செண்ட் தான் என்றால், இதுதான் இந்த அரசு தொழிலாளர்களுக்குச் செய்கிற சேவையா? இதுதான் நீங்கள் தொழிலாளர்களுடைய அரசு என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் அரசா?



அது மட்டும் அல்ல, ஹவுசிங் போர்டு ஊழியர்களுக்கு—
மற்றவைகள் எல்லாம் போகட்டும், தனியார் நிறுவனங்கள்,
ஹவுசிங் போர்டு அரசு நிறுவனம்—சென்ற ஆண்டு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பேசும்போது மார் தட்டிக் கொண்டு
பேசினார்கள். தமிழகத்தின் ஆட்சிக் காலத்தில் ஹவுசிங்
போர்டுக்கு போனஸ் கொடுக்கப்பட்டது. அதற்கான உத்தரவை
வழங்கியது எங்களுடைய ஆட்சிதான் என்று மார் தட்டிக்
கொண்டு பேசினார். உயர்நீதிமன்றத்திலே நீதிபதி மோகன்
அவர்கள் வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு 8 பெர்சண்ட்
போனஸ் கொடுக்க வேண்டும் என்று உத்தரவை இட்டிருக்
கிறார்கள். ஆனால் அரசாங்கம் அதை எதிர்த்து ரிட்—அப்பீல்
செய்கிறது. ரிட்-அப்பீலை விசாரித்து பிறகு வருவதைப்
பார்க்கலாம், அதற்குள் தமிழ்ப் புத்தாண்டை ஒட்டியாவது 500
ரூபாயை உடனடியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டும்கூட
அது அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. சென்ற ஆண்டு
மார் தட்டிப் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—
பச்சையாகச் சொல்ல வேண்டும் என்றால், கெட்டிக்காரன்
பொய் 8 நாளைக்கு என்று சொல்வார்கள். அதேபோல,
சென்ற ஆண்டு சொன்னதை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த
முடியாமல், ரிட்—அப்பீல் போட்டு நீதிமன்றத்திற்கு சென்றிருக்
கிறார்கள். போனஸ் கொடுக்க வேண்டாம் என்று
நீதிமன்றத்திற்கு போயிருக்கிறார்களே, இதற்குத் தொழிலாளர்
மந்திரி தேவையா?

கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுங்
கள், அதையும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
ஒருவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் இதிலே
தொடர்ந்து முயற்சி எடுத்து, அமைச்சரே ஈடுபட்டு தொடர்ந்து
முயற்சி எடுத்து, போனஸ் கொடுக்கத்தான் வேண்டும் என்று
கட்டளை இட்டிருந்தால், அதை நடத்தியிருக்க முடியாதா?
அப்படி இடக்கூடிய தைரியம் ஏன் அரசாங்கத்திற்கு இல்லை.
அதே போல போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு எவ்வ
ளவு போனஸ் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட
வில்லை. கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஏன் கட்டளை
இட்டிருக்கக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நான் சற்று பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன், குறைந்த பட்ச போனஸ் என்பது, இந்த மாநிலத்திலே,
ஏன் இந்தியா முழுவதிலுமே இன்னும் சொல்லப்போனால் சற்று
இறுமாப்புடன் கூட சொல்லிக் கொள்கிறேன், 4 பெர்சண்டாக
மட்டுமே இருந்த போனஸை 8.33 பெர்சண்டாக ஆக்க வேண்டும்
என்று இந்தியாவிலேயே முதன் முதல் குரல் கொடுத்தது
என்னுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். அந்த
நேரத்திலே, இன்னும்கூட பெருமையாகச் சொல்லிக் கொள்வேன்,
தொழிலாளர் நல அமைச்சராக இருந்தது என்னுடைய தந்தை

யார் தான். அவர்கள் அனைவரும் சேர்ந்து டெல்லிக்குச்
சென்றார்கள். பேசினார்கள். அந்த அமைச்சர்களோடு சேர்ந்து
எல்லோரும் உட்கார்ந்து பேசி காரியம் ஆற்றினார்கள். 4 பெர்
செண்ட் குறைந்த பட்ச போனஸ் என்பதை 8.33 சதவீதமாக
மாற்றினார்கள். இப்போதும் கூட எல்லாத் தொழிலாளர்களின்
தலைவர்களும் குரல் எழுப்புகிறார்கள். அந்த குறைந்த பட்ச
போனஸ் 8.33 சதவீதத்தை 10 சதவீதமாக உயர்த்த வேண்டும்
என்று கேட்கிறார்கள்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? கடிதம் எழுதியிருக்கிறோம்
பதில் வரவில்லை, கடிதம் எழுதியிருக்கிறோம் பதில் வரவில்லை
என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு
தொழிலாளர் துறை அமைச்சர் ஏன்? அமைச்சர் என்ன செய்ய
வேண்டுமோ எப்படி செய்ய வேண்டுமோ, அப்படி பிரச்னைகளை
அணுக வேண்டும். ஆந்திராவிலே உள்ள அமைச்சர் என்.டி.ஆர்.
அவர்கள் 100 கோடி ரூபாயை தங்களுடைய திட்டத்திலே
கேட்டு சேர்த்துக் கொள்ளவில்லையா? கிருஷ்ணன் வேஷம்
போட்டவர், ராமன் வேஷம் போட்டவர் எவ்வளவு
சாமர்த்தியமாக பணியாற்றுகிறார். என்.டி.ஆர். அவர்களுக்கு
அந்த திறமை இருக்கிறது என்றால், தொழிற் சங்கங்களிலேயே
ஊறி ஊறித் திளைத்தவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின்
தொழிற் சங்கங்களில் பயிற்சி பெற்ற உங்களுக்கு ஏன் அந்த
ஆற்றல் வரக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டும்அல்ல, இன்னும் சொல்ல விரும்புகிறேன். குறைந்த
பட்சம் 750 ரூபாய் போனஸ் என்று இருக்கிறது. குறைந்த
தான் எந்த சலுகையும் கொடுக்கப்படுவதில்லை. அதற்கு மேலே
உயர்ந்த பட்ச போனஸ் 1600 ரூபாய் என்று இருக்கிறது. அதே போல
மேல் போனால் அந்தச் சலுகை தொழிலாளர்களுக்குக் கொடுப்பது
இல்லை. அதையும் மாற்ற வேண்டும் என்று மத்திய அரசாங்
கத்தைத் தூண்டிக் கேட்பதற்கு, ஒரு சட்டத்தைக் கொண்டு வர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடம் இதை
எடுத்துச் சொல்லவாவது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஆவடிக்கு அருகிலே இருக்கிற சதர்ன் ஸ்டிர
சரல்ஸ் என்ற நிறுவனம் பட்டாபிராமுக்கு அருகிலே இருக்கிறது.
அதிலே 1,600-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிகிறார்
கள். 11-10-83 அன்று 253 பேர்கள் கம்பல்சரியாக வெளியேற்
றப்பட்டிருக்கிறார்கள். வெளியேற்றப்பட்ட தற்குக் காரணம் என்ன
சொல்லுகிறார்கள் என்றால், வயது வந்தவர்கள் என்று சொல்லி
253 பேர்களை வெளியேற்றி விட்டு, ரிடையர் ஆனவர்களை,
ஓய்வு பெற்றவர்களை, தள்ளாடிக் கொண்டு நடப்பவர்களைக்
கொண்டு வந்து பணிகளிலே அமர்த்தியிருக்கிறார்கள். அது



மட்டும் அல்ல, பிராஜக்ட்ஸ் டிபார்ட்மெண்ட் என்ற பெயரிலே
அந்த தொழிற்சாலையிலே ஒரு பிரிவை ஏற்படுத்திக் கொண்டு
பெரிய பெரிய சைட் வொர்க் ஸ்டிரக்சுரல்ஸ் என்று சொல
வார்களே, அவைகளை கான்டிராக்ட் எடுத்து, அந்த முறையிலே
250 பேர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-20.)

தொழில்களைக் கான்ட்ராக்ட் முறையிலே விட்டு அங்கே
இருக்கக்கூடிய அதிகாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள். எனவே
இதிலே அரசு தலையிட்டு உடனடியாகத் தடுக்க வேண்டும்.
அதோடு மட்டுமல்ல, அரசுப் பணியாளர்கள் இறந்துவிட்டால்
10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்ற திட்டம் சகல தொழிலாளர்
களுக்கும் அமுலாக்கப்பட வேண்டும்.

அடுத்து சென்னையில் அடையாறு டிரான்ஸ்ஃபார்மர்ஸ் அண்ட்
ஸ்விட்ச் கீர் என்ற கம்பெனி இருக்கின்றது. மாண்புமிகு அமைச்
சர் அவர்களுக்கும் தெரியும். அவர் கூட அதிலே தொழிற்சங்கத்
தலைவராக இருந்திருப்பார் என்று கருதுகிறேன். அந்தத்
தொழிற்சாலைத் கடந்த 20 மாத காலமாக, ஒரு நாள், இரண்டு
நாள் அல்ல, 20 மாத காலமாக லே-ஆஃப் என்ற பெயரால் அந்த
தொழிற்சாலை மூடப்பட்டிருக்கின்றது. நேற்றைக்கும் கூட
அவர்கள் ஊர்வலம் வந்து மனு கொடுத்திருப்பதாக நான் கேள்விப்
படுகிறேன். 1957 ஆம் ஆண்டு அந்த தொழிற்சாலை தொடங்
கப்பட்டது. 25 ஆண்டுக் காலமாக அந்த தொழிற்சாலை
இயங்கி வருகின்றது. அங்கே 300 தொழிலாளர்கள் பணியாற்று
கிறார்கள். அவர்கள் 15 முதல் 25 ஆண்டுக் காலம் சர்வீஸ்
உடையவர்கள். எந்தவிதமான ஈட்டுத்தொகையும் அந்தத்
தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை, பசியாலும் பட்டினி
யாலும் அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். அந்த தொழி
லாளர்களில் 3 பேர் இதுவரையில் இறந்திருக்கிறார்கள்.
அரசாங்கத்தினுடைய கவலையற்ற போக்கினால், பொறுப்பற்ற
போக்கினால், வாடுகின்ற தொழிலாளர்களைக் கண்டெடுத்தும்
பார்க்காத போக்கினால் இன்றைக்கு 3 தொழிலாளர்கள்
இறந்திருக்கிறார்கள். அவர்கள் லே-ஆஃபினாலே பாதிக்கப்
பட்ட தொழிலாளர்கள். இது தொழிலாளர்கள் ஆட்சி
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.
ஆனால் திராவி முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் லே
லே—ஆஃபினால் மூ ப்பட்டு வேலை இழந்த தொழிலாளர்கள்
யாராவது றந்திருக்கிறார்களா? அமைச்சரால் சொல்ல முடியுமா
என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல இந்த
கம்பெனிக்கு 4 கோடி ரூபாய்க்கு ஆர்டர் காத்துக்கொண்டிருக்
கின்றது. அப்படி 4 கோடி ரூபாய் ஆர்டர் காத்துக்கொண்டிருக்
கின்ற இந்த ட்ரான்ஸ்பார்மர் அண்ட் ஸ்விட்ச் கீர் என்ற
கம்பெனி லே-ஆஃப் என்று மூடப்பட்டிருக்கின்றது எனவே
மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைக் கவனிக்க வேண்டும்,

[திரு. என். வி. என். சோமு] [1983 ஏப்ரல் 9

அடுத்து செம்பரம்பாக்கத்திலே இருக்கக்கூடிய அரசினர் டாசன் இயந்திரக் செங்கல் தொழிற்சாலை 31–1–68 அன்று 166 ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அரிசன ஏழை எளியவர் களுடைய நிலத்தை எல்லாம் பிடுங்கி அந்தத் தொழிற்சாலையைக் கட்டினார்கள். அந்தத் தொழிற்சாலையில் 60 ஆயிரம் செங்கல் மாதந்தோறும் உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது 15 ஆயிரம் செங்கல்தான் மாதந்தோறும் தயாரிக்கப்படுகின்றது. அந்தப் பிரச்சினைக்கு உள்ளே நான் வரவில்லை. ஆனால் 35 லட்சம் கொடுத்து வாங்கிய மெஷின் பழுதடைந்துள்ளது. 13 இலட்சம் ரூபாய்க்கு செட் கட்டப்பட்டு வீணாக்கப்பட்டுள்ளது. அண்மையில் இந்த அரசு என்ன செய்தது தெரியுமா? அந்த 13 இலட்சம் ரூபாயில் கட்டப்பட்ட செட்டையும் 4 ஏக்கர் நிலத்தை யும் சிம்சன் ஃபோர்ட் கம்பெனிக்குக் கொடுத்து விட்டது இந்த அரசு. கடந்த 9 ஆண்டு காலமாக அந்த ஊழியர்களுக்கு எந்தவிதமான ஊதியஉயர்வோ, சலுகையோ இந்த அரசு கொடுக்க வில்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து பி அன்ட் சி மில்லில் 15 ஆண்டுக்காலமாக பணி யாற்றும் பதவி ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. 7, 8 ஆண்டுக்காலமாக இருக்கும் பயிற்சியாளர்களும் நிரந்தரமாக்கப் படவில்லை. இண்டர்-ட்ரேட் யூனியன் ரைவல்ரி. இன்றைக்கு எல்லா முதலாளிகளும் ஆரம்பித்திருக்கிறார்கள். சில யூனியன்களை இரண் ாக்கிவிட்டு அதிலே குளிர் காய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரைக் கேட்டால் நான் தலையிட முடியாது என்று சொல்கிறார். தொழிற்சங்க செயற்குழு உறுப்பினர்களான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சம்பத் குமார் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. காளிராஜன் ஆகி யோர் 6 மாத காலமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார் கள். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனையும் கடிப்பது போல் அந்த பி அண்ட் சி மில் நிர் ாகம் முதலிலே சாதாரண தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்தார்கள். பிறகு செயற்குழு உறுப்பினர்களைக் கைவைத்தார்கள். இப்போது லேபர் லீடர்ஸ் என்ற அளவிலே இருக்கும் ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்களைக் கூட வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறித்துக் கொள்ள வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர் அங்கே இருக்கிறார்கள். திரு. ஆர். கணபதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பி. அண்ட் சி. மில்லிலே இருக்கும்போது அவரால் அந்தத் தொழிற்சங்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் திரு. ஆர். கணபதி. அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். திரு. சி. கே. நாராயணன், வெட்டரண்ட் ட்ரேட் யூனியன் லீடர். ஆர். ஆதிகேசவலு, இவர் இங்கே பேசினார்களே, அந்த கா.கா.தே.கா கட்சியினைச் சேர்ந்தவர்



1983 ஏப்ரல் 9] (திரு. என். வி. என் சோமு)

டி. முனுசாமி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். சிந்தா சாகுல் அமீது, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். திரு. பாலகிருஷ்ணன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். சாகுல் அமீது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். இப்படி 7 பேர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றிய ஒழுங்குப் பிரச்சினையை அன்றைக்கு நான் எழுப்பினேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதனை முறையாகக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதற்குள்ளே நான் போக விரும்ப வில்லை. ஜனவரி 30 ஆம் தேதியிலிருந்து மார்ச் 23 ஆம் தேதி வரை 29 லோட் நிலக்கரி அங்கே திருட்டுப் போய் இருக்கின்றது. அப்படியானால் ஏன் அந்த பி அண்ட் சி மில் நஷ்டத்திலே ஓடாது? இதைக் கண்டு பிடிப்பது யார்? அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டாமா என்பதை நான் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் மிக மிக பிரமாதமாக இரண்டு காரியத்தை செய்து இருக்கிறார்கள். புராசிகுஷன் அதாவது தவறு செய்கின்ற முதலாளிகள் மீது சட்டத்தை மீறுகின்ற முதலாளிகள் மீது நடவடிக்கை எடுத்து இருப்பதாக விவர அறிக்கையில் மிக பிரமாதமாக சொல்லி யிருக்கிறார்கள். நானும் படித்துப் பார்த்தேன் எந்த முதலாளி சட்டத்தை மீறினார் இது அரசுக்கு எப்படி தெரிந்து தைரியத் தோடு தண்டித்து விட்டது என்று நானும் படித்துப் பார்த்தேன். யாரை தண்டித்து இருக்கிறார்கள் என்றால் கே எஸ். குருசாமி, வாழைப்பழ மண்டி அந்த வாழைப்பழ மண்டியைச் சேர்ந்த கே. எஸ். குருசாமி ஏதோ தொழில் கோர்ட்டு அவார்டு? கொடுத்த காரணத்தால் அபராதம் எவ்வளவு தெரியுமா 50 ரூபாய். அடுத்து இரண்டாவது கேஸ் அனுசுயா இண்டஸ்டிரீஸ். இது என்ன விவகாரம் என்றால் வழக்கு இன்னும் பெண்டிங். தேங்கி இருக்கிறது. கொடுத்ததே இரண்டு. ஒன்று வந்து 50 ரூபாய் அபராதம் வாழைப்பழ மண்டி. இன்னும் ஒன்று அனுசுயா இண்டஸ்டிரிஸ் கேஸ் பெண்டிங். ஒரு பாட்டு பாடுவார்கள். முள்ளு முனையில் 3 குளங்கள் வெட்டினேன். 2 குளம் பாழ் ஒன்றில் தண்ணீர் இல்லை என்று சொல்வது போல் போட்டதே இரண்டு கேஸ். ஒன்று 50 ரூபாய் அபராதம் இன்னும் ஒன்று பெண்டிங். இதற்கு ஒரு விவர அறிக்கை. இது ஒரு சாதனை. அதோடு மட்டும் அல்ல, இப்படி தவறு செய்கின்ற முதலாளிகள் பல பேர் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சதர்ன் அலாய் பவுண்டரி, மாதவரத்தில் இருக்கிறது. 250 பேருக்கு மேலே பணியாற்றினாலே சிற்றுண்டிச்சாலை கேண்டீன் கட்டாயமாக இருக்க வேண்டும் என்பது சட்டம். அங்கே 300 பேர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

தர்ன் அலாய் பவுண்டரியில் 250 பேருக்கு மேல் பணியாற்று கிறார்கள். அவர்கள் சிற்றுண்டிச்சாலை வேண்டும் என்று அதன் தொழிற்சங்கம் 1-3-1980 இல் ஒரு கடிதம் எழுதியது அதற்கு அரசாங்கம் 25-4-1980 இல் பதில் எழுதியது. மீண்டும் 16-4-1980 இல் ஒரு கடிதம் எழுதினார்கள். மீண்டும் 3-8-1981 இல் ஒரு கடிதம் எழுதினார்கள், மீண்டும் 11-8-1981 இல் கடிதம் எழுதினார்கள், அதற்கு 12-8-1982 இல் பதில் வந்திருக்கிறது. மீண்டும் 30-8-1982 இல் அவர்கள் கடிதம் போட்டிருக்கிறார்கள். இதுவரை கேண்டீன் வந்ததா என்றால் வரவில்லை. [illegible] உறுதியாக கூறியும் தொழிலாளர்கள் [illegible] அங்கே சிற்றுண்டிச்சாலை கட்டப்படும் என்று உறுதி கூறியும் [illegible] கேண்டீன் அங்கே திறக்கப்படவில்லை [illegible] திருவனந்தில் 50 இலட்சத்துக்கு மேல் [illegible] அந்த நிர்வாகம் பல கட்டிடங்களை அங்கே [illegible] இருக்கிறது. ஆனால் சிற்றுண்டிச்சாலை கட்டு [illegible] பல முறையீடுகள் அனுப்பியும் அதை ஏன் என்று கேட்பதற்கு அரசாங்கத்திற்கு மனம் இல்லை. [illegible] 50 ஆயிரம் அபராதம் போட்டுவிட்டு [illegible] காட்டிக் கொண்டு இருக்கிறார்கள் [illegible] அரசாங்கத்தார். நான் இதை இங்கே வெட்கத்தோடு, வேதனையோடு, வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் சிப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் அங்கே பாலசுப்பிரமணியம் அவர்கள் சீனியர் [illegible]. மூத்தவர், அவருக்கு நியமனம் தரப்படவில்லை நியாயம் கிடைக்கட்டும் அவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். நீதிமன்றம் இவருக்கு அவரைத்தான் சீனியாரிட்டி பிரகாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்ன செய்தார்கள். பைபர்கேஷன். அவருக்கு சீனியர் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் சேப்டி, எல்., ஐ.இன் தண்டபாணி என்பவருக்கு அட்மினிஸ்ட்ரேஷன், அண்டு இன்ஸ்பெக் ஏன் இந்த நிலை தனக்கு வேண்டியவர்களுக்கு பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகும் இப்படி சட்டத்தின் சந்து பொந்துகளில் அரசாங்கமே நுழைகின்ற போது தனிப்பட்ட முதலாளிகள் நுழைந்தால் நாம் எப்படி தட்டிக் கேட்க முடியும். நாம் ஒழுங்காக இருந்தால் தானே தவறு செய்யும் முதலாளிகளை தட்டிக் கேட்க முடியும்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, டிபார்ட்மெண்டில் என்ன என்ன போஸ்டு எப்போது எப்போது கிரியேட் பண்ண வேண்டும் என்பது எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் என்.வி.என். சோமு அவர்களைக் கேட்டுக் கொண்டு செய்ய வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்களா? ஏற்கனவே ஒரு சிப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் என்று இருந்ததை இப்போது இரண்டாக வேலை பளுவின்



காரணமாக பிரித்துக் கொடுத்து இருக்கிறோம். அதை தான் செய்து இருக்கிறோம். அதில் கூட ஒரு தனிப்பட்ட அதிகாரியின் பெயரை எடுத்து இங்கே பேசுவது முறையா? என்று நான் கேட்கிறேன்.

There is one inspector of Factories now we have got two. இதில் என்ன குறை காணுகிறார்கள் என்று தெரியவில்லை. உங்களை எல்லாம் இனிமேல் கூப்பிட்டு, முக்கியமானவர்களை கூப்பிட்டு, மாநாடு போட்டு ஒவ்வொருவரையும் முக்கியமான தொழிற் சங்கத் தலைவர்களை கூப்பிட்டு யாருக்கு எப்போது புரமோஷன் தருவது, யாரை டிரான்ஸ்பர் செய்வது, அந்த மாதிரி முறையீடு என்னிடம் வருகிறது. யாரை சீனியர் லிஸ்டில் முதலில் வைப்பது, இதை எல்லாம் அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கருதுகிறார்களா? அப்படித்தான் அவர்கள் ஆளுகின்ற மாநிலத்திலே நடந்து கொண்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாநாடு கூட்டி கேட்க வேண்டாம்.** நான் கேட்க வந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. முதலிலேயே ஏன் செய்யக் கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே,** ஒரு சீப் இன்ஸ்பெக்டர் இருந்த இடத்தில் இப்போது இரண்டு சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் இருக்கிறார்கள். ஒருவர் இருக்கிற இடத்தில் 2 பேர் இருக்கிறார்கள்.** (கூச்சல்—குழப்பம்)

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர்: அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். வி. என். சோமு: தலைவர் அவர்களே, அவர் மாநாடு என்று சொன்ன காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர்கள் உணர்வுடன் சொல்கிறோம். அரசாங்கத்திற்கு அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற பக்குவம் மன வளம் இருக்க வேண்டும். ஏதோ தொழிற் சங்கத் துறையில் நான் ஒரு

** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(திரு. என். வி. என். சோமு) [1983 ஏப்ரல் 9

மாணவனாக இதை எடுத்துக் காட்டுகிறேன். இதை திருத்த
வேண்டுமென்று சொல்கிறோம். மனம் வைனம் இருந்தால் செய்ய
லாம். இல்லாவிட்டால் எங்களுக்கு என்ன வந்தது. குற்றத்தை
எடுத்துக் காட்டுவது எதிர்க்கட்சியின் வேலை. அவை முன்னவர்
நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்,

The Opposition party has its say, the **Rulling party** has its way
என்று அவருக்கே உரிய பாணியிலே சொல்வார். எங்களுடைய
கடமை கன்ஸ்ட்ரக்டிவ் கிரிட்டிசிஸம் என்பார்களே அதைத்தான்
சொல்கிறோம். கேட்டால் கேளுங்கள், எடுத்துக் காட்டுவது
எங்கள் கடமை. நீதிமன்றத்திற்கு அந்த அதிகாரி சென்று தன்
னுடைய உரிமையை நிலைநாட்டி வந்ததற்குப் பின்னால் ஒரு
ஞானோதயம், வேலை பளு சாஸ்தியாக தெரிகிறது, எல்லாப்
பிரச்சினைகளும் தெரிகிறது என்றால் அதைத்தான் நான் சுட்டிக்
காட்டுகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

நகர சுத்தித் தொழிலாளர்கள் ஆர்.டி.எல்.ஏ. செக்கரட்டரி
இங்கே உட்கார்ந்து மத்திய தொழிற் சங்கத் தலைவர்கள்
எல்லாம் ஒப்பந்தம் போட்டார்கள். அப்படி ஆர்.டி.எல்.ஏ.
செக்கரட்டரி போட்ட ஒப்பந்தத்தை திண்டுக்கல் நகர கமிஷனர்
மதிக்கவில்லை? மீறுகிறார். உரிமை கொடுக்க மறுக்கிறார்.
அவர்களுக்கு வேலை பளு, தங்களுடைய வாரிசுக்கு வேலை,
வாராந்திர விடுமுறை இதைத்தான் அவர்கள் கேட்கிறார்கள்,
வேறு ஒன்றும் இல்லை, ஆர்.டி.எல்.ஏ. செக்கரட்டரி ஒப்பந்தம்
போடுகிறார். திண்டுக்கல் நகர கமிஷனர் மறுக்கிறார்
இங்கே பக்கத்திலே இருக்கிற ஆம்பூர் நகர ஆணையாளர் மறுக்
கிறார், 8 ஆம் தேதி வேலை நிறுத்தம் நேற்று தொடங்கி
யிருக்கும் என்று கருதுகிறேன்.

தொழில் தகராறு சட்டம் இருக்கிறது அதிலே அழைத்தால்
வரமாட்டேன் என்று முதலாளிகள் சொல்கிறபோது அவர்களை
சம்மன் போட்டு அழைப்பதற்கு தொழிலாளர் நல அதிகாரி
களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இடையாது. அழைப்பாணை
அனுப்ப சம்மனிங் பவர்ஸ் இருக்கக் கூடிய முறையிலே சட்டத்
திலே வெகு சீக்கிரமாகக் கொண்டு வர வேண்டும். அதனால்
பல முதலாளிகள் பேச்சு வார்த்தைக்கே வரவில்லை. இதை
அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டம் ஆயிரம் ரூபாய்க்கு
மேலே சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இல்லை. அந்தச் சட்
டத்தைத் திருத்த வேண்டுமென்று அதை மத்திய அரசிடம்,
சொல்லவேண்டுமென்று பல முறை எல்லோரும் சொல்லியிருக்கி
றோம். இன்னும் செய்யவில்லை. அந்த வரம்பை அதிகரிக்க
வேண்டுமென்ற குரலை எல்லோரும் கொடுத்திருக்கிறோம்.
ஆனால், நடைபெறவில்லை. தமிழ்நாட்டில் பல முதலாளிகள்
இ.எஸ்.ஐ.க்கு செலவு செய்ய வேண்டிய பணத்தை செய்யாமல்



1983 ஏப்ரல் 9] (திரு. என். வி. என். சோமு)

மிச்சப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை
அந்தப் பணத்தை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப்
அமைச்சரின் ஆக்டிலே வருகிற போதும் ஆயிரம்
போலவே கிராச்சுட்டி தாண்டினால் அவர்களுக்கு சலுகை
ரூபாய்க்கு மேலே சம்பளம் திருத்த வேண்டுமென்று கேட்டுக்
இல்லை, இந்தச் சட்டத்தையும் பண்ட் ஆக்டின் கீழே வீடுகட்டு
கொள்கிறேன். பிராவிடண்ட் அவர்கள் செலுத்திய பணத்தி
வதற்கு தொழிலாளர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டது,
லிருந்து முதல் தவணையாக இரண்டாவது தவணை
முதலாளிகள் செலுத்திய பணத்திலிருந்து பிராவிடன்ட் பண்
கொடுக்க வேண்டும், தங்கள் பங்கிலிருந்து—பிராவிடன்ட் பண்
டில்—கடன் பெற்று மனைகளை அவர்கள் வாங்கிவிட்டார்கள்.
முதலாளிகள் கான்ட்ரிபியூஷனிலிருந்து திருப்பிக் கொடுத்தால்
தான் அவர்கள் வீடு கட்ட முடியும். பல தொழிற்சாலைகளில்
பல இடங்களிலே பிரச்சினையாக இருக்கிறது. அதையும் அர
சாங்கம் யாரிடம் சொல்ல வேண்டுமோ சொல்லி ஏற்பாடு செய்ய
**வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.**

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் பணியாற்றும் ஊழியர்
களுக்கு விடுமுறை கிடையாது, வாராந்திர ஓய்வு கிடையாது,
அங்கே சீனியர் பெர்சனல் மேனேஜர் இருக்கிறார். நம்முடைய
தொழிலாளர் நலத்துறை சார்பாக ஒருவர் அனுப்பப்பட்டு அங்கே
இருக்கிறார், டி.சி.எல்., அவருக்கு எந்தவிதமான அதிகாரமும்
இல்லை. வருக்கு மேலாக சூப்பர்புளுவஸ் ஆக இன்னொரு
திரு. ராஜ்மோகன் என்ற ஒருவர் ரெவின்யூ அதிகாரி நம்முடைய
அதிகாரியைப் பணியாற்றவிடாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கி
றார்; அதையும் மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,
அடிக்கடி பாடுகிற பாட்டை நான் மறுபடியும் பாடுகிறேன். ஏன்
என்றால் மாதவரம் பால் பண்ணையில் 1,500 பேர்கள் இருக்கி
றார்கள். அவர்கள் ஆண்டுவிழா கொண்டாடுகிறார்கள், எங்க
ளுக்கு வேலை போய் ஒரு ஆண்டு ஆயிற்று என்று. சினிமா
படத்திற்கு ஆண்டு விழா கொண்டாடுவார்கள், தொழிலாளர்
ஆண்டு விழா கொண்டாடுவார்கள், ஆனால் வேலை போய் ஒரு
ஆண்டு ஆகிவிட்டதாக அவர்கள் ஆண்டு விழா கொண்டாடு
கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, ஆரணியிலே பட்டிமார்பு நெசவுத் தொழிலாளர்கள்
இருக்கிறார்கள், அவர்கள் 90 ஆண்டுக்காலமாக நைஜீரியாவிற்கும்
மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கும் அவர்கள் ஏற்றுமதி செய்து
கொண்டிருந்தார்கள். அன்றைக்கு 500 ரூபாய் சம்பாதித்துக்
கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அந்தத் தொழில் நசிந்து 150
ரூபாயாகி அவர்களுடைய வருமானம் 50 ரூபாயாகி பஞ்சம்,
பசி, பட்டினி கிடக்கக்கூடிய நிலையிலே ஊர்வலம் வந்தார்கள்.
அவர்களுடைய கோரிக்கை முதலமைச்சர் நிதியிலிருந்து அவர்
களுக்கு ஏதாவது நிவாரணம் தரவேண்டுமென்றும், 2 கிலோ

...பிடி தினசரி கொடுக்கவேண்டுமென்றும், தறி ஒன்றுக்கு ஒரு ரூபாய் நிவாரணம் வேண்டுமென்றும் கேட்கிறார்கள். அவற்றை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஒன்றிரண்டு விஷயங்களைக் கூறி முடித்துவிடுகிறேன். விவர அறிக்கையில் முக்கியமான பகுதி. அரசாங்கம் எல்லாவற்றிலும் தமிழை வளர்ப்பதாக பீற்றிக்கொள்கிறது— மன்னிக்க வேண்டும் அந்த வார்த்தையைச் சொன்னதற்கு : சொல்லிக்கொள்கிறது. இந்த விவர அறிக்கையில் தன் முயற்சிக்கும் தொழில் பாதுகாப்பிற்கும் இரண்டு விருதுகள் தரப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஒன்றிற்கு பெயர் சிரம்வீர் அவார்டு அது என்ன அவார்டு? ஒன்றுமே புரியவில்லை. நம்முடைய தமிழ்நாடு அரசுதான் கொடுக்கிறது. அதை உடனடியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தொழிலாளர் இலாக்காவில் (மணியடிக்கப்பெற்றது) பல்வேறு போஸ்ட்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. விரைவில் முடித்து விடுகிறேன். லேபர் பிராப்ளம், மிகுந்த பசியோடு பேசிக்கொண்டிருக்கிறோம் அந்த போஸ்ட்களை நிரப்ப வேண்டும். 28-ஆம் தேதி பேரணி நடத்தினோம். அதற்கு போட்டியாக இன்றைக்கு பேரணி நடத்தினார்கள். அன்றைக்கு பேராசிரியர் அவர்கள் சொன்னதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

## 7. அறிக்கை அளித்தல்.

### இராமமூர்த்தி கமிஷன்—நீதிபதி மாற்றம அமைச்சர் அறிக்கை

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற பேரவை 106-வது விதியின் கீழ் சட்டமன்றப் பேரவைக்கு ஒரு அறிவிப்பை அளிக்க விரும்புகிறேன்.

1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாளிட்ட அரசாணையில் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி அவர்கள் மது வகைகள் பற்றிய உரிமங்கள் வழங்குவது பற்றி எழுப்பப்பட்ட சில புகார்களை விசாரித்து ஒரு அறிக்கை அரசிற்கு தருவதற்கு ஒரு தனி நபர் விசாரணைக் குழுவாக நியமிக்கப்பட்டார்கள். முதல் ஆறு மாத கால அளவில் விசாரணை முடித்து அரசிற்கு அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். இந்த கால அளவு அவ்வப்போது நீடிக்கப்பட்டு, கடைசியாக 1983-ஆம் ஆண்டு மே திங்கள் 29-ஆம் நாள் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி அவர்களுக்கு இருதய நோய் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசிற்கு தகவல் வந்துள்ளது. அரசினுடைய மருத்துவ நிபுணர்கள் திருவாளர்கள் ...





எஸ். இராஜகோபாலன் அவர்களும், கே. வி. திருவேங்கடம் அவர்களும் அவருடைய உடல் நலத்தைச் சோதித்து, அவருக்கு இருதய நோய் ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு 12 வார காலம் பூரண ஓய்வு தேவைப்படுவதாகவும் இனிமேல் அவர் தொடர்ந்து கடினமான பணிகளிலே ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளார்கள். டாக்டர் ஆர். எஸ். இராஜகோபாலன் அவர்கள் நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி அவர்களை சில ஆண்டுகளாகவே அவ்வப்போது பார்த்து பரிசோதித்து வந்துள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. நீதிபதி கே. எஸ். இராமமூர்த்தி அவர்களுடைய உடல் நலப் பாதிப்பைப் பற்றி அரசு கவலையுடன் கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது. அதனாலே அவருக்கு மேலும் பூரண ஓய்வு தேவைப்படுவதாலும், இருதய நோயால் பாதிக்கப்பட்ட அவர் இனிமேல் கடினமான பணிகளிலே ஈடுபடுவது தவிர்க்கப்படவேண்டுமென்று மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளதாலும், ஏற்கெனவே இந்த விசாரணை குழு துவக்கி 17 மாதங்கள் ஆகி விட்டதாலும், மேலும் காலம் தாழ்த்தாமல், ஆக பொது நலன்களை கருதி விசாரணையை விரைவில் முடித்து அறிக்கையை பெற விரும்புவதாலும், நீதிபதி திரு. கே. எஸ். இராமமூர்த்தி அவர்களை பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. டி. இராமபிரசாத்ராவ் அவர்களை இந்த விசாரணையைத் தொடர்ந்து முடித்துத் தர தனிநபர் விசாரணைக் குழுவாக நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்ற தகவலை இந்த பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—40)

## 6. வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

*திரு. ப. நெடுமாறன் : பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் திடீரென்று இப்பொழுது ஒரு அழைப்பு வந்திருக்கிறது. Southern Railway General Manager இடமிருந்து வந்திருக்கிறது. கிருஷ்ணா ஆற்று நீரை இரயில் மூலமாகக் கொண்டு வந்ததைத் தமிழக மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு விழா நடத்துகிறார்கள். அதிலே நமக்கு ஆட்சேபணை யில்லை, மகிழ்ச்சி. தண்ணீர் கொடுத்ததற்கு நன்றி. இந்த, விழாவில் மத்திய அரசாங்க அமைச்சர்கள் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்களும், மாண்புமிகு கனிகான் சௌத்ரி அவர்களும் கலந்து கொள்கிறார்கள். அதற்கும் நன்றி, பாராட்டுகிறேன். ஆனால், இந்த விழாவிலே தமிழக அமைச்சர்கள் யாரும் அல்லது தமிழக அரசுப் பிரதிநிதிகள் யாரும் இல்லை.

---

** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரின் ஆணைக் ...

அவர்கள் அளிக்கக்கூடிய இந்த நீரைப் பெற்றுக்கொள்வதற்காவது இவர்களை அழைத்திருக்கலாம். எதுவுமே இல்லாமல் இது, மாதிரி ஒரு விழா இந்த அரசு....

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பிற்பகல் 4 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு நீங்கள் சொன்ன டெல்லி அமைச்சர்கள் பேச இருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குத் தெரியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு). No Comment on tha . (குறுக்கீடு). எனக்கு அழைப்பு வரவில்லை, என் கையில் யாரும் கொடுக்கவில்லை.

இந்த மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் அரிய, பெரிய கருத்துக்களை வழங்கினார்கள். நிதானமாக ஆரம்பித்து, நிதானமாக நடந்துக்கொண்டிருந்த விவாதத்தில் எப்பொழுதும்போல் அருமைச் சகோதரர் சோமு சூடேற்றினார். அதில் சில வார்த்தைகளை என்னைப் புண் படுத்தும்படியாகச் சொன்னாலுங்கூட, அதை நான் பெரிதாகப் பொருட்படுத்த வில்லை. அவர் பேசிய வேகத்திலே அப்படி பேசினார் என்று நான் எடுத்துக்கொள்கிறேன்.

பெருமையாக ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆயிரம் கிரிட்டிசிசம் எங்கள் மீது சொன்னாலும் யார் முடிக்கும் போதும் இது தொழிலாளர் துரோக அரசு, இது தொழிலாளர் துரோக அரசு என்று முடித்தால், இங்கே தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுகிறது என்றால், மற்ற மாநிலங்களைவிட தொழில் அதிபர்கள் தமிழகத்தில், தொழிற்சாலைகள் ஆரம்பிக்கலாம், இன்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் நன்றாக இருக்கிறது, பிரச்னைகள் நன்றாக தீர்க்கப்படுகின்றன, எந்த எக்ஸ்ட்ரீமுக்கும் போகாமல் இந்த அரசு நல்ல முறையில் நடந்து செல்கிறது என்ற நிலைமை யைப் புரட்சித் தலைவர் அரசு உண்டாக்கி இருக்கிறது என்பதைச் சொல்லி, பல்வேறு காலங்களிலேயும் negotiation, c ncila ion, a b trati on adjudica ion இந்த வகைகளை நீங்கள் கையாண்டு, வருவதனாலும், வேலைநிறுத்தத் திற்குப் போவதற்கு முன்னால் நான் சொன்ன வகை களைக் கையாண்டு வருவது தொழில் தகராறுகளைத் தீர்ப்ப தற்கு நன்றாக இருக்கும். அந்த மாற்றம் தேவை. எதற் கெடுத்தாலும் wild cat strik— திடீரென்று வேலை நிறுத்தம் செய்வது தேவையில்லை. காலம் மாறி வருகிறது, உடையி லிருந்து, உணவிலிருந்து பேச்சு நடையிலிருந்து, எல்லாவற்றிலும் மாற்றிவிட்டோம், தொழிலாளர் பிரச்னையை அணுகுவதிலே, ஒரு பெரியமாற்றத்தைக்கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசு 5 ஆண்டுக்காலமாகச் சொல்லிக் கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படையாக எதிர்த்தாலும்



அதை ஏற்றுக் கொண்டு நீங்கள் எல்லா தொழிற்சங்கத் தலைவர் களும் பேச்சுவார்த்தையிலேயும் 'நெகோஷியேஷன்'லேயும் கன்சிலியேஷனிலேயும் வழக்கு மன்றத்திற்கு அனுப்ப வேண்டு மென்று கேட்பதன் மூலமாக, அதிலேயும் நம்பிக்கை வைத்து வருகிறீர்கள் என்பதற்காக, புரட்சித் தலைவர் ஆட்சியின் சார்பாக, தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரையும் நான் பாராட்டுகின்றேன். தமிழ்நாட்டில் நேற்றையதினம் கணக்குப் பிரகாரம் 1986 பேர்கள் தான் வேலை நிறுத்தம், லாக் அவுட் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். Daily Situation Repor என்று வருகிறதே அதிலே தகவல் வந்திருக்கிறது. இதற்கெல்லாம் ஒத்துழைக்கக் கூடிய மாண்புமிகு—இங்கே இருக்கக்கூடிய—தங்கள் வாழ்நாள்பூராவும் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டு தியாகம் செய்து கொண்டிருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களை—அரசியல் வாதிகளாக முழுநேரம் இருந்தாலும்—தொழிற்சங்கத்திலே ஈடுபடக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களை—இந்தச் சபைக்கு அப்பாலிருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களைப் புரட்சித் தலைவர் ஆட்சியின் சார்பாக நான் பாராட்டுகிறேன்.

டிரான்ஸ்ஃபார்மர் சுவிச் கீரைப்பற்றிச் சொன்னார்கள். அருமைச் சகோதரர் குலசேகரன் அவர்கள் சொன்னார்கள், மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். எங்களிடத்தில் இருக்கின்ற புள்ளி விவரத்தின்படி, 220 தொழிலாளர்கள் இருப்பதாகப் புள்ளி விவரம் வந்திருக்கிறது. ஒவ்வொருவருக்கும் 250 ரூபாய் தர வேண்டுமென்று புரட்சித் தலைவரவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள் ; அந்தக் கோப்பு என்னிடம் வந்து விட்டது ; பார்த்து விட்டேன் : பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள பெருமைப்படுகிறேன். Waste Cot on தொழிற்சாலைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதை, Minimum wage Act Schedule இல் சேர்த்து, அட்டவணையில் சேர்த்து அதற்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் என்.வி.என். சோமு அவர்கள் சம்மனிங் பவர் வேண்டும், சம்மனிங் பவர் வேண்டும் என்று சொன்னார்கள். நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். Cate ing Establishment Act-இல் அப்படிப் பட்ட சம்மனிங் பவரை நாங்கள் இங்கே நிறைவேற்றி அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். Industri l Disputes Act இல் அதை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருந் தோம். அதில் இரண்டு இருக்கின்றன. ஒன்று, தொழிலாளர் கள், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் நேரடியாக வழக்கு மன்றம் செல்ல வேண்டுமென்பது ; அதுவும், பேச்சு வார்த்தைக்கு வராதவர்களை சம்மன் அனுப்பி அனுப்ப வேண்டு மென்பதும் சேர்ந்த ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து

சட்டமாக நிறைவேற்றி, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம் ; மத்திய அரசாங்கத்திலிருந்து இன்னும் அதற்கு அனுமதி வரவில்லை. இந்த அரசு அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது.

கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசும்பொழுதுகூடச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் கொண்டு வரும்பொழுது மாநில அரசாங்கம் ஏன் அதற்காகக் கொண்டு வருகிறது என்ற பாவனையில் பேசினார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன், புரட்சித் தலைவருடைய ஆட்சி தொழிலாளர் பிரச்னையில் எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதற்காக; எதற்கெடுத்தாலும் போய் மத்திய அரசாங்கத்துடன் மோதிக் கொண்டிருக்க முடியாது :

We cannot be having confrontation always நாம் சொல்வதை எடுத்துச் சொல்லி, பிரச்னையைத் தீர்க்க முடிவெடுக்க வேண்டுமே தவிர எதற்கெடுத்தாலும் மோதக் கூடாது. சில நேரங்களில் அவர்கள் செய்யவில்லை என்றால், கன்கரண்ட் லிஸ்டாக இருப்பதால் நாம் செய்யலாம். கட்டிடத் தொழிலாளர் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. அவர்கள் பல மாதங்களாகப் போராடி வருகிறார்கள். அவர்கள் வேலை நிலைமைகளை நிர்ணயிக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அப்படிப்பட்ட அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவருவதற்கு மத்திய அரசாங்கம் ஒரு டிராஃப்ட் பில்லைத் தயார் செய்து மாநில அரசாங்கத்திற்கு அனுப்பிற்று. அதிலே என்னென்ன திருத்தங்கள் இருக்க வேண்டுமென்று சொல்லி, இந்த அரசு அந்தத் திருத்தங்களைப் பரிந்துரைகள் செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியது. ஆனால் இன்றுவரையில் மத்திய அரசாங்கம் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. மத்திய அரசாங்கம் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லையே என்று வாளாவிருந்து விடாமல் மாநில அரசு ஒரு சட்டத்தைத் தயார் செய்து, புரட்சித் தலைவருடைய அனுமதியையும் பெற்று இந்த அரசின் சார்பாக இந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் அனுமதியை, Concurrence பெறுவதற்காக மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அது வந்திருக்குமேயானால் அதைச் சட்ட மன்றத்திலே நாம் அறிமுகம் செய்து கொண்டு வந்திருக்கலாம் ; அதை நிறைவேற்றியிருக்கலாம். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் கட்டிடத் தொழிலாளர்களை உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன், உங்களுக்காக இந்த அரசு பாடுபடுகிறது ; உங்களுடைய ஷேம நலத்திலே அக்கறை வைத்திருக்கிறது ; உங்களுக்காகச் சட்டத்தைத் தயார் செய்து விட்டது ; மிக்க சிரமப்பட்டு, ஓட்டை உடைசல்கள் கூடுமான வரையில் இல்லாத அளவிற்கு, எங்களுக்குத் தெரிந்த ... ணக்கங்களை வைத்துத் தயார் செய்த மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தினுடைய கன்கரன்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



அண்ணாதாசன் அவர்கள் பேசும்பொழுது அங்கே ஒரு நிலையான கட்டிடம், ஈ.எஸ்.ஐ. பற்றி வேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றிக் கவனிக்கப்படும். அதைப் பரிசீலனை செய்யலாம் என்று சொல்கிறேன்.

லே ஆஃப்-ஐப் பற்றியும், சிம்கோ மீட்டரைப் பற்றியும் கந்தசாமி மில்ஸ் பற்றியும் அவர்கள் சொன்னார்கள், சிம்கோ மீட்டரைப் பற்றி ரமணி அவர்களும் பேசியிருக்கிறார்கள்.

நகரசுத்தித் தொழிலாளர்களைப் பற்றிப் பேசினார்கள்; புரட்சித் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்க அந்தப் போராட்டம் தள்ளிப் போடப்பட்டிருப்பதற்காக நான் அரசின் சார்பிலே நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேச்சு வார்த்தைகளின் மூலமாக நல்ல சுமுகமான முடிவு வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்வார்களேயானால் அவர்களை பர்மனென்ட் செய்ய வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்து, நாம் நிறைவேற்றியது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே, சில முதலாளிகள்தான்—எல்லோரும் அல்ல, சில முதலாளிகள்தான்—தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள்; எட்டு, பத்து பேர்களுக்கு மேல் இல்லை. மற்ற நிறுவனங்களில் அமுலில் இருக்கிறது. எனவே, தொழிற்சங்கத் தலைவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன், You have got great responsibility. உங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பிருக்கிறது ; இன்னும் கொஞ்சம் கடினமாக உழைக்க வேண்டுமென்பது அரசின் சார்பாக என்னுடைய வேண்டுகோள்.

இந்த அரசு தொழிற்சங்கத் தலைவர்களிடத்தில் நிரம்ப மரியாதை வைத்திருக்கிறது ; தொழிற்சங்கம் நன்றாக வேலை செய்தால் தான் ஒரு நாட்டின் தொழிற் பிரச்னைகள் தீரும் என்பதில் இந்த அரசுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிற காரணத்தால் தான் தொழிற் சங்கத் தலைவர்களை அடிக்கடி அழைத்துப் பேசுகிறோம். தமிழ்நாடு பூராவும் உள்ள தொழிற் சங்கத் தலைவர்களுடைய அமைப்பைக்கூட, நாங்கள் கே.சி.பி. பிரச்னையின்பொழுது தமிழகத்திலுள்ள எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களையும் அழைத்து நாங்கள் இந்த அரசின் சார்பில் புரட்சித் தலைவரவர்கள் சொன்னதற்கேற்ப அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-50)

உங்களுக்குப் பெருமதிப்பு வைத்திருக்கிறோம். நான் உங்களைக்
கேட்டுக்கொள்வதெல்லாம்—எந்தெந்த நிறுவனத்தில் கொடுக்க
வில்லை என்று சொல்கிறார்களோ, கொடுக்காமல் இருக்கிறார்
களோ, தொழிற்தகராறை எழுப்புங்கள் (raise an industrial—
dispute—உங்களுக்கு எத்தனையோ கிளைகள் இருக்கின்றன.
அந்தக் கிளைகளுக்குக் கடிதம் எழுதுங்கள்; ஜெனரல் பாடி
கூட்டம் ஏற்பாடு செய்யுங்கள்; மாநாடு கூட்டுங்கள்; அதிலே
சொல்லுங்கள்—மிகப் பெரிய சட்டம், ஒரு நல்லசட்டம், நாங்கள்
எல்லாம் ஆதரவு தந்த சட்டம்; 6, 7 ஆண்டுகளாக டெம்பர
ரியாக இருந்து தெருவிலே தூக்கி எறியப்பட்டவர்கள்; தூக்கி
எறியப்படாமல் இருப்பதற்குப் புரட்சித் தலைவர் ஆட்சி கொண்டு
வந்த சட்டம், எங்களால் ஆதரிக்கப்பட்ட சட்டம்; அந்தச்
சட்டத்தை இப்போது முதலாளிகள் நிறைவேற்றமாட்டேன்
என்று சொல்கிறார்கள். நீங்கள் எங்கெங்கே எல்லாம் அப்படி
செய்கிறார்கள் என்று சொல்லி அதைப் பொறுத்து நீங்கள்
தொழில் தகராறுகளை எழுப்புவீர்களேயானால், இந்தச்
சட்டம் முழுமையாகச் செயல்படுவதற்கு இந்த அரசு எல்லா
முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும். அதிலே ஏதாவது
ஓட்டைஉடைசல் இருக்கின்றது என்று சொன்னால்,—மாண்புமிகு
ஆறுமுகம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 'ரெட்ராஸ்
பெக்டிவ்' பற்றி பரிசீலனை செய்கிறார்கள் என்று.
அதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் உண்டு என்றும்,
அதிலே ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்ற வார்த்தை உப
யோகப் படுத்தாவிட்டாலும், 'ரெட்ரோ ஆக்டிவ் எபெக்ட்''
என்று அதற்கு சொல்லலாம். கிராடுவிட்டி சட்டத்திற்கு எந்த
முறை பொருந்துமோ அது இதற்கும் பொருந்தும். கிராடுவிட்டி
சட்டம் நிறைவேற்றினாலும், ஒவ்வொரு ஆண்டுக்கும், 15
நாட்கள் என்று சொல்லும்பொழுது எத்தனை ஆண்டுக்காலம்
இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் தொழிலாளி வேலை
செய்தாரோ அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்
என்று கிராடுவிட்டி ஆக்ட் சொல்வதைப் போலத்தான் பர்ம
னென்ட் செய்யவேண்டுமென்பது முதல் தேதிக்கு அமுலுக்கு
வந்தாலும்கூட, 'இட்இஸ் ரெட்ரோ ஆக்டிவ்'. இதற்கு முன்னால்
அதற்குச் செயல்படக் கூடிய தன்மை உண்டு. அப்படியும் அதில்
ஏதாவது ஓட்டை உடைசல் இருக்கிறதா என்பதை நாங்கள்
சட்ட இலாகாவைக் கலந்து பேசி (if here is any lacuna, we will
remove it if இன்னும் ஏதாவது 'லூப்ஹோல்' இருக்குமேயானால்,
அதை ரிமூவ் பண்ணிவிட்டு லூப் ஹோல் இருக்கின்ற—லாகுனா
இருக்கின்ற இடத்தை அடைப்பதற்கு வேண்டிய எல்லா
முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும் என்பதை இந்த நேரத்
திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிரிட்டானியா சங்கத்தின் அங்கீகாரத்தைப் பற்றி தங்கமணி
அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்
கிறேன். அங்கீகாரம் கொடுப்பது என்பது அங்கே இருக்கக்கூடிய



றுவனத்தினுடைய பொறுப்பு. அப்படி அங்கீகாரம் கொடுக்க
ல்லை என்று சொன்னால், Evaluation and Implementation
ommittee என்ற ஒரு கமிட்டி இருக்கிறது.
ந்தக் கமிட்டிக்கு அரசு லேபர் கமிஷன் தலைமை தாங்குவார்.
ங்கே நீங்கள் அனுப்பலாம். அதைப் பரிசீலனை செய்ய எல்லா
ரதிநிதிகளும் இருக்கிறார்கள். அதனுடைய பரிந்துரையை
றுவனத்திற்கு அனுப்புவார்கள். அந்த முறையை நீங்கள்
கயாளவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக்
கொள்கிறேன்.

அடுத்து சிம்கோ மீட்டர்ஸ் பற்றி மாண்புமிகு ரமணி அவர்கள்
கேட்டார்கள். 25 எண் பிரகாரம் செயல்பட வேண்டுமென்று
சொன்ன காரணத்தால் அந்த நிறுவனம் கமிஷனரிடம் கேட்டு
மனு செய்திருக்கிறது. அதற்கு ஆதரைஸ்டு ஆபீசர் உண்டு.
அந்த அதிகாரி லேபர் கமிஷனர்தான். எனவே 340 பேர்
என்று கருதுகிறேன். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்கு
மேயானால், அவர்களை ரிட்ரென்ச் செய்ய வேண்டுமென்ற
மனு லேபர் கமிஷனருக்குப் போட்டிருக்கிறார்கள். அந்த
மனுவை லேபர் கமிஷனர் விசாரித்துக்கொண்டிருக்கிறார்.
தொழிற்சங்கம் வருவதிலே கொஞ்சம் தாமதப்படுகிறது. சரியாக
அட்டெண்ட் செய்வதில்லை என்ற ஞாபகம்தான். (குறுக்கீடு)
சரியில்லை என்று உறுப்பினர் சொல்கிறார்கள். அது சரியில்லை
என்று சொன்னால் ஒழுங்காக வருகிறார்கள் என்று சொன்னால்
நான் மகிழ்ச்சியடைகிறேன். கமிஷனர் தீர்ப்புக் கொடுப்பதற்கு
அவர்கள் உதவி செய்யவேண்டும். அதைப்பற்றி தீர்ப்பு
வழங்குவதற்கான அதிகாரம் கமிஷனருக்குத்தான் உண்டு.

கன்னியாகுமரி தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாக
ஒரு ஒப்பந்தம் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அரசாங்கம்
இதை கார்ப்பரேஷனாக மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு
களைச் செய்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

விஸ்கோஸ் என்பதைப் பற்றி மாண்புமிகு என். வி. என்.
சோமு அவர்கள் சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை.
40 சதவிகிதம் அங்கே எடுத்து வைத்துவிட்டதாகவும், அதை
முதலாளி யாரும் வாங்கிக்கொண்டு போகவில்லை என்றும்
சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அப்படி முதலாளி
40 சதவிகிதம் கொடுக்கிறேன் என்று சொன்னால், அதை
வாங்கிக்கொண்டு போயிருப்பார்கள், இங்கே வரமாட்டார்கள்.
ஆக வேலைநிறுத்தமே நடந்திருக்காது. தொழிலாளர்கள்
கேட்டது 40, முதலாளி தருவேன் என்று சொன்னது 30,
தரப்படாததால் உடனே வேலை நிறுத்தம் நடந்துவிட்டது.
வேலை நிறுத்தம் தொடர்ந்து வந்தது. இரு சாராருக்குமிடையே
ஒரு ஒப்பந்தம் வரவில்லை. அந்தத் தொழிற்சாலையினர்
இதற்கு முன்னால் ஒவ்வொரு ஆண்டும் 30, 31, 32, சதவீதம்

தான் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டு தான் 37 அல்லது 38 கொடுத்திருக்கிறார்கள். முதல்வரையும் போய்ப் பார்த்தார்கள். கடைசியாக 80 சதவிகிதம் தொழிலாளர்கள் பிரதிநிதித்துவம் கொண்ட தொழிற்சங்கங்கள் கையெழுத்திட்டு, 34 சதவிகிதம் வாங்கிச் சென்றிருக்கிறார்கள். அதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக சங்கங்களிலே ஒரு பகுதி சங்கம் கையெழுத்து போட்டு இருக்கலாம். ஒரு பகுதி சங்கம் கையெழுத்து போடாமல் இருக்கலாம், சி.ஐ.டி.யு, கையெழுத்துப் போடாமல் இருக்கலாம், ஏ.ஐ.டி.யு. கையெழுத்துப் போடாமல் இருக்கலாம். ஆனால் எங்களுடைய அதிகாரிகள் புரட்சித் தலைவர் சொல்லி இருக்கின்றார்களே, ஒரு கொள்கை எந்தத் தொழிற்சங்க ஒப்பந்தமாக இருந்தாலும் அந்தத் தொழிற்சங்கத்தில் இருக்கக்கூடிய 60 சதவீத தொழிலாளர்களாவது அதற்குஆதரவு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்களே, அதை மனதிலே வைத்து இது சட்ட ரூபமாக வருவதற்கு—இது இன்டர் லிங்க்டு, அதை நான் பின்னால் சொல்கிறேன்—அந்த இரண்டையும் நீங்கள் ஒத்துக்கொள்வீர்களானால் சட்டமே வந்திருக்கும். அதை நீங்கள் இப்போதுகூட மறுத்து இருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசும்போது அவர்கள் 60 சதவீதத்தினர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தரவேண்டுமென்று முதல்வர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார். அதைப் பற்றி நான் பின்னால் சொல்கிறேன். ஆனால் விஸ்கோசைப் பொறுத்தவரையிலே ஏற்கனவே பேச்சு வார்த்தை நடந்து 313 ரூபாய் அவர்கள் அதிகமாக ஊதிய உயர்வு வாங்கினார்கள். தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டன. அந்தத்தொழிற்சங்கங்கள் கலந்துகொண்ட அந்த எண்ணிக்கையை வைத்து, எந்தெந்த தொழிற்சங்கங்களுக்கு எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்து, 80 சதவீதத்தினரின் பிரதிநிதிகள் உள்ள தொழிற்சங்கத்தினர் கையெழுத்துப் போட்டு மகிழ்ச்சியோடு 34 சதவீதத்தை வாங்கிக்கொள்கிறோம் என்று சொன்னது மட்டுமல்ல, ஒரு நாளும் போடாத அளவிற்கு ஆள் உயர மாலையை, அந்தத் தொழிற்சங்கத்தலைவர்கள் எல்லாம்கொண்டு வந்து என்னுடைய அலுவலகத்திலே எனக்கு மாலை அணிவித்துவிட்டுப் போனார்கள். நானே 5½ அடி உயரம். அவர்கள் 6 அடி உயரத்திற்கு மாலை கொண்டு வந்து எனக்கு அணிவித்தார்கள். அந்த அளவிற்கு மாலை போட்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாகச் சென்றிருக்கிறார்கள் என்று நாம் பார்க்கவேண்டும். நாம் இங்கே இருந்து பேசிக்கொண்டிருக்கிறோம். அந்த ஃபீல்டிலிருந்து அந்தத் தொழிற்சங்கத்தை நடத்தக்கூடியஎக்ஸ்பீரியன்ஸ்ட்லேபர் லீடர்ஸ்லே பல பேர்களை எனக்கு 20 ஆண்டுக்காலமாகத் தெரியும். Th y are very happy. 34 சதவிகிதம் வாங்கிச் சென்றிருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



அடுத்து ஃபால் பேக் வேஜ் ரேட் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு பீடித் தொழிலாளர்களுக்கு ஃபால் பேக் ரேட்டை நிர்ணயித்து இருக்கிறது. அதற்குள் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் மற்றவர்களும் எழுதி அனுப்பினால் அதை இந்த அரசு மறுபரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறது. இதுதான் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் உள்ள சிறப்பு, ஒன்றைச் செய்துவிட்டு, இதைச் செய்துவிட்டோம்,—Thus far and no further—அவ்வளவுதான் இதற்குமேலே போகமாட்டோம் என்ற முடிவை புரட்சித் தலைவர் அரசு எடுப்பதில்லை. நான் மறுபரிசீலனை செய்கிறேன் என்றுதான் சொல்கிறேன் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன். தொழிற்சங்கம் என்றுஒன்று இருக்கிறது.—i has go its own fi nctions—அவைகளுக்கு என்று சில வேலைகள் இருக்கின்றன. அரசு என்று ஒன்று இருக்கிறது. அதற்குச்சில வேலைகள் இருக்கின்றன. நாங்கள் நல்ல எண்ணத்தோடுதான் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். எத்தனை ஆண்டுக் காலமாக பீடித் தொழிலாளர்கள் போராட்டம் நடக்கிறது என்று எனக்குத் தெரியும். 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் திருச்சியிலே பீடித் தொழிலாளர்கள் போராட்டம்—கலைஞர் அவர்களும், மதிப்பிற்குரிய சி.பி.ஐ. தலைவர் கல்யாணசுந்தரம் அவர்களும். திருச்சியிலே மிகப்பெரிய போராட்டம் எல்லாம் நடத்தினார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே பல ஆட்சிகள் இருந்து இருக்கின்றனவே, எந்த ஆட்சியாவது பால் பேக் ரேட்டைக் கொண்டு வந்ததா? ஒரு சிறப்பை ஏன் மறைக்கிறீர்கள்? அதைத்தான் நான் கேட்கிறேன். (குறுக்கீடு). எத்தனையோ ஆட்சிகள் இருந்தன. தி.மு.க. ஆட்சி நடந்திருக்கிறது. மதிப்பிற்குரிய—எங்களால் மதிக்கத்தக்க புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா என்று அழைக்கக்கூடிய கல்யாணசுந்தரம் அவர்கள் அரசியலிலே செல்வாக்கு உள்ளவர்கள், பீடித் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுகூடச் சொன்னார்கள். இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராசன் அவர்கள் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுவேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்வேன், சத்துவாச்சாரியில் 150 வீடுகளை அவர்களுக்கு கொடுக்கப் போகிறோம். அதைபோல் திருச்சியிலே கொடுப்பதற்கு என்னால் முடிந்ததைச் செய்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டை நான் செய்கிறேன்.

It is : n important centre ஒத்துக்கொள்கிறேன். பீடித் தொழிலாளர்கள் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த அரசுதான் பால் பேக் ரேட்டைக் கொண்டு வந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சிதானே கொண்டு வந்தது. நாங்கள்தானே கொண்டு

வந்தோம். (குறுக்கீடு.) யாருக்காவது— பால்பேக் ரேட் கொடுக்க வேண்டுமென்ற உணர்வு—இதற்கு முன்னால் இருந்த அரசுகளுக்கு—வந்ததா? நாங்கள் வந்தபிறகு இந்த 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாகக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது நான் சொல்வது There may be defects அதில் குறைகள் இருக்கலாம். (குறுக்கீடு.) நான் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசலாம். புரட்சித் தலைவருடைய ஆட்சியிலேதான் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். நல்லதைத்தானே நான் சொல்கிறேன். நீங்கள் இதிலே ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னால் அதை இந்த அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் பரிசீலிக்கமாட்டோம் என்று சொன்னால் அல்லவா நீங்கள் எழுந்து பேசவேண்டும். இதுதான் இந்த ஆட்சியினுடைய சிறப்பு.

(பிற்பகல் 2-00)

ரெபரன்ஸ் பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊழல் இல்லாத ஆட்சி போலச் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியில்தான் ஸ்கிரீனிங் கமிட்டி கொண்டு வந்தார்கள். அந்த ஸ்கிரீனிங் கமிட்டியைக் கலைக்கவேண்டும் என்று நானே கூடப் பேசியிருக்கிறேன். ஆனால், அந்த ஸ்கிரீனிங் கமிட்டியை யார் ரத்து செய்தார்கள்—புரட்சித் தலைவர்தான் ரத்து செய்தார். இந்த ஆட்சி வந்த பிறகுதான் ரத்து செய்யப்பட்டது. That s a salient featu e. அதற்குப் பிறகு ரெபரன்ஸ் கொடுப்பது என்பதை, பப்ளிக் செக்டார் அண்டர்டேகிங், கோவாப்பரேடிவ் அண்டர்டேகிங் பொறுத்தவரையில் நிலைமைகளைப் பொறுத்து நாங்கள் தாராளமாகச் செய்து கொண்டு இருக்கிறோம். நீங்கள் எல்லோரும் அனுபவம் வாய்ந்தவர்கள் உங்களுக்குத் தெரியும், அந்த ஸ்கிரீனிங் கமிட்டி இருந்தபோது எத்தனை ரெபரன்ஸ் கொடுக்கப்பட்டது இப்போது அந்த ஸ்கிரீனிங் கமிட்டி அபாலிஷ் செய்யப்பட்டபிறகு எத்தனை கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று. ஆகவே, அந்த வகையில் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பயிற்சி அளிக்கும் திட்டம் பற்றிச் சொன்னார்கள். ஐ.டி.ஐ. கோவையைப் பற்றிச் சொன்னார்கள். கோவையில் தற்போது 720 பேர் பயிற்சி பெறுகின்றனர், இரண்டு ஷிப்டு என்ற அடிப்படையில். 1983-84 ஆம் ஆண்டில் இருந்து அங்கே 3-வது ஷிப்ட் ஏற்படுத்தி, மேலும் 200 பேர் சேர்க்கப்படுவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த 200 பேருக்கு பயிற்சி அளிக்க தொழிற் பயிற்சி நிலையம் புதிதாகத் துவங்கவேண்டும் என்று சொன்னால் 50 லட்ச ரூபாய் தேவைப்படும். ஆகவே, புதிதாக ஆரம்பிப்பதற்குப்



பதிலாக இருக்கின்ற தேவையைக் கருதி 3-வது ஷிப்ட் ஏற்படுத்தி இந்தப் பயிற்சி தரப்படும். இதற்காக ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்ச ரூபாய்க் கூடுதலாகச் செலவு ஆகும். எனவே தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்றாவது ஷிப்ட் ஏற்படுத்துவதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

60 சதவீதம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். அப்படி ஏன் சொன்னார் புரட்சித் தலைவர்? ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்று சொன்னால், அந்த வேலை நிறுத்தத்திற்குத் தொழிலாளர்கள் ஆதரவாக இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டாமா? Are you having the sanction behind your action? ஆகவேதான் அந்தத் தொழிற்சாலையில் உள்ள 60 சதவீதத் தொழிலாளர்களின் ஆதரவு கிடைத்தால்தான் வேலை நிறுத்தம் செய்யவேண்டும். அதைப்போலவே ஒரு 12(3) ஒப்பந்தம் செய்யவேண்டும் என்று சொன்னால், அதற்குப் பெரும்பாலான தொழிலாளர்களின் ஆதரவு இருக்கிற நிலைமை இருக்கவேண்டும். (குறுக்கீடு).

If the Conciliation Officer is satisfied Interuption). Mr. Raghmankhan, I am not yielding. There is no point in shouting. I am not going to yield.

(குறுக்கீடு) நான் ஒரு டெக்னிகல் பாயின்ட் சொல்லிக் கொண்டு வருகிறபோது யாரும் குறுக்கிடுவது சரியல்ல. ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட வேண்டும் என்று சொன்னால், அந்தத் தொழிற்சாலையில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்களோ அதில் 60 சதவீதம் தொழிலாளர்கள் அதற்கு ஆதரவு தரவேண்டும். (குறுக்கீடுகள்,)

Mr. Deputy speaker, Sir, I don't want to be interrupted. I am not yielding, (Interruption.)

Mr. Raghmankhan, please hear me. It is a technical point over with Mr. Ramani is highly concerned. I will yield after explaining this position.

வேலை நிறுத்தம் செய்வது என்று சொன்னால் தொழிலாளர்களுடைய 'சாங்ஷன்' அதாவது sanction behind a Demand—It is a Trade Union Parlance Formula.

அதில் சொல்வது 60 சதவீதத்தினர் அதற்கு ஆதரவு தரவேண்டும். அதைப் போன்று ஒரு கன்சிலியேஷன் அதிகாரிக்கு முன்னால் ஒப்பந்தம் நடக்க வேண்டுமென்று சொன்னாலும் தொழிலாளர்களுக்குத் துரோகம் ஏற்பட்டுவிடக் கூடாது. 1,000 பேர் இருக்கக் கூடிய தொழிற்சாலையில் 200 பேர்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்கள் கன்சிலியேஷன் ஆபிசர் முன்னால் கையெழுத்து போட்டுவிட்டு அந்த ஒப்பந்தம் 12(3) பைன்டிங் ஆன் ஆல் பார்ட்டி என்று சொல்லக் கூடிய நிலை வரக்கூடாது என்பதை மிக ஆழமாக சிந்தித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவ.்கள் 60 per e nt of the woikers should give consen! for sigti'ng a sct:lement under 12 (3) என்று சொல்கிறார்கள். இந்த இரண்டையும் தொழிற் சங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆசை. (குறுக்கீடுகள்.)

**திரு. கு. ரமணி :** 60 சதவீதம் தொழிலாளர்களுடைய ஆதரவு வேண்டும் என்பதை அரசு ஒரு சட்டம் போட்டு ரெஜிமென்டேஷன் நியதியில் கொண்டுவரவேண்டியது அல்ல தொழிற்சங்க ஜனநாயகம். அந்தத் தொழிற்சங்கத் தொழிலாளர்களோடு கலந்து பேசி, அவர்களுடைய ஜெனரல் பாடியும் அவர்களும் தீர்மானம் பண்ணி வரவேண்டிய ஒன்று. அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் ஒரு சட்டத்தைப் போட்டு இப்படிக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால் அதனால் கெடுதல் வரும். அது தொழிலாளர்கள் மீது திணிக்கப்படுகிறது. அந்தக் கொள்கையைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். அந்தக் கொள்கை சரியல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அப்படி என்றால் 7 பேர் இருந்தால் ஒரு தொழிற்சங்கத்தைப் பதிவு செய்யலாம் என்று இன்றையதினம் சட்டம் இருக்கிறது. 'நீங்கள் கொண்டு வரும் சட்டத்தை ஏற்கமாட்டேன், 3 பேரை வைத்துக்கொண்டே நான் பதிவு செய்வேன்' என்று மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொல்கிறார்களா?

**திரு. கு. ரமணி :** சங்கமே வைக்கக்கூடாது என்று இருந்த காலத்தில் ஒரு உரிமை உருவாவதற்கு வேண்டி, ஒரு ஸ்தாபிதம் ஆவதற்கு வேண்டி ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட ஒரு ஏற்பாடு அது. இன்றைக்கு 100 பேர் இருந்தால்தான் சங்கத்தை ரெஜிஸ்டர் பண்ண வேண்டும் என்று சொல்வது தப்பு. இது ஆரம்பிப்பதற்கு செய்யப்பட்ட ஏற்பாடு. மற்றவற்றைத் தொழிலாளர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, '' ரைட் டு ஸ்ரைட்க் இஸ் இல்லீகல் '' என்பதுதான் அமைச்சருடைய நோக்கம். வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதம் என்பது அவர்களுடைய அடிப்படை. ஆ





வேலை நிறுத்தம் செய்தால் இரண்டாண்டு சிறைத்தண்டனை, வாரண்டு இல்லாமல் கைது செய்யலாம் என்ற அடிப்படைக் கொள்கையை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள். ஸ்டிரைக் செய்வது என்பது தொழிலாளர்களுடைய 'பர்த் ரைட்'. இன்னும் சொல்லப்போனால் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சரவர்கள் கொஞ்சம் பொறுமையாக இருந்தால் நான் அதிகம் நீட்டாமல் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இந்தப் பிரச்சனை, வேலைநிறுத்தத்தைத் தொடங்க, ஒரு தொழிற் சங்கத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் மெஜாரிட்டி அடிப்படையிலே, சட்டத்தின் அடிப்படையிலே செய்ய வேண்டியது அவசியம் என்றால் அது வேலை நிறுத்தத்தை, நியாயமான கோரிக்கைகளுக்காக அவர்கள் எடுக்கின்ற முயற்சியைச் சட்டத்தின் மூலமாக, சட்டத்தின் பெயரால் தடுப்பதாகும். அதை இந்த அரசு கையாளுகின்ற முறை தவறு.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே, இதில் உள்ள ஜனநாயகப் பண்பை தயவுசெய்து கவனிக்க வேண்டும். பொதுவாக ஒரு சட்டமன்றம் என்று சொன்னாலே வாக்கெடுக்கும்போது மெஜாரிட்டி வாக்களித்தால் அது நிறைவேறுகிறது. (குறுக்கீடு)

துணைத் தலைவரவர்களே, இது ஒரு ஜனநாயகம் என்றால் இதே சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால், பெரும்பான்மை வாக்கு கிடைத்தால் அது நிறைவேறுகிறது. அதைத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். தொழிலாளர்களுக்காக வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் உங்களுக்கு அனுமதி கொடுத்தார்களா? அந்தத் தொழிலாளர்கள் அனுமதி தர வேண்டும். அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அவர்களுக்காக வேலை நிறுத்தம் செய்யுங்கள். அதைப்போன்று ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும்போது அவர்கள் அனுமதியைப் பெற்று, மெஜாரிட்டி வாக்களித்தால், அனுமதி கொடுத்தால் கையெழுத்து போடுங்கள் என்று சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும் உங்களைப் பொறுத்தது. ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரை அது திணிக்கப்படவில்லை. We ar: prepared to wait and see the consequences என்று நான் சொல்கிறேன்.

(பிற்பகல் 2-10.)

அதற்கு அடுத்தாற்போல் குறைந்தபட்ச ஊதியத்தைப்பற்றிச் சொன்னார்கள். குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்தவரையில் நான் மெத்த மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன். 5 ஆம் தேதி—இன்றையதினம் 9 ஆம் தேதி—5 ஆம் தேதி முதல் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளர் மற்றும் ஏர்மாடு உழுபவர் ஊதியம் அதை 12 ரூபாயிலிருந்து 18 ரூபாயாகவும்; நிலக்கிழார் ஏர் மற்றும் மாடுகள் உழுதல்—குறைந்த பட்ச ஊதியம் என் பது (குறுக்கீடு) அதனுடைய அர்த்தம் என்னவென்று சொன் னால், அதற்குக் கீழாக யாரும் யாருக்கும் கொடுக்கக்கூடாது. அப்படி அதற்குக் கீழாக யாரும் கொடுப்பார்களேயானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இன்னும் ஆழமாகச் சொன்னால்,

An industry which is not paying tae min mum wages has no right to exist

குறைந்த பட்ச ஊதியத்தைக் கொடுப்பதற்கு கூடத் தகுதியில் லாத நிறுவனம், அந்த நிறுவனமே இருக்கத் தேவையில்லை. என்று சுப்ரீம் கோர்ட்டிலே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். குறைந்தபட்ச ஊதியம் எப்படி நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லி—மினிமம் வேஜஸ் ஆக்டின் 4 வது பிரிவில் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டும் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. அதிலே எல் லாம் நீங்களே நிறைய பேசியிருக்கிறீர்கள். ஆகவே, எனக்குப் பேச நேரம் கிடைக்கவில்லை. அதை நாங்கள் நிர்ணயித்து இருக்கிறோம் என்று சொல்வதோடு இப்போது (குறுக்கிடு).

இம்பிளிமென்டேஷனைப் பொறுத்தவரையில் இன்னும் ரெவின்யூ டிபார்ட்மெண்டிலேதான் இருக்கிறது. அங்கே யிருந்து எடுக்கவேண்டும் என்று 2, 3 ஆண்டுக்காலமாகவே சொல்லி வருகிறார்கள். நாங்களும் 2, 3 ஆண்டுக்காலமாகவே பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். தீவிரமாகப் பரி சீலனை செய்து முடிவில் இதை ஒப்புக் கொள்வதால், அது நல மாக, நன்றாகச் செயல்படுமா என்பதைப் பார்த்து, பிறகு அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது யார் யாருக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக் கப்பட்டிருக்கிறது, யார் யாருக்கு நிர்ணயிக்கப்படுவதற்காக பரிசீலனையில் போடப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி இங்கே கொள்கைக் குறிப்பிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தெந்த தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கொடுக்க வேண்டும் என்று குறைந்த பட்ச ஊதியக் குழு பரிந்துரைத்திருக்கிறது, அதுபற்றி அரசின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறீர்கள்.

கைத்தறி நெசவுத் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளர் கள் ;

கைத்தறி பட்டு நெசவுத் தொழிலில் வேலை செய்யும் தொழி லாளர்கள் ;





சோப்பு தயாரிக்கும் தொழிலில் வேலை செய்யும் தொழி லாளர்கள் ;

சாலை போடுதல், கட்டிடம் கட்டுதல், குவாரியில் கல் உடை உடைத்தல் தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கல் உடைக்கும் தொழிலாளர்களின் கதி என்ன என்று கேட்டார்கள். அவர் களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மறந்து விட வில்லை. ஆகவே, இது போன்ற சாலை போடுதல், கட்டிடம் கட்டுதல், குவாரியில் கல் உடைத்தல் தொழில்களில் ஈடுபட் டிருக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியத்தை அரசு நிர்ணயம் செய்து கொண்டு வந்திருக்கிறது.

அடுத்து, தீப்பெட்டி மற்றும் பட்டாசு உற்பத்தியில் வேலை செய்யும் தொழிலாளர்கள், விசைத்தறியில் துணி உற்பத்தி செய்யும் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளர்கள்; அரசு மற்றும் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் தவிர, பிற மருத்துவ மனைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, குறைந்த பட்ச ஊதியக் குழுவின் பரிந்துரை வந்திருக்கிறது. அவைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. மலைத் தோட்டங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு, குறைந்த பட்ச ஊதி யத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பதற்காக அரசுக்கு ஆலோ சனை வழங்க ஒரு குழுவினை 1982—ஆம் ஆண்டு ஜூலை மாதத் தில் நியமித்து. 1983 ஏப்ரல் இறுதிக்குள் குழுவின் அறிக்கை கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசும்போது கூட இன்றையதினம் அவ்வளவு கடுமையாக தொழிலாளர் துரோக அரசு என்று அவ்வளவு ஆழமாகச் சொல்லவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் என்.வி.என். சோமு அவர்கள் தான் மிகத் தீவிரமாக சொன்னார்கள், தொழிலாளர் துரோக அரசு என்று. என்ன செய்தோம் தொழிலாளர்களுக்குத் துரோகம். சட்டமன்றத்திலே பேசும் போது நீங்கள் சொல்லுகிறீர்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி, தொழிலாளர் துரோ ஆட்சி என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் பேரணியை நடத் தினீர்கள். இன்றைய தினம் கூட பேரணி நடந்தது. ஆனால், ஒரு அரசு செய்யக் கூடிய காரியங்கள் நியாயமானதுதானா, இல்லையா, நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா இல் லையா? இந்த அரசாங்கம் பிராக்ரஸிவ் கவர்ன்மென்ட்டா இல்லை பிற்போக்கு அரசாங்கமா? முதலாளிகள் பக்கம் இருக் கிறதா? தொழிலாளர்கள் பக்கம் இருக்கிறதா என்ற விவாதம் இங்கே நடக்கிறது. ஆனால் முடிவு எடுக்கக்கூடியவர்கள் அவர்கள் முடிவு எடுக்கக் காத்திருக்கிறார்கள்.

நான் பெருமையோடு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்கிறேன், பெரியகுளம் தேர்தலிலிருந்து, திருச்செந்தூர் தேர்தல் வரையில், மக்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பிராக்ரஸிவ் கவர்ன்மென்ட் தான் என்று தேர்ந்தெடுத்து வாக்களித்திருக்கிறார்கள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்) (குறுக்கீடுகள்).

I am not yieldig for the point of order.

புரட்சித் தலைவர் ஆட்சியைப் பற்றி என்னதான் நீங்கள் சொன்னாலும் எவ்வளவுதான் க்ரிட்டிசிசம் செய்தாலும், பேசி முடிக்கும்போது சிலர் தொழிலாளர் விரோத அரசு, தொழிலாளர் விரோத அரசு என்று சொன்னாலும்

The people are solidly behind the Revolutionary Leader, Thiru M.G.R.

என்பதை இரண்டு தேர்தல்கள் நிரூபித்து இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் (கூச்சல், குழப்பம்) நான் பேசி முடித்ததற்குப் பிறகு கடைசியிலே அவர்கள் கேட்கலாம் (கூச்சல், குழப்பம்) * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் தம்முடைய கருத்தைத் தெரிவிக்கிறார். அவர் பேசி முடித்தபின் விளக்கம் வேண்டுமென்றால் கேளுங்கள். அப்படியின்றி, என் அனுமதியின்றி யாரும் பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:**
I still say that the people are solidly behind the Revolutionary Leader, Thiru M.G.R. ** ** ** (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இவையெல்லாம் அவைக்குறிப்பிலே ஏறாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: :** துணைத்தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொழிலாளர் விரோத ஆட்சி என்று அவர்கள் சொல்லும்போது அதனை இல்லை என்று நிரூபிக்கவேண்டியது என்னுடைய கடமை.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.





இத்தனை நேரம் அவர்கள் எல்லாம் பேசும்போது நாங்கள் அமைதியாக இருந்தோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர் விரோத ஆட்சி என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் பேசும்போது நாங்கள் குறுக்கிடவில்லை. ஆனால்

Is it not my responsibility to disprove the statement

(கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி என் அனுமதியின்றி எல்லோரும் எழுந்து பேசுவது முறையல்ல. இவை எதுவுமே அவைக்குறிப்பிலே ஏறாது. (கூச்சல், குழப்பம்).

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்னுடைய அனுமதி இல்லாமல் பேசப் பெற்றவை அனைத்தும் அவைக் குறிப்பிலே ஏறாது என்று உத்தரவிட்டிருக்கிறேன். அவையை விட்டு வெளியேறும்போது எழுப்பப்பெற்ற கோஷங்கள் எதையும் பத்திரிகைகளும் போடக்கூடாது. அவைக்குறிப்பிலும் ஏறாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது வேலை நிறுத்தங்களை ஏறத்தாழ 20 முறை தடை செய்திருக்கிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின்போது ஏறக்குறைய 20 முறை வேலை நிறுத்தங்கள் தடை செய்யப்பட்டன. ஆனால் புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சி இதுவரையில் ஒரு சதவீதம் கூட வேலை நிறுத்தத்தைத் தடை செய்யவில்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் ஒரு தடவை கூட நடந்து கொண்டிருந்த வேலை நிறுத்தத்தைக் தடை செய்யவில்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்னுடைய அனுமதி இல்லாமல் பேசினார்கள். ஆகவே அவை அனைத்தும் அவைக்குறிப்பிலே ஏறாது என்று உத்தரவிட்டிருக்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) என்னுடைய அனுமதியைப் பெறாமல் பேசினார்கள். ஆகவே நான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். நடவடிக்கை எடுத்து வெளியே அனுப்பி இருக்க வேண்டும். (குறுக்கீடு) ஆனால் அவர்களே வெளியே போய் இருக்கிறார்கள், அவ்வளவுதான் வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மத்தியில் அல்லாமல் மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் பாண்டிச் சேரியில் ஆளும் கட்சியாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் இந்த அரசைப்பற்றி இது சரியாக செயல்படவில்லை என்று சொன் னார்கள், தொழிலாளர் துரோகக் கொள்கை என்று சொன்னார் கள். இதோ இங்கே தலைவர் அவர்களே உங்கள் மூலமாக உங்கள் அனுமதியுடன் படிக்கிறேன்.

(பிற்பகல் 2.20)

About 200 employees of the FCI staged a Dharna on Sunday outside the residence of the Union Home Minister, P.C.Sethi to protes against the ban on strike in FCI under the Essential Services Maintenance Act.

எசன்சியல் சர்விஸஸ் மெயின்டனன்ஸ் ஆக்ட்டை உபயோகப் படுத்தி மத்திய அரசின் எப்.சி.ஐ. ஊழியர்களைக் கைது செய்து காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இந்த தகவலைத் தருகிறேன். அதேபோல்

The Central Government has banned the Strike by the employees of the Central Public Works Department under the Essential Services Maintenance Act according to a press release issued in Indian Express.

நீங்கள் பப்ளிக் ஒர்க்ஸ்லுள்ள ஸ்டிரைக்கையும் 'பான்' செய்து இருக்கிறீர்கள். காங்கிரஸ் ஆட்சி இப்போது கேரளாவில் நடக் கிறது. அங்கேயும் 22.2.1983ல் எசன்சியல் சர்வீஸஸ் ஆர்டினஸ் கீழ் ஸ்டிரைக் பான் செய்துசட்டத்தை கொண்டு வந்து இருக்கிறது.

"DTC strike conductor killed in firing. A conductor was killed in police firing and about 150 policemen were injured in clashes with Delhi Trasnport Corporation empoyees during the D. T. C. stricke which paralysed the life of the city. டெல்லியில் ஸ்டிரைக் நடக்கிறது. Government bans stricke in T V and AIR. The Union Government today detained over 40 striking empoyees of the AIR and Door Dahrshan in New Delhi by issusing an order under the Essential Service Maintenauce Act, 1981 banning strike in the two establishments

நான் டைரக்டாக கேட்கிறேன். இங்கே போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடுகிறார்களா? இந்த அரசு சுட்டது உண்டா? இல்லை. அதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியினுடைய சிறப்பு.

speak the truth even if it hurts



என்று சொல்வது போல் இதற்கு முன்னால் இதேசபையில் சொல்லியிருக்கிறேன். அது புண்படுத்தினாலும் உண்மை பேசு. ஏன் என்று சொன்னால், Even if it hurts it is truth that hurts. புண்படுத்துவது உண்மை தான். உண்மையைதான் சொல்கிறேன்.

அடுத்து பாண்டிச்சேரியில் ஆளுகிறார்கள், தி.மு.க.காரர் களும் இங்கே பேசினார்கள், இந்திரா காங்கிரஸ்காரர்களும் ஆளுகிறார்கள். 'பந்த்' நடத்திய என்.ஜி.ஓ.வினருக்கு சிறைத் தண்டனை. பாண்டிச்சேரியில் பந்த் போராட்டம் நடத்திய அரசு ஊழியர்களுக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது. இது எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் நடக்கிறதா? ஏதோ புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி தொழிலாளர் துரோக ஆட்சி, தொழிலாளர் துரோக ஆட்சி என்று சொன்னால் எப்படி? சைல்டு லேபர் பற்றி சொல்ல வேண்டும் என்று இருந்தேன். டெல்லியில் மட்டும் உணவகங்களில் 60 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று ஸ்டேட் மென்ட் தேதி 1.12.82ல் வந்து இருக்கிறது. இவைகளை எல்லாம் நீங்கள் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி சிறப்பாக அமைந்து இருக்கிறது என்பது தெரியும். மத்திய அரசின் இந்த 2 எஸ்டாபிளிஸ் மெண்டுகளிலும் வேலை நிறுத்தத்தை தடைச் செய்தது. நீங்கள் பாண்டிச்சேரியில் ஆளுகின்றீர்கள். டெல்லியில் காங்கிரஸ் ஆளுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நேரம் 2.23 ஆகிறது. ** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எசன்சியல் சர்விஸஸ் பற்றி எல்லாம் சொல்வதால் தான் சொல்கிறேன். (கூச்சல்—குழப்பம்) நீங்கள் வேண்டுமானால் அந்த வார்த் தைகளை எடுத்துவிடுங்கள். தயவுசெய்து அவர்கள் இங்கே இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மை கசப்பாக இருந்து அதற்கு வெளியேறினார்கள். நாங்கள் என்ன செய்வது? அடிக்கடி தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறது, தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டுவருகிறது, எதிர்க் கட்சிகள் ஆதரவு தரவேண்டுமே தவிர எதிர்க்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும்
தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கு. ரமணி, தி. கா. நல்லப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர் மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,88,25,000 -க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 11—4—1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

244. ஏரணாவூர் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக் கான பெரும் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20—7—1982-ஆம் தேதி யிடப்பெற்ற 670-ஆம் எண் அரசாணையில் வெளியான அறி விக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

245. நங்கநல்லூர் கிராமம் நி.அ. எண்கள் 13 பகுதி, 14 பகுதி, 15 பகுதி மற்றும் 16 பகுதியின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து



வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20—7—1982-ஆம் தேதியிடப் பெற்ற 673-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்க பெற்றது).

246. கொளப்பாக்கம் கிராமத்தின் நி.அ. எண். 8-பி-ன் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை யின் 20—7—1982-ஆம் தேதியிடப்பெற்ற 675-ஆம் எண் அர சாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

247. 1979—80-ஆம் ஆண்டு சரிகை நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கையும், கணக்கு விவர அறிக்கையும் (ஆங்கிலம்), அது குறித்த அரசு ஆய்வுரையும் (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

167. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/1983).

(....64-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## பொது.

1.1. 1982-ம் ஆண்டு முழுவதும் தமிழ்நாடு பொதுவாக அமைதியான தொழில் நல்லுறவினைப் பெற்றிருந்தது. நிர்வாகங்களும், தொழிற்சங்கங்களும் அரசுக்கு நல்கிய இசைந்த ஒத்துழைப்பும் தொழிலாளர்களின் நலனை நிலை நாட்டவும் அதே நேரத்தில் சமூகத்தின் பரவலான, நன்மையைக் கருத்தில் கொண்டும் அரசு கடைப்பிடித்து வந்துள்ள பயன் ஊக்கக் கொள்கையுமே இதற்குப் பெரிதும் காரணம்.

1.2. 1982 ஆம் அண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் மற்றும் வீணான உழைப்பு நாட்கள் பற்றிய புள்ளி விவரங்கள், 1981 ஆம் ஆண்டைவிட தொழில் உறவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை தெளிவுபடுத்துகிறது. நிர்வாகம் தொழிலாளர் இருசாரரி ரிடையேயும் ஒருவரை ஒருவர் புரிந்துக் கொண்டு செயலாற்றும் சுமுக நிலைக்கு அரசு தனது பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறது. இச் சுமுக சூழ்நிலை எதிர் காலத்திலும் நிலவக் கூடிய நல்ல தொழில் உறவுக்கு முன்னோடியாக அமையும் என அரசு நம்புகிறது.

1.3. தொழிலாளர் நலத்துறையின் பணிகள் பற்றிய விவரங்கள் இவ்வறிக்கையின் இப்பகுதியில், கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன :

1. தொழில் உறவுகள் குறித்த சட்டம்.

2. பணி நிபந்தனைகள் மற்றும் வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள்.

3. ஊதியங்கள் குறித்த சட்டங்கள்.

4. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

5. தொழிலாளர் நலப் பணிகள்.

6. எடைகள்—அளவைகள் குறித்த சட்டம்.



## அத்தியாயம் 2.

### தொழிலுறவுகள் குறித்த சட்டம்.

### 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

2.1. கீழ்க்காணும் விவர அட்டவணையில் 1981 மற்றும் 1982 ஆம் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்க்க வைக்கப்பட்ட விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன :—

விவர அட்டவணை.

| விவரம். | 1981 (1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.) | 1982 (1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாள் விருந்து (1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அ. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,770 | 1,[illegible] |
| ஆ. வரப்பெற்ற புகார்கள், எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 8,425 | 7[illegible] |
| இ. முந்தைய ஆண்டுகளில் முடிவுறா திருந்த புகார்கள், தகராறுகள் உள்படபுலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை | 8,653 | 7,1[illegible] |

[1983 ஏப்ரல் 9

| விவரம். (1) | 1981 (1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.) (2) | 1982 (1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை.) (3) |
|---|---|---|
| ஈ. இணக்க முறையில் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 1,791 | 1,328 |
| உ. வேறு வகையில் சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வுகண்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 5,789 | 4,907 |
| ஊ. தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. .. | 1,035 | 894 |
| எ. தொழிற் தகராறுகள் சட்டம் 10 (2) ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 33 | 29 |
| ஏ. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 5 | 1 |
| ஐ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,542 | 1,730 |



1983 ஏப்ரல் 9]

வேலை முடக்கம்.

2.2. அறிக்கை ஆண்டிலும், முந்தைய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பு நோக்கு விவரங்கள் வருமாறு :—

| விவரம். | 1981 (1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்வரை.) | 1982 (1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்வரை.) |
|---|---|---|
| அ. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை .. .. | 288 | 187 |
| ஆ. வீணான உழைப்பு நாட்கள் | 41,24,021 | 18,05,978 |

2.3. இணைப்பு 1-ல் 1981 மற்றும் 1982 ஆம் ஆண்டுகளில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழில்வாரியான பகுப்பாய்வு கொடுக்கப்பட்டுள்ளது :—

2.4. 1982 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள், குறித்து தீர்வு காணப்பட்ட வழி முறைகள் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) சமரச அலுவலர்களால் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்க்கப்பட்டவை. | 38 |
| (ஆ) தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கப் பட்டவை. | 12 |
| (இ) தொழிலாளர் நலத்துறை அலுவலர்களால் மற்றும் அரசால் தீர்த்து வைக்கப்பட்டவை. | 117 |
| (ஈ) மூடப்பட்டவை .. .. .. .. | 1 |
| (உ) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை. | 19 |

2.5. தொழிலாளர் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர்
மன்றத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
தொழிலாளர் நீதிமன்றங்களால் பிரிவு 33சி(2) இன் கீழ் முடிவு
செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை இவைகளைக் காட்டும்
விவர அறிக்கை இணைப்பு 1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.6. தொழிற்சாலைகள் மூடப்படுவதைத் தவிர்க்க எடுக்கப்
பட்ட நடவடிக்கைகள்—

(1) ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் :

இந்த ஆலை கோயம்புத்தூரிலுள்ள இராமகிருஷ்ணா இன்டஸ்
ட்ரீஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான ஐந்து
ஆலைகளில் ஒன்றாகும். 8-12-1981 ஆம் ஆண்டிலிருந்து இவ்
வாலையின் தொழிலாளர்களுக்குப் பணி முடக்கம் ஏற்பட்டது.
இந்த நிறுவனத்தின் ஐந்து ஆலைகளின் அலுவல்களைக்
கவனிக்க சென்னை உயர்நீதிமன்றம் ஒரு கலைப்பு அதிகாரியை
நியமனம் செய்து, 24-12-1981 அன்று ஒரு ஆணை பிறப்பித்தது.
பல காரணங்களினால், குறிப்பாக நிதி நிலை பற்றாக்குறை
காரணமாக கலைப்பு அதிகாரியால் ஆலைகளை மீண்டும் திறந்து
நடத்த இயலவில்லை. ஆலையை மீண்டும் திறந்து நடத்து
வதற்காக அரசு 21-9-1982 ஆம் நாளிட்ட தொழிற்துறை (பல
வகை) ஆணை எண் 1347 இன்படி ரூ. 50 இலட்சத்திற்கு
உறுதிச் சான்று வழங்கியது. கலைப்பு அதிகாரி இது சம்பந்த
மாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதற்கிடையில்
பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துயர் துடைக்க தமிழ் நாடு
முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஆளுக்கு ரூ. 200
வீதம் 707 தொழிலாளர்களுக்கு நிதி வழங்க அரசு ஆணை
யிட்டுள்ளது.

(2) ஜெயலட்சுமி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் :

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இந்த ஆலை 16-10-1981
லிருந்து இயங்கவில்லை. ஆலையை மீண்டும் திறக்க, தொழி
லாளர் நல துணை ஆணையர் மற்றும் கோவை மாவட்ட ஆட்சித்
தலைவர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன.
அரசும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஆளுக்கு
ரூ. 200 வீதம் ஆலையின் 675 தொழிலாளர்களுக்கு நிதி
உதவி வழங்கியது. பின்னர் தொழிலாளர் நல அமைச்சரின்
முயற்சியால் கோயம்புத்தூர், தொழிலாளர் நல துணை ஆணையர்
முன்னிலையில் 5-9-1982 அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டு,
ஆலை 8-9-1982 முதல் மீண்டும் திறக்கப்பட்டது.



2.7. முக்கிய உடன்பாடுகள்.—

(1) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தனியார் பேருந்து நிறு
வனங்கள் :

அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி. மிகையூதியம் (போனஸ்)
முதலிய கோரிக்கைகள் தொடர்பாக தஞ்சாவூர் மாவட்டத்தி
லுள்ள 210 தனியார் போக்குவரத்து நிறுவனங்களைச் சேர்ந்த
தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தனர்.
தஞ்சவூர் தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சென்னை
தொழிலாளர் நல உதவி ஆணையர் ஆகியவர்களின் முன்னிலை
யில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன ; இதன்
பயனாக தொழிலாளர் நல அலுவலர் முன்னிலையில் 28-10-1982
அன்று ஒரு உடன்பாடு கையெழுத்தானது. இந்த உடன்
பாட்டினால் சுமார் 3,500 தொழிலாளர்கள் பயன் பெற்றனர்.

(2) டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்,
போரூர், சென்னை.

சம்பள உயர்வு மற்றும் அகவிலைப்படி உயர்வு முதலான
கோரிக்கைகளை வலியுறுத்தி இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள்
25-12-1981 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழி
லாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வு) நடத்திய சமரசப்
பேச்சு வார்த்தையினாலும், மற்றும் தொழிலாளர் நல அமைச்
சரின் நல்லாலோசனையினாலும் தொழிலாளர் நலத் துணை
ஆணையர் (ஆய்வு) முன்னிலையில் ஓர் உடன்பாடு 20-2-1982
அன்று ஏற்பட்டது. இதன் பயனாக வேலை நிறுத்தம் கைவிடப்
பட்டு 24-2-1982-லிருந்து தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.
இவ்வுடன்பாட்டின்படி, அகவிலைப்படி மற்றும் இதர படிகளின்
உயர்வால் 1,500 தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 200-
லிருந்து 250 ரூபாய் வரை கூடுதலாகப் பெற்றனர்.

(3) திருச்சி மாவட்டத்தில் பீடி சுற்றும் பணியாளர்கள் :

திருச்சி மாவட்டத்திலுள்ள பீடி சுற்றும் பணியாளர்கள்
ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு, மிகை ஊதியம் (போனஸ்)
முதலிய கோரிக்கைகளுக்காக 8-3-1982 முதல் வேலை நிறுத்தத்
தில் ஈடுபட்டனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணை
யாளர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்றதன்
பயனாக ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி
வீட்டுப் பணியாளர் உட்பட 25,000 பணியாளர்கள் அகவிலைப்
படி உயர்வு மற்றும் மிகை ஊதியக்கொடை பெற்றனர்.
18-3-1982 முதல் வேலை நிறுத்தம் நீக்கிக் கொள்ளப்பட்டது.

(4) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் :

பொது, தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் உள்ள
சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் பட்டியல்
ஒன்றை முன் வைத்து 20-1-1982 முதல் வேலை நிறுத்தம்
செய்வதாக அறிவித்தனர். தொழிலாளர் நல இணை ஆணையர்
முன்னிலையிலும் பின்னர் தொழிலாளர் நல அமைச்சர்
முன்னிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. தொழி
லாளர் நல அமைச்சரின் நல்லாலோசனையின்படி தொழிலாளர்
நல இணை ஆணையர் முன்னிலையில் 19-3-1982 அன்று ஒரு
உடன்பாடு ஏற்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி பணியாளர்கள்
அடிப்படை ஊதியம், மற்றும் அகவிலைப்படியின் வீதம்,
சிறப்புப்படி முதலியவற்றில் உயர்வு பெற்றனர். இந்த உரிய
நேர உடன்பாட்டினால் 20,000 தொழிலாளர்கள் மேற்கொள்ள
விருந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது.

(5) நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், கோயம்
புத்தூர் :

ஊதிய உயர்வு, அகவிலைப்படி மற்றும் இதர படிகளுக்காக
இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் 5-4-1982 முதல் வேலை
நிறுத்தம் செய்தனர். கோவை தொழிலாளர் நல துணை ஆணை
யர் முன்னிலையிலும் பின்னர் சென்னை தொழிலாளர் நல
தனித் துணை ஆணையர் முன்னிலையிலும் பேச்சு வார்த்தை
கள் நடந்தன. அந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக தொழி
லாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் 21-4-1982
அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பயனாக 23-4-1982
முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(6) தமிழ் நாடு சிமிண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர்:

1981-82 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் குறித்து தொழி
லாளர் நல ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை
கள் நடைபெற்றன. இதன் பயனாக 12-11-1982 அன்று
நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையே ஓர் உடன்
பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின்படி சில நிபந்தனைகளுக்கு
உட்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் 8.33 சதவீதம்
மிகை ஊதியமும் சிறப்பு ஊதியமாக ரூ. 750-ம் வழங்க வகை
செய்யப்பட்டுள்ளது.

(7) மெட்டல் பாக்ஸ் இந்தியா லிமிடெட்., சென்னை :

இந்த நிறுவனத்தில் சம்பள உயர்வு, அகவிலைப்படி, வீட்டு
வாடகைப்படி சம்பந்தமாக ஏற்பட்ட தொழில் தகராறு தொழி
லாளர் நல இணை ஆணையர்



வார்த்தையின் காரணமாக 29-11-1982 அன்று சுமுகமாகத்
தீர்க்கப்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி, ஒவ்வொரு தொழி
லாளியும் மாதத்திற்கு ரூ. 140-லிருந்து ரூ. 182 வரை ஊதிய
உயர்வு பெறுவார். இதனால் 276 தொழிலாளர்கள் பயன்
பெற்றனர்.

(8) இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட், நாகப்பட்டினம்:

நிர்வாகம் செய்யக் கருதியிருந்த ஆட்குறைப்பு, இயந்திரங்கள்
இடமாற்றம் முதலியவைகளை எதிர்த்து, இந்நிறுவனத்தின்
தொழிலாளர்கள் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1ஆம் நாள்
முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். திருச்சி தொழிலாளர்
நல துணை ஆணையர், தொழிலாளர் நல இணை ஆணையர்
மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் பேச்சு
வார்த்தைகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து தொழி
லாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் சமரசப்
பேச்சு வார்த்தை நடைபெற்று 1982 ஆம் ஆண்டு மே திங்கள்
20 ஆம் நாள் அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்
பாட்டின்படி தொழிலாளர்கள் அன்றே வேலைக்குத் திரும்
பினர்.

(9) தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட், திருநெல்வேலி
மாவட்டம் :

மிகை ஊதியம் குறித்து இந்நிறுவனத்திலுள்ள தொழிலாளர்
களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே தொழிற் தகராறு
எழுந்தது. தொழிலாளர்கள் 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
12 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்
தினரும் அன்றே கதவடைப்பு அறிவித்தனர். திருநெல்வேலி
தொழிலாளர் நல துணை ஆணையர் மற்றும் சென்னை தொழி
லாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் சமரசப்
பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பின்னர் தொழிலாளர்
நல அமைச்சரின் நல்லாலோசனையின்படி தொழிலாளர் நல
தனித் துணை ஆணையர் முன்னிலையில் 1982 ஆம் ஆண்டு
டிசம்பர் திங்கள் 24-ஆம் நாள் அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது.
அவ்வுடன்பாட்டின்படி நிர்வாகம் 1982 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 27 ஆம் நாள் அன்று கதவடைப்பை விலக்கிக்கொண்டது.
தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினர்.

(10) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி:

மிகை ஊதியச் சட்டத்தின் 31-ஏ பிரிவின்படி, மிகை ஊதியம்
வழங்குவது பற்றி நிர்வாகத்தினரின் அறிவிப்பினால் பாதிக்கப்
பட்ட தொழிலாளர்கள் 1982 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்

27 ஆம் நாள் இரவு 10 மணியிலிருந்து வேலை நிறுத்தம் மேற்
கொண்டனர். தொழிலாளர் நல இணை ஆணையர் மற்றும்
தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் பலமுறை பேச்சு
வார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சுவார்த்தைகளினாலும்
தொழிலாளர் நல அமைச்சரின் நல்லாலோசனையினாலும் மிகை
ஊதியம் வழங்குவது பற்றித் தொழிலாளர் நல ஆணையர்
முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1982 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 5 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத்
திரும்பினர்.

2,8 முக்கியத் தொழிற் தகராறுகள்:

(1) துணி ஆலைகளில் மிகை ஊதியம் வழங்குவது பற்றிய
பிரச்சினை:

துணி ஆலைத் தொழிலாளர்கள், 1981-82 ஆம் ஆண்டிற்கான
மிகை ஊதியக் கோரிக்கை சம்பந்தமாக 1982 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 3 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்வ
தாக அறிவித்தனர். தொழிலாளர்கள் மிகை ஊதியம் குறித்து
தென்இந்திய துணி ஆலைகளின் சங்கத்தின் கொள்கை வீதி
முறையின் அடிப்படையில் 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்
பாட்டின்படி மிகை ஊதியம் வழங்கும்படி கோரினர். நிர்வாகத்
தினர் இக்கோரிக்கையை எதிர்த்து மிகை ஊதியச் சட்டத்தின்
படிதான் மிகை ஊதியத் தொகையை நிர்ணயிக்க முடியும் என்று
கூறினர். தொழிலாளர் நல இணை ஆணையரின் சமரசப் பேச்சு
வார்த்தைகள் தோல்வியுற்றதால் அரசு பிரச்சினையை சென்னை
தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது. அத்
துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டத்தால்
திருத்தியமைக்கப்பட்டவாறு 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறு
கள் சட்டத்தின் 10-பி பிரிவின் கீழ் கீழ்க்கண்ட கட்டளைகளை
யும் பிறப்பித்தது:—

(அ) 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்
18 (1) பிரிவின்கீழ் கோயம்புத்தூரிலுள்ள தென் இந்திய துணி
ஆலைகள் சங்கத்தினால் பிரதிநிதித்துவம் உள்ள சில துணி
ஆலை நிர்வாகங்களுக்கும் அவர்களுடைய தொழிலாளர்களுக்கும்
இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் கோட்பாடுகளின் அடிப்
படையில் கணக்கிட்டவாறு 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
13 ஆம் நாள் அன்றோ அதற்கு முன்பாகவோ தொழிலாளர்
களுக்கு மிகை ஊதியம் மற்றும் கூடுதல் தொகை வழங்கப்பட
வேண்டும்.

(ஆ) சென்னை, தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பு வரு
முன்னர் நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்ட பிரச்சனை
சம்பந்தமாக நிர்வாகம் கதவடைப்பு செய்யவோ அல்லது தொழி
லாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவோ கூடாது.



(இ) இக்கட்டளையின்படி, தொழிலாளர் ஒருவருக்கு வழங்கப்
பட்ட தொகையினை மேற்கூறிய வழக்கில், சென்னை தொழில்
நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி அந் தொழிலாளர்களுக்கு
கொடுக்கப்பட வேண்டிய தொகையிலிருந்து நிர்வாகம்
கழித்துக் கொள்ளலாம்.

(2) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் மிகை ஊதியப்
பிரச்சினை:

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழி
லாளர்களின் பல்வேறுதொழிற்சங்கங்கள், 1981–82 ஆம் ஆண்டிற்
கான மிகை ஊதியம் தொடர்பாக 1982 ஆம் ஆண்டு நவம்பர்
திங்கள் 16 ஆம் நாள் அன்றோ அல்லது அதன் பிறகோ வேலை
நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தனர். இருதரப்பினரோடும்
தொழிலாளர் நல ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தைகள்
நடத்தினார். தொழிற்சங்கங்கள் 20 சதவீதம் மிகை ஊதியமும்
கருணைத் தொகையாக ரூபாய் 500-ம் கோரின. நிர்வாகங்கள்
1981—82 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் ஒவ்வொரு கழகத்
தின் செயல்திறன் அடிப்படையில் வழங்கப்பட்டதென்றும் மேற்
கொண்டு எதுவும் தர இயலாதென்றும் கூறினர். மேற்கொண்டு
பேச்சு வார்த்தைகள் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில்
1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள் அன்று நடை
பெற்றன. ஆயினும் உடன்பாடு எதுவும் காண முடியாத காரணத்
தினால் அரசு இப்பிரச்சினையை சென்னை தொழில் நடுவர்
மன்றத் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது.

2.9. வழக்கு தொடர்தல்: கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்
களுக்கு எதிராக வழக்குத் தொடர இவ்வாண்டில் அரசு ஒப்புதல்
அளித்துள்ளது.

(1) தொழிலாளர் நீதி மன்றத்தின் தீர்ப்பைச் செயற்
படுத்தாததற்கு மதுரை மாவட்டம், முத்துகிருஷ்ணாபுரத்தில்
உள்ள வாழைப்பழ மண்டி உரிமையாளர் திரு. கே. எஸ். குரு
சாமி. (2) தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ்
செய்யப்பட்ட உடன்பாட்டினை அமல்படுத்தாததற்காக சென்னை
யிலுள்ள அனுகுயா இன்டஸ்ட்ரீஸ் முதல் வழக்கில் குற்றம்
சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினால் ரூபாய் 50 அபராதம்
வழங்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளார். இரண்டாவது வழக்கு
நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது.

[1983 ஏப்ரல் 9

2.10. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதிஉதவி :

இந்த ஆண்டில் பின்வரும் துணி ஆலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 200 வீதம் மேற்படி நிதியிலிருந்து வழங்க அரசு ஒப்புதல் அளித்தது :

| ஆலையின் பெயர். | தொழிலாளர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் .. ... | 707 |
| (2) ஜெயலட்சுமி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 675 |

2.11 தொழிற்சங்கங்கள் :

1—1—1982 ஆம் நாள் வரை பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,840. இவ்வாண்டில் 475 தொழிற் சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 385 தொழிற் சங்கங்களின் பதிவு விலக்கம் செய்யப்பட்டது. நான்கு தொழிற் சங்கங்களின் பதிவு விலக்கம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு தொழிற்சங்கம் கலைக்கப்பட்டது. ஒரு தொழிற்சங்கம் மற்றொரு சங்கத்தோடு இணைக்கப்பட்டது. ஆக, ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,932.

2.12. சுமுகத் தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

தொழில் நிறுவனங்களில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர் களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு சிறப்பு தொழிலுறவுக்கு பரிசு வழங்கும் திட்டத்தினை நிறுவியுள்ளது. இத் திட்டத்தின்கீழ் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கதொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு 1980 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களைத் தெரிந் தெடுத்து இவர்களுக்கு முதற்பரிசாக சுழற் கோப்பை ஒன்றும், நிலையாக வைத்துக் கொள்ளக்கூடிய கேடயம் ஒன்றும், இரண் டாம் பரிசாக தகுதிச் சான்றிதழ் ஒன்றும் இதற்கென 4-8-1982 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்ட விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் வழங்கினார்.



1983 ஏப்ரல் 9]

## அத்தியாயம் 3.

### பணி நிபந்தனைகள் மற்றும் வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் :

3.1. 1982 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 10,444 தொழிற்சாலைகள் இருந்தன. இந்த ஆண்டில் 537 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டன. 1,558 தொழிற்சாலைகள் புதிதாகப்பதிவு செய்யப்பட்டன. எனவே, ஆண்டின் இறுதியில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 11,465 ஆக உயர்ந்தது. 1982 ஆம் ஆண்டின் இறுதியில், இச்சட்டத்தின்கீழ் பணிபுரிவோரின் எண்ணிக்கை 7,01,450 ஆகும்.

3.2. இச்சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங் கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்கு களின் விவரங்கள் முறையே இணைப்புகள் III, II, V-ல் தரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களின் பாதுகாப்பு :

3.3 அறிக்கை ஆண்டில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1981 .. .. .. .. | 47 | 24,815 |
| 1982 .. .. .. .. | 50 | 25,889 |

3.4. விபத்துக்களின் எண்ணிக்கையில் சிறிது கூடுதலுக்குக் காரணம் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அதைத் தொடர்ந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகமானதே ஆகும். மேலும் புதிதாக வேலைக்கு வருபவர்கள் போதுமான தொழில் அனுபவமும் தொழிற்சாலையில் பாது காப்பு உத்திகள் பற்றிய தெளிவும் பெறாதவர்கள். விபத்துக் களின் எண்ணிக்கையைக் குறைக்க விபத்துக்கள் அதிகமாக நிகழும் தொழிற்சாலைகளில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு தீவிர ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள் :

3.5. தொழிலாளர்கள், நிர்வாகத்தினரிடையே தொழில் பாதுகாப்பை மேம்படுத்தவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ள வும், பாதுகாப்புப் பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள் ஆகிய இரு தனிப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது.

3.6. இத்திட்டத்தின்கீழ் 1980 ஆம் ஆண்டில் பரிசு பெறத் தகுதி உடையவர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு பண முடிப்பும், சுழற்கோப்பைகளும் 4—8—1982 அன்று சென்னை யில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன. 1981 ஆம் ஆண் டிற்கான விண்ணப்பங்கள் தொழிலாளர்களிடமும், நிர்வாகத்தின ரிடமும் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

பாதுகாப்புப் பிரிவுகள் :

3.7. மதுரையில் அமைக்கப்பட்டுள்ளபாதுகாப்புப்பிரிவுதவிர, 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலும் ஒரு பாதுகாப்புப்பிரிவு அமைக்கப்பட்டது. பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படும் தொழிற்சாலைகளில் அவ்வாறு விபத்துக்கள் பெருமளவில் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராயவும் பாது காப்பு ஆய்வினை மேற்கொள்ளுவதும்இப்பாதுகாப்புப்பிரிவுகளின் முக்கியப் பணிகளாகும். இப்பிரிவுகள்; தொழிற்சாலையில் பாது காப்புக்குரிய கருவிகள் மற்றும் இதர சாதனங்களை வடிவமைக் கவும், தொழிற்சாலையின் பாதுகாப்பு முறைகளை மேம்படுத்த வும் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு ஆலோசனையும் வழங்கு கிறது. இப்பிரிவுகள் தொழிற்சாலை பாதுகாப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர் களுக்கும், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், நிர்வாகப்பணி யாளர்களுக்கும், பயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகின்றன.

3.8. மதுரையில் உள்ள பாதுகாப்புப் பிரிவு 2,036 தொழி லாளர்கள் பயனடைந்த 64 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புக்களை நடத்தியது. கோயம்புத்தூரில் உள்ள பாதுகாப்புப் பிரிவு 266 தொழிலாளர்கள் பயன்பெற்ற 5 பயிற்சி வகுப்புக்களை நடத்தியது.

3.9. ஒரு பாதுகாப்பு சுற்றாய்வும் மேற்கொள்ளப்பட்டது தொழிற்சாலை ஆய்வகத்தின் ஆதரவில் ஒரு பாதுகாப்பு கருத் தரங்கும் நடைபெற்றது.

3.10. பாதுகாப்புப் பிரிவு ஒன்று ''பாதுகாப்புச் செய்தி'' என்னும் காலாண்டு இதழை வெளியிட்டது.





பாதுகாப்புப் பயிற்சி வகுப்புக்கள் :

3.11. தொழிற்சாலை பாதுகாப்புப் பற்றி பல்வேறு கூறு களைக் கற்பிக்க தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர் களுக்கும் ஏழு பயிற்சி வகுப்புகள் 1982 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டன. இதில் 148 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இவ்வகுப்புகளில்தொழிற்சாலை பாதுகாப்புப்பற்றிய திரைப்படங் களும் இலவசமாகக் காண்பிக்கப்பட்டன.

உற்பத்தித் திறன் :

3.12. இந்த ஆண்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் உற்பத்தித் திறன் குழுக்கள் இயங்கின.

தொழிலாளர் உடல் நலம்.

தொழிற்சாலையில் தொழிலாளர் உடல் நலம் பேணும் பிரிவு :

3.13. மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலை சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு செயல்படுகிறது. ஆபத்தான பணி களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்தல்; உயிரின மாதிரிகளை ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆராய்தல் போன்றவை இப்பிரிவின் பணிகளாகும்.

3.14. இந்த ஆண்டில் 37 தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொழிலாளர்களின் இரத்தம். சிறுநீர், சளி முதலிய 1,057 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டது. அதன் முடிவை அறிந்து தொழிலாளர்களுக்கு உடல்நலக் கேடு விளையாமல் இருக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நிர்வாகங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. தூசி, புகை அல்லது ஆவியை அவைதோன்றுமிடத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுவதற்கான வெளியேற்று வசதிகளை அமைத்திடு மாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தொழி லாளர்களுக்கு ஏற்படக்கூடிய நச்சுநோய் குறித்தும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

தொழிலாளர் மருத்துவ கவனப் பிரிவு :

3.15. நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழிற்பிரிவுகளில் பணியாற்றுபவர்களும் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத் தின் கீழ் மருத்துவ வசதி கிடைக்காதவர்களுமான தொழி

லாளர்களுக்கு மருத்துவ வசதி அளிக்க மருத்துவ கவனப் பிரிவு மதுரையில் செயல்படுகிறது. இதன் கிளைகள் பசுமலை, செல்லூர் ஆகிய இடங்களில் உள்ளன. இந்த ஆண்டில் தலைமை மருத்துவ பிரிவில் 193 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 1,702 நோயாளிகள் செல்லூரிலும், 354 நோயாளிகள் பசுமலையிலும் சிகிச்சை பெற்றனர்.

3.16. சான்றளிக்கும் மருத்துவர்களைக் கொண்ட ஆறு பிரிவுகள், சென்னை, சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் ஆறு சான்றளிக்கும் மருத்துவர்கள் ஆபத்தான தொழில்களில் பணிபுரியும் 7,682 தொழிலாளர்களைப் பரிசோதனை செய்தனர். தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் 4,012 இளம் தொழிலாளர்களுக்குச் சான்றிளித்துள்ளனர்.

## 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டம்:

3.17. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் வரும் கடைகள்—நிறுவனங்களின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், 41 ஆம் பிரிவின் கீழ் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான இணைப்புகளில் காணப்படும் விவர அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## நிரந்தர தற்காலிக விலக்களிப்புகள் :

3.18. இவ்வாண்டு அரசு ஒரு நிறுவனத்திற்கு நிரந்தர விலக்களிப்பும், நான்கு நிறுவனங்களுக்குத் தற்காலிக விலக்களிப்பும் வழங்கியது. கண்காட்சிகள், திருவிழாக்கள் உட்பட 31 தற்காலிக விலக்களிப்புகளைத் தொழிலாளர் நல ஆணையர் வழங்கினார்.

3.19. தொழிலாளர் நலத் துறை ஆணையர்கள் 133 நிறுவனங்களுக்குத் தற்காலிக விலக்களிப்பு வழங்கியதுடன் 15 நிறுவனங்களில் இச்சட்டத்தைச் செயற்படுத்துவதினின்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அனுமதித்தார்கள்.

3.20. இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட நான்கு விண்ணப்பங்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் முடிவடையாமலிருந்தன. ஒரு விண்ணப்பம் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டது. ஐந்து விண்ணப்பங்களில், ஆணையர் மூன்று விண்ணப்பங்கள் குறித்து ஆணைகள் பிறப்பித்தார். ஆண்டு இறுதியில் இரண்டு விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமலிருந்தன.



## 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம் :

3.21. இச்சட்டத்தின் கீழ்வரும் உணவகங்களின் எண்ணிக்கை வசூலிக்கப்பட்டப் பதிவுக் கட்டணம், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், 19 ஆம் பிரிவின் கீழ் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் ஆகியவை குறித்த விவரங்கள் II முதல் V வரையிலான இணைப்புகளில் காணப் பெறும் விவர அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 1966 ஆம் ஆண்டு பீடி—சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுருட்டு, பீடி, தொழிலாளர்கள் பணி நிலமைகள் / விதிகள் :

3.22. இச்சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட உரிமந் தொகை, ஆய்வாளர்கள் மேற்கண்ட ஆய்வுகள், இச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவைபற்றிய விவரங்கள் II முதல் IV வரையிலான இணைப்புகளில் காணப் பெறும் விவர அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

3.23. பீடித் தொழிலாளர் நலன் :

பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டியதைக் கருத்திற் கொண்டு மத்திய அரசு, பீடித் தொழிலாளர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தியது. மத்திய அரசு நியமித்துள்ள தொழிலாளர் நல ஆணையாளர்கள் இந்த நல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றனர். இவ்வாண்டில் கீழ்க்காணும் நலத் திட்டங்கள் இம்மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(அ) சுகாதாரம் :

வேலூரிலுள்ள நிலையான நடமாடும் மருந்தகத்தின் பிரிவாக துணை மருந்தகம் ஒன்று குடியாத்தத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நல அமைச்சர் இப்பிரிவை 10—4—1982 அன்று தொடங்கி வைத்தார். சத்துவாசாரி, வேலூர், தென்காசி, ஈரோடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள மருந்தகங்கள், பீடித் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றன.

(ஆ) வீட்டு வசதி :

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சத்துவாச்சாரியில் (வேலூர்) கட்டிய குடியிருப்புகளிலுள்ள வீடுகளை ஒதுக்குவதற்காக 150 பீடித் தொழிலாளர்களின் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, அத்தொழிலாளர்களின் பட்டியலுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

(இ) படிப்புதவித் தொகை :

தகுதியுள்ள பீடித் தொழிலாளர்களின் 1,148 குழந்தைகளுக்.
குப் படிப்புதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டது.
அவ்விதம் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 2,23,776.70 ஆகும்

(ஈ) குழுக்கள் :

(1) மத்திய அரசு ஒருங்கிணைந்த முத்தரப்புக்குழு ஒன்றை
அமைத்தது. இக்குழு 2—2—1982 அன்று புதுடில்லியில் கூடி
1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி
நிலைமைகள்) சட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து ஆய்வு
செய்வதோடு, இச்சட்டத்தைச் செயற்படுத்துவதில் ஏற்படும்
பிரச்சினைகள் குறித்தும் விவாதித்தது.

(2) தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நல அமைச்சரைத்
தலைவராகக்கொண்டு தமிழ்நாடுமாநிலத்திற்கான ஆலோசனைக்
குழு ஒன்றையும் மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழு, 1982-
ஆம் ஆண்டில் ஒரு முறை கூடி, இம்மாநிலத்தில் பீடித் தொழி
லாளர்களின் நலனை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நட
வடிக்கைகள் குறித்து விவாதித்தது.

1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்:

3.24. இச்சட்டத்தின் கீழ் வசூலித்த பதிவுக் கட்டணம்,
ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள், தொடர்ந்த வழக்குகள்
ஆகியவை குறித்த விவரங்கள் II, III, IV ஆம் இணைப்பு
களில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்
ளன.

1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், ஏனைய
செய்தித்தாள் நிறுவனப் பணியாளர்கள் (பணி நிலைமை
களும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்:

3.25. இச்சட்டத்தை சென்னை மாநகரில் சென்னை தொழி
லாளர் நல ஆணையர் அலுவலகத்தைச் சேர்ந்த பொது மக்கள்
தொடர்பு அலுவலரும், வெளியூர்களில் தொழிலாளர் நல ஆய்
வாளர்களும், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களும் செயற்
படுத்தி வருகின்றனர். 1982 ஆம் ஆண்டு இறுதியில், இச்சட்டத்
தின் கீழ் . 120 நிறுவனங்கள் வருகின்றன. இவற்றில் 816
பத்திரிக்கையாளர்கள் பணி புரிகின்றனர்.



3.26. பலேக்கர் நடுவர் மன்றத் தீர்ப்பின்படி உழைக்கும்
பத்திரிகையாளர்களுக்கும் ஏனைய செய்தித்தாள் நிறுவனப் பணி
யாளர்களுக்கும் சேரவேண்டிய தொகையைக் கோரி வரப்பெற்ற
ஐம்பத்தி ஆறு விண்ணப்பங்கள், இச்சட்டத்தின் 17(1) பிரிவின்
கீழ் சென்னைத் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன.

1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணி
நிலைமைகள்) சட்டம்:

3.27. தற்போது மருந்துத் தயாரிப்புத் தொழிலில் ஈடு பட்
டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள
இச்சட்டம் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து
செயல்படுத்தப்படுகிறது.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்:

1982 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 434 மலைத் தோட்டங்
கள் இருந்தன. இவற்றில் சுமார் 91,390 தொழிலாளர்கள்
பணி புரிந்தனர். 1982-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம்
நாளிலிருந்து 1982-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள்
வரையிலான கால அளவில் 1,349 தொழிலாளர்களை வேலைக்கு
அமர்த்தியுள்ள 24 மலைத் தோட்டங்கள் புதிதாகப் பதிவு செய்
யப்பட்டன. 438 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள
7 மலைத் தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.
ஆண்டு இறுதியில் 45 மலைத் தோட்டங்கள் பட்டியலில்
இருந்தன. 31-12-1982 ஆம் நாள் நிலவரப்படி இவற்றில்
பணி புரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை தோராயமாக
92,300 ஆகும்.

3.29. சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர்,
மலைத் தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். உதக
மண்டலம், குன்னூர், கூடூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல்,
நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஏழு மலைத் தோட்ட ஆய்
வாளர்கள் இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்துவதில்
தலைமை ஆய்வாளருக்கு உதவி புரிகின்றனர். இந்த ஆய்வாளர்கள்
தவிர, மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பான
விதித்துறைகளைச் செயற்படுத்துவதற்காகவும், மலைத் தோட்ட
டங்களிலுள்ள மலைத் தோட்ட மருத்துவ மனைகள் மருந்த
கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காகவும், நாகர்கோவில்,
உதகமண்டலம் ஆகிய இடங்களில் இரு மருத்துவ அதிகாரிகளும்
பணி புரிகின்றனர். இவ்வாண்டு, இம்மருத்துவ அதிகாரிகள்
1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்
தின் விதித்துறைகளின் கீழ் 407 முறையான ஆய்வுகள் செய்தனர்.

[1983 ஏப்ரல் 9

3.30. இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் III, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (ஒழுங்குபடுத்தலும் நீக்குதலும்) சட்டம்:**

3.31. இச்சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டில் 420 பேர் முதன்மைத் தொழிலதிபர்களாகவும், 337 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும் பதிவு செய்யப்பட்டனர்.

இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் III, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப் பட்டுள்ளன.

**1946 ஆம் ஆண்டு தொழில் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்:**

3.32. சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 45 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்கு 1982 ஆம் ஆண்டில் சான்றிதழ் வழங்கினர். 11 தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், நிலை ஆணைகளில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் சான்றிதழ் கள் வழங்கினர். இச்சட்டத்தின்கீழ் மேல் முறையீட்டு அதிகார மன்றங்களான தொழிலாளர் நீதிமன்றங்கள், இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட 22 மேல் முறையீடுகளை முடிவு செய்தன.

**1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்:**

3.33. இவ்வாண்டு ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் தொடர்ந்த வழக்குகள் குறித்த விவரங்கள் II, IV ஆம் இணைப்புகளில் காணப்பெறும் விவர அறிக்கைகளில் கொடுக்கப் பட்டுள்ளன.

**1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்தல்) சட்டம்:**

3.34. 24 திங்கள் கால அளவில், தொடர்ந்து 480 நாள் பணி புரிந்த தொழிலாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த இச் சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம், இம்மாநிலத்தில் தொழி லாளர் ஆய்வகத்தாலும் தொழிற்சாலை ஆய்வகத்தாலும் 1—1—1982 ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் சில தொழில் அதிபர்கள் சட்டத் தின் விதித்துறைகளை எதிர்த்து தாக்கல் செய்த ரிட் மனுக்கள், உயர்நீதி மன்றத்தில் முடிவுறாமல் உள்ளன.



1983 ஏப்ரல் 9]

3.35. 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர் களைப் பணியில் அமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய இச்சட்டம், தொழிலாளர் நல-வேலை வாய்ப் புத்துறையின் 24—9—1982 ஆம் நாளிட்ட 2048 ஆம் எண். அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையின் மூலம், 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் தற்போது பொருந் தும்படி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள்:

(1) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழி லாளர்கள் (வேலை வாய்ப்பு-பணி நிபந்தனைகளை முறைப்படுத் துதல்) சட்டம்:

3.36. நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துவதற்குரியதாகும் இச் சட்ட டம். இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட உள்ள விதிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. விதிகள், திட்டங்கள் இறுதியாக்கப் பட்டவுடன் இச்சட்டம் செயற்படுத்தப்படும்.

(2) 1982 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு) திருத்தச் சட்டம்:

3.37. இத்திருத்தத்தால் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு கள் சட்டத்தில் 10-பி என்னும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இவ்விதித்துறை, தொழிலாளர் நீதி மன்றங்கள் அல்லது தொழில் நடுவர் மன்றம், தீர்ப்பிற்காக அனுப்பப்பட்ட தொழில் தகராறு கள் குறித்து அம்மன்றம் தீர்ப்பளிக்கும் வரையில் அரசு வரை யறுத்தவாறுள்ள வேலை குறித்த வரையறை, நிபந்தனை களைத் தொழிலதிபர்கள் அல்லது தொழிலாளர்கள் அல்லது அவ்விருவரும் பின்பற்றுமாறு கோருவதற்கும், பொதுமக்களின் பயனுக்கான பணிகளை மூடக்கூடாது என்று கோருவதற்கும் அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

(3) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டம்:

3.38. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள உணவகங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள் ஆகியவை இச்சட்டத்தின் கீழ் வரும் வகையிலும், தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் கொடுக்கும் தொகையை முறையே 1 ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகவும், 2 ரூபாயி லிருந்து 4 ரூபாயாகவும் உயர்த்துவதற்கு இயலும் வகையிலும் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் திருத்தப்பட் டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர் ஒவ்வொரு வருக்கும் 2 ரூபாய் வீதம் அரசு தொகை வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இத்திருத்தச் சட்டம் 15—9—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

## அத்தியாயம் 4.

## ஊதியங்கள் குறித்த சட்டங்கள்

### 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம்.

4.1. பின்வரும் வேலைகளுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு 1982–83 ஆம் ஆண்டில் முதல் முறையாக நிர்ணயித்துள்ளது:—

(1) திரைப்படத் தொழிலில் வேலை.

(2) முந்திரித் தொழிலில் வேலை.

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதிய வீதங்கள் பின்வரும் வேலைகளுக்குத் திருத்தியமைக்கப்பட்டன:—

(1) கம்பளி விரிப்புகள் தயாரித்தல் மற்றும் சால்வை நெய்யும் நிறுவனங்களில் வேலை.

(2) பொன் ஆபரணம் செய்யும் தொழிற்சாலையில் வேலை.

(3) பருத்தியிலிருந்து விதையை நீக்குதல், அழுத்துதல் மற்றும் கழிவுப் பருத்தித் தொழில்களில் வேலை.

(4) வாசனைப் புகையிலை தயாரிக்கும் தொழிலில் வேலை.

(5) திரையரங்குகளில் வேலை.

(6) உணவகங்களில் வேலை.

(7) புகையிலை தொழிற்சாலையில் (பீடி தயாரிப்பு உட்பட) வேலை.

(8) வெட்டுமரத் தொழிலில் வேலை.

4.2. 1982–83 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட வேலைகளைப் பொறுத்தமட்டில், அடிப்படை ஊதியங்களுடன், மாறக்கூடிய அகவிலைப்படிகளுக்கு வகை செய்யவும் விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன. தனியாக அகவிலைப்படி நிர்ணயிக்கப்படாத சில இனங்களைப் பொறுத்தமட்டில், குறைந்தளவு ஊதியங்களில் அகவிலைப்படியையும் சேர்த்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.3. ஆய்வு ஆண்டில், மலைத் தோட்டங்களில் வேலைக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.





4.4. பின்வரும் வேலைகளுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க / திருத்தியமைக்க குறைந்தளவு ஊதிய வீதங்கள் குறித்த ஆலோசனைக் குழுக்களை அமைப்பது பற்றிய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது:—

(1) தோல் பதனிடுதல் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் வேலை.

(2) செங்கற்கள் தயாரிக்கும் தொழிலில் வேலை.

(3) சவ்வரிசி தயாரிக்கும் தொழிலில் வேலை.

(4) மோட்டார் வண்டி பணிக்களரியில் வேலை.

(5) அச்சகங்களில் வேலை.

(6) பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை.

(7) வாடகை மோட்டார் வண்டிகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களில் வேலை.

(8) பொதுவான பொறியியல் மற்றும் எந்திரக் கட்டுமானத் தொழிலில் வேலை.

(9) மீன்பிடித் தொழிலில் வேலை.

(10) மூக்குப்பொடி தயாரிக்கும் தொழிலில் வேலை.

(11) உப்பளங்களில் வேலை.

4.5. தகர கொள்கலன்கள் தயாரிப்புத் தொழிற்சாலையில் புரியும் வேலையை 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்ப்பது குறித்து பொது மக்களிடமிருந்து மறுப்புரைகள் / கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றை அனுப்பி வைக்குமாறு கோரி அரசு வரைவு அறிக்கையினையும் வெளியிட்டுள்ளது.

மறுப்புரைகள், கருத்துரைகள் எவையேனும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்றால் அவற்றை ஆய்வு செய்து இந்த வேலையைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4.6. ஆய்வு ஆண்டு காலத்தில் குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த மாநில ஆலோசனைக் குழுவின் கூட்டம் சென்னையில் 16–11–1982 ஆம் நாளன்று நடைபெற்றது.

4.7. இது தொடர்பாக தொழிலாளர் நல அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் முதலியன குறித்த விவரங்கள் இணைப்புகள் III IV-ல் ஆகிய வற்றிலுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

4.8. 1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத் தை வேளாண்மைத் துறையில் செயல்படுத்தும் பணி, வரு வாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து அதனைத் திறம் பட செயல்படுத்தும் பணி புதிய 20அம்சத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டிய பணியை முனைப் பாகச் செயல்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு நிலச்சீர்திருத்தத்துறை ஆணையாளர் மூலம் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப் படவில்லை அல்லது அதற்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டது என்று வேளாண்மைத் தொழிலாளர் முறையீடு செய்து கொண்டால், அது விசாரணை செய்யப்பட்டு விரைவில் தீர்த்து வைக்கப்படுகிறதா என்பதைக் கவனித்துகொள்வதோடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்த அளவு ஊதியத்திற்குக் குறை யாமல் ஊதியம் கொடுக்கப்பட்டு வருவதை உறுதி செய்து கொள்ள அடிக்கடி ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர்களுக்கு அறிவுரைகள் தரப்பட்டுள்ளன.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

4.9. இச்சட்டம் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்களாலும், ஏனைய தொழில் நிறு வனங்களைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் நல ஆய் வாளர்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.10. செய்தித்தாள் நிறுவனங்களுக்கும் இச்சட்டத்தின் விதித்துறைகளை நீட்டித்து 5–8–1981-ஆம் நாளிட்ட 1710-ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட வரைவு அறிவிக்கையை, அரசு இவ்வாண்டில், தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறை யின் 16–9–1982-ஆம் நாளிட்ட 1951-ஆம் எண் அரசாணை யில் உறுதிப்படுத்தியது.



4.11. இச்சட்டத்தை, மத்திய அரசு 1982-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் (38-ஆம் சட்டம்) மூலம் திருத்தி யமைத்துள்ளது. இத்திருத்தச் சட்டத்தின் முக்கியமான கூறுகள் வருமாறு :—

(அ) இச்சட்டத்தின் விதித்துறைகள், மாநில அரசு அறிவிக்கை வெளியிட வேண்டும் என்ற அவசியம் இல்லாமலேயே இச்சட்டத்தில் தொழில் நிறுவனம் என்பதற்கு அளிக்கப் பட்டுள்ள பொருள் விளக்கத்திற்குள் வரக்கூடிய பல்வேறு வகைத் தொழில் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு பொருந்தச் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இச்சட்டம் பொருந்துவதற்கு தற்போதுள்ள ஊதிய அளவு ஒரு திங்களுக்கு ரூ. 1,000-லிருந்து ரூ. 1,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க ஊதியத்திலிருந்து தொழிலதிபர் பிடித்தம் செய்வது தொடர்பான இச்சட்டத்தின் 7–ஆம் பிரிவு, தொழிலாளர் ஒருவர் எழுத்து மூலமாக அனுமதி அளிப்பதன்பேரில் தொழிலாளர்கள் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் நலனுக்காக, தொழிலதிபரால் ஏற்படுத்தப் பட்டுள்ள யாதொரு நல நிதிக்கு தொழிலாளரின் பங்குத் தொகை யாதொரு தொழிற்சங்கத்திற்கு உறுப்பினராக இருக்கச் செலுத்தத்தக்க கட்டணம் முதலிய அத்தொகைகளைப் பிடித்தம் செய்து கொள்வதற்கு இயலும் வகையில் திருத்தப் பட்டுள்ளது. இத்திருத்தச் சட்டம் 15–10–1982-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ளது.

4.12. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் முதலியன குறித்த விவரங்கள், II முதல் V வரையிலான இணைப்புகளிலுள்ள விவர அறிக்கைகளில் கொடுக்கப் பட்டுள்ளன.

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம்:

4.13. இச்சட்டம் 1–1–1982-ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. இது தொழிலாளர்கள் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருக்கும்போது அக்கால அளவில் அவர்களுக்கு தொழில்

[1983 ஏப்ரல் 9

நிறுவனங்களின் நிர்வாகங்கள் வாழ்க்கைப்படி கொடுக்க வேண்டுமென்பதை கடப்பாடாக்குகிறது. தரப்படவேண்டிய வாழ்க்கைப்படி வீதங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| தற்காலிகப் பணி நீக்கத்தின் முதல் 90 நாட்கள். | ஊதியத்தில் 50 சதவீதம். |
| 90 நாட்களுக்குப் பின்னர், 180 நாட்கள் வரை. | ஊதியத்தில் 75 சதவீதம். |
| 180 நாட்களுக்கு மேல் .. .. | முழு ஊதியம். |

4.14. இவ்வாண்டில் இச்சட்டத்தின் 4-ஆம் பிரிவின் கீழ் வாழ்க்கைப்படித் தொகையைப் பெறுவதற்கான 121 உரிமைக் கோரிக்கை மனுக்களை துறை அதிகாரிகள் பெற்றனர். அவற்றில் 92 மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டுவிட்டன. ஆண்டு இறுதியில் 29 மனுக்கள் நடவடிக்கை எடுத்து முடிக்கப் படாமல் இருந்தன.



1983 ஏப்ரல் 9]

## அத்தியாயம் 5.

### சமூகப் பாதுகாப்பு.

#### 1952—ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பலவகை விதித்துறைகள் சட்டம்,

5.1. இன்றைய நாள் நிலவரப்படி இச்சட்டம் 172
தொழில்களுக்கும் தொழில் நிறுவன வகைகளுக்கும் பொருந்து
கிறது. இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் சந்தாதாரர்கள்.

5.2. 1982-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி நிலவரப்படி இச்
சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் தொழிலாளர்கள் சந்தா
தாரர்கள் ஆகியோர் குறித்த விவரங்கள் வருமாறு :—

| | விலக்களிக்கப் பட்டவை. | விலக்களிக்கப் படாதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 453 | 16,561 | 17,014 |
| தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 3.74 (இலட்சம்) | 12.40 (இலட்சம்) | 16.14 (இலட்சம்) |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 3.62 (இலட்சம்) | 11.70 (இலட்சம்) | 15.32 (இலட்சம்) |

#### 1971-ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் உறுப்பினர்கள்:

5.3. 31-12-1982-ஆம் நாள் நிலவரப்படி உறுப்பினர் களின் எண்ணிக்கை 10,91,635 ஆகும்.

#### 1976-ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் வரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை:

5.4. (1) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால
வைப்புநிதித் திட்டத்தை நிறைவேற்றும் விலக்களிக்கப்பட்ட
நிறுவனங்களிலுள்ள உறுப்பினர்கள்
விலக்களிக்கப்படாத

அனைவரும் 1976 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் வைப்பீட்டு தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உறுப்பினர் களாவர்.

(2) சட்டப்படியான திட்டத்தைவிட அதாவது தொகுதி காப்புறுதித் திட்டத்தைவிட சிறந்த காப்புறுதித் திட்டத்தைச் செயல்படுத்தும் 29,006 சந்தாதாரர்களைக் கொண்டுள்ள 57 நிறுவனங்களுக்கு இதுவரை விலக்களிக்கப்பட்டுள்ளது.

கேட்பு வசூல் நிலுவை:—

5.5. இம்மூன்று திட்டங்களின் கீழ் 1982-ஆம் ஆண்டில் செலுத்தவேண்டிய தொகை, வசூல், நிலுவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| | கேட்பு. | வசூல். | 31-12-1982 ஆம் நாள் நிலவரப் படி நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (1) தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதித் திட்டம். | 5,627.86 | 5,407.01 | 220.85 |
| (2) தொழிலாளர்களின் குடும்பநல ஓய்வூதியத் திட்டம். | 915.69 | 881.51 | 34.18 |
| (3) தொழிலாளர் வைப் பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டம். | 221.06 | 213.40 | 7·66 |
| மொத்தம் .. | 6,764.61 | 6,501.92 | 262.69 |





5.6 மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும்பகுதி, பின்வரும் வகை தொழில் நிறுவனங்களிலிருந்து வராமல் முடங்கிக்கிடந்தன:—

| | தொழிலாளர் வருங்கால வைப்புநிதி. | தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியம். | தொழிலாளர் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (1) தேசிய துணி ஆலை நிறுவனம் மேற் கொண்ட நலிந்த துணி ஆலைகள். | 59.15 | .. | .. |
| (2) மேற்கூறிய திட்டம் பொருந்துவது குறித்து எதிர்ப்புதெரிவித்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடை யாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 68.84 | 6.02 | 2.10 |
| (3) கலைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள். | 15.34 | 0.79 | 0.26 |
| (4) மூடப்பட்டுள்ள நிறுவனங்கள். | 4.50 | 0.02 | .. |
| மொத்தம் | 147.83 | 6.83 | 2.36 |

5.7 நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிப்பது குறித்த பிரச்சனை மத்திய [illegible] ...ன்னது [illegible] ...வின் பரிசீலனையி...

5.8. ரூ. 105.67 இலட்சம் (ரூ. 262.69 — 157.02 நிலுவைத் தொகையை முனைப்பாக வசூலிக்க, 370 இனங்களைப் பொறுத்த மட்டில் ரூ.63.79 இலட்சம் அளவிற்கு வருவாய் வசூல் சான்றிதழ்களை இவ்வமைப்பு வழங்கியுள்ளது. இத்துடன், நிலுவைகளை உரிய நேரத்தில், கட்டத் தவறியவர்கள் மீது 1,840 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

5.9. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்துத் தீர்த்தல்.

(அ) 1982-ஆம் ஆண்டில் 47,999 இனங்களைப் பொறுத்த மட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கி தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 1,714.94 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

(ஆ) 1982-ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை அல்லது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப் பட்டவை, தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமைக் கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) 31-12-1981–ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,404 |
| (2) 1982–ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 59,293 |
| (3) தொகை கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை. | 63,697 |
| (4) 1982–ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 47,999 |
| (5) குறைபாடுகளைச் சரிசெய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 9,353 |
| (6) 31-12-1982-ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 6,345 |



(இ) 1982–ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப் பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :—

| | |
|---|---|
| (1) இறப்பு | 2,652 |
| (2) வயது முதிர்வு பெற்றமை | 5,857 |
| (3) நிரந்தரமாக இயலாமையுற்றது | 777 |
| (4) பதவியை விட்டு விலகியது | 32,789 |
| (5) ஆட்குறைப்புச் செய்யப்பட்டது | 4,748 |
| (6) இடம் பெயர்தல் | 49 |
| (7) பணியிலிருந்து நீக்கப்பட்டது | 461 |
| (8) பல்வகை | 666 |
| மொத்தம் | 47,999 |

5.10. 1971–ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை:

| | |
|---|---|
| (1) 31-12-1981-ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,158 |
| (2) 1982–ஆம் ஆண்டு வரப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 53,355 |
| (3) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 57,513 |
| (4) 1982-ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 36,386 |
| (5) குறைபாடுகளைச் சரிசெய்து அனுப்பி வைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 14,405 |

| | |
|---|---|
| (6) 31-12-1982—ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 6,722 |
| (7) தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை. | ரூ. 59.77 (இலட்சம்). |
| (8) 31—12—1982-ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை. | 957 |

5-11 1976-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (1) 31—12—1981-ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்படாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 534 |
| (2) 1982-ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,086 |
| (3) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,620 |
| (4) 1982-ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,994 |
| (5) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்புமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,790 |
| (6) 31—12—1982-ஆம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை. | 836 |
| (7) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளைப் பொறுத்த மட்டில் ஈட்டுறுதித் திட்ட நலன் தொடர்பாக வழங்கப்பட்ட தொகை. | ரூபாய் 80.36 (இலட்சம்.) |



முன்பணங்கள் :—

5.12. 1982 ஆம் ஆண்டில் பின்வரும் நோக்கங்களுக்காக இத்திட்டத்தின் சந்தாதாரர்களுக்கு அவர்களது வருங்காலவைப்பு நிதிக் கணக்கில் உள்ள தொகையிலிருந்து முன் பணங்கள் வழங்கப்பட்டன. அவை பற்றிய விவரம் பின்வருமாறு :—

| நோக்கம். | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (பத்தி 62). | 12,832 |
| (2) குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக்குடியிருப்பு வாங்க அல்லது வீடு கட்ட அல்லது வீடு வாங்கியது தொடர்பாக ஏற்பட்டக் கடனைத் தீர்க்க (பத்தி 68-பி அண்டு 68-பிபி). | 6,559 |
| (3) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் (பத்தி 68-எச்). | 5,889 |
| (4) குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவச் சிகிச்சைக்கான செலவிற்காக. | 567 |
| (5) உறுப்பினரின் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள்கள், மகன்கள், சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகன், மகள் ஆகியோரின் உயர் கல்விக்கு (பத்தி 68-கே). | 16,734 |
| (6) மின்வெட்டு காரணமாக தொழிற்சாலையில் லே-ஆப் இருக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (பத்தி 68-எம்.). | 104 |
| (7) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்ப்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி 68-என்.). | 2 |
| மொத்தம் .. | 42,687 |

இந்த 42,687 உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட முன் பணத்தின் மொத்த தொகை ரூபாய் 807.45 இலட்சமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

5.13. இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்சக்தியைப் பயன்படுத்துகின்ற 10-ம் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும், மின்சக்தியைப் பயன்படுத்தாத 20 அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும், இத்திட்டம் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் உதவிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (1) மருத்துவ உதவி | .. .. | மருந்துப் பொருட்களாக வழங்கப்படுகிறது. |
| (2) நோய்க்கால உதவி | .. | பணமாக அளிக்கப்படுகிறது. |
| (3) பேறுகால உதவி | .. .. | ,, |
| (4) ஏலாமையுற்றோருக்கு உதவி | .. | ,, |
| (5) சார்ந்துள்ளவர்கள் நல உதவி | | ,, |
| (6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை. | | ,, |

5.14. இம்மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு இத்திட்டம் படிப்படியாக நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இது தொடர்பான விவரங்கள் (30–6–1982 அன்றுள்ளவாறு) கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| (அ) தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை | 4,89,050 |
| (ஆ) ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 5,27,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 5,27,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை | [illegible] |



5.15. தொழிலாளர் நலஈட்டுறுதித் திட்டங்களை பின்வரும் பகுதிகளுக்கு நீட்டிக்க 1982–83-ல் அரசு அனுமதித்தது. இதற்கு ரூபாய் 16.65 இலட்சம் மதிப்பீட்டுச் செலவாகும்.

(1) இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை.

(2) வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரியூர்.

(3) தருமபுரி மாவட்டத்தில் ஒசூர்.

(4) திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூர்.

(5) செங்கல்பட்டு மாவட்டத்தில் பாடியநல்லூர், அலமாதி பகுதிகள்.

(6) நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம்.

(7) செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருநின்றவூர்.

(8) வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜா.

இப்பகுதிகளுக்கு தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் நீட்டிக்கப்படுவதன் காரணமாக ஈட்டுறுதி செய்து கொண்டவர்கள் உட்பட மொத்தம் 47,204 பேர் பயன் பெறுவர்.

5.16. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அயனாவரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர், (வட ஆர்க்காடு மாவட்டம்), ஆகிய இடங்களில் ஐந்து மருத்துவ மனைகளும், 112 நிலையான மருந்தகங்களும், 9 நடமாடும் மருந்தகங்களும், 3 பயன்பாட்டு மருந்தகங்களும், 2 பகுதி நேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | படுக்கைகள். |
|---|---|
| (1) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம், சென்னை. | 625 |
| (2) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, கே. கே. நகர், சென்னை. | 206 |
| (3) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, மதுரை. | 202 |

| | |
|---|---|
| (4) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை கோயம்புத்தூர். | 500 |
| (5) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை வேலூர் (வட. ஆர்க்காடு). | 50 |

5.17. ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளும், 112 நிலையான மருந்தகங்களில் 45-ம் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய மருந்தகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

5.18. பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றும் 50 படுக்கைகள் கொண்ட மேலும் நான்கு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளைக் கட்டும் செயற்குறிப்புக்கள் பரிசீலனையில் உள்ளன.

(1) சேலம்.

(2) மேட்டூர் அணை.

(3) திருச்சிராப்பள்ளி.

(4) சிவகாசி.

5.19. கோயம்புத்தூர், தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை வளாகத்தில் 25 படுக்கைகள் கொண்ட நோய் நீங்கிய பின் ஓய்வு எடுக்கும் இல்லம் ஒன்று 2-12-1982 முதல் செயல்படத் தொடங்கியது.

**1972-ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்:**

5.20. இச்சட்டம், 1972 செப்டம்பர் முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத்துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும், தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையார்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச்சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல் முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் 1982-ஆம் ஆண்டில் பெற்று, தீர்த்துவைத்த வழக்குகளின் விவரங்கள் V ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

5.21. 1982-ல் இந்த ஆண்டில், இச்சட்டத்தின் விதித்துறைகளை மத்திய அரசு பின்வரும் புதிய நிறுவனங்களுக்கும் நீட்டித்தது.

(1) உள்ளாட்சி மன்றங்கள்.

(2) வழக்குரைஞர் அலுவலகங்கள்.



## அத்தியாயம் 6

## தொழிலாளர் நலப் பணிகள்

### அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டுவசதி திட்

### தனியார்துறை தொழிலதிபர் திட்டங்கள்.

6.1. 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

6.2. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1206 வீடுகள் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இதுவரை செலவிட்ட தொகை ரூ. 47.21 இலட்சமாகும்.

**மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம்.—**

6.3. குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்புச் செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37.50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

6.4. அறிக்கை ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்தது:

| | வீடுகளின் எண்ணிக்கை. | கடன். | உதவித் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (1) கிலண்டேல் எஸ்டேட், குன்னூர். | 40 | 80,000 | 60,000 |
| (2) வாட்டர் பால்ஸ் எஸ்டேட், (கிழக்கு), வால்பாறை. | 12 | 24,000 | 18,000 |
| (3) வாட்டர் பால்ஸ் எஸ்டேட், (மேற்கு) வால்பாறை. | 34 | 68,000 | 51,000 |
| (4) கிளன்வாஸ் எஸ்டேட் நியூ ஹோப் போஸ்ட். | 44 | 88,000 | 66,000 |
| (5) சோலையார், காளையார் எஸ்டேட், வால்பாறை. | 100 | 2,00,000 | 1,50,000 |

6.5. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ. 21.79 இலட்சம் செலவில் 828 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

6.6. **தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி.**— (1) கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டு தல் அல்லது அவை போன்ற ஆபத்தான தொழில்களில் பணி புரியும் போது காயமேற்பட்டு அதனால் நிலையாக பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரண மடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது 1923-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாதுபோனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர் களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந் தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர்.

1982-ல் நான்கு தொழிலாளர்களுக்கு நிதியிலிருந்து துயர் தணிப்புத் தொகையாக ரூ. 4,000 வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.**—

6.7. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையின் கீழ் இயங்குகிறது. இவ்வாரியம், தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக பல நடவடிக்கைகள் எடுத் துள்ளன.

6.8. ஏற்கனவே உள்ள 22 தொழிலாளர் நல நிலையங் களுடன் இவ்வாண்டில் பின்வரும் 8 இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சேலம் | விழுப்புரம் |
| விருதுநகர் | பழனி |
| இராணிப்பேட்டை | திருநெல்வேலி |
| கும்பகோணம் | பல்லடம் |

6.9. **இவ்வாரியம் செயல்படுத்திய ஏனைய நலத் திட்டங்களும் அவற்றின்மூலம் பயனடைந்தோரின் எண்ணிக்கையும் பற்றிய விவரங்கள் வருமாறு:**



**(1) தொழிலாளர் நல நிலையங்கள்**

| | 1982–83 |
|---|---|
| (1) தையல் பயிற்சி நிலையங்கள். | |
| (அ) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 32 |
| (ஆ) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 1,024 |

**(2) பாலர் பள்ளிகள்**

| | |
|---|---|
| (அ) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 10 |
| (ஆ) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. | 836 |

**(3) குழந்தைக் காப்பு நிலையங்கள்**

| | |
|---|---|
| (அ) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை .. | 5 |
| (ஆ) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 198 |

**(4) படிப்பகங்கள்**

| | |
|---|---|
| (அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. | 4 |
| (ஆ) பயன் பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை .. .. | 38,290 |

**(5) ஏனைய திட்டங்கள்**

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் | 263 | 12,316 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து படிப்புக் கட்டணங்கள் .. | 446 | 44,132 |
| (இ) புத்தக வங்கி .. .. .. | 9,923 | 1,42,728 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் ... | 494 | 98,800 |

6.10. பின்வரும் படிப்புகளுக்காக 1982-ஆம் ஆண்டில் மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கிய வகையில் வாரியம் நிதியுதவ அனுமதித்துள்ளது.

| | பயனடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| (a) பொறியியல் படிப்பிற்கான படிப்புதவித் தொகைகள். | 19 | 16,906 |
| (b) மருத்துவப் படிப்பிற்கான (எம். பி. பி.எஸ்.) படிப்புதவித் தொகைகள். .. .. .. | 6 | 4,500 |
| (c) பொறியியல் பட்டப் படிப்பிற்கான படிப்புதவித் தொகை .. .. | 14 | 8,575 |
| (d) தொழிற் பயிற்சி நிலையங்கள் படிப்புகளுக்கான படிப்புதவித் தொகை .. .. .. | 8 | 1,950 |

சட்ட உதவி—

6.11. உயர்நீதி மன்ற வழக்குகள் தொடர்பாக, தொழிற் சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனை களுக்குட்பட்டு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உத விக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆயினும், 1982 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை எதுவும் கோரப்படவில்லை.

6.12. தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத் தின்கீழ் இழப்பீடு கோரும், ஏழ்மை நிலையிலுள்ள, தகுதி வாய்ந் தத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்ப வர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,000 ஒதுக்குகிறது. காய மடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப் படவேண்டுமென இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணை யாளர்கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிருவாகங் கள் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும் போது சம்பந்தப்பட்டத் தொழிலாளர்கள் உயர்நீதிமன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காட, சட்ட உதவி பெறத் தகுதியுடையவராவர். இவ்வாறு உதவி பெற, இழப்



பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின் போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். 1982 ஆம் ஆண்டில், இத்தகைய சட்ட உதவி வேண்டி நான்கு மனுக்கள் வரப்பெற்று, அவற்றிற்காக ரூபாய் 7,300 வழங்கப்பட்டது.

தொழிலாளர் நலச் சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

6.13 சென்னை , கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வரு கின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர்.

6.14. இக் குழுக்கள், 1982 ஆம் ஆண்டில் 336 முறையீடு களுக்குத் தீர்வு கண்டுள்ளன.

தமிழ்நாடு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குச் சத்துணவுத் திட்டம்.

6.15. இத் திட்டம், 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன், தொழிற்சாலைகளிலும், மலைத் தோட்டங்களிலும் பணியாற் றும் தொழிலாளர்களின் நலனைக் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள், கருவுற்ற மகளிர்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் இத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். 1982 ஆம் ஆண்டில் இத் திட்டம், 98 மையங்களைச் சேர்ந்த 27,000 பேர்களுக்கு விரிவுப்படுத்தப் பட்டது.

மேற்கூறிய திட்டம் தவிர உடல்நலப் பணிகள் ஒருங் இணைந்தத் தீவிர திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை :

6.16 தொழிற்சங்க நடவடிக்கைகளின் தரத்தை உயர்த்து வது, நிருவாக வாயில்களை மேம்படுத்துவது, திறமையான தொழி லாளர் நல நிருவாகப் பணியை உருவாக்குவது ஆகியவை இந் நிலையத்தின் நோக்கங்களாகும்.

6.17. 1982 ஆம் ஆண்டில் இந்நிலையம் பின்வரும் திட்டங் களைச் செயற்படுத்தியது.

(1) அரசுச் சார்புச் செயலாளர்களுக்கும், தலைமைச் செய லகப் பிரிவு அலுவலர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி நினைவு கூர் பயிற்சி.

[1983 ஏப்ரல் 9

(2) பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த
இளநிலை உதவியாளர்களுக்கு, அலுவலக நடைமுறையிலும்
கணக்குகளிலும் அடிப்படைப் பயிற்சி.

(3). வணிக நிறுவனங்களைச் சேர்ந்த வேலையளிப்ப
வர்களுக்கு கடைகள்—நிறுவனங்கள் சட்டம், ஏனைய தொழி
லாளர் நலச் சட்டங்கள் ஆகியவை குறித்த வகுப்புகள்.

இந்நிலையம், இதுவரையில், நடத்திய வகுப்புகள், கருத்
தரங்குகளின் எண்ணிக்கை 160 ஆகும். இவற்றில் 4,216
பேர்கள் கலந்து கொண்டனர்.

**தொழிலாளர் நல நிருவாகம் பற்றிய பகுதி நேரப்பட்டயப்
படிப்பு :**

6.18. இக் கல்வி நிலையம் 15–9–1979 முதல் தொழிலாளர்
நல நிருவாகம் பற்றி ஓராண்டு பகுதி நேரப்பட்டய மேற்படிப்பு
வகுப்பினையும் நடத்தி வருகிறது. தொழிலாளர் நல நிரு
வாகம் பற்றிய நான்காவது பட்டய மேற்படிப்பு வகுப்பை,
தொழிலாளர் நல அமைச்சர் 22–6–1982 ஆம் நாளன்று
தொடங்கி வைத்தார். இவ்வாண்டு, இப்படிப்பில், 42 மாண
வர்கள் பயிலுகின்றனர்.

6.19. தமிழில் தொழிலாளர் நலம் பற்றிய திங்கள் இதழ் :

இந்நிலையம் ''உழைப்பவர் உலகம்'' என்னும் திங்கள் இதழ்
ஒன்றை தமிழில் வெளியிட்டு வருகிறது. தொழிலாளர் நீதி
மன்றங்கள், உயர்நீதிமன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகியவை
தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக அளித்த முக்கியமான
தீர்ப்புகள் பற்றிய செய்திக் குறிப்புகள் இதில் வெளியிடப்
படுகின்றன. மேலும் அரசு அறிவிக்கைகளும் இவ்விதழில்
வெளியிடப்படுகின்றன. இவ்வெளியீட்டின் சந்தாதாரர்களின்
எண்ணிக்கை 1981 எப்ரலில் 6,800 ஆக இருந்து 1982 டிசம்பரில்
13,000 ஆக உயர்ந்துள்ளது.

6.20. திருநெல்வேலி, சங்கர் நகரில், ''உழைப்பவர் உலகம்
வாசகர்கள் மன்றம்,'' ஒன்றை தொழிலாளர் நல அமைச்சர்
8–5–1982 ஆம் நாளன்று தொடங்கி வைத்தார். படிப்பகங்
கள் ஏற்படுத்துதல் தொழிலாளர் கூட்டங்களை நடத்துதல்
முதலியன மூலம் இயன்ற வரையில் பல தொழிலாளர்களுக்கு
இந்த இதழில் வெளிவரும் கருத்துகளைப் பரப்புவதே இம்
மன்றத்தின் நோக்கமாகும்.



1983 ஏப்ரல் 9]

## அத்தியாயம் 7.

### எடைகள் அளவைகள் குறித்த சட்டம்.

7.1. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள் அளவைகள்
(செயற்படுத்தல்) சட்டத்தின் விதித் துறைகளையும், அதன்
கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் தொழிலாளர் நலத் துறையால்
செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக, தொழிலாளர்
துறை துணை ஆணையர் (ஆய்வு) எடைகள்-அளவைகள் கட்டுப்
பாட்டு அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். இப்பணியில்,
அவருக்கு உதவியாக, தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழி
லாளர் நல துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள்
ஆகியோர் உள்ளனர்.

7.2. மேற்சொன்ன சட்டத்தைத் திறம்படச் செயற்படுத்து
வதற்காக, அரசு, இச்சட்டத்தின் கீழ் முத்திரையிடும் பணியைக்
கவனிப்பதற்கென்றே சென்னை மாநகரிலும் செங்கற்பட்டு,
மதுரை மாவட்டங்களிலும் தனிப்பணியாளர்களை நியமித்துள்ளது.

7.3. 1982 ஆம் ஆண்டில் செய்த ஆய்வுகள், கூட்டாக நடத்
திய திடீர் சோதனைகள் தொடரப்பட்ட வழக்குகள் ஆகிய
வற்றின் விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| கிராம ஆய்வுகளின் எண்ணிக்கை .. .. | 9,843 |
| ஆய்வு செய்யப்பட்ட வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை. | 56,950 |
| கூட்டாக நடத்திய திடீர் சோதனைகளின் எண்ணிக்கை. | 2,020 |
| சோதனை செய்த வணிக நிறுவனங்கள் எண்ணிக்கை. | 52,608 |
| தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 18,176 |
| தண்டனை முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை (1981-லிருந்து முடிவடையாமலுள்ள வழக்குகள் உட்பட). | 18,109 |
| விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூபாய் .. | 9,80,803.00 |

7.4. இச்சட்டத்தின் கீழ் 1981, 1982 ஆம் ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம், முத்திரையிடுவதற்கான கட்டணம் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :

| | 1981 | 1982 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பழுது பார்ப்பவருக்கான உரிமங்கள் .. | 240 | 258 |
| விற்பனையாளர்களுக்கான உரிமங்கள். | 552 | 589 |
| தயாரிப்பாளர்களுக்கான உரிமங்கள் .. | 108 | 121 |
| வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் .. (ரூபாயில்). | 1,57,859.50 | 1,71,394 |
| வசூலிக்கப்பட்ட முத்திரையிடுவதற்கான கட்டணம். (ரூபாயில்). | 51,75,638.79 | |

52,46,068.59



7.5 வணிக நிறுவனங்களில் குறைத்து எடை போடுதல் அல்லது அளவையிடுவதைக் கண்டுபிடிப்பதற்காக நடத்தும் சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாநில முழுவதும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. இவை பற்றிய விவரங்கள் வருமாறு :

| தொழில் வகை. | திடீர் சோதனை நடத்தப் பட்ட நாள். | செய்யப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை. | கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அ) பெட்ரோல், டீசல், அளவைக் கருவிகள். | 6—2—82 | 316 | 37 |
| (ஆ) தெருவில் மண்ணெண்ணெய் விற்பவர்கள். | 8—2—82 மற்றும் 22—4—82 | 226 | 83 |
| (இ) சிறப்பு அங்காடிகள் .. | 25—4—82 | 105 | 1,416 சிப்பங்களில் 133 சிப்பங்கள் எடை குறைவானவையாக இருந்தது அறியப் பட்டு அவை கைப் பற்றப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) சிமிட்டி தொழிற்சாலைகள்— | | | | |
| (1) சிமிட்டி நிரப்புமிடங்களில் | 7—5—82. | 705 மூட்டைகள் சோதனை யிடப்பட்டன. | எடை குறைவாக இருந்த 71 மூட்டைகள் மீண்டும் சரியாக நிரப்பப்பட்டு தரப்படுத்தப் படுவதற்காகத் தனியே பிரிக்கப் பட்டன. | |
| (2) ஒப்படை செய்யுமிடங்களில். | 7—5—82. | 35 லாரி சுமைகள். | எடை குறைவாக இருந்ததற்காக 17 (5) (பி) பிரிவின் கீழ் 3 லாரி சிமிட்டி மூட்டைகள் நிறுத்தி வைக்கப் பட்டன. | |
| (உ) உணவு பங்கீட்டு கடைகளிலும் ஏனைய முகவரமைப்புகளிலும் | 6—7—82 மற்றும் 7—7—82. | 399 | 107 | |



7.6 1982-இல் கூட்டாக நடத்தப்பட்டத் திடீர் சோதனைகளின் போது கைப்பற்றப்பட்ட தவறான, குறைபாடாக உள்ள அல்லது மீண்டும் சரி பார்க்கப்படாத பல்வேறு எடைகள், அளவைகள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| எடைகள் .. .. | 26,043 |
| கொள்ளளவு கருவிகள் .. .. .. | 14,471 |
| நிறுவைக் கருவிகள் .. .. .. | 1,068 |
| துலாத்தராசுகள் (பீம் ஸ்கேல்) .. .. | 4,295 |
| அளக்கும் கருவிகள் .. .. | 713 |

பாகம் 2.

## அத்தியாயம் 8.

## தேசிய வேலை வாய்ப்புப் பணி.

### 8.1 வேலை வாய்ப்புகள்—

தமிழ் நாட்டில்,13 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் 5 தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள். சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவுகள் மூன்று ஆகியன உட்பட 39 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

பதிவு செய்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வேலை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை செல்லுபடி பதிவேட்டில் (Line Regisiter) உள்ளவர்களின் எண்ணிக்கை, அறிவிக்கப் பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை அறிக்கையாண்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணியைப் பயன்படுத்திக் கொண்ட பொது, தனி வேலையளிப்போரின் எண்ணிக்கை. ஆகியவை பற்றிய விவரங்கள் முந்திய ஆண்டின் நிகரான கால அளவு தொடர்பான விவரங்களுடன் இணைப்பு V1-ல் உள்ள விவர அறிக்கையின் பிரிவு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 8.2. உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள்.:

உடல் ஊனமுற்றவர்களைப் பதிவு செய்யவும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் தனி வேலை வாய்ப்பு அலுவலகப் சென்னையில ஒன்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப் பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒ( பிரிவாக நான்கு பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. அவை, பொது, தனியார் துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வெவ்வேறான உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுக்கின்றன. 1–4–1982-இல் இருந்து 31–12–1982 வரையிலான காலத்தில் பதிவு செய்யப்பட்டு வேலையில் அமர்த் தப்பட்ட உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் பற்றிய யிள்ளி விவரங்கள் இணைப்பு Vi-ல் உள்ள விவர அட்டவணை ன் 2 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.





### 8.3. தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம் :

இவ்வலுவலகம், தமிழ் நாட்டில் தொழில் அறிவியல், பொறி யியல், நிர்வாகத் துறைகளில் உயர் தகுதியுடைய விண்ணப்ப தாரர்களின் தேவைகளை நிறைவு செய்கிறது. அவர்களுக்குத் தகுந்த வேலையைக் கண்டுபிடித்து, அவர்களைப் பணியிலமர்த்து வதற்காக இவ்வலுவலகம் பொது, தனியார் துறைகளைச் சேர்ந்த முன்னணி வேலையளிப்போருடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. 1–4–1982 இலிருந்து 31–12–1982 வரையி லான கால அளவில் இந்த அலுவலகம் புரிந்த பணி தொடர்பான புள்ளி விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அறிக்கை யின் 3 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்-ஆலோசனைப் பிரிவு பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பற்றிய தகவல் அளிப்பதுடன், வேலை தேடுபவர்களை பதிவு செய்து, அவர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் உதவுகிறது. 1–4–1982 முதல் 31–12–1982 வரையுள்ள கால அளவில் பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் ஆலோசனைப் பிரிவு தொடர்பான புள்ளி விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் 4 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பத் தகுதி உடையவர்களுக்காக சென்னை. திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் மூன்று வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த அலுவல கங்கள், தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்றவர்களைப் பதிவு செய்து பொது, தனியார் துறைகளில் தகுந்த பணிகளில் அவர் களைப் பணியிலமர்த்துகிறது.

### 8.4. வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம் :

(அ) இத்துறை செயல் படுத்தும் வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ், 10 அல்லது அதற்கு அதிகமான தொழி லாளர்கள் (வேளாண்மை நீங்கலாக) பணி புரியும், தனியார், பொதுத் துறைகளில் உள்ள எல்லா நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய தகவல் காலாண்டுக்கு ஒரு முறை சேகரிக்கப்படுகிறது. அமைப்பு ரீதி யான நிறுவனங்கள் தொடர்பாக மட்டுமே இத்தகவல் சேகரிக்கப் படுகிறது. பொது, தனியார் துறைகளிலுள்ள நிறுவனங்களைப் பொறுத்தவரை 31–3–1982, 30–6–1982 அன்றுடன் முடி வடைந்த இரு காலாண்டுகளில் தொடர்பு கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை ஆகியவை இணைப்பு VI இல் உள்ள விவர அறிக்கையின் 5 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களின் செல்லு படிப் பதிவேடுகளிலுள்ள முதல் வகுப்புப் பட்டதாரிகள் என்னும் பொருள் குறித்து மேற்கொள்ளப்பட்ட தனி ஆய்வு முடிக்கப் பட்டு விட்டது.

(இ) இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன:

(1) தமிழ்நாட்டின் சில குறிப்பிட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் செல்லுபடி பதிவேட்டிலுள்ள தேசிய தொழிற் பழகுநிலை சான்றிதழ் (National Apprenticeship Certificate) தேசியதொழிற் சான்றிதழ் (National Trade Certificate பெற்றவர்கள பற்றிய ஆய்வு.

(2) மதுரை மாவட்ட வேலை வாய்ப்பகத்திலும், திண்டுக்கல் துணை வேலை வாய்ப்பகத்திலும் உள்ள செல்லுபடி பதிவேடுகளில் பதிவு செய்து காத்திருப்பவர்களில் எத்தனை பேர்கள் ஏற்கனவே வேலையில் உள்ளனர் என்பதைப் பற்றிய ஆய்வு;

(3) தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடிப் பதிவேட்டில் பதிவு செய்துள்ள மருத்துவ, பொறியியல் பட்டதாரிகளில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை பற்றி அறிய ஆய்வு ;

(4) சேலம் உருக்காலை திட்டம், சேலம், பாரத் ஹெவி எலெக்ட்டிரிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், உதகமண்டலம் ஆகிய இடங்களில் எக்ஸ் 49 வழங்குவது (இல்லையென்பதற்கான சான்றிதழ்) பற்றிய விரிவான சிறப்பு ஆய்வு ;

(5) தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பகங்கள் மூலம் நிரப்பப்பட்ட காலியிடங்களின் கால அளவு எவ்வளவு என்பது பற்றிய மாதிரி ஆய்வு;

(6) எந்தெந்த காலியிடங்களுக்கு " இல்லையென்பதற்கான சான்றிதழ் " வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்டதற்கான காரணங்கள் : ஆகியவை குறித்த ஆய்வு ;

8.5. வேலை வாய்ப்பகங்களின் பணியை கணக்கீட்டு பொறியைக் (கம்பியூட்டர்) கொண்டு செய்தல்:

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள 9 வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கணக்கீட்டுப் பொறி மூலம் செய்யும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மனுதாரர்களின் விவரங்கள் கணக்கீட்டுப் பொறி நாடாவில் பதிவு செய்யப்பட்டு அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்ட புள்ளி விவரத் தொகுப்பு கொண்ட கணக்கீட்டுப் பொறி நாடாக்களின் உதவியால் வேலை வாய்ப்பகங்களின் பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியை சென்னை-17 தொழில் நிருவாக





வேலை வாய்ப்பு அலுவலகத்தில் முதற்கண் செயற்படுத்த கருதப்பட்டுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன·

(அ) இப்படிவங்களை பாகுபாடு செய்தபின், அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம், தகவல் படிவத்தில் பிழைத் திருத்தங்கள் செய்யும் பொருட்டு, பதிப்பித்தல் பட்டியல் (Edit List) வழங்கியது. தேவையான பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்டு அரசு புள்ளி விவரத் தொகுப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டன.

(ஆ) பதிப்பித்தல் பட்டியல்படி, பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்ட 25,995 மனுதாரர்களின் விவரங்கள் கொண்ட முடிவான பட்டியல் ஒன்றினை அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் வழங்கியுள்ளது. பிழைத்திருத்தங்கள் சரியாகச் செய்யப்பட்டுள்ளதா என்று அவை சரி பார்க்கப்பட்டு தேவையான நீக்கங்கள், மாற்றங்கள் செய்யப்பட்டு அப்பட்டியல் அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

(இ) அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் கணக்கீட்டுப் பொறி நாடாவில் முடிவான பட்டியல் (Master List) தயாரிக்கும் பணியினை மேற் கொண்டுள்ளது. இப்பணி முடிந்ததும் மனுதாரர்களைத் தெரிந்தெடுக்கும் பணிகளும் இதர வேலை வாய்ப்பக பணிகளுக்கும் கணக்கீட்டுப் பொறி வாயிலாக முதற்கண் சோதனை முறையில் மேற் கொள்ளப்படும்.

8.6. வாழ்க்கைத் தொழிலுக்கு வழி காட்டுதலும், வேலை வாய்ப்பு ஆலோசனை அளித்தலும் (vocational Guidance and Employment counselling)

தமிழ்நாட்டில் தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் ஆலோசனைப் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுவோர்களுக்கு தொடர்ந்து தொழில் வேலை வாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வசதிகள், வேலை வாய்ப்பு குறித்த தகவல், தொழில் பழகு வசதிகள், குறித்த விவரங்களை அளிக்கிறது, மாணவர்கள் பதிவு செய்தவர்கள் பயனடையும் வகையில் வழி காட்டுதல் தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் வேலை தேடுவோரின் பயனுக்காக வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் ஆலோசனைப் பிரிவுகள் காலாண்டு தோறும் ஆலோசனை அறிக்கைகள் தயாரித்து, பள்ளிகளுக்கும், நூலகங்களுக்கும் அவற்றை அனுப்புகின்றன. வாழ்க்கைத் தொழில் ஆலோசனைப் பிரிவுகளில் நடைபெறும் பணிகள் விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையில் 6 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை இயக்ககத்தின் மாநில வாழ்க்கைத் தொழில் ஆலோசனைப் பிரிவு 33 தொழிற் பயிற்சி நிலையங்களில் சுமார் 28,446 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு (Aptitude test) நடத்தியது. தொழிற் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழில்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இத்தேர்வு நடத்தப்பட்டது. அண்ணாமலை நகர் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவு, நாகர் கோயில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றால் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வேலை வாய்ப்பு தொடர்பான பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன.

8.7. வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு :

இப்பிரிவு பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு தகுந்த வேலை வாய்ப்பு, பயிற்சி வசதிகளைப் பெற்றுத் தருவதன் மூலம் அவர்களுக்கு உதவி செய்கிறது. இப்பிரிவில் மேற்கொள்ளப்படும் பணிகளில் விவரங்கள், இணைப்பு (VI) இல் உள்ள விவர அட்டவணையில் 7 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.8. 1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பகங்கள் (வேலை காலியிடங்களைக் கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டத்தைச் செயற்படுத்தல்.

30–9–1982 அன்றைய நிலவரப்படி 13,172 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் வந்தன. 30–9–1981 ஆம் நாள்படி 12,853 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் இருந்தன. குறிப்பிட்ட காலங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களில் எண்ணிக்கையும் அந்நிறுவனங்களால் நிரப்பப்பட்ட இடங்களின் எண்ணிக்கையும் இணைப்பு (VI) இல் உள்ள விவர அட்டவணையில் 8 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.9. வேலை வாய்ப்பற்றோருக்கு உதவித் திட்டம் :

படித்த, வேலை வாய்ப்பில்லாதோர்களிடையே உள்ள அவல நிலையைப் போக்கும் பொருட்டு "வேலை வாய்ப்பற்றோர் உதவித் திட்டம்" ஒன்றை அரசு உருவாக்கி இத்திட்டம் 1–7–1980 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஏற்பளிக்கப்பட்ட பின்வரும் 8 பிரிவுகளைச் சேர்ந்த வேலை நாடுவோர் அத்திட்டத்தின் கீழ் உதவிப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர் :

1. அனைத்துப் படிப்புத் துறைகளிலும், பட்டதாரிகள், பட்ட மேற்படிப்பு பட்டதாரிகள்.



2. தகுதிவாய்ந்த இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள்.

3. தகுதிவாய்ந்த உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.

4. தகுதிவாய்ந்த உடற்பயிற்சி கல்வி தொடக்கப்பள்ளி உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

5. தகுதிவாய்ந்த தமிழ், பிற மொழி ஆசிரியர்கள்.

6. தகுதிவாய்ந்த கைவினை ஆசிரியர்கள்.

7. பொறியியல் பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள்.

8. பள்ளி இறுதி வகுப்பைத் தேறிய அல்லது புதிய 10-ஆவது வகுப்பு தேறிய அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதியுடைய அல்லது பார்வை இழந்தோர்.

இத்திட்டத்தின் கீழ் 1980–81, 1981–82, 1982–83 (31–12–1982 வரை) ஆம் நிதி ஆண்டுகளில் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் இணைப்பு VI-ல் உள்ள விவர அட்டவணையில் 9 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

8.10. ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான வேலைவாய்ப்பு உதவி.

(1) ஆதி திராவிடர், பழங்குடியினரை வேலையில் அமர்த்துவதில் வேலை வாய்ப்பகங்களின் பணிகளை ஒருங்கிணைக்க இவ்வியக்கத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மைய, மாநில அரசுப் பணிகளில் நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள, வேலையில் அமர்த்தப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியினரின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு-VIஇல் உள்ள விவர அட்டவணையின் 10 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) பழங்குடியினருக்கு வாழ்க்கைத் தொழில் வழி காட்டுவதற்காகவும், பழங்குடியினரை அனுப்புவதற்குத் தகுந்த வேலைகளிலுள்ள காலியிடங்களைக் கண்டறியவும், பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் முறை வழி காட்டும் நிலையம் ஒன்று உதகமண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவால் நடைபெறும் பணிகளின் விவரங்கள் இணைப்பு VI இல் உள்ள விவர அட்டவணையின் 11-ஆவது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

**8.11. மாவட்ட உழைப்பாற்றல் திட்ட வேலை வாய்ப்புக் குழுக்கள்.**

தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட உழைப்பாற்றல் திட்ட, வேலைவாய்ப்பு உற்பத்திக் குழுக்களை அமைப்பதற்கு அனுமதியளித்துள்ளது. உள்ளூரில் கிடைக்கும் வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தனித்து இயங்கக் கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில், மாவட்டங்களில் வேலையற்று இருப்போரையும் போதிய வேலைவாய்ப்பு அற்று இருப்போரையும் வழிப்படுத்தும் ஓர் அமைப்பாக இந்த குழுக்கள் செயல்படும். சுய வேலைவாய்ப்புச் சாத்தியக் கூறுகள் சுய வேலைவாய்ப்பை மேற்கொள்ள விழைபவர்களைக் கண்டறிய பல குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. வேலையற்ற இளைஞர்களை, சுய வேலைவாய்ப்பு மூலம் பயனடைய தூண்டுவதற்காகவும், அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை பெற்றுத்தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**8.12. வருங்காலத் திட்டங்கள்.**

*(1)* புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களின் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலைவாய்ப்பு ஆலோசனைப் பிரிவுகளை ஏற்படுத்துதல்.

இம்மாவட்டங்களைச் சேர்ந்த வேலை தேடுபவர்களுக்கு, வேலைவாய்ப்புச் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் வழங்குவதற்காக புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களிலுள்ள வேலை வாப்பகங்களில் வேலைவாய்ப்பு ஆலோசனைப் பிரிவுகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*(2)* கோயம்புத்தூரில் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகத்தை ஏற்படுத்தல்.

வேலை தேடுவோருக்கு ஏற்படும் குறைகளை விரைவில் முடித்து வைக்கவும், களப்பிரிவுகளின் நிர்வாகம், கட்டுப்பாடு மேற்பார்வை, ஆகிய பணிகளைத் திறமையாக மேற்கொள்ளும் வகையிலும், 1983—84-இல், கோயம்புத் தூரில் வட்டாரத் துறை இயக்குநர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

*(3)* சில வேலை வாய்ப்பு அலுவலகங்களில் சிறிய வடிவிலான விவர அட்டைகளை முன்னோடி அடிப்படையில் வைத்து வருதல்.



வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தயாரிக்கப்பட்ட தெரிந் தெடுக்கப்பட்ட பட்டியல்களில் முதுநிலை விண்ணப்பதாரர்களின் பெயர்கள் விடுபடாமலிருக்கும் நோக்கத்துடனும் வேலைவாய்ப் பளிக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கு தகுதியுடைய அனைத்து முதுநிலை விண்ணப்பதாரர்களின் பெயர்களும் பட்டியலில் சேர்க் கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்கள் பற்றிய தேவையான அனைத்து விவரங்கள் அடங்கிய சிறிய வடிவிலான அட்டைகளைத் தயாரித்து அவற்றை அலுவலரின் நேரடிப் பாது காப்பில் வைத்துக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முதற்கண், 6 வேலை வாய்ப்பு அலுவலகங்களில் முன்மாதிரித் திட்டமாகப் பின்பற்றக் கருதப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 9.

### கைவினைஞர் பயிற்சி திட்டம்.

### தொழிற் பயிற்சி நிலையங்கள்.

9.1. 1982 ஆகஸ்ட்டிலிருந்து எல்லா பயிற்சி வசதிகளும் பெற்ற தொழிற் பயிற்சி நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள மகளிருக்கான எஸ். எம். ஆர். வி. அரசு துணி ஆலை நிறுவனம் உட்பட தமிழ்நாட்டில் 35 தொழிற் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இத்தொழில் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்கள் 13,588 ஆகும். 30 பொறியியல் பிரிவுகளிலும், 12 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 22 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் ஓராண்டாகும். 20 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் இரண்டாண்டாகும். மகளிருக்கென தனியாக மூன்று தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஒன்று சென்னையிலும், மற்றொன்று கடலூரிலும், ஒன்று நாகர்கோவிலிலும் இயங்கி வருகின்றன. எந்திரக் கம்மியர் (பொது மின் அணுவியல்) துறையில் பயிற்சி அளிப்பதற்காக தனி தொழில் பயிற்சி பிரிவு ஒன்று அடையாறு மின்னணுவியல் கூடத்தில் இயங்கி வருகிறது. சாதி இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி ஆண்டிற்கு ஒரு முறை தொழில் பயிற்சி நிலையங்களில் தகுதி அடிப்படையில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

9.2. பயிற்சி பெறுபவர்கள், பயிற்சி முடிந்த பின்னர் நல்ல வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறும் பொருட்டு, வேலை வாய்ப்பு குறைவாக உள்ள தொழில் பிரிவுகளை நீக்கிவிட்டு, வேலை வாய்ப்பு அதிகம் உள்ள தொழில் பிரிவுகளைப் புதிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழில் பயிற்சி நிலையங்களில் தொழில்களைப் பலதிறப்படுத்துதல் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது.

9.3. 1982–83 ஆம் ஆண்டு ஓசூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் கருவிகள்—அச்சுத் தயாரிப்புத் தொழில் பிரிவும், கைக் கடிகாரம், சுவர் கடிகாரம் செய்பவர் தொழில் பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வார்ப்படத் தொழிற் பயிற்சிப் பிரிவுகள் இரண்டு கடலூர் தொழிற் பயிற்சி நிறுவனத்திலிருந்து இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. விருதுநகர், மேட்டூர் அணை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் கம்மியர்(மோட்டார் வண்டி) தொழில் பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது.

9.4. இதுவரை நடைபெற்ற 18 அனைத்திந்திய திறனாய்வு போட்டிகளில், தமிழ்நாடு முதன்மை இடத்தை எட்டுமுறைகள் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற் கேடயத்தையும் எட்டு முறை பெற்றுள்ளது.





9.5. தொழில் பழகுவோரின் பயிற்சித் திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்த திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி சம்பந்தப்பட்ட பயிற்சி மையங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டன. இவற்றையும் சேர்த்து தமிழ்நாட்டில் இயங்கிவரும் தொழில் பயிற்சி சம்பந்தப்பட்ட மையங்களின் எண்ணிக்கை தற்பொழுது 8 ஆக உயர்ந்துள்ளது. தெற்கு வட்டாரத்தில் உள்ள அச்சக நிர்வாகப் பிரிவுகளின் தேவைகள் நிறைவு செய்யும் பொருட்டு, மதுரை, தொழிற்பயிற்சி நிலையத்தில் அச்சுத் துறை சம்பந்தப்பட்ட அடிப்படைப் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

9.6. இத்திட்டத்தின் கீழ் 30—9—1981, 30—9—1982 அன்றுள்ளபடி தொழில் பழகுவோரின் விவரப் பட்டியல் கீழ்வருமாறு :—

| | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் பழகுவோர் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| (அ) 30—9—1981 அன்றுள்ளவாறு. | 3,622 | 7,381 | 11,003 |
| (ஆ) 30—9—1982 அன்றுள்ளவாறு. | 3,662 | 7,555 | 11,217 |

| | தேர்வு செய்யப்பட்ட தொழில் பழகுவோரின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| (அ) 30—9—1981 அன்றுள்ளவாறு. | 2,685 | 7,485 | 10,170 |
| (ஆ) 30—9—1982 அன்றுள்ளவாறு. | 2,885 | 7,482 | 10,367 |

தொழிற்சாலைகளில் பணிபுரியும்தொழிலாளர்களுக்குமாலைநேர வகுப்புகள்:

9.7. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தொழில் துறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகுதிகளான கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை முதலிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிதி உதவி பெறும் தொழில் பள்ளிகள் :

9.8. வேலை வாய்ப்பு.– பயிற்சித் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட தொழில் பயிற்சி பள்ளிகள் ஒழுங்குமுறை விதிக் கோவையின் கீழ் ஏற்பு அளிக்கப்பட்ட 92 தொழிற் பள்ளிகள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துநர் தொழில், பற்ற வைக்கும் தொழில், பூ வேலை, பின்னல் வேலை, துணி வெட்டுதல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இத்தொழில்களின் பயிற்சிக் காலம் ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகளாகும். அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 6,666. தற்போது 5,450 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில்களுக்கும் பொதுப்பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பொதுத் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது. தொழிற் பள்ளிக்கான ஒழுங்குமுறை விதிக் கோவையின் விதித் துறைகளின்படி இப்பள்ளிகள் மானியம் பெற தகுதியுடையவையாகும்.

சிறப்புப் பயிற்சித் திட்டம் :

9.9. வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர் தங்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்ப பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். சேலம், திருச்சி, மதுரை, பேட்டை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982ஆம் ஆண்டு 80 பயிற்சியாளர்கள் இவ்வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர். 1982ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில் 59 பேர் தேர்வு எழுதினர். அவர்களில் அனைவரும் தேர்ச்சி பெற்றனர்.



9.10. வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டம்:

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் துறை அறிவினை மேம்படுத்த, அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) இந்தியத் தர நிர்ணயம் பொறியியல் வரைபடங்களைக் கற்றல், (2) உலோகபற்ற வைப்பில் சிறப்புப் பயிற்சி, (3) கருவி அச்சு தயாரித்தல், (4) கம்மியர் பராமரிப்பு, (5) மின்சாரம்—பராமரிப்பு, (6) பொறியியல் தொழில்நுட்பவியல் அறிமுகம்.

9.11. 1981–82ஆம் ஆண்டு இத்திட்டம் கோயம்பத்தூரிலுள்ள தொழில்பயிற்சி நிலையத்திற்கும் நீட்டிக்கப்பட்டு பின் வரும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

(1) மின் பராமரிப்பு.

(2) கம்மியர் பராமரிப்பு.

அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் :

9.12. இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் கல்வி கற்பிப்பதில் பயிற்றுநர்களுக்கு தொழில் நுட்ப உத்தி குறித்தும் ஒலி, ஒளி கருவிகளை உபயோகிப்பது குறித்தும், நிர்வாகம் குறித்தும் தனிப்பயிற்சி அளிப்பதேயாகும். இப்பயிற்சித் திட்டம் 1980 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இளநிலைப் பயிற்சி அலுவலர்களுக்கும் உதவி பயிற்சி அலுவலகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சித் திட்டத்தில் நவீன தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதும் அடங்கும். இது வரை 143 தொழிற் பயிற்சியாளர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

நினைவுகூர் பயிற்சித் திட்டம் :

9.13. பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செவ்விய வகையில் செயல்படுத்துவதற்கும் தொடர்புத் திறனையும் செயல் நோக்கக் கூறுகள் கூருணர்வுத் திறம், தொகுதி ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் தொழிற்பயிற்சி நிலையங்களின் முதல்வர்களைத் தகுதியானவர்களாக்கும் நோக்குடன்

தேசிய உற்பத்தித்திறன் குழுவின் மூலம் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், மதுரையிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் நினைவு கூர் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது. இதில் 15 தொழிற் பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

### பாடத்திட்ட வளர்ச்சிப் பிரிவு.

9.14 தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப கற்பிக்கும் முறையில் ஏற்படக்கூடிய மாற்றங்களை செய்யவும், வணிகத் தொழில் பயிற்சி நடைமுறை நூல், பாடப் புத்தகங்கள், தகவல் குறிப்புத் தாள்கள், நில வரை படங்கள் (Blue Print) தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் பாடத்திட்ட வளர்ச்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது,

பொது:

9.15. 1983-84-ல் கோயம்புத்தூர், மதுரை, வட சென்னை தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்றாம் மாற்றுமுறைப் பயிற்சித் திட்டத்தை (Shift) ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

9.16. 1983-84-ல், மதுரையிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டத்தைத் தொடங்குவது பற்றி செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

9.17. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயற்படுத்தவற்காக 1983-84ல் ஒசூரில் புதிய தொழிற் பயிற்சி சம்பந்தப்பட்ட மையம் ஒன்று ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.



## பாகம் 3.

## அத்தியாயம் 10.

### 57ஆம் கோரிக்கையின் கீழ் சில துணைத் திட்டங்கள்.

கைவினைஞர்கள் பயிற்சித் திட்டம், தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டில் பகுதி 1 திட்டத்தின் கீழ் கோரிக்கை 57-ன் கீழ் உள்ள துணைத் திட்டங்கள் பல்வகை மூலதனச் செலவு ஏ. 495—ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் குறித்து மூலதனச் செலவு ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள்—ஏபி—வேலை வாய்ப்பு என்னும் கணக்குத் தலைப்பில் பின்வரும் துணைத் திட்டப் பணிகளை நிறைவேற்ற ரூ. 10·42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

#### 10.1. தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

இம்மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சி நிலையங்களில், தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு, நிலையான குடியிருப்புகள் உள்ளன. எஞ்சிய தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு, இத்திட்டத்திற்காக 1983—84 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

#### 10.2. தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல்.

இம் மாநிலத்திலுள்ள 24 தொழிற் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. ஈரோடு தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவர் விடுதி கட்டும் பணி 1982—83-ல் தொடங்கப்பட்டுள்ளது. இதில் செய்யப்படாமல் விடுபட்டுப் போனப் பணிகளை முடிப்பதற்காக 1983—84 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

#### 10.3. அரக்கோணத்திலும், கடலூரிலும் உள்ள மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்களுக்கும் கருவிகளுக்கும் கட்டிடங்களுக்கும் வகைசெய்தல்.

அரக்கோணத்திலும், கடலூரிலும் மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ஆன கட்டிடங்கள் கட்டுவதற்காக 1983—84 ஆம் ஆண்டு வரவுசெ—லவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கமும், இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

10.4. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

சென்னை (வடக்கு) தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள தொழில் தொடர்பான அடிப்படைப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு வகுப்பறைகள் கட்டும் பணி 1982–83-ல் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், கட்டிடம், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவை வாங்குவதற்காக ரூ. 1,000 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.5. தொழில்களைப் பல்திறப்படுத்தல்.

செங்கல்பட்டு, கிண்டி, தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில்களைப் பல்திறப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகச் சில இயந்திரங்கள், கருவிகள் வாங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மேலும் தேவையான இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்கு 1983–84ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 2.06 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.6. சாதனங்கள் வாங்குதல்.

பல்வேறு தொழில்களுக்காக வரையறுத்த கருவிகள், சாதனங்கள் குறித்த தரப்பட்டியலை மைய அரசு திருத்தியமைத்ததனால் கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) இயந்திரங்களை இயக்குபவர் ஆகிய தொழிற் பயிற்சிப் பிரிவுகளுக்காகக் கூடுதல் கருவிகளும் சாதனங்களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், இயந்திரங்கள் மற்றும் சாதனம் வாங்க ரூபாய் 1.11 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10.7. தொழிற் பயிற்சி நிலையங்களை மேம்படுத்தல்.

1982–83-ஆம் ஆண்டில், ஓசூர், திண்டுக்கல் முதலிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள கருவிகள்—அச்சுத் தயாரிப்பு, கைக் கடியாரங்கள்—சுவர் கடிகாரம், கம்மியர் (மோட்டார்—வண்டிகள்) தொழில் பிரிவுகளுக்குத் தேவையான சில இயந்திரங்களும், சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் தேவையான, பாக்கியுள்ள இயந்திரங்களும், சாதனங்களும் வாங்குவதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 12,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



10.8. கம்மியர் தொழிற் (பொது மின்னணுவியல்) பயிற்சி.

அடையாறு பயிற்சிப் பிரிவுக்கு, கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காக 1983–84-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.9. தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்.

வேலூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் தோல் பதனிடும் தொழில்களுக்கும், அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத் தொழில் மேற் பயிற்சித் திட்டத்திற்கும், கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காக 1983–84 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1981–82-ஆம் ஆண்டிலிருந்து வாழ்க்கைத் தொழில் மேற் பயிற்சித் திட்டம் கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்திலும் செயல்படுத்தப்பட்டது. இதற்காக இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காக 1983–84ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,00,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

10.10. கிராமப் பகுதி இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சித் திட்டம்.

ஏனைய பல நிறுவனங்களுடன் 27 தொழிற் பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் முனைந்துள்ளன.

1982–83-ல் துயிற்கூட வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள், பணிமனைகள் ஆகியவற்றைக் கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துயிற்கூட வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள், பணிமனைகள் ஆகியவற்றைக் கட்டி முடிப்பதற்காக 1983–84ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 47,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

10.11. எஸ். எம். ஆர். வி. அரசு துணித் தொழில் நிலையத்தை முழு அளவிலான மகளிர் தொழிற் பயிற்சி நிலையமாக தரம் உயர்த்தல்.

இந்நிலையத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழிற் பயிற்சி பிரிவுகளுக்காக 1982–83-ல் சில இயந்திரங்களும் சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள இயந்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக 1983–84ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 99,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாகம்—4.

அத்தியாயம் 11.

**11.1.** வெளி நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

தமிழக அரசு நிறுவனமான வெளி நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் 1956-ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ந் தேதி அன்று நிறுவப்பட்டது.

**11.2.** இந் நிறுவனம் ரூபாய் 50 இலட்சத்தை ஏற்பளிக்கப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. இத் தொகையில் இது வரை ரூ. 10 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கப் பெற்றுள்ளது. இந் நிறுவனத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(1) திறமைப் பெற்ற, ஓரளவு திறமை பெற்றவர்களுக்கு வெளி நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவது,

(2) வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களால் சேமித்து அனுப்பி வைக்கப்பெறும் தொகையினை முதலீடு செய்வது.

(3) இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் நிறுவுவது.

(4) இந்தியப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவது.

**11.3.** தற்போது வெளிநாடுகளில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவது பற்றிய பணியை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வெளிநாடுகளில் வேலை செய்ய விரும்பும் தொழிலாளர்களை இந்த நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 31-12-1982 அன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 10,411 ஆகும். இந்நிறுவனம், ஐக்கிய அரசு எமிரைட்ஸ் ஈராக், லிபியா, தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுக்கு இதுவரையில், 603 தொழிலாளர்களை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.25 கோடி அந்நியச் செலவாணி கிடைக்கிறது.



பாகம் 5.

இணைப்புகள்

இணைப்பு I.

தொழிலாளர் தொழிலதிபர் நல்லுறவு.

(1) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. | | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1981 | 1982 | 1981 | 1982 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (அ) துணி நெசவு .. | 133 | 80 | 1,14,392 | 23,237 | 27,99,352 | 5,86,166 |
| (ஆ) பொறியியல் .. | 86 | 52 | 16,178 | 10,429 | 5,01,817 | 6,43,526 |
| (இ) தோல் பதனிடும் தொழிற்சாலைகள் .. | 6 | 3 | 909 | 2,650 | 13,247 | 3,900 |
| (ஈ) புகையிலை, பீடித் தொழில் .. .. | 1 | — | 605 | — | 37,520 | — |
| (உ) மலைத் தோட்டங்கள். | 13 | 6 | 17,358 | 4,887 | 2,70,818 | 1,57,190 |
| (ஊ) ஏனையவை .. | 49 | 46 | 36,732 | 25,474 | 5,01,267 | 4,15,196 |
| மொத்தம் .. | 288 | 187 | 1,86,174 | 66,677 | 41,24,021 | 18,05,978 |

| (2) தீர்ப்பு வழங்குதல். | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1981 | 1982 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. .. .. | 87 | 32 | 91 | 36 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. | 943 | 862 | 909 | 909 |
| (இ) 10(2)ஆம் பிரிவின் கீழ் அனுப்பப் பட்டவை .. .. .. | 33 | 29 | .. | .. |
| (ஈ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப் பட்டவை .. .. .. | 5 | 1 | 3 | 3 |
| (உ) தொழிலாளர் நீதி மன்றங்கள் முன்பு 33-சி(2)ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை .. .. | 1,694 | 2,556 | | |
| (3) வசூல் .. .. .. | .. | .. | .. | .. |

1947ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1)ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்.

| வசூல் செய்ய ஆணையிட்டவை. | | தொகை ரூபாய் | |
|---|---|---|---|
| 1981 | 1982 | 1981 | 1982 |
| (1) | (2) | (3) | (4) |
| 205 | 143 | 26,61,048.31 | 13,76,996.20 |



## இணைப்பு 11.

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் உள்ள நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப் பட்ட உரிமத் தொகை குறித்த விவரங்கள்.

| | நிறுவனங்களின் எண்ணிக்கை. | பணிக்கமர்த்தப் பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிமப் பதிவுக் கட்டணம் ரூபாய். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (1) தொழிற்சங்கம் அமையப்பெற்ற தொழில்கள். | | | |
| (அ) 1948ஆம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம். | | | |
| 1981 .. .. .. .. | 10,444 | 6,40,850 | 53,31,106 |
| 1982 .. .. .. .. | 11,465 | 7,01,450 | 64,59,281 |
| (ஆ) 1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | | | |
| 1981 .. .. .. .. | 434 | 91,390 | ஏதுமில்லை. |
| 1982 .. .. .. .. | 451 | 92,300 | ஷை |
| (இ) 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர் சட்டம். | | | |
| 1981 .. .. .. .. | 1,626 | 58,035 | 84,877.77 |
| 1982 .. .. .. .. | 1,658 | 58,511 | 81,140.23 |

| (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | பணிக்கமர்த்தப் பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிமப் பதிவுக் கட்டணம் ரூபாய். (4) |
|---|---|---|---|
| தொழிற்சங்கம் அமையப் பெறாத தொழில்கள். | | | |
| (அ) 1966ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம். | | | |
| 1981—82 .. .. .. .. | 1,332 | 12,361 | 42,617.00 |
| 1982 .. .. .. .. | 1,173 | 10,979 | 20.951.00 |
| | (வீட்டுத் தொழிலாளர்கள் 2,00,000) | | |
| (ஆ) 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | | |
| 1981 .. .. .. .. | 2,78,123 | 2,64,492 | ஏதுமில்லை. |
| 1982 .. .. .. .. | 2,72,363 | 2,66,182 | ஷை |
| (இ) 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | | |
| 1981 .. .. .. | 27,987 | 71,146 | 3,09,298.00 |
| 1982 .. .. .. .. | 26,349 | 66,966 | 2,87,622.95 |





## இணைப்பு III.

### பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் குறித்த விவரங்கள்.

| வரிசை எண் சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறைகள் ஆய்வு. (3) | தனி ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவு நேர ஆய்வு. (6) | சரி பார்ப்பு ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 20,052 | 932 | 1.154 | 432 | 68 | 1,001 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 4,06,570 | 45,391 | 6,618 | 11,554 | 16,897 | .. |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 51,958 | 1,330 | 724 | 1,134 | 365 | — |
| 4. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம். | 3,796 | 36 | 233 | 192 | .. | .. |

| வரிசை எண் சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறைகள் ஆய்வு. (3) | தனி ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவு நேர ஆய்வு. (6) | சரி பார்ப்பு ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 5. 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர் மற்றும் ஏனைய செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமையும் பல்வகை ஒதுக்கீடுகளும்) சட்டம். | 133 | .. | .. | .. | .. | .. |
| 6. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள்(முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 871 | | .. | .. | .. | .. |
| 7. 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம். | 1,91,978 | 2,787 | 1,455 | 1,873 | .. | .. |
| 8. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம். | 1,668 | 136 | 73 | 49 | .. | .. |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 60,089 | 202 | 271 | 339 | .. | .. |
| 10. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 1,16,362 | 330 | 374 | 815 | .. | .. |
| 11. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமை) சட்டம். | 2,410 | 133 | 335 | 41 | .. | .. |
| 12. 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம். | 487 | 29 | 8 | 3 | .. | .. |
| 13. 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 7,821 | .. | .. | .. | .. | .. |

## இணைப்பு VI.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை. | முடிக்கப்பட்டவை. | தண்டனை அளிக்கப்பட்டவை. | விடுதலை பெறப்பட்டவை. | தண்டிக்கப்பட்டவை. | திரும்ப பெறப்பட்டவை. | முடிவு றாமல் உள்ளவை. | பெறப்பட்ட அபராதத் தொகை ரூபாய். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 1,906 | 4,669 | 3,955 | 3,789 | 25 | 18 | 123 | 2,620 | 5,52,128 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 5,932 | 18,679 | 18,729 | 18,565 | 25 | 87 | 52 | 5,882 | 8,22,897 |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 1,441 | 3,195 | 2,963 | 2,913 | 9 | 20 | 21 | 1,673 | 1,78,857 |
| 4. 1981 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்து தொழிலாளர் சட்டம். | 194 | 457 | 482 | 473 | 6 | 1 | 2 | 169 | 58,810 |
| 5. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 3 | 53 | 22 | 22 | .. | .. | .. | 34 | 5,190 |
| 6. 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 1,760 | 5,209 | 4,908 | 4,845 | 15 | 30 | 18 | 2,061 | 1,66,680 |
| 7. 1981 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | 47 | 121 | 103 | 91 | 11 | .. | 1 | 65 | 19,305 |
| 8. 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 753 | 1,451 | 1,387 | 1,369 | 4 | 10 | 4 | 817 | 62,533 |
| 9. 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 791 | 2,626 | 2,362 | 2,318 | 16 | 17 | 11 | 1,055 | 1,224.30 |
| 10. 1961 ஆம் ஆண்டு மகப் பேறு பயன் சட்டம். | 1 | 9 | 5 | 4 | .. | .. | 1 | 5 | 310 |
| 11. 1972 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | 1 | 2 | 2 | 2 | .. | .. | .. | 1 | 125 |
| 12. 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 59 | 318 | 204 | 201 | 2 | .. | 1 | 173 | 23,665 |
| 13. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம். | 2 | 8 | 4 | 4 | .. | .. | .. | 5 | 470 |
| 14. 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டம். | .. | 1 | 1 | 1 | .. | .. | .. | .. | 300 |

## இணைப்பு V.

**(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் *சட்டம். | | பணிக்கொடை வழங்குதல் **சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1981. | 1982. | 1981. | 1982. | 1981. | 1982. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | 22 | 38 | 146 | 124 | 173 | 350 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 128 | 70 | 336 | 208 | 1,236 | 880 |
| (3) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை. | 150 | 108 | 482 | 332 | 1,409 | 1,230 |
| (4) நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 112 | 74 | 358 | 172 | 1,059 | 915 |
| (5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 38 | 34 | 124 | 160 | 350 | 315 |

* தொழிலாளர் நல அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியோரால் முடிவு செய்யப்பட்டவை.

** தொழிலாளர் நலத் துணை ஆணையர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்களால் முடிவு செய்யப்பட்டவை.



**(ஆ) தொழிலாளர் நலத் துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

| தொடர் எண்ணும் விவரங்களும். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்குதல் சட்டம். | | பணிக்கொடை வழங்குதல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1981. | 1982. | 1981. | 1982. | 1981. | 1982. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 339 | 254 | 216 | 181 | 163 | 146 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 874 | 927 | 758 | 671 | 327 | 141 |
| (3) மொத்தம் .. .. .. | 1,213 | 1,181 | 974 | 852 | 490 | 287 |
| (4) இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 959 | 882 | 793 | 684 | 344 | 200 |
| (5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 254 | 299 | 181 | 168 | 146 | 87 |

## இணைப்பு VI.

தேசிய வேலைவாய்ப்புப் பணியின் கீழ் சாதனை குறித்த விவரங்கள்.

| வேலை வாய்ப்புகள் விவரங்கள். | 1–4–1981 முதல் 31–12–1981 வரை. | 1–4–1982 முதல் 31–12–1982 வரை. | 1–1–1982 முதல் 31–12–1982 வரை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 3,92,604 | 4,46,354 | 5,50,720 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 53,339 | 54,402 | 72,578 |
| (இ) அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை. | 78,215 | 77,710 | 99,292 |
| (ஈ) வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பயன்படுத்திக்கொண்ட வேலையளிப்போரின் எண்ணிக்கை. | 23,588 | 18,019 | 24,687 |
| (உ) டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி வேலை வாய்ப்பகங்களில் செல்லுபடி பதிவேடுகளிலுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 12,60,991 | 14,15,918 | 14,15,918 |



2. உடல் ஊனமுற்றோர்களுக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம்.—

| | 1–4–1981 முதல் 31–12–1981 வரை. | | | |
|---|---|---|---|---|
| | பார்வையற்றோர். | காதுகேளாதோர். | கைகால் ஊனமுற்றோர். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) பதிவு செய்தவர்கள் .. | 494 | 551 | 5,597 | 6,642 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்கள் | 96 | 160 | 2,405 | 2,661 |
| (இ) செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,289 | 1,114 | 13,682 | 16,085 |

| | 1–4–1982 முதல் 31–12–1982 வரை. | | | |
|---|---|---|---|---|
| | பார்வையற்றோர். | காது கேளாதோர். | கை, கால் ஊன முற்றோர். | மொத்தம். |
| (1) | (6) | (7) | (8) | (9) |
| (அ) பதிவு செய்தவர்கள் .. | 263 | 230 | 3,152 | 3,645 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்கள் | 54 | 100 | 1,528 | 1,682 |
| (இ) செல்லுப்படிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,490 | 1,203 | 14,948 | 17,641 |

| (1) | பார்வை யற்றோர். (10) | காது கேளா தோர். (11) | கை, கால் ஊனமுற் றோர். (12) | மொத்தம். (13) |
|---|---|---|---|---|
| | 1-1-1982 முதல் 31-12-1982 வரை. | | | |
| (அ) பதிவு செய்தவர்கள் .. | 348 | 297 | 4,305 | 4,960 |
| (ஆ) பணியிலமர்த்தப்பட்டவர்கள் | 55 | 135 | 2,077 | 2,267 |
| (இ) செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,490 | 1,203 | 15,108 | 17,801 |

3. தொழில் நிருவாக வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னை.

| (1) | 1—4—1981 முதல் 31—12—1981 வரை. (2) | 1—4—1982 முதல் 31—12—1982 வரை. (3) | 1—1—1982 முதல் 31—12—1982 வரை. (4) |
|---|---|---|---|
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை. | 8,828 | 9,329 | 11,075 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 1,564 | 2,571 | 3,418 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 21,339 | 24,907 | 24,907 |



4. அண்ணாமலை நகர், சென்னை, மதுரையில் உள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைப் பிரிவுகள்.

| (1) | 1—4—1981 முதல் 31—12—1981 வரை. (2) | 1—4—1982 முதல் 31—12—1982 வரை. (3) | 1—1—1982 முதல் 31—12—1982 வரை. (4) |
|---|---|---|---|
| 1. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—ஆலோசனைப் பிரிவு, சென்னை. | | | |
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை. | 118 | 123 | 154 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 7 | 21 | 23 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 282 | 318 | 318 |
| 2. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—ஆலோசனைப் பிரிவு, மதுரை. | | | |
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை. | 1,510 | 1,402 | 1,716 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 152 | 122 | 252 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 3,544 | 3,716 | 3,715 |

3. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—ஆலோசனைப் பிரிவு, அண்ணாமலை நகர்.

| | | | |
|---|---|---|---|
| (அ) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை. | 157 | 304 | 342 |
| (ஆ) வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 20 | 39 | 99 |
| (இ) டிசம்பர் இறுதியில் வேலை வாய்ப்பகச் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 457 | 467 | 467 |

5. வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.

| தொடர் எண்ணும், காலாண்டும். | நிறுவனங்களின் எண்ணிக்கை. | | நிறுவனங்களிலுள்ள மொத்த வேலை வாய்ப்பு. | |
|---|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | பொதுத் துறை. | தனியார் துறை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| [illegible] —3—1982 .. | 9,263 | 12,112 | 12,63,041 | 7,01,589 |
| (ஆ) 30—6—1982 .. | 9,355 | 12,215 | 12,60,447 | 7,04,537 |



6. வாழ்க்கைத் தொழில் ஆலோசனை—

| (1) | 1—4—1981 முதல் 31—12—1981 வரை. (2) | 1—4—1982 முதல் 31—12—1982 வரை. (3) | 1—1—1982 முதல் 31—12—1982 வரை. (4) |
|---|---|---|---|
| (1) நடத்தப்பட்ட கூட்டு விவாதங்களின் எண்ணிக்கை. | 2,544 | 2,246 | 3,406 |
| (2) கூட்டு விவாதங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை. | 40,941 | 62,544 | 86,102 |
| (3) பதிவு வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை. | 16,325 | 13,230 | 17,731 |
| (4) பணியில் அமர்த்தப்பட்ட தொழில் பழகும் பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 866 | 1,285 | 1,354 |
| (5) பள்ளிகள், கல்லூரிகளில் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி உரைகளின் எண்ணிக்கை. | 216 | 202 | 348 |
| (6) தொழில் பழகுவதற்காக படிப்புதவித் தொகைக்காக (மேற்படிப்புக்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை). | 9,170 | 10,086 | 14,794 |

7. வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு (ஸ்ரீ லங்காவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியவர்கள்).

| | 1—4—1981 முதல் 31—12—1981 வரையிலான கால அளவிற்கு. | | 1—4—1982 முதல் 31—12—1982 வரையிலான கால அளவிற்கு. | | 1—1—1982 முதல் 31—12—1982 வரையிலான கால அளவிற்கு. | |
|---|---|---|---|---|---|---|
| | ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். | ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். | ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை. | 3,343 | 1,215 | 4,503 | 687 | 5,850 | 901 |
| (2) பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 608 | 428 | 714 | 401 | 933 | 542 |
| (3) செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 12,786 (31-12-81 ஆம் நாள் நிலவரப்படி) | 2,317 (31-12-81 ஆம் நாள் நிலவரப்படி) | 13,846 (31-12-82 ஆம் நாள் நிலவரப்படி) | 2,163 (31-12-82 ஆம் நாள் நிலவரப்படி) | 13,846 (31-12-82 ஆம் நாள் நிலவரப்படி) | 2,163 (31-12-82 ஆம் நாள் நிலவரப்படி) |



8. 1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டம் :

| காலம். | அறிவிக்கப்பட்ட பதவி காலி இடம். | நிரப்பப்பட்ட பதவி காலி இடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) 1—4—1981 ஆம் நாள் முதல் 31—12—1981 ஆம் நாள் வரை .. | 74,523 | 48,860 |
| (ஆ) 1—4—1982 ஆம் நாள் முதல் 30—9—1982 ஆம் நாள் வரை .. | 49,532 | 31,064 |
| (இ) 1—1—1982 ஆம் நாள் முதல் 30—9—1982 ஆம் நாள் வரை .. | 65,912 | 44,717 |

9. வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கு திட்டம் :—

| | |
|---|---|
| (1) 1—7—1980 ஆம் நாள் முதல் 31—12—1982 ஆம் நாள் வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 40,211 |
| (2) தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு சரிபார்த்து உதவித் தொகை அளிப்பதற்காக வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 24,603 |
| (3) வட்டாட்சியாரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | 6,166 |
| (4) 1982 ஆம் ஆண்டு டிசம்பர் வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை. | 226 |
| (5) பார்வையிழந்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு, சரிபார்த்து உதவித் தொகை அளிப்பதற்காக மாநிலத்திலுள்ள வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 226 |
| (6) வட்டாட்சியர்களால் உதவித் தொகை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 37 |

1980–81, 1981–82, 1982–83 ஆம் ஆண்டுகளுக்கான செலவுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | செலவு. ரூ. |
|---|---|
| 1980–81 .. .. .. .. .. .. .. .. | 22,04,000.00 |
| 1981–82 .. .. .. .. .. .. .. .. | 75,29,428.00 |
| 1982–83 (1982 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை) .. .. .. | 28,07,272.00 |

10. ஆதி திராவிடர் பழங்குடியினர்களுக்கு வேலை வாய்ப்பு உதவி :

| | 1–4–1982 முதல் 31–12–1982 வரை. ஆதி திராவிடர். | பழங் குடியினர். |
|---|---|---|
| (அ) பதிவு செய்து கொண்டவர்கள் .. .. .. .. | 61,118 | 1,754 |
| (ஆ) பணியில் அமர்த்தப்பட்டவர்கள் .. .. .. | 8,477 | 293 |
| (இ) பதிவேட்டில் உள்ளவர்கள் (31–12–1982 ஆம் நாள் நிலவரப்படி). | 2,23,033 | 5,543 |



11. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலுள்ள பழங்குடியினருக்கான தனி வாழ்க்கை தொழில் ஆலோசனை நிலையம், உதகமண்டலம்.

| | 6–3–1980 முதல் 31–12–1982 வரை. |
|---|---|
| (1) பழங்குடியினர் வாழுகின்ற தொலை தூரத்திலுள்ள இடங்களுக்கு இப்பிரிவு சென்று வந்தபொழுது பதிவு செய்து கொண்ட பழங்குடியினரின் எண்ணிக்கை. | 1,136 |
| (2) பதிவு செய்து கொண்ட காலத்தில் வழிகாட்டப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை. | 403 |
| (3) வாழ்க்கைத் தொழில் பற்றியும், தொழில் பயிற்சி வசதி குறித்தும் தனிப்பட்ட வகையில் தகவல் பெற்ற பழங்குடியினரின் எண்ணிக்கை. | 2,198 |
| (4) ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மாணவர் இல்லங்களில் பழங்குடியினருக்காக நடத்தப்பட்ட தொழிற் பயிற்சி உரைகளின் எண்ணிக்கை. | 57 |
| (5) வாழ்க்கைத் தொழில் தனி ஆலோசனை நிலையத்தின் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட பழங்குடியினரின் எண்ணிக்கை — | |
| (அ) பணியில் .. .. .. | 85 |
| (ஆ) தொழில் பழகுவோர் பயிற்சியில் .. .. .. .. .. | 67 |
| (இ) பயிற்சித் திட்டத்தில் .. .. .. | 6 |
| (ஈ) சுய-வேலை வாய்ப்புத் திட்டத்தில் .. .. .. .. .. | 1 |

சென்னை-600 008.
136033